குறிஞ்சிக்கலி : :

: : வழித்துணை விளக்கம்

ஆசிரியன் :

S. R. மார்க்கபந்து சர்மா, M.A.,

(ஆசிரியன், "சிலப்பதிகாரம் - இரசனை")

1951.

உரிமை ஆசிரியருடையதே.
முதற்பதிப்பு 15-8-1951.
விலை ரூபாய் மூன்று.

Published by
THE AUTHOR

PRINTED AT
THE VELLORE PRINTING WORKS LTD., VELLORE.

அறிமுக உரை.

திரு மார்க்கபந்து தம்முடைய பெயருக்கு ஏற்பத் தமிழாராய்ச்சித் துறைக்கு உற்ற உறவினராய் உதவுகின்ருர். மேல்நாட்டு ஆராய்ச்சி வழியே சிலப்பதிகாரத்தின் திறனைய்ந்து தெளிய ஒரு நூல் வெளியிட்டார். இப்போது குறிஞ்சிக் கலியினை உணர்ந்து துய்க்க இந்தப் புத்தம் புத்துரையைத் தமிழுலகிற்கு உதவுகின்ருர். 'கற்றவர் ஏத்துங் கலி' என்பது பழம்பாடல்; அந்தப் பாடலினும் பழையது கலி. ஆதலின் அதனை உணர்ந்துகொள்ள உரையின் உதவி வேண்டும்.

நச்சினர்க்கினியர் உரை இருந்தாலும் அதுதானும் இந்த இருபதாம் நூற்ருண்டுக்குப் பழந் தமிழாகவே அச்சுறுத்துகிறது; அது ஓடும்போதே ஓதுகின்ற உரையுமன்று. நச்சினர்க்கினியர் வடமொழியிற்போலத் தமிழிலும் நினைத்தபடி கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுதல் கூடும் என்ற கொள்கையை விடாப்பிடியாகக் கொண்டு உரை எழுதி உள்ளார். வடமொழியில் பெயரைப் போலப் பெயரடைகளும் ஒரே வடிவில் மாறி மாறி வருதலால் எந்தப் பெயர் எந்தப் பெயரோடு சேரும் என்பதனை அறிய வழியுண்டு. தமிழில் அவ்வாறு இல்லை என்பதனை நச்சினர்க்கினியர் தம்முள்ளத் துறுதியால் காணுது போயினர். அவரவ்வளவு அறிவில்லாத என் போன்ருருக்கு அவருடைய உரை விளங்குவது அரிதாகிறது.

ஆதலின் எளியதோர் உரை இன்றியமையாது வேண்டும். இந்தக் குறையைத் தீர்க்க நண்பர் தமது உரையை வெளியிடுகின்ருர். அவரோடு ஒத்துச் செல்லாதவருக்கும் இந்த உரை வழித்துணையாம் என்பதில் ஐயம் இல்லை.

தே. போ. மீனுட்சிசுந்தரன்.

முகவுரை.

நண்பர்கள் பலர் உலாவி வருகையில், ஒருவர் தடுக்கி விழுந்துவிட்டால், உடனே எல்லோரும் கை தட்டிச் சிரிப்பதைக் காண்கிறோம்; விழுந்தவர், 'ஐயோ! அப்பா!' என்று எழுப்பும் கூக்குரல் நம்மை மேலுஞ் சிரிக்கவே தூண்டும். அவர் எழுந்தபின், அவருடைய கால் விரலினின்றும் இரத்தம் கசிவதைக்கண்ட பின்னரே நம் சிரிப்பு அடங்கும். 'அடி பலமோ?' என்று கேட்போம்.

இந்நிகழ்ச்சி இரவில், இருளில் நிகழ்ந்திருந்தால், விழுந்தவர், 'ஐயோ!' என்று அலறத் தொடங்கு முன்னரே, நாம், 'என்ன நடந்தது? அடிபட்டு விட்டதா?' என்று பரிவுடன் கேட்போம். விளக்கு வெளிச்சத்தில் விழுந்தவர்க்கு அடிபடவில்லை என்று அறிந்த பின்புகூட நம்மில் ஒருவரும் சிரிப்பதில்லை.

இரக்கப் பட வேண்டிய இடத்தில் சிரித்தோம்; சிரிக்கக் கூடிய இடத்தில் பரிவு காட்டினோம். இப் பொருத்தக் குறைவான பண்பு நம் எல்லோருக்கும் உண்டு. இது மனித இயற்கை. வாழ்க்கையை இன்பமாகக் கழிக்க வேண்டும் என்ற அடிப்படைப் பண்பே, பிறர் விழுகையில் நம்மைச் சிரிக்க வைக்கிறது; ஏன், துன்பம் தருவனவேனும், நமக்கே நேரும் சில இன்னல்களைக் கண்டு நாமே சிரிப்பதும் உண்டு; பிறர் பெரிதும் துன்பப் படுவதைக் கண்டு, அவர்களுக்கு நேர்ந்த இன்னல் இவ்வாறு துன்பப்படத்தக்கது அன்று என நாம் கருதுவதும் இப்பண்பு காரணமாகவே.

நண்பர் தடுக்கி விழுந்த காட்சி நம்கண்களை மட்டுமே கவர்ந்தது. அவர் கால் விரலில் கசிந்த இரத்தம் நம் கண்களை ஊடுருவிக் கொண்டு, கருத்தைத் தாக்கும் வல்லமை பெற்றிருந்தது; ஆகவேதான் அது நம்மை இளக வைத்தது. இருளில் விழுந்தவரைப் பார்க்க முடியவில்லை. அவர் அலறல் நம் கருத்தை நேரடியாகச் சென்று தாக்கிற்று. ஆகவேதான், அவர் நிலைக்குத் தேவைக் கதிகமான பரிவு காட்டினோம்.

குறிஞ்சிக் கலியின் சித்திரங்கள் அனைத்தும், தடுக்கி விழுந்தவர் தோற்றத்தைப்போல, நம் கண்களைக் கவர்வனவாக இருக்கின்றன. ஆனால் பாலைக் கலியின் செய்திகளோ, இருளில் நேர்ந்த இன்னலைப்போல, நம் கருத்தை நேரடியாகச் சென்று பற்றுகின்றன. கலிகளுள் பாலைக் கலியே சிறந்தது எனப் பண்டிதர்களுள் பெரும்பாலோர் கருதுவது ஏன் என்று இப்பொழுது விளங்குகின்றது; அவர்கள் கூற்றில் உண்மை இல்லை என்பதும் துலங்குகின்றது.

கற்றறிந்தார் போற்றும் கலித்தொகையில், குறிஞ்சிப் பாடல்களைப் பெரும்பாலோர் படித்து மகிழும்படிச் செய்ய வேண்டும் என்ற நோக்கமே இவ்வுரை எழக் காரணம்; அவர்கள் ஆர்வத்துக்கு அணைபோடாமல் இருக்கவே, பழைய உரைகளிற்போல, இதனுள் இலக்கணக் குறிப்புகளும், கடா விடைகளும், எடுத்துக் காட்டுகளும் இடம் பெறுமல் இருக்கின்றன.

'இன்னும் சற்று எளிய நடையில் இவ்விளக்கம் இயன்றிருந்தால், இன்னும் பலர் கபிலர் கவிதைகளின் மாட்சியை அறிந்து மகிழ்ந்திருக்கலாமே.' இந்நோக்கம் என்றும், எவராலும் நிறைவேற்ற முடியாததாகவே நின்றுவிடும் என்பதே என் எண்ணம். எளிமைக்கு எல்லை கற்பிக்க யாரால் கூடும்?

'குறிஞ்சிக் கலியை முதன் முதலாகப் படிக்க முற்படுபவர்களை ஊக்க எழுந்த விளக்கம் நமக்கு ஏன்?' என்று பண்டிதர்கள் இதனைப் புறக்கணிக்காதிருக்க வேண்டுகிறேன். அவர்கள் சிந்தனையைத் தூண்டும் பகுதிகளும் இவ் விளக்கத்தில் காணப்படும். தலைவன் நாட்டு மலைக் காட்சிகள் அவன் ஒழுக்கத்தைக் குறிப்பனவாகவே கொள்ளப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன், உள்ளுறை உவமைகள் அனைத்தும் இவ்விளக்கத்தில் விவரிக்கப் பட்டிருக்கின்றன. நான் உள்ளுறை கூருத இடங்களில், நச்சினர்க்கினியர் கூறியவை எனக்கு உடன்பாடே.

சங்க காலத்தில் அரசர்களாலும், தம்மைப் போன்ற கவிஞர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டவர் கபிலர். இவரே, நமக்கு இப்பொழுது கிடைக்கும் சங்கச் செய்யுட்களுள், அதிகமானவற்றை இயற்றியவர். பத்துப்பாட்டு,

எட்டுத்தொகை, பதினெண்கீழ்க் கணக்கு என்ற மூன்று தொகுதிகளிலும் இவர் இயற்றிய பாடல்கள் காணப் படுகின்றன. ஆகவே, சங்க நூல்களைப் பயிலத் தொடங்கு பவர்களை, அவற்றுள் சிறந்த ஒன்றை முதலில் அறிந்து கொள்ளச் செய்வதே நல்லது என்ற நோக்கத்துடன், குறிஞ்சிக்கலிக்கு உரை இயற்றினேன்.

சங்கச் செய்யுட்களை நாம் இப்பொழுது படித்து அறிந்துகொள்ள நமக்குப் பேருதவி அளிப்பவை பழைய உரையாசிரியர்களுடைய உரைகளே. அவை அச்செய்யுட் களைப் போலவே நம்மால் மதிக்கப்பட வேண்டியவை. நச்சினார்க்கினியர் உரையை ஓதாதவர், குறிஞ்சிக்கலியை நன்றாகப் படித்துவிட்டோம் என்று கூறிக்கொள்ள முடியாதவர்களாகவே நின்று விடுவர் என்பதனை உணர்ந்தே, அவர் உரையும் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது.

பழைய உரையாசிரியரோடு நான் பல இடங்களில் வேறுபட்டிருக்கிறேன். சில இடங்களில் மாறுபட்டிருக் கிறேன். இவ்விடங்களைச் சுட்டி விளக்காமல் சென்றது, இவ்விளக்கத்துக்கு ஒரு குறையே என என் அரிய நண் பர் திரு வரதாச்சாரியார் கருதுகிறார். இவ்விளக்கம் எளிய நடையில் அமையக்காரணமாய் இருந்தவர் அவரே. உள்ளுறை உவமங்களைப் பற்றி ஒன்றுங் கூறாமற் சென்ற என்னைத் தூண்டி, அவற்றையும் விளக்க வேண்டும் என்று வற்புறுத்தியவரும் அவரே. சுருங்கக் கூறின் கூட்டாசிரியராகக் கருதவேண்டிய அளவுக்கு இவ்விளக் கம் அவருக்குக் கடமைப் பட்டிருக்கிறது. அவரே இவ் வாறு கூறிய போதிலும், நச்சினார்க்கினியரோடு நான் எங்கு, ஏன் மாறுபட்டிருக்கிறேன் என்பவற்றை இவ் விளக்கத்தைப் படிப்பவரையே கண்டு கொள்ளும்படி விட்டுவிட்டதே இந்நூலுக்கு ஒரு அணி என்று நான் கருதினேன். இவ்வாறு நாங்கள் இருவரும் நேர்மாறான நோக்க முடையவர்களாய் இருந்திராமல் இருந்தால், இந் நூலை 'விளக்கம்' எனக்கூற நான் முன்வந்திருக்க மாட் டேன். அவருக்கு என் மனமார்ந்த நன்றி.

முன்னுரையில் குறிப்பிடப் பட்டுள்ள எட்டு கலிகளை மட்டுமே விளக்க முன் வந்த என்னை, குறிஞ்சிக்கலி முழு வதற்கும் உரைகாணத் தூண்டியும், பெரியார் ஒருவரை என் உரையைத் தமிழருக்கு அறிமுகப் படுத்த இசையச்

செய்தும் உதவிய என் கல்லூரித் தோழர் திரு. ஞான சம்பந்தனுக்கு நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழன்பர்க்கு இவ் வுரையை அறிமுகப் படுத்த அன்போடு இசைந்து அறிமுக உரை அளித்து உதவிய பன்மொழிப் புலவர் உயர்திரு மீனாட்சிசுந்தரனார் அவர் கட்கு என் வணக்கம் உரித்து.

இச் சிறு நூலை, என் ஆசிரியரும், தமிழ் வடமொழி என்ற இரண்டினும் பெரும் பயிற்சி உடையவரும், நூல் களைத் தாம் துய்ப்பதோடு பிறரைத் துய்க்கவைப்பதில் பேராற்றல் படைத்தவரும், நயங்காணும் நோக்கை என் னிடத்தே தூண்டியவரும் ஆகிய மகாமகோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களுக்கு குருகாணிக் கையாக அளிக்க விரும்புகின்றேன்.

வேலூர்,
15—8—51.

மார்க்கபந்து சர்மா.

முன்னுரை

கவிதை

நமக்குத் தெரியாமல் அப்பூங்காவில் என்ன இருக்கக்கூடும்? இன்று, நேற்று, பத்துவருடங்களாக, அந்திக்காலத்தை அதனுள்ளேயே கழித்திருக்கிறோமே! அகன்ற மணற்பரப்பு; அதனைச் சுற்றி அமைந்த கம்பி வேலி; இங்கொன்றும், அங்கொன்றுமாய் இருந்த சில செடிகள். இவையே அக்காலத்தில் 'பூங்கா' என்ற அழகிய பெயருடன் விளங்கின. இப்பொழுதோ? பாதைகள் என்ன! அவற்றின் இருபக்கங்களிலும் அடர்ந்து இருக்கும் செடி வரிசைகள் என்ன! மணல் பரப்பு எங்கே? அது அடர்ந்த பசும்புல் தரையாக வல்லவோ மாறி விட்டது! நாம் வளர்ச்சிபெற்றதைப்போல, அப்பூங்காவும் வளர்ச்சி அடைந்திருக்கிறது.

நமக்கும் அதற்கும் உள்ள தொடர்பு எவ்வளவு நெருங்கியது! இருந்தும், அதன்படங்களைப் பார்க்கும் பொழுது, பத்து வருடங்களாக நாம் பழகிப் பயின்ற பூங்காவா இது என்ற எண்ணம் தோன்றுகிறதே! நாம் நேரில் பழகியும் அறியாத பல புதுமைகளை இப்படங்கள் எவ்வாறு விளக்குகின்றன? இவை, நம்மையே, நம் பார்வையில் ஐயங்கொள்ளச் செய்கின்றனவே! நாம் படத்தில் காணும் இத்தோற்றங்கள் மாயமா? அல்லது நமக்கு மயக்கமா? உண்மையே என்றால், நாம் இத்தனை நாட்களாக அப்பூங்காவை நன்கு பார்க்கவில்லையா?

முதன் முதலில் அப்பூங்காவின் புகைப்படத்தைப் பார்ப்போம். அதோ தெரிகிறது அப்பெரியமரம்; பூங்காவின் பக்கத்தில், அதன் எல்லைக்கு வெளியே, ஓங்கி வளர்ந்திருக்கும் அம்முதியமரம், நம் தகப்பனுருக்கும் மூத்ததாய் இருக்கவேண்டும்! அந்த மிக உயர்ந்த மரமும் படத்தில் முற்றிலும் விழுந்திருக்கிறது. வற்றி உலர்ந்த கிளைகளைக் கொண்ட அம்மரத்தின் தோற்றம், பூங்கா

வின் பசுமையை மிகுத்துக் காட்டுவதாக நாம் பலமுறை கருதி இருக்கிறோம். இப்பொழுதோ! பட்டை கழன்ற அப்பழைய மரத்தையும், செழித்து வளர்ந்திருக்கும் சின்னஞ் சிறு செடிகளையும் ஒரு சேரக்காணும் நம்மை, 'இளமை நில்லாது; முதுமை தவிர்க்க முடியாதது' என்ற எண்ணம் பற்றுகின்றதே! போதும்! வரப்போகும் முதுமையை இப்பொழுதே எண்ணி ஏங்குவானேன்? அப்புகைப்படத்தின் அருகே உள்ள பூங்காவின் சித்திரத்தில் கருத்தைச் செலுத்துவோம்.

அட! இது என்ன புதுமை! நம் உடல் பூரிப்பானேன்? மனத்தில் மகிழ்ச்சி பொங்கக் காரணமென்ன? அந்தக் கிழட்டு மரத்தின் கிளைகளில் தளிர்கள் காணப்படுகின்றனவே! அது, புன்முறுவல் பூத்தபடி, 'தம்பிகளே! என்னைக் கிழவன் என்று கூறிக் கேலி செய்கிறீர்களே, உங்களில் யாருக்காவது என் அனுபவ முதிர்ச்சி இருக்குமா? இளமையும், அழகும் எத்தனை நாட்கள் இருக்கும்? அவை மட்டுமே போதுமா? அறிவுடையவனன்றோ, அவனியில் இருக்கப்பிறந்தவன்! பல்லாண்டுகளாக நான் பெற்ற அனுபவம் எப்படி என் வற்றி உலர்ந்த கிளைகளையும் உரமுடையனவாகச் செய்திருக்கின்றது பாருங்கள்! அக்கிளைகளில் உள்ள தளிர்களை உங்களுக்குத் தெரியுமா? என் மகிழ்ச்சியின் மிகுதியே - உடலின் பூரிப்பே-அவை!' என்று சின்னஞ்சிறு செடிகளைப் பார்த்துப் பேசுவதுபோல், இச்சித்திரம் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றதே!

படங்களைப் பார்த்தது போதும். மீண்டும் அப்பூங்காவையே நேரில் சென்று காண்போம். நேற்றுமாலை இருந்த தோற்றத்துக்கும், அதனுடைய இன்றைய தோற்றத்துக்கும் என்ன வேற்றுமை இருக்கிறது? இன்று காற்று பலமாய் வீசுகிறது; சின்னஞ் சிறு செடிகள் பேயாட்டம் ஆடுகின்றன; கிழட்டு மரம் கம்பீரமாக அசைந்து கொடுக்கிறது அது ஏன் இப்பொழுது நம்மோடு பேசவில்லை? அதன் புகைப்படத்தோற்றம் நம்மை வருங்காலத்தைப்பற்றி நினைக்கச் செய்தது. சித்திரத்தில் அதன் தோற்றம், ஆம், 'கவலைப் படாதே! முதுமைதான் இன்பம் பயக்கும்; இளமையை இன்பமாய்க் கழிப்பதாக நினைப்பது உன் அறியாமையே என்பதனை முதுமை எய்தியதும் அறிவாய். இவ்வறிவே உன்னைத்

துன்பங்கலாவத இன்பத்தை அடையச் செய்யும். ஆகவே முதுமையை முக மலர்ச்சியுடன் ஏற்றுக்கொள்! என்று நம்மை நினைக்கச்செய்தது. ஒருவற்றல் மரம்-இறந்த மரம்-நம்மை வாழ்க்கையில் பற்றுகொள்ளத் தூண்டும் விந்தையே விந்தை!

நாம் நேரில் காணும் அப்பூங்காவின் தோற்றம் ஓர் இயற்கைக் காட்சி; இப் பௌதிக உலக நியதிகளுக்கு உட்பட்ட ஓர் உண்மைத் தோற்றம். அப் பூங்காவின் புகைப்படத் தோற்றம் ஒரு கவிதை; அதன் சித்திரத் தோற்றம் ஓர் உயர்ந்த கவிதை. பின்னவை இரண்டினும் நாம் கண்ட தோற்றங்கள் மன உலகத் தோற்றங்கள். ஆகவேதான், அவை நம் கண்களைக் கவர்ந்ததனோடு, அவற்றை ஊடுருவிச் சென்று, நம் மனத்தையும் பற்றின; வாழ்க்கையின் தன்மையை-உண்மையை-நமக்கு உணர்த்தின.

இவற்றால் இப்பௌதிக உலகின் உண்மைகளை-இயற்கைக் காட்சிகளை அல்லது நிகழ்ச்சிகளை-மன உலகத் தோற்றங்களாக மாற்றி அமைப்பதே கவிதை என அறிகிறோம். இதனோடு நின்றுவிடவில்லை. நாம் இதுவரை பார்த்தவை கவிதையின் இன்னொரு பண்பையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. இவ்வுலக உண்மைகள் இருப்பவற்றை மட்டும், ஏன், ஓரளவு இருந்தவைகளையுங்கூட-ஆவது, இறப்பு நிகழ்வுகளை மட்டுமே-நமக்கு உணர்த்துகின்றன; கவிதையோ இறப்பு நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வாயிலாய், நமக்கு எதிர்வையும் உணர்த்துகின்றது என்பதே அது. இச்சிறப்புப்பற்றியே உலகப்பேரறிஞர்கள் கவிதைக்கு உயர்வு தந்திருக்கின்றனர்.

*　　　*　　　*　　　*

நாம் பார்த்த புகைப்படம் நம்மால் ஒரே பார்வையில் கண்டு அளவிட முடியாத — நம் கண் கொள்ளாத - அப் பெரிய பூங்காவை முற்றிலும் காட்டியதோடு, அதன் அருகே இருந்த உயர்ந்த மரத்தையும் நம் கண் கொண்டதாகச் செய்துவிட்டது. இக் காரணம் பற்றியே அது நம் மனத்தைத் தொட்டது; ஓர் உண்மையை நம்மை உணரவைத்தது. பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில், பாண்டவர் ஆண்ட நாட்டின் வருணனையில் ஒரு பகுதியைப் பார்ப்போம்.

நீல முடி தரித்த பல மலை சேர் நாடு
நீரமுத மெனப் பாய்ந்து நிரம்பு நாடு,
கோல முறு பயன் மரங்கள் செறிந்து வாழுங்
குளிர் காவுஞ் சோலைகளுங் குலவு நாடு,
ஞால மெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன் செய்யும் புன் செய்யும் நலமிக் கோங்கப்
பா லடையு நறு நெய்யுந் தேனு முண்டு
பண்ணவர் போல் மக்க ளெல்லாம் பயிலு நாடு.

இங்கு நம்மால் ஒரே பார்வையில் கண்டறிந்து கொள்ள முடியாத மலை, காடு, சோலை, வயல், நகரம் முதலிய பல பொருள்களைக் கவிஞர் நம்மை ஒருசேரக் காணச் செய்கிறார். அப் பெரும் பரப்பின் இச் சிறு, சித்திரம், அந் நாட்டின் எல்லையற்ற பெருமையையும் ஈடில்லாத சிறப்பையும் நமக்கு உணர்த்துகின்றது.

இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென் தமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்(கு) ஓங்கிய
திருமா மணியெனத் தெய்வமுற்(று) உரைப்பப்
பேதுறவு மொழிந்தனள் மூதறி வாட்டியென்(று)
அரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி
விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப..........'

சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியின் பகுதி இது. காளி கோயிலில் இருந்தவருள் எவரேனும், கோவலன் முதுகுப் புறத்தே ஒளிந்துகொண்டு, புன்முறுவல் பூத்த கண்ணகியைப் பார்த்திருக்கக் கூடுமா? பார்ப்பவர் கண்களுக்குப் புலப்படாத் தோன்றலையும், இங்குக் கவிஞர் தம் சித்திரத்தில் புலப்படுத்தியிருக்கிறார். நெடுநல் வாடையின் பனிக்கால வருணனையைப் படிக்கும்பொழுது மலை, வயல், பசு, கோவலர், மரத்தின் மீதிருந்த குரங்குகள், மரத்தினின்றும் கீழே விழுந்துவிட்ட பறவைகள், நீரோடை, அதன் கரையில் மீனைப் பார்த்துக் கொண்டிருந்த நாரை, வீட்டில் கூண்டில் அடை பட்டிருந்த கோழி இவை அனைத்தையும் ஒருங்கே காண்கிறோம் பல்வேறு

இடங்களில் இருந்த உயிர்களையும், அவை குளிரால் பட்ட வருத்தத்தையும் நக்கீரர் தம் சித்திரத்தில் சேரத் தீட்டியிருப்பதால், வாடையின் கொடுமையை நாம் நன்கு உணர முடிகிறது.

இவை மட்டுமா? நாம் 'இவையும் பயன் படுமா?' என்று இகழ்ந்து புறக்கணித்துவிடும் பொருள்களையும், கவிஞர் தம் சித்திரங்களில் சேர்த்துக் கொள்ளுவர். அவற்றைக் கொண்டே அரிய பொருள்களைப் புலப் படுத்தி விடுவர். இவ்வாறு உள்ளதை உள்ளவாறும், நிகழ்ந்ததை நிகழ்ந்தபடியும் சித்திரிப்பதில் என்ன புதுமை இருக்கும்? இவற்றைக் கவிதை என்றும், இச்சித்திரங்களைத் தீட்டுபவரைக் கவிஞர் என்றும் எப்படிக் கூறலாம்? உள்ளவற்றை அவை உள்ளபடி யேயும், நிகழ்ந்தவற்றை அவை நிகழ்ந்தபடியேயும், சித்திரிப்பனவேனும், நமக்குப் புலனாகாத பொருள்களைப் புலப்படுத்தும் பெருமை காரணமாகவும், நம்மைச் சிந்திக்கத் தூண்டும் பெற்றியுடையவை யாகையாலும், உண்மையின் சித்திரங்களும் கவிதைகளே!

*　　　*　　　*　　　*

வற்றல் மரம் ஒன்று தளிர்த்திருந்த விந்தையைப் பூங்காவின் சித்திரத்தில் கண்டோமல்லவா? இயற்கையில் இருக்க முடியாத இப் புதுமையை அச்சித்திரத்தைத் தீட்டியவனுடைய கற்பனை தோற்றுவித்தது. நான்முகனைப் போலவே படைக்குந் தொழிலில் கை வந்தவன் கவிஞன். இவனுடைய ஆற்றலைக் கண்டு, அந் நான்முகனும் நாணவேண்டும்.

பத்து தலைகளைப் பெற்றிருந்த இராவணனையும், மனித உடலின் மீது சிங்கத்தின் தலையைக் கொண்டிருந்த நரசிம்ம மூர்த்தியையும் நான்முகன் படைத்திருக்கக்கூடுமா? எழுதவொண்ணாத எழிலையுடைய மங்கையின் மேனியும், காமனையும் வென்ற காளையின் கவினும் கவிஞனுக்கே கடமைப் பட்டிருக்கின்றன. இவை மட்டுமா? நான்முகன் நினைத்தறியாப் பொருள்களையும் கவிஞன் படைத்துவிடுகின்றான். இரண்டறக் கலந்த பாலையும், நீரையும் பிரித்துவிடும் போராற்றல் பெற்ற அன்னப் பறவையைப் படைத்தவன் கவிஞனே!

போதும்! போதும்! இயற்கையில் இல்லாத, இருக்க முடியாத – உண்மைக்கு மாருன – பொருள்களையும், காரணங்காட்ட முடியாத நிகழ்ச்சிகளையும் சித்திரிப்பதைக் கற்பனை என்றும், அச்சித்திரங்களைத் தீட்டியவனைக் கவிஞன் என்றும் எப்படிக் கூறலாம்? உண்மையைத் திரித்துக் கூறும் ஒருவனை மக்களின் பகைவன் என்று பழிப்பதை விட்டு, பொய்யைப் புனைபவனைக் கவிஞன் எனப் போற்றுவதா?

அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தவன், திடீரென்று அலறிப்புடைத்துக் கொண்டு, 'ஐயோ! பாம்பு கடித்து விட்டதே!' என்று ஆரவாரஞ் செய்கிருனே, அவனை நல்ல பாம்பா கடித்துவிட்டது! இல்லை, கனவில், அவனே கற்பித்துக் கொண்டதே அது. விழித்துக் கொண்ட பின்பும், நாம் சிரிப்பதையும் பொருட்படுத்தாமல், மிரள மிரளப் பார்த்துக்கொண்டிருக்கிருனே! நனவு உலகத்துக்கு வந்த பின்பே, தான்கண்டது பொய்த்தோற்றம் எனத்தெளிந்து, அவன் ஓரளவு ஆறுதல் அடைகிருன். அப்பொழுதுங் கூட, 'அப்பா! கனவாலும் எப்படிப் பயமுறுத்திவிட்டது!' என்று ஏங்குகின்ருன். பல நாட்கள் கழிந்த பின்பும், முன்னர்க் கனவில்கண்ட நிகழ்ச்சியை நினைத்துக்கொண்ட மாத்திரத்தில், அவனையும் அறியாமல், அவன் உடல் நடுங்குகின்றது; நெஞ்சம் துணுக்குறுகின்றது.

இவனுடைய கனவு அனுபவத்தைப் பொய் என்று கூறிப் புறக்கணித்து விடலாமா? பொய்யே என்ருல், அவன் அஞ்சியதேன்? பல நாட்கள் சென்ற பின்னும், அவ்வச்சம் அவனைவிட்டு அகலாதிருக்கக்காரணமென்ன? கற்பனைப்பாம்பு உண்மையான அச்சத்தைத் தந்ததோடு, அதனை நெடுநாட்கள் நிலைத்திருக்கவும் செய்து விட்டது!

விழித்துக் கொள்ளாதவரை, கனவில் நிகழ்வனவற்றை நாம் உண்மையாகவே ஏற்றுக்கொள்ளுகிருேம்; நனவு வந்தபின்னரே, அது மாயத்தோற்றமாகத் தெளியப்படுகின்றது. ஒருமுறை கனவு பொய் என்று தெரிந்துகொண்ட நாம், மீண்டும் கனவு காணும்போது, இது பொய்த்தோற்றம், இதனை உண்மையாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று அதனைப் புறக்கணிப்பதில்லை. ஆகவே, நனவில் நிகழ்ச்சிகள் எவ்வாறு உண்மையாகத்

தோன்றுகின்றனவோ, அவ்வாறே கனவிலும் அக்காலத்து நிகழும் நிகழ்ச்சிகள் உண்மையாகவே தோன்றுகின்றன.

நனவு நிலைக்கு வந்த பின்னர், கனவில் கண்டவை பொய் என்ற எண்ணம் தோன்றுவதைப் போலவே, கனவிலும் சில நனவுக்கால நிகழ்ச்சிகள் நம்பத்தகாதன போலத் தோன்றுகின்றன. இதனால் நனவு அனுபவத்தைக்கொண்டு கனவைப் பொய் என்று புறக்கணித்தால், கனவு அனுபவத்தைக் கொண்டு நனவைப் பொய் என்று சொல்லவேண்டியதும் நேர்மையானது என்று ஏற்படுகிறது. இவ்வாறு வெவ்வேறு நியதிகளுக்குக் கட்டுப்பட்ட இருவேறு அனுபவங்களை, ஒன்றை ஆதாரமாகக்கொண்டு மற்றொன்றைப் புறக்கணிப்பதினும், இரண்டினையும் நம்முடைய உண்மையான அனுபவங்களாகக் கருதுவதே சிறந்தது.

நாம் இப்பௌதிக உலக நியதிகளுக்கு உட்பட்டு வாழ்கின்றோமாயினும், உண்மையில் மன உலகிலேயே இயங்குகிறோம். இம்மன உலகே கனவுக்காட்சிகளைத் தோற்றுவிக்கின்றது. உலகத்துப் பொருள்கள் நமக்கு இன்பதுன்பங்களைத் தோற்றுவிப்பனபோல் தோன்றுகின்றனவேயொழிய, நாம் இன்பதுன்பங்களைத் துய்ப்பது பொருள்களைப்பற்றியதன்று; இல்லையேல், ஒருவர் அமுது வேறொருவருக்கு எவ்வாறு நஞ்சாய் இருக்கக்கூடும்?

இவற்றால் நம் அனுபவங்களுக்கு நம்முடைய மனமே நிலைக்களன் என்றும், உலகப் பொருள்கள் அனுபவங்களைத் தோற்றுவிக்குங் கருவிகளாய் இருக்குமே ஒழிய அவற்றுக்கு ஆதாரங்களாய் இருக்கமுடியாது என்றும், உலகப் பொருள்களாகிய கருவிகள் இல்லாமலும் கூட நமக்கு அனுபவங்கள் ஏற்படக்கூடும் என்றும் உணருகிறோம். இவற்றை நன்குணர்ந்தே, கவிஞர், உலகப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் தீட்டும் பொழுதும், அவற்றை மன உலகத் தோற்றங்களாக மாற்றிச் சித்திரிக்கின்றனர். ஆகவே கவிதை மனித மனத்தை ஆதாரமாகக் கொண்டு அமைகிறது; அது படிப்பவர் மனத்தைப் பிணைக்கும் பண்பு சிறந்ததாய் இருப்பதில் வியப்பு என்ன?

* * * *

பூங்காவின் படங்கள் எவ்வளவு நன்றாய் இருந்த போதிலும், அவை அப்பூங்காவுக்கு இணையாகுமா? மெல்லிய காற்றில் பச்சிளஞ் செடிகள் அசைந்து ஆடும் அழகைப் படங்கள் எவ்வாறு புலப்படுத்தும்? சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தின் படிகளுக்குப் பக்கத்தில், சிற்பி ஓடும் யானை ஒன்றின் உருவத்தைச் செதுக்கி இருக்கிறான், இச்சிற்பம் ஓடுகின்ற யானையின் தோற்றத்தைத் தெளிவாய்க் காட்டுகிறது; யானையின் ஓட்டத்தை இதனைக்கொண்டு அறிந்துகொள்ளக் கூடுமா? சிற்பக் கலையைப் போலவே, ஓவியமும் பொருள்களின் நிலையை-இருப்பை-மட்டுமே புலப்படுத்தும்; அவற்றின் அசைவை-இயக்கத்தைப்-புலப்படுத்தும் ஆற்றல் இக்கலைகளுக்கு இல்லை.

சொல்லால் இயன்ற சித்திரங்கள்-கவிதைகள்-போராற்றல் படைத்தவை. சிற்பத்தையும், ஓவியத்தையும் போலப்பொருள்களின் நிலையை-இருப்பைப்-புலப்படுத்துவதோடு நின்றுவிடாமல், கவிதை அவற்றின் அசைவையும்-இயக்கத்தையும்-சித்திரிக்கும் வல்லமை வாய்ந்தது. இச்சிறப்புப் பற்றியே கவிதை கலைகளுள் உயர்ந்ததாய்க் கருதப்படுகிறது.

சிற்பக்கலையும், ஓவியக்கலையும் பொருள்களின் நிலைச் சித்திரங்களைத் தீட்டும் எனக் கண்டோம். இவற்றைப் போலவே பொருள்களின் நிலைச்சித்திரங்களைத் தீட்டுவதோடு நின்றுவிடும் கவிதையை வர்ணனைக் கவிதை (Descriptive Poetry) என்று கூறலாம். நிலைத்திருக்கும் ஒரு பொருளின் உண்மைத் தோற்றத்தையோ, அல்லது அசையும் பொருள் ஒன்றின் இயக்கத்தில் குறிப்பிட்ட ஒரு நிலையையோ இவை தமக்குப் பொருளாகக் கொள்ளுகின்றன இத்தகைய கவிதை பொருள்களின் இருப்புக்கு நிலைக் களனாய் அமையும் இடம் (Space) என்ற ஒரு மூலப் பொருளையே தமக்கு ஆதாரமாக அமைத்துக்கொள்ளுகின்றன.

நெடுநல் வாடை, முல்லைப்பாட்டு போன்றவை வர்ணனைக் கவிதையின் வகையைச் சேர்ந்தவை. இவை ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் திரட்டிக் கூறுகின்றன. காலக் கழிவால் தோன்றும் மாறுதல்களைப் பற்றிய கவலை இவைகளுக்கு இல்லை;

ஏனெனில் இயற்கையிலேயே இவை காலப் போக்கைப் பொருளாகக் கருதாமல் இருக்கும் பண்புடையவை. சிலப்பதிகார ஊர்காண்காதையில், மதுரை நகர மாண்புகள் வர்ணிக்கப்படுகின்றனவேனும், கவிஞர் காலமாறுதலுக்கு ஏற்ப மதுரை நகரத்தோற்றம் வேறுபடுவதை விவரிக்கிறார் ஆகையால், இப்பகுதி வர்ணனைக் கவிதை என்ற பகுப்பில் அடங்காது.

வர்ணனைக் கவிதைகளுக்கு நிலைக்களனாய் இருக்கும் இடம் எல்லாக் கவிதைகளுக்கும் ஆதாரமாக அமையும் பொதுவான மூலப்பொருள். இதனோடு காலம் (Time) என்ற மூலப்பொருளையும் ஆதாரமாகக்கொண்டு, இவ்விரண்டின் சேர்க்கை காரணமாக நிகழும் நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் கவிதையை விவரணக் கவிதை (Narrative Poetry) எனக்கூறலாம். இன்ன இடத்தில் இவை இவை நிகழ்ந்தன என்று விவரிக்கும் முறையில் அமைந்தவை விவரணக்கவிதை.

சங்கச் செய்யுட்களில் புறப்பாடல்கள் அனைத்தும் விவரணக் கவிதை என்ற பகுப்பில் அடங்கும். இவைகளில் விவரிக்கப்படும் நிகழ்ச்சி நிகழ்ந்த காலம், அது நிகழும் இடத்தைப் போலவே இன்றியமையாத தாகின்றது. சிந்தாமணி என்ற பெருங் காப்பியமும் இப்பாகுபாட்டில் அடங்கும். சீவகன் வாழ்க்கையில் நேர்ந்தவை அனைத்தையும், அவை நிகழ்ந்த முறையில் விவரிக்கிறது இக் காப்பியம்.

இடம், காலம் என்ற இரு மூலப்பொருள்களின் சேர்க்கையே இவ்வுலகம் அனைத்தும் என்பது ஆராய்ச்சி வல்லாரின் முடிந்த முடிவு. இவ்வுலகத்தின் இருப்புக்கு இடமும், அதன் இயக்கத்துக்குக் காலமும் ஆதாரங்களாய் அமைகின்றன. மேனாட்டார் சித்தாந்தப்படி, இவ்வுலகையும் அதன் இயக்கத்தையும் விளக்குவதற்கு, இரண்டு மூலப்பொருள்கள் போதும்; ஆனால் இவைகளோடு, மூன்றாவதொரு மூலப்பொருளும் இன்றியமையாதது என நம்மவர் கூறுகின்றனர்.

இடமும் காலமும் இன்றியமையாத அடிப்படை மூலப்பொருள்கள் என எவ்வாறு தெரிந்துகொண்டோம்? இவ்வுலகத்தையும் அதன்கண் நிகழும் நிகழ்ச்சிகளையும்

அலசி ஆராய்ந்து, 'இவை அனைத்திற்கும் நிலைக்களன் எது? இவை இவ்வாறு நிகழக் காரணமென்ன?' எனச் சிந்தித்து, அதன் பயனாய் இரு மூலப் பொருள்களின் இருப்பைக் கண்டுகொண்டோம். இவற்றைக் கண்டு கொள்ள உதவிய ஆராய்ச்சியைத் தூண்டியது எது? பொருள்களை இருக்கும்முறையில் ஏற்றுக்கொள்ளாமல், இவை எப்படித் தோன்றின? இவற்றின் மூலம் எது? என்று சிந்திக்கத்தூண்டிய மனத்தின் பண்பே அது! எப்பொருளுக்கும் காரணங்காணும் பண்பு மனித மனத்தின் இயற்கை. இதனையே நம்மவர் மூன்றாவதான மூலப்பொருளாகக் கொள்ளுகின்றனர். இதற்கு அவர்கள் ஏது (causation) எனப் பெயரிடுகின்றனர். பௌதிக நிலையில் உள்ள-மக்கள் இல்லாத-உலகுக்கு இரு மூலப் பொருள்கள் போதும். மக்களும் தோன்றி, அவர்கள் சிந்திக்கும் சக்தியையும் பெற்றிருப்பதால், 'ஏது' என்ற மூன்றும் மூலப்பொருளும் இன்றிமையாததாகிறது. இது மனித மனத்தை அடிப்படையாகக்கொண்டது. இடத்தையும், காலத்தையும் போலப் பொருள்களின் தோற்றத்துக்கும், மாறுபாட்டுக்கும் இது இன்றியமையாததன்று. ஆகவேதான் மேனாட்டார் இதனை ஒரு மூலப் பொருளாகக் கொள்ளவில்லை. பொருள்களின் தோற்ற ஒடுக்கங்களுக்கு ஆதாரமாய் அமையாவிடினும், அத் தோற்ற ஒடுக்கங்களை அறிவதற்கு ஆதாரமாய் இருப்பதால், 'ஏது'வை நம்மவர் அடிப்படை மூலப்பொருளாக மதிக்கின்றனர். இல்லையேல், இவ்வுலகையும், இதன் இயக்கத்தையும், இவை இடம், காலம் என்ற இருமூலப் பொருள்களின் சேர்க்கையால் தோன்றும் தோற்றமே என்று எவர் அறிவார்?

மனித மனத்தின் இப்பண்பை உணர்ந்தே, கவிஞர் தாம் கண்ட பொருள்களையும், நிகழ்ச்சிகளையும் மன உலகத் தோற்றங்களாக மாற்றிச் சித்திரிக்கின்றனர். காலக் கழிவால் நிகழும் பல நிகழ்ச்சிகளிடையே உள்ள தொடர்பைப் புலப்படுத்தி, இவையனைத்தும் ஒரு பிண்டத்தின் பகுதிகளே என உணரவைக்கும் கவிதைகளை-தொடர்புள்ள பல. நிகழ்ச்சிகளையும், அவற்றின் விளைவையும் சித்திரிக்கும் கவிதைகளை-நாடகக் கவிதை (Dramatic Poetry) எனக் கூறலாம். சங்கச் செய்யுட்களில் அகப் பாடல்கள் இப்பிரிவில் அடங்கும்.

நாடகக் கவிதையைப் போலவே, விவரணக் கவிதையும் நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பதுதானே! இவற்றுள் வேற்றுமை கற்பிப்பானேன்? நிகழ்ச்சிகளைச் சித்திரித்தல் இரண்டுக்கும் பொதுப் பண்பே; ஆனால் அவற்றைச் சித்திரிக்கும் முறையில் இவை மாறுபடுகின்றன. 'அவன் என்னை மணந்துகொண்ட பொழுது, ஓடுகின்ற நீரை எதிர்த்து வரும் மீனைப் பார்த்துக் கொண்டிருந்த நாரை நீங்க, வேறு எவரும் அங்கு இல்லை; இப்பொழுது அவன் தன் செயலை, மறுத்து விட்டானானால், என் கதி என்ன?' இச் செய்தியை நாடகக் கவிதை எப்படிச் சித்திரிக்கிறது என்று பார்ப்போம்!

யாரும் இல்லை! தானே களவன்!
தானது போய்ப்பின், யானெவன் செய்கோ!
ஒழுகு நீரால் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே.

நிகழ்ந்ததை நமக்குக் கூறுமுன், இது நிகழ்ச்சியின் சூழ் நிலையை விவரிக்கிறது; உடனே விளைவை வற்புறுத்துகிறது; பின்னரே, இறுதியாக, நிகழ்ச்சியைக் கூறுகிறது. இவ்வாறு செய்வதால் அப் பெண்ணின் மன நிலையையும், கலக்கத்தையும், வருத்தத்தின் எல்லையையும் நம்மை உணரவைக்கிறது. விவரணக் கவிதையோ, இவற்றை நமக்குத் தெரிவிக்கும்.

நாடகக் கவிதையில் பல்வேறு வகைகளைக்காணலாம் ஒரு முடிவை வற்புறுத்தச் சில நிகழ்ச்சிகளை விவரிப்பவை பல நிகழ்ச்சிகளைக் கோவைப்படுத்தி ஒரு கதையாகக் கூறுபவை; கற்பனை நிகழ்ச்சிகளைப் படைத்துக் கூறுபவை என. இவை ஒவ்வொன்றும் தனித்தனி அமைப்பிலக்கணத்தைத் தழுவி நடக்கும். இவை அனைத்திற்கும் இலக்கியங்கள் குறிஞ்சிக்கலியில் காணப்படுகின்றன,

அகப் பாடல்கள் பெரும்பாலும் நிகழ்ந்த ஒன்றை ஒருவர் மற்றொருவருக்குக் கூறுவதுபோல் அமைந்திருக்கின்றன. இவற்றுள் சில, நிகழ்ச்சிகளை நமக்குத் தெரிவிக்கும் முறையைக் கையாளாமல், அவற்றின் நிகழ்வை நம்மையே நேரில் காணச் செய்கின்றன. இதனால் இவை நாடகங்களின் அமைப்பு முறையைத்

தழுவி இயன்ற சின்னஞ் சிறு நாடகங்களாகவே ஆகி விடுகின்றன. இத்தகைய எட்டு சிறு நாடகங்கள் குறிஞ்சிக்கலியில் இருக்கின்றன.

* * * *

எல்லா இஃதோத்தன்

'ஏடி! இவன் ஒருத்தன்; என் சம்மதியைப் பெறு-தவன்; இவன் இன்னலைப் பார்! செல்வச் செழிப்புடன் நல்வாழ்வு வாழ்ந்த பெரியோர், தம் பொருள் தொலைந்து வறுமையின் வலையில் பட்டு, உய்யும் வகை அறியாது, மயங்கி, தம் துன்பத்தைத் தவிர்க்கும் குணமும், செல்வமும் உடைய தம்முடைய சுற்றத்தாரிடம் சென்று, அவருக்குத் தம் நிலையைக் கூறத் தொடங்கி, வாய் வாராமல் திகைத்து நிற்பவரைப் போல, இவனும் தன் குறையைக் கூற என்னைப் பல முறை வந்து பார்த்தான்; அவன் நிலைக்கு இரங்கி, அவனுடைய குறையைக் கூற ஊக்கப்படுத்துவதற்காக அவனை நான் பார்க்கும்பொழுது நாணத்தால் தலை குனிவான்.' தோழி, தன்னிடம் குறை நயந்த தலைவனைத் தலைவிக்கு இவ்வாறு அறிமுகப் படுத்திக் கொண்டிருந்தாள்.

'யான் நோக்கின் மெல்ல இறைஞ்சுந் தலை' என்று தோழி கூறி முடித்ததும், தலைவன் அவர்களை நெருங்கி வந்து வணங்கி நின்றதும் ஒன்ருய் நிகழ்ந்தன. தலைவனும் தலைவியும் ஒருவரோடொருவர் பழகிப் பயின்றவர்-களே. இவர்கள் நட்பைப் பற்றித் தலைவன் கூறித் தோழி தெரிந்துகொண்டிருந்தாள். ஆனல், தலைவி இதுவரை தோழிக்கு ஒன்றுஞ் சொல்லவில்லை யாகையால், தலைவனேடு அவளுக்குள்ள தொடர்பை அறியாதவள் போலவே, தோழி நடந்து கொள்ள வேண்டும்; தான் அதனை அறிந்துகொண்ட போதிலும், தலைவி அதற்காகக் கூசி நாணவேண்டாம் என்று அவள் உணரும்படியும் செய்ய வேண்டும்; தலைவன் விருப்பப்படி தலைவி களவு ஒழுக்கத்தை நீட்டிக்க விரும்புகிருளா — பிறர் அறியாமல் அவனைக் கூடி மகிழும் நிலையைத் தொடர்ந்து நடக்கச் செய்வாளா — என்று அறிந்து கொள்ளவும் வேண்டும். இவ் வனைத்தையும் சாதிக்கும்

நோக்கத்துடன், தோழி தலைவனோடு சூழ்ந்து; தலைவியை அவன் விருப்பத்துக்கு இணங்க வைக்க, ஒரு திட்டம் தயாரித்தாள். அதன் முதல் பகுதியை இப்பொழுது நாம் கண்டோம்.

அறிமுக உரையில், தோழி, தலைவனைப் பொருள் சுருங்கிய சான்றோருக்கு ஒப்பிட்டதன் வாயிலாய், அவன் நல்லொழுக்க முடையவன் என்றும், அவன் நிலை இரங்கத் தக்கது என்றும், அவனுக்கு உதவி புரிவது நல்ல செயல் என்றும் வற்புறுத்தி விட்டாள். அவன் தன் குறை இன்னது என்று இது வரையில் கூறவில்லை என்று குறிப்பிட்டதன் மூலம், அவனுக்கும் தலைவிக்கும் உள்ள தொடர்பை தான் அறிந்து கொள்ளவில்லை என்றும் குறிப்பித்து விட்டாள். இவ்வாறு தான் தெரிந்து கொண்டிருந்த ஒன்றைத் தோழி மறைத்துக் கூறியது, தலைவி தன்னெதிரில் அவனைச் சந்திக்க நாணக் கூடாது என்றே அவள் திட்டப்படியே, அதன் முதற் பகுதி, நன்கு நடந்து முடிந்தது.

தொடக்க நிகழ்ச்சி, தான் சூழ்ந்தபடியே நடந்து முடிந்ததைக் கண்ட தோழி, தன் திட்டத்தின் மற்றைப் பகுதிகளும் இவ்வாறே நன்கு நடந்தேறும் என்று மகிழ்ந்தாள் தன்னோடு நன்ருகப் பழகிய தலைவன், தோழியின் எதிரில் தன்னை முதன் முதலாகச் சந்திக்க வந்தபொழுது, தன் நிலையை உணர்ந்து, தங்கள் நட்பு முறையைச் சிறிதும் வெளிக் காட்டாமல், இதற்கு முன் கண்டறியாத பெண்ணைக் காண வந்தவனைப் போலவே நடந்து கொண்டது, தலைவிக்கு மகிழ்ச்சி தந்தது. இவ்வாறு இருவரையும் உவப்பித்ததை உணர்ந்த தலைவன், தன் நோக்கம் முற்றுப் பெறும் என்று மகிழ்ச்சியடைந்தான்.

இந்நிலையில், 'ஏடா! நீ எதனையோ கேட்க வந்தவனைப் போல் உன் முகக்குறிப்பால் உணர்த்துகிருய், உன்னைவிட்டு நீங்காத உன் நிழலைப் போலவே, நீ என்னைத் தொடர்ந்து திரிகிருய்; நீ பெருதது என்ன என்று வாய் விட்டுச் சொல்! எனக் கூறித் தோழி தலைவனைப் பேசத் தூண்டினுள். பேச நாணுபவனை, 'நீ கேட்டதைப் பெறுவாய்; ஆகவே தயங்காமல் சொல்லு' என்று தோழி ஊக்கம் அளித்த பின், தலைவன் பேசத் தொடங்

கின்றன். அப்பொழுதும் அவன் தயக்கம் முற்றிலும் நீங்கவில்லை. இவ்வாறு தலைவன் நடித்தது, தோழியின் சூழ்ச்சியைத் தலைவி தெரிந்து கொள்ளாமல் இருக்கவே.

'சொன்னால், மறுக்காமல் கொடுப்பாளா?' என்று தலைவியைச் சுட்டி, ஆனால் தோழியை நோக்கித் தலைவன் கேட்டவுடன், காலந் தாழ்த்தாமல், கலக்கமில்லாமல் தலைவி, 'சினம் காட்டாமல், கேட்டவர்களுக்குக் கொடுக்காமல் வாழ்வதினும் சாகவும் செய்யலாம்' என்று விடை அளித்தாள். தோழியின் சூழ்ச்சியின் இரண்டாம் பகுதியும் நன்கு நிறைவேறிற்று.

சும்மா இருப்பவரைத் தம்மோடு கலந்து கொள்ளச் செய்யவும், விருப்பமில்லாதவரையும் வலுச் சண்டைக்கு வற்புறுத்தி இழுக்கவும் மக்கள் கையாளும் பண்பட்ட முறையையே தோழியும், தலைவனும் கையாண்டனர். அவர்கள் எதிர் பார்த்திருந்தபடியே, பார்வையாளர் நிலையில் இருந்த தலைவி வெடுக்கென்று விடை தந்தது, இருவரையும் 'வெற்றி கொண்டோம்' என்று எண்ணச் செய்தது. இந்த இறுமாப்பு அவர்கள் தொடர்ந்து பேசிய முறையில் வெளிப்படையாய்க் காணப் படுகிறது.

இவள் தகப்பன் மிக்க விருப்பத்துடன் கேட்டவர் எல்லோருக்கும் அவர்கள் கேட்டவற்றைக் கொடுக்கும் குணமுடையவன் நீ வேண்டுவது எது?' என்று தோழி தலைவனைக் கேட்டாள். கொடுக்க வேண்டியவள் தலைவியே; இருந்தும், அவளுக்காகக் கேட்டதைத் தயங்காமல் தருவதாகத் தோழி வாக்களித்ததும், தலைவியின் தகப்பன் குணத்தைக் கூறி, அவன் கொடுக்கும் விழுப் பொருள்களில் உனக்கு எது வேண்டும் என்று கேட்டதும், தோழி, வெற்றிக் களிப்பில் மயங்கிச் சிந்திக்காமல் பேசியதைத் தெரிவிக்கின்றன.

'பேதையே! பணம் கேட்கும்படியான ஏழ்மை நிலை என்னிடத்தில் இல்லை.' அட! வேறு என்ன வேண்டுமாம்! வெற்றிச் உவகையில் தலைவன் சொன்ன இச் சொற்களைக் கேட்டுத் திகைப் படைந்தவளைப் போல் நடித்தாள் தோழி. தலைவிக்கு இவர்கள் பேச்சின் போக்கு இப்பொழுதுதான் விளங்கிற்று. இவர்கள் இருவரும் தன்னை எதிர் பாராத விதத்தில்

தங்கள் விருப்பத்திற்கு இணங்க வைக்கச் சூழ்ச்சி செய்துகொண்டு, அதன்படி தன்னெதிரே நடிக்கிறார்கள் என்று உணர்ந்து கொண்டாள். எதிர்பாராத முறை-யில் இவர்களைத் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்ற உறுதி கொண்டாள்.

'மடப்பம் பொருந்திய பார்வையினையுடைய உன் தோழியை எனக்கு அருள் செய்யும்படிக் கேட்கவே விருமபி வந்தேன்.' இங்கு தலைவன், தலைவியினுடைய மட நோக்கைக் குறிப்பிட்டது. இத்தகைய கள்ளங் கபடமற்றவள் தன் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளு-வாள் என்று அவன் நம்பியதை அவளுக்கு அறிவிக்க விரும்பியே. இவ்வாறு தலைவன் கூறி முடித்ததும், தோழி பாம்பை மிதித்தவளைப் போலவே பாசாங்கு செய்து, 'அப்படிப் பட்டவனோ நீ!' என்றாள். தனக்குத் 'தலைவன் என்ன கேட்பான்' என்று தெரியாது எனத் தலைவி கருத வேண்டும் என்றே இப்படிச் சொன்னாள். உண்மையில், தலைவன் திடீரென்று தலைவியே தனக்கு வேண்டும் என்று கேட்டதாக இருந்தால், தோழி, 'அப்படிப்பட்டவனோ நீ!' என்று சொல்லியதைத் தொடர்ந்து, 'நீ உடனே சென்று விடு; இங்கே நிற்காதே' என்றல்லவா கூறியிருந்திருப்பாள்! அவள் அப்படிச் சொல்லவில்லை; தலைவன் பெருமையைப் புகழ்கிறாள்.

'போரிலே வென்ற யானையைப் போன்றிருக்கும் இவன், தன்னை ஒரு பெண் அருள் செய்து காத்தல் வேண்டும் என்று கேட்கும் நிலை எத்தகையது!' என்று தோழி தலைவியை நோக்கிக் கூறினாள். அவன் பொருட் குறைவு இல்லாதவன் என்று அவன் சொற்களாலேயே அறிந்து கொண்டோம்; அவன் வீரம், பெருமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் நிறைந்தவன் என்று தோழி சொற்கள் அறிவிக்கின்றன. யானையைப் போன்ற வல்லமையுடையவன், வலிமை காரணமாய்த் தோன்றும் முரட்டுத்தனம் இல்லாதவனாய் இருக்கிறானாம். இல்லையேல், அவன் ஒரு பெண்ணை மதித்து, அவளுக்கு உயர்வு தந்து, அவளைத் தனக்கு அருளுமாறு வேண்டிக் கொள்வானா? பொருள், பெருமை, வலிமை, அறிவு, கோபமின்மை, அடக்கம் முதலிய நற் குணங்கள்

நிறைந்தவன் தானே வந்து அருளுமாறு கேட்ட பின்னரும், அவனைப் புறக்கணிப்பது அறிவுடைமை யாகுமா? தோழியின் சூழ்ச்சித்திறனின் எல்லையை இப்பகுதி விளக்குகிறது.

தலைவி நாணத்தால் பேச முடியாமல் இருப்பாள், அது தங்கள் வெற்றிக்கு அறிகுறியாகும் என்றே தோழியும் தலைவனும் எதிர் பார்த்தனர். ஆனால், தலைவி, தான் முன்னர் இவர்கள் சூழ்ச்சியைத் தகர்த்தெறிய வேண்டும் என்று கொண்ட உறுதிக் கிணங்க, தலைவனைப் பாராமலேயே, தோழியை நோக்கி, 'இவன் நிச்சயமாக நாணம் சிறிதும் இல்லாதவன்' என்று சொல்லிவிட்டாள்.

வெற்றிக் கனவையே கண்டு கொண்டிருந்தவனும், தன் கனவு நனவாவதற்கு நல்ல அறிகுறிகள் காணப் படுவதாகக் கருதி வந்தவனுமாகிய தலைவன், தலைவியின் சொற்களைக் கேட்டுத் திகைப்புற்றான். 'நான் நாண மற்றவன் என்பது உன் உறுதியான கொள்கையானால், இவ்வூரார் பலரும் சிரித்து ஏளனஞ் செய்யும்படி, ஊர் நடுவே மடலேறுவேன்' என்று கூறி அகன்றான்.

தலைவன் கூறியவைத் தலைவியை அவனுக்கு அருளு-மாறு வற்புறுத்தும் முறையில் அமைந்திருக்கிறது. தான் மடலேறும்படி நிகழ்ந்தால், அதன் பொறுப்பு முற்றிலும் தலைவியைச் சார்ந்ததே என அவன் தெரிவித்துவிட்டான். மடலேறி இறந்துபடும் 'நிலைக்கு ஒரு-வனை உட்படச்செய்வது, காதலியின் கல்நெஞ்சைக் காட்டுவதாகுமன்றோ! தலைவன் சென்றபின், தோழி, மீண்டும் அவனுடைய குறையை ஏற்றுக்கொள்ளும்-படியே தலைவியை வற்புறுத்துகிறாள். இதுவரைப் பல முறைகள் அவன் தன்னிடம் வந்து சென்றான் என்றும், அக்காலங்களில்தான் மறுத்துரைத்தவைகளையும், பரிக-சித்ததையும் பொருட்படுத்தாமலிருந்ததும், தன்னோடு பேசும்பொழுது, தலைவி இருக்குமிடங்களிலேயே கண்ணோட்டம் உடையவனாய் இருந்ததும் அவன் அவளிடத்-துக் கொண்டிருந்த அன்பு மிகுதியைப் புலப்படுத்துவன என்றும் கூறினாள். இவைகளுக்கெல்லாம் மேலாக, நாம் பிறரை ஒன்றை வற்புறுத்திச் செய்யச் சொல்லும்

பொழுது, அவர் மதிப்பு தருபவரைச் சுட்டி, அவருக்கும் இவ்வாறு செய்வது இசைவுடையதாய் இருக்கும் எனக் கூறி வற்புறுத்தும் பண்பட்ட முறையையே, தோழியும், 'எந்தை தன் உள்ளம் குறைபடாவாறு' என்று கூறும் பொழுது கடைப்பிடித்ததைக் காண்கிறோம். தோழி மனித மனப்பாங்கை நன்குணர்ந்தவள் என்பதில் ஐயம் என்ன? அவனையும் தோல்வியுறச் செய்த தலைவியின் திறமைதான் அளவிடத்தகுந்ததா?

'இது என்ன! ஒழியாத தொல்லையாகி விட்டதே! 'பிறர்பார்த்தால் என்ன நினைப்பார்கள்!' என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல், கண்ட இடத்தில் நம்மை நோக்கித் தொழத் தலைப்பட்டுவிட்டான்! பழிக்குப் பயந்து, அவனை அகலும்படிக் கைச்சாடை காட்டிப் பணித்தால், 'இவள் ஏன் இப்படி நம்மைப் புறக்கணிக்கிறாள்? நம்மீது சிறிதும் இரக்கமில்லாதவளாய் இருக்கிறாளே!' என்று எண்ணுபவனாய்க் கலங்கிய மனத்துடன், போகாமல் நின்றுகொண்டிருப்பான்! இவனிடமிருந்து நம்மை இனிக் காத்துக்கொள்ளுவது இயலாத தொன்றாக ஆகி விட்டதே!' இவ்வாறு தலைவன் செயல்களையும், அவற் றிற்குக் காரணமான அவன் மன நிலையையும் தோழி தலைவிக்கு விவரித்தாள்

'ஏடி! இதற்கு என்ன செய்வோம் சொல்!' என்று தலைவி கேட்ட குறிப்பே, 'நீ சொல்லுகிறபடியே நான் கேட்கிறேன்' என்று அவள் தன் சம்மதியைத் தெரிவிப் பதுபோல் இருந்தது இனித் தோழி தயங்குவாளா? என்ன செய்யவேண்டும் என்று தலைவிக்குத் தோழி விவரிக்கத் தொடங்கிவிட்டாள்.

'நீ கவலைப்படாதே! அவனிடம் பலமுறை விருப்பத் தோடு உன்னைக் கொண்டு விட்டவளைப் போலவே நான் நடந்துகொள்ளுவேன். நீ என் தோள்களின் மீது கரும் பும் வில்லும் எழுதத் தொய்யிற் குழம்பு கொண்டுவரச் சென்றவளைப்போல் காட்டிக்கொண்டு, நான் அவனிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். 'என்னடீ! இதுவே இடமாக இருந்துவிட்டாய்!' என்று என்னைக் கூப்பிட வந்தவளைப் போல் நீ அங்குவா. அவன் உன் அடிகளில் விழுந்து வணங்குவான்; தன் நோயைத் தீர்த்தருளுமாறு வேண்டுவான்.'

முதன் முறையாகத் தன்னெதிரில் தலைவனைச் சந்திக்கத் தலைவி நாணுவாள் என்றே, அவளுக்குத் தோழி, பலமுறை அவனை அழைத்துச் சென்றவளைப் போலவே இருப்பதாக உறுதி கூறினாள். தன்னுடன் வர அஞ்சுவாள் என்று எண்ணியே, தான் முன்னால் போய் விடுவதாகக் கூறினாள்; நன்கு பழகியவனானாலும், அவனைத் தோழிக்குத் தெரிந்து சந்திக்க நாணமடைதல் இயற்கையே. ஆகவே தான், தன்னைத் தேடிவந்தவள் அவனைக் கண்டதாக முடியவேண்டும் என்றும் சூழ்ந்தாள் இவைகளுக்குமேல், தலைவன் தோழியோடு பேசிக்கொண்டிருக்கையில், அவனும் எதிர்பாராமல் தலைவியைச் சந்திக்க நேருமன்றோ! இவ்வாறு இருவரும் எதிர்பாராதவிதமாக ஒருவரை ஒருவர் சந்திப்பது நாணத்தை நீக்க உதவும்.

தோழி கூறியவை தலைவிக்கு உடன்பாடே. அவள் இந்த உதவியைச் செய்யமாட்டாளா என்று தலைவி ஏங்கிக்கொண்டிருந்தாள். இருந்தும், தோழி எதிர்பார்க்கும் அளவுக்கு, தன் நாணத்தைப் போக்கிக்கொள்ள அவளால் முடியவில்லை. 'நீ மறுபடியும் அவனிடம் சென்று. என் தோழி உன் துயரத்தைப் போக்க உடன்பட்டாள் என்று சொல்லாமலிருப்பதாக எனக்கு வாக்கு கொடு' என்று சொல்லி மறைமுகமாய்த் தன் உடன்பாட்டைத் தெரிவித்தாள்.

தலைவியின் நிலையை நன்குணர்ந்த தோழி, அவளுக்கு அளித்த புத்திமதி மிகவும் பாராட்டத்தக்கது. 'நீ நாணுவதை நான் தடுக்கவில்லை. இப்பொழுது என் எதிரில், இப்பேச்சு வளர்ந்ததனால், நீ கால் விரலால் நிலத்தைக் கீறியபடி நிற்கவில்லையா. இப்படியே அவன் எதிரிலும் நடந்துகொள்!' எற்கனவே செய்து பழகிய செயலையே, தோழி மீண்டும் செய்யச் சொன்னாளாகையால் தலைவிக்குத் தலைவனைச் சந்திக்கவேண்டும் என்ற அவா மிகுந்ததனோடு, நாணத்தை அடக்கிக்கொள்ளும் ஆற்றலும், அதற்கு வேண்டிய மன உறுதியும் ஏற்பட்டன.

இவ்விரண்டு கவிதைகளும் அமைப்பு முறையில் ஓரினத்தைச் சேர்ந்தவை. இரண்டிலும் தோழியர் சூழ்ச்சித் திறன் உடையவராய்க் காணப்படுகின்றனர்.

சூழ்ச்சியின் சித்திரங்களாய்க் காணப்படும் கதைகள் இரு பகுதிகளாய் இயங்குவதைக் காணலாம் அவற்றை அடைகாத்தல், குஞ்சுபோரித்தல் என டாக்டர் பிராட்லி அழைக்கிறார். இவ்விரு கவிதைகளிலும் முறையே 'யாழ' 'வந்தை' என்ற அசைச் சொல்லும், மரபுச் சொல்லும், கவிதைகளின் இரு பகுதிகளையும் பிரித்துக் காட்டுகின்றன.

* * * *

எஎ இஃதோத்தன்

'சே! இவனும் ஒரு மனிதன்; நாணமற்றவன்; தன்னிடம் விருப்பமில்லாதவரையும் வலிதிற் பிடித்திழுக்கிறான்!' சினங்கொண்ட ஒரு பெண்ணின் சொற்கள் இவை. தன் வழியே போய்க் கொண்டிருந்த பெண்ணைப் பிடித்திழுத்தால் அவள் சும்மா இருப்பாளா? இவ்வளவோடு அவனை விட்டாளா என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா? இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அவர்கள் பழைய நண்பர்கள்; சில நாட்களாகத் தலைவன் அவளைக் காணச் செல்லாமல் இருந்து விட்டான். அவள் அவனிடத்துக் கோபங் கொண்டிருந்தாள். அவளை எதிர் பாராமல் சந்தித்தவன், பின்புறமாகச் சென்று திடீரென்று பிடித்து நிறுத்தினான். அவள் சீறி விழுந்ததை அவன் பொருட் படுத்தினானா? கருமத்தில் கண்ணுயிருப்பவன், பிறர் கோபத்தைப் பொருட் படுத்தினால் எப்படி வெற்றி பெற முடியும்? 'நீ என்னை விரும்புவதையும், விரும்பாததையும் நான் எப்படி அறிவேன்? அது உனக்கல்லவா தெரியும். மெல்லிய பூங்கொடி போன்றவளே! உன்னை அணைத்துக் கொள்வது இன்பம் தருகிறதாகையால் நான் உன்னைப் பிடித்திழுத்தேன்!' இவை தலைவன் சொற்கள்.

வலியப் பிடித்திழுத்ததனோடு, தன் செயல் சரியானதே என்று கூற முன் வருபவன் எத்தகைய சாகசக்காரனாயிருக்க வேண்டும்! அவன் தன் திறமை காரணமாக அவளை வெற்றி கொள்ளுகிறான், 'எனக்கு இன்பம் தரும் காரணத்தால் பிடித் திழுத்தேன்' என்று

கூறிய குறிப்பு, 'அது உனக்கு துன்பம் தரும் என்று தெரிந்திருந்தால் அவ்வாறு செய்திருக்க மாட்டேன்' என்று கூறியதைப் போல் தோன்றவில்லையா? அவன் தன் இன்பத்தையே கருதவில்லை, அவளுக்காகவும் வாழ விரும்பினான் என்று காட்டிக் கொண்டான்.

அவன் பசப்புப் பேச்சில் அவள் மயங்கிடவிடவில்லை, அவள் சினம் சற்றுத் தணிந்தது உண்மையே. முன்னர் அவனைத் திரும்பிப் பாராமல் பேசியவள், இப்பொழுது அவனைப் பார்த்து, 'தமக்கு இன்பந் தருவது என்று, வலியப் பிறர்க்குத் துன்பஞ் சூழ்வது நேர்மையானதோ?' என்று கேட்டாள். அவன் செயலை விரும்பாமல் கூறிய சொற்கள் அல்ல இவை. அவனிடத்து அன்புடையவளே யாயினும் அவனிச்சைப்படி அடங்கி நடக்க அவள் விரும்ப வில்லை. தன்னையும் அவன் பொருட்படுத்த வேண்டும் என்றே அவள் வற்புறுத்தினாள். வேறு திசையைப் பார்த்துத் தன்னைப் பழித்தவள், இப்பொழுது முகங் கொண்டு தன்னைப் பார்த்துப் பேசவே, வெற்றி உவகை யால் தலைவன் அவள் கேட்ட கேள்விக்குக் கேலியாய் விடையளித்தான். 'உன் அறிவைக் கைவிடு. நான் கூறுவதைக் கேள். தண்ணீர் குடிப்பவர், தம் விடாயைத் தீர்த்துக்கொள்ளக் குடிக்கிறார்களா அல்லது தண் ணீருக்கு அதனால் இன்பம் உண்டு என்று குடிக்கிறார் களா?' தலைவன் வாதத்தை அவள் பொருட்படுத்தவே இல்லை. பேசாமல் இருந்தாள். அவள் சினத்தைத் தணிக்கத் தாழ்ந்து போவது ஒன்றே வழி என்று தெரிந்து கொண்டான்.

ஐந்தலை நாகத்தின் பிடிக்குள் பட்டவனைப்போல் அவன் அவளிடம் சிக்கிக் கொண்டானும்; விடுவித்துக் கொள்ள வழி தெரியாமல் திண்டாடுகிறானும். குளிர்ச் சியைத் தந்து மக்களை மகிழ்விக்கும் மதிபோன்ற முக முடையவளுக்கா அருள் இருக்காது? அவள் அருளினால் அவன் பிழைப்பானும்; இல்லையேல் அவன் சாகவேண்டி நேருமாம். அவள் அருளாதிருக்க அவன் என்னகுற்றஞ் செய்து விட்டான்? அவன் செயலை அறநூல்களும் ஒரு வகை மணமே என ஒப்புகின்றன அன்றோ? சும்மா சென்ற வளை வலியப் பிடித்திழுத்த செருக்கெங்கே? இப்பொழுது பணிந்துதொழும் நிலை எங்கே?

தலைவன் தன் செயலுக்கு வருந்துவதாகக்கூறி அவளை வேண்டிக்கொண்ட பின்னரும் அவனை அவள் ஏற்றுக்கொள்ளாவிடின் அவளை இரக்கமற்றவளாகக் பிசாசாக—கருதுவோ மன்றோ? அவன் செயல் அறிக்கழி வுடையதன்று என்று தெளிவான பின்பும், அவனை மறுக்கலாமா? தலைவி இவற்றை நன்குணர்ந்திருந்தாள். இருந்தும் அவள் நாம் எதிர்பார்க்கும் முறையில் அவனோடு சந்துசெய்து கொள்ளவில்லை.

அவன் செய்தது குற்றம் என்று வாதாடிவிட்டு' இப்பொழுது அவன் கூறியவற்றை ஏற்றுக்கொள்வது' அவனுக்கு அவள் பணிந்து போவதாகக் கருதப்படு மன்றோ? இதனை அவள் எவ்வாறு பொறுப்பாள்? அவள் பெருமைமயை இது சிதைத்துவிடாதா? அவன் செயல் அறநெறி பிறழாதது என ,அவள் ஏற்றுக்கொண்டாள். இருந்தும், இக்காரணம் பற்றி அவனோடு நட்புகொள்ளா மல், 'பண்டு நாம் வேறல்லம்' என்ற வழக்கிற்காக அவனோடு தனக்கு மாறுபாடு ஒன்றும் இல்லை என்று தெரிவித்தாள். தற்பெருமை சிதையாமல், தோல்வியை ஏற்றுக் கொண்ட தலைவியின் நடத்தை பாராட்டத் தக்கதே யன்றோ?

* * * *

அணிமுக மதியேய்ப்ப.

பல நாட்கள் கழித்துத் தலைவியைப் பார்க்கச் சென்றான் அவன். பிரிவால் கலங்கி, தன் அழகு குன்றிக் காணப்பட்டாள் அவள். இவ்வளவு காலம், அவள் மெலிந்து போகும்படிப்பிரிந்து வாழ்ந்ததற்காகத்தன்னைக் கடிந்து கொள்வாள் என்று அறிந்த தலைவன், அவள் பேசத் தொடங்குவதற்குமுன் அவளைச் சண்டைக்கு இழுக்கிறான். வீண் போராட்டத்தில் உரக்கப் பேசுபவரே வெற்றி காண்பாரன்றோ?

'நான் உன்னோடு கூடியிருந்த பொழுது நீ எவ்வளவு அழகாய் இருந்தாய்? இப்பொழுது அவ்வழகைத் தொலைத்துவிட்டு நிற்கிறாயே! அவற்றை நீ எனக்குத் திருப்பித்தரக் கடமைப்பட்டவள்' என்று தொடங்கினான் தலைவன். அவனுக்கு எள்ளளவும் சளைத்தவளல்ல

அவள். 'அட! போ! ஏதோ நாலு நாள் என்னோடு இருந்தவனைப் போல் போக்குக் காட்டிச் சென்றதால், நான் அழகுடையவளாகி விட்டேனும்! அப்படி என்ன இவன் என்னுடனேயே இருந்து, என்னைப் பொலிவு பெறச் செய்து விட்டான்?' என்று சுடச்சுடத் திருப்பிக் கொடுத்தாள் அவள்.

'இது என்ன? முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கிறாயே! உன் கண்கள் குவளை மலர்களைப் போல் இருந்ததும், உன் தோள்கள் பருத்துத் திரண்டு இருந்ததும், என்னுடன் இருந்ததால் அன்றோ? சரி அவை போகட்டும! இப்பொழுது என்ன அழகைப் பெற என்னை அணையப் போகிறாய்' இவை தலைவன் சொற்கள். 'இப்பொழுது என் கண்கள் இருக்கும் நிலையைப் பார்; கத்தியால் கீறிய மாவடுக்களைப் போல் காணப்படும் இக்கண்கள் இப்படி இருப்பதற்காக நான் உனக்குக் கடமைப் பட்டிருக்கிறேன் என்று சொல்லுவாயோ?' இவை தலைவியின் சொற்கள்.

இந்த வாதம் முடிவடைவதாகக் காணோம். 'ஏன் அவளைச் சற்றுக் கடிந்து கொள்ளக்கூடாது' என்று எண்ணினான் தலைவன். 'என்னை என்னவென்று எண்ணிக் கொண்டாய்; தன் சொத்தை உண்டவனைக் கண்டால், எப்படி அரசன் ஒருவன் தன்னிடமிருந்து அபகரித்தவைகளோடு, வேறு வகையில் சேர்த்த பொருளையும் அவனிடமிருந்து பிடுங்கிக் கொள்ளுவானோ, அப்படியே, இப்பொழுதே, இங்கேயே, நீ கடமைப் பட்டிருப்பதற்கு மேலும், உன்னிடமிருந்து திரும்பப் பெறும் ஆற்றல் எனக்கு உண்டு' என்று கூறியபடி தன் மீசையை முறுக்கிவிட்டான் அவன்.

'நிறுத்து உன் பேச்சை. என்னைக் கலியாணஞ் செய்து கொண்டு, உன் வீட்டில் கொண்டு வைத்துக் கொண்ட பின், நீ என்னை மிரட்டிப் பார்க்கலாம். இப்பொழுது மீசையை விட்டுக் கையை எடு' என்று கூறி விட்டாள் அவள்.

இனி வேறு என்ன செய்வது? நயத்தால் அவளை வெற்றி கொண்டான். 'நீ பட்ட கடன் முழுவதையும் அடைத்துவிட, பொய்யாகவானாலும் என்னை ஒரு முறை

அணைத்துக் கொள்' என்று வேண்டிக் கொண்டதை அவள் மறுத்திருக்கக் கூடுமா ?

இவ்விரண்டு கவிதைகளும் அமைப்பு முறையில் ஓரினத்தைச் சேர்ந்தவை. இரண்டும், இப்ஸன் நாடகங்களைப் போலக் கதையை நடுவில் தொடங்குகின்றன.

* * * *

கயமலர் உண்கண்ணாய்.

'அழகான மாலையை அணிந்தவன்; வில்லை ஏந்திய வனாய் விலங்குகளின் அடிச்சுவடுகளை ஆராய்ந்தவனாய் வருவான்; தினமும் நாம் பாதுகாக்கும் புனத்தருகே வருவான்!' இவ்வாறு தோழி தான் கண்ட ஆடவன் அடையாளங்களை விவரிக்கத் தொடங்கிய பொழுதே, தலைவிக்கு அவன் தன் காதலனே என்று தெரிந்து கொள்ள முடிந்தது. 'என்னைப் பார்த்து, தனக்கு ஏதோ ஒரு குறை இருப்பதுபோல் தன்முகக் குறிப்பால் உணர வைப்பானே ஒழிய ஒன்றும் கூறாமல் சென்றுவிடுவான்'. இதனைத் தோழி கூறி முடிக்கும் பொழுதே, தலைவிக்கு மனதை அடைப்பது போல் இருந்தது. 'அவன் நிலையைக் கண்டு, அவனோடு ஒரு தொடர்பும் இல்லாத நானே மிகவும் துன்பப்படுவேன்.' தலைவியின் மனம்பட்ட பாட்டை யார் அறியக்கூடும்? 'ஆடவனாகிய அவனே, வாய் விட்டுத்தான் வேண்டியதைத் தெரிவிக்கத் தைரியமில்லாமல் சென்று விட்டானேயானால், உன் நிலையைக் கண்டு நான் மிகவும் வருந்துகிறேன்.' என்று என் மன நிலையை அவனுக்கு உரைத்தல் நம் பெண் தன்மைக்கு ஏற்றதாகுமோ?'

தலைவிக்கு இன்னது செய்வது என்று விளங்கவில்லை. இனி, தலைவனைக் காண்பது எப்படி? அவனைத் தோழியிடம் கூறுமாறு பணித்ததைக் காட்டிலும், தானே அவளிடத்தில் சொல்லி விட்டிருக்கலாமே! இவ்வாறு தலைவி எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், தோழி தன் கதையைத் தொடர்ந்தாள். 'இப்படியே பல நாட்களும் 'அவனுக்கு என்னகுறை' என்று ஆராய்வதிலேயே நான் தூங்காமல் கழிக்கிறேன் என்பதனை அவன் உணராமற்

போய்விடுதலும் கூடும் என்று எண்ணி, ஒரு நாள், நான் ஒரு நாணமற்ற செயலைச் செய்தேன்!' தலைவியின் மனக் கலக்கத்தை இச் சொற்கள் போக்கின. அவள், தோழி என்ன செய்தாள்? தலைவன் என்ன சொன்னான்? என்று அறியும் ஆவலுடையவளாய் மாறினாள்.

'கிளிகள் வந்து விழாமல் நாம் பாதுகாக்கும் கொல்லைக்கு அருகே உள்ள ஊஞ்சலில் ஒரு நாள் ஆடிக்கொண்டிருந்த பொழுது, அவன் வந்தான். 'ஐயா! என்னைச் சற்று ஆட்டிவிடும்: என்றேன். 'நல்லது! ஆட்டுகிறேன் என்று சொல்லி அவன் ஊஞ்சலை ஆட்டினான்!' தலைவிக்குத் தானும் தலைவனும் காதல் கொண்ட வரலாற்றையே தோழி கூறத்தொடங்கி யிருக்கிறாள் என்று ஐயம் எற்பட்டது. 'பொய் சொல்லுகிறாய்' என்றோ 'கேலி செய்கிறாய்' என்றோ கூற அவள் நாணம் இடமளிக்கவில்லை. வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு மேலே என்ன சொல்லப்போகிறாள் என்று எதிர்பார்த்தபடி இருந்தாள்.

'என் கைகள் சோர்வடைந்து நழுவி விழுந்தவளைப் போலவே நடித்து, அவன் மார்பில் வீழ்ந்தேன். அவன், நான் உண்மையாகவே தவறிவிழுந்தேன் என்றுஎண்ணியவனாய், என்னைக்கீழே விழாமல் அணைத்துக்கொண்டான். அவன் மார்பின் மீது உணர்வற்றவளைப் போல் கிடந்தேன்.' தலைவி கொல்லென்று சிரித்துவிட்டாள். தான் தலைவனைச் சந்தித்த விதத்தையும், தைரியமற்றவனாய் இருந்தவனுக்குத் தைரியமூட்டித் தன்னைக் காதலிக்கச் செய்ததையும், அப்படியே தன் வாழ்க்கையில் நடந்தவற்றைப் போல, தோழி மாற்றிக் கூறியதைக் கண்டு சிரிக்காமல் என் செய்வாள்?

தலைவியின் நடத்தை, அவள் இரவுக் குறியில் தலைவனைக் காணவும், களவொழுக்கத்தை நீட்டிக்கவும் உடன் படுவாள் என்று தோழிக்கு உணர்த்திற்று. தலைவன் எத்தகைய அன்புடையவன் என்பதைக் கூறி அவள் தன் கதையை முடித்தாள். 'என் நிலையை உணர்ந்து நான் எழுந்திருந்தேனானால், உடனே 'போய் விடு, யாராவது பார்த்தால் அலராகும்' என்று சொல்லி விரைவில் போக்கி விடுவானாகையால், அவன் நம்மிடத்து மிக்க அன்புடையவன்.' களவொழுக்கத்தை நீட்டிப் பதில் அபாயம் இல்லை என்று தலைவிக்கு அறிவிக்கும்

முறையில் அமைந்திருக்கின்றன தோழியின் இறுதிச் சொற்கள். பிறர் நம் உறவை அறிந்து கொள்ளாதபடிப் பாதுகாப்பதில் ஆர்வங் காட்டுபவன், அலரெழும்படி நடந்துகொள்வானா?

* * * *

சுணங்கணி வனமுலை.

'கண்ணுக்கு நிறைந்த அழகுடையவர், தம்மைக் கண்டவர்க்கு அவர் மனத்தே உள்ள நோயைத் தூண்டிப் பெரிதாக்கி, அதனைப் போக்க முயலாததோடு, உயிர் நீங்காமல், ஆனால் அதனை வாங்கும் எல்லைக்குத் துன்பத்தைத் தருவது பெண் தன்மைக்கு ஏற்றதாகுமா? இவ்வாறு கூறி, போரில் வல்ல யானையைப் போன்றவன் என்னைத் தொழுது, தன் கண்களே நீராகிவிடுமோ என்று நான் அஞ்சும்படிக் கண்ணீர் சொரிந்தான். உன் அருளைப் பெறுததற்கு அவன் என்ன பாவம் செய்தானோ! உள்ளுக் குள்ளேயே உருகி அழிகின்றானே!' தலைவன் நிலையை மனமுருகக் கூறுவதால், தலைவி களவொழுக்கத்தை மேற்கொள்ள ஒப்புவாள் என்று தோழி நினைத்தாள். அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக, 'தோழி தலைவன் நிலையை மிகைப்படுத்திக் கூறுகிறாளோ' என்று ஐயப் பட்டாள் தலைவி.

'தெருவில் கலங்கி அழும் எவனோ ஒருவனைக்கண்டு, அவன் படும் துன்பத்தை நீ படுவதாக நினைத்துக் கொண்டு நீ கலங்குவானேன்? உன்னால் நேராத துன்பங் களைப் போக்க நீ முற்படுவது எதற்கு' என்றாள் தலைவி. அவள் அலருக்குப் பெரிதும் அஞ்சினாள். ஆகவேதான், தலைவன் தோழியை வற்புறுத்தியிருக்கவேண்டும் என உணர்ந்தும், இவ்வாறு விடை அளித்தாள்.

'கண்டவன் துயரத்தை என்னுடையதாக நான் ஏற்றுக்கொள்ளவில்லை. உன்னுடைய காட்சியே அவன் உயிரை வாங்குவதாக அவன் சொன்னான். அவன் படும் இன்னலுக்கு நல்ல மருந்து உன்னை மீண்டும் காண்பதே என்றும் சொன்னான். அவன் வருந்துவது உண்மை; அதனைத் தீர்க்கவேண்டும் என்ற எண்ணமும் எனக்கு

இருக்கிறது. உன் முகத்தை அவனுக்குக் காட்டுவ தல்லாமல், என்ன மருந்து என்னிடம் இருக்கிறது? நாம் என்ன செய்யலாம்?' அவன் துயரம் அளவற்றது என்றும் அதனைப் போக்குவது தலைவியின் பொறுப்பு என்றும் தோழி வற்புறுத்தியும், தலைவிக்கு, அவள் வேண்டு மென்றே, எடுத்த காரியத்தில் வெற்றிகாணத் தலைவன் நிலையை மிகைப்படுத்திக் கூறுகிறளோ என்ற ஐயமே மிக்கது.

'பொன்னைப் பண்ணுவோம்! நடுத்தெருவில் நின்ற படி, ஒருவன் கூறுவனவற்றை உண்மையாகக் கருதி. அதனை ஆராயாமலேயே, அவன் வருத்தத்தைப் போக்க முற்படுவது எளிதான காரியமா?' 'என்ன செய்யலாம்' என்று தலைவனிடத்தில் மிக்க பரிவைக் காட்டியவளாய்த் தோழி கேட்டதற்கு, 'பொன் செய்வாம் என்று மிகவும் அசட்டையாக விடை அளித்தாள் தலைவி. அவன் பேச்சை நம்பி, களவொழுக்கத்தை மேற்கொண்டு, பின்னர் மணஞ் செய்துகொள் என்று அவனை யாசித்துக் கொண்டிருப்ப தினும், அவனை இப்பொழுதே மணந்து கொள்ளத் தூண்டி அதுவரை அவன் பிரிவால் பசலை பரப்பதைப் பொறுத்துக்கொண்டிருப்பதே சிறந்தது என்பது தலைவி யின் உட்கோள்.

தான் எவ்வளவுக்கெவ்வளவு தலைவன் வருத்தத்தை பெருக்கிக்கூறினளோ, அவ்வளவுக்கவ்வளவு தன்கூற்றை நம்பாததனைக் காணத் தோழிக்குச்சினம் மூண்டது. 'அப்படியானல் ஒருவனை இறந்துபோக விடுவது எளிது!' என்று தன் கோபத்தைக் கொட்டிப் பேசினள். தோழி தொடர்ந்து தலைவன் நிலை இரங்கத்தக்கது என்று கூறி வந்ததும், இப்பொழுது அவன் தன்னைக் காணுவிடில் இறந்துவிடுவான் என்று கூறியதும், தலைவியின் அலரச்சத்தைப் போக்கப் பயன்பட்டன. 'அலர் எழுந் தாலும் எழட்டும், அவனை மகிழ்விப்பதே நம் கடமை' என்ற உறுதியுடன் அவள் தலைவனைக் காணச் சம்மதித் தாள்.

இவ்விரு கவிதைகளும் ஒரே விதமான அமைப்பு முறையை உடையவை. இவை இரண்டிலும், தோழியர், நிகழ்ந்தவைகளாகச் சிலவற்றைக் கூறி, தலைவியரை வெற்றி கொண்டனர்.

சுடர்த்தொடீஇ கேளாய்.

'நாம் மணலால் கட்டும் சிறிய வீடுகளைத் தன் காலால் உதைத்தும், தலையில் சூடிய பூச்செண்டுகளை அறுத்து எறிந்தும், விளையாட வைத்திருக்கும் கீற்றிழைத்த பந்தை எடுத்துக்கொண்டு ஓடியும், நம்மை அழவைத்து வேடிக்கை பார்ப்பானே, சிறு போக்கிரி, அவனைத் தெரியாது உனக்கு?' தலைவி தன் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைத் தோழிக்குக் கூறத் தொடங்கினாள்.

தலைவனை அறிமுகப்படுத்திய விதத்திலிருந்தே அவன் குறும்பு செய்வதில் விருப்பமுடையவன் என்றும், அவன் செய்த குறும்புச்செயல் ஒன்றை நாம் அறிந்து கொள்ளப்போகிறோம் என்றும் உணர்ந்து கொள்ளலாம். அவன் தலைவியைப் பார்க்க வந்தான். சற்றுப் பெரிய வளாகிவிட்டதால், முன்போல, தெருவில் விளையாடுமிடங் களில் அவளைச் சந்திக்க முடியவில்லை. ஆகவே, அவள் வீட்டிற்கே வந்தான்.

வந்த இடத்தில் தலைவியோடு அவள் தாயும் உடனிருப்பதைக் கண்டான். ஆகவே, 'குடிக்க நீர் வேண்டும்' என்று கேட்டு, தான் வந்த நோக்கத்தைத் தலைவியின் தாய்க்கு மறைத்தான். தாயும், அவன்கூறி யதை உண்மையாகக் கருதி, மகளைத் தண்ணீர் கொடுக்கச் சொல்லிவிட்டுத் தன் வேலையைச் செய்யச் சென்றாள்.

அவள் தனியே வருவாள் எனத் தெரிந்து கொண்ட வன் சும்மா இருப்பானா? அவள் முன் கையைப் பிடித்து இழுத்தான். அவன் குறும்புக்காரன் என்பதை அவள் நன்கறிவாள். இருந்தும் அவன் இவ்வாறு செய்வான் என்று எதிர் பார்க்கவில்லை. ஆகவே, என்ன செய்தோம் என்று உணராமலேயே, 'அம்மா, இவன் செய்ததைப் பார்' என்று கத்திக் கூப்பிட்டாள்.

தாய் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடோடி வந்தாள். அவள் வருவதற்குள் தலைவியின் கலக்கம் தெளிந்து விட்டிருந்தது; அன்னைக்குத் தெரிந்தால் அவன் அடிபடுவானே என்று அஞ்சினாள். 'என்னை இப்படிக் காட்டி கொடுத்துவிட்டாயே' என்று கெஞ்சு வது போல் இருந்தது அவன் முகக் குறி. அன்னையிடம் அவன் விக்கி வருந்தியதாகப் பொய் கூறினாள்.

தாய், விபரீத நிகழ்ச்சி ஒன்றும் நேர்ந்து விடவில்லை என்று தெளிந்து, தன் வேலையைச் செய்யத் திரும்பிப் போய் விட்டாள். அப் போக்கிரி கொன்று விடுபவனைப் போலவே தலைவியை முறைத்துப் பார்த்து விட்டு, சிரித்துக் கொண்டே வெளியேறினான்.

இக் கவிதையில் இடையிடையே உள்ள அசைச் சொற்களையும், எழுத்துக்களையும் ஆராய, இது ஓர் அழகான சிறு நாடகம் என்றும், நாடகங்களில் காட்சிகளை எண்ணிட்டுக் காட்டுவது போலவே, கபிலரும் இக் கவிதையில் அசைகளை அமைத்துக் காட்டியிருக்கிறார் என்றும் அறிந்து கொள்ளுகிறோம்.

*　　*　　*　　*

திருந்திழாய் கேளாய்.

'நேற்றிரவு நடந்த வேடிக்கை நம் ஊர் முழுதும் சிரிக்கப் போதுமானது. நம்முடைய தலைவன் வருகையை எதிர்பார்த்தபடி, ஊர் அடங்கிய பின், ஒரு துணியைப் போர்த்துக் கொண்டு, நான் அவன் வருமிடத்துக்குச் சென்று காத்துக் கொண்டிருந்தேன்!' தோழி நடந்தது போல ஒரு நிகழ்ச்சியைக் கற்பித்துக் கூறத் தொடங்கினாள். நல்ல இருளில் ஒரு பெண் தன்னந் தனியே நின்றிருக்கும் பொழுது, நம் மனத்தைக் கவரத் தக்க நிகழ்ச்சி நிகழலாமன்றோ? அது வேடிக்கையான நிகழ்ச்சி என்றும் முதலிலேயே கூறிவிட்டதால், நாம் என்ன நடந்தது என்ற ஆவலுடன் கதையைப் படிக்க விரும்புகிறோம்.

'நீ கூட அடிக்கடி அவன் விஷயத்தில் எச்சரிக்கையாய் இரு என்று சொல்லுவாயே, அந்த வழுக்கைத் தலையும், கருங்குட்டத்தால் காலும் கையும் குறைந்து முடமாயும் உள்ள 'நம் சேரியை விட்டு நீங்காத' பார்ப்பான், தலையை முக்காடிட்டுக் கொண்டவனாய் வந்தான். நான் தனியே இருப்பதைக் கண்டு, அருகே வந்து, சற்று குனிந்து பார்த்து, பெண் என்று தெரிந்து கொண்டு, 'யார் அது?' என்று கேட்டான். நான் பேசாமல் இருக்கவே, 'வெற்றிலை போட்டுக்கொள்' என்று சொல்லித் தன் வெற்றிலைப் பையை அவிழ்த்து நீட்டினான்!'

நடுநிசியில், தனியே ஒரு பெண் அகப்பட்டுக் கொள்ளவே கிழப்பார்ப்பான், அவளைத் தன் இச்சைக்கு இணங்க வைக்கலாம் என்று எண்ணிக்கொண்டான். 'காலமல்லாத காலத்தில் இங்குநிற்பது யார்?' என்று அவன் கேட்டதே அவளை அச்சுறுத்துவதற்காக. அவள் மறைக்க விரும்பிய செய்தி அவனுக்குத் தெரிந்து விட்டது. இனி அவள் அலர் எழாமலிருக்க, அவன் உதவியை நாடவேண்டும். விருப்பமில்லாதிருந்தாலும், அலருக்குப் பயந்து, அவன் சொன்னபடி கேட்க வேண்டுமல்லவா? பார்ப்பானுக்கு வெற்றி நிச்சயம் என்ற உறுதி ஏற்பட்டது. அவளைப் பயப்படுத்தாமல் நயத்தால் வயப்படுத்த வேண்டும் என்று எண்ணினான். வெற்றிலை தின்கிறாயா எனக்கேட்டு, எடுத்துக்கொள் என்று அவன் பையை அவிழ்த்து நீட்டியது, 'இனி நான் உன் விருப்பப்படியே நடந்துகொள்வேன். என்னை நம்பலாம்'. என்று அவளுக்கு உணர்த்தவே. இவ்வளவுக்கும் தோழி பேசாமல் இருக்கவே, பார்ப்பானைப் பயம் பற்றியது. அது பிசாசாக இருக்குமோ என்று எண்ணினான்.

தான் பார்ப்பது பிசாசோ என்ற எண்ணம் எழுந்தவுடனே, பார்ப்பான் பெரிதும் பயந்து, அதனிடமிருந்து எப்படியாவது தப்பித்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு கட்டிவிட்டான். தன் அச்சத்தை வெளிக்காட்டாமல், ஓரடி பின்னால் சென்று, 'பெண்ணே! நீ என்னிடம் நன்கு அகப்பட்டுக்கொண்டாய்! நீ பெண்ணாயில்லாமல், பிசாசாக இருப்பின், நான் ஆண் பிசாசு; இவ்வூரில் உனக்குத் தரும் பலிச்சோறு முழுவதையும் உண்டு உன்னைப் பட்டினியால் சாகவைப்பேன்' என்று கூறினான். இப்பயமுறுத்தலைக்கண்டு பெண்ணாயிருந்தால், பயந்துவிடுவாள் என்பதே அவன் எண்ணம். ஓரடி பின்னுக்குப் போனதோடு, தன்னைப் பிசாசு என்று தவறாக எண்ணிக்கொண்டான் என்பதை அறிந்து தோழி தைரியங்கொண்டாள்; பேசாமல் நின்றாள்.

பார்ப்பான் பதைபதைத்தான். அது பிசாசே என்று நிச்சயமாய்க் கருதிவிட்டான். தான் நின்ற இடத்திலேயே பயத்தால் நடுநடுங்கினான். அவன் ஏன் ஓடித்தப்ப முயற்சிக்கவில்லை? இதற்கும் பயமே காரணம் முடவனானதால் வேகமாக ஓட அவனால் முடியாது. 'நான் உன்னை

ஒன்றுஞ் செய்யவில்லை; போய்விடு' என்று அது உறுதி அளித்திருந்தால், அவன் விலகிப்போயிருப்பான். உறுதி யளிக்காத பிசாசு பின்புறத்தில் இருக்கையில், ஓட முடியாத பார்ப்பான், தட்டுத்தடுமாறி நடந்து செல்ல முயற்சிக்காதது இயற்கையேயன்றோ? வாய் திறந்து பேசினால் அவன் தன்னை யாரென்று கண்டு கொள்வானே எனத்தோழி அஞ்சினாள். மேலும் அவன் அச்சப்படுவது தனக்கு உதவியளிக்கும்பொழுது அவன் அதனைப் போக்க முற்படுவானேன்?

அவன் அகன்றாலொழிய, தோழி அவ்விடத்தை விட்டு நீங்குவதற்கில்லை. அவன் பார்த்துக்கொண்டிருக் கையில், அவள் ஓடித் தப்பித்தால். அவன் அச்சம் நீங்கி அக்கம் பக்கத்தாரைக் கூவி எழுப்பித் துரத்துவான் அன்றோ? தன்னை யார் என்றும் தெரிந்து கொண்டு விடுவானே! ஆகவே அவள் ஒரு கை மணலை எடுத்து அவன்மேல் தூவினாள். அவன் அலறிப்புடைத்துக் கொண்டு 'ஐயோ! பிசாசு' என்று கூச்சலிடத்தொடங்கி னான். அவன் பார்வை தன்னைவிட்டு அகன்ற சமயம் பார்த்துத் தோழி ஓடித் தப்பினாள்.

இதுவும் சுடர்த்தொடீஇ கேளாய் என்ற கவிதையும், அமைப்பு முறையில் ஓரினத்தைச் சேர்ந்தவை. இவை இரண்டும் தாம் கூறும் கதையை முதலிலிருந்து முடிவு வரை கூறுகின்றன.

பொருள் அடக்கம்

		பக்கம்.
1.	அறிமுகவுரை :	
	உயர்திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M. A., B. L., M. O. L.	iii
2.	முகவுரை :	v
3.	முன்னுரை :	ix
4.	குறிஞ்சிக்கலி :	
	மூலம்.	1–29
5.	குறிஞ்சிக்கலி :	
	வழித்துணை விளக்கம்.	1–126
6.	குறிஞ்சிக்கலி :	
	நச்சினார்க்கினியர் உரை.	127–194

பிழை திருத்தம்

குறிஞ்சிக்கலி

பாடல்	வரி	பிழை	திருத்தம்
2	4	தோடிப்பெலி	தொடிப்பொலி
5	6	விளக்கத்து	விளக்கத்துப்
7	7	படுவாம்	பாடுவாம்
9	15	தீரண்டதோள்	திரண்டதோள்
13	7	தம்ம. .ங்	தம்மரங்
16	5	கிளைநாப்	கிளைநாப்பண்
11	20	மெம்மயோர்ப்பின்	மெய்யோர்ப்பின்
22	9	ஞோய்செய்யுங்	ஞெய்செய்யுங்
24	1	சுணஙணி	சுணங்கணி

வழித்துணை விளக்கம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
12	5	அவனைக்	அவளைக்
,,	10	லிளங்கல்	விளங்கல்
25	17	காணவன்	கானவன்
26	6	அனிந்தவை	அளிந்தவை
28	7	கைகலும்	வைகலும்
,,	14	தட்பஒய்	தட்பவெப்ப
51	28	கொண்டனைப்போல	கொண்டவனைப்போல
54	30	சூழ்குவோம்	சூழ்குவம்
60	23	நீங்காமலிருந்தால்	நீங்காமலிருந்தன [வாகையர
,,	,,	புவியோடு	புலியோடு
62	15	இருட்டை	இருளை
63	21	செரிவு	செறிவு
72	6	மெல்லிய	வியப்பினை விளைவிக்கும்
92	12	மாங்களி	மாந்தளிர்
93	3	கூறியவை	கூரியவை
,,	19	கலியல்	கலியில்
101	26	அடி. வயிற்றிலும்	இடையிலும்
102	23	அவன் நிலையை	அவள் நிலையை
125	ш	தன்மையை	தண்மையை

குறிஞ்சிக்கலி.

1

கயமலர் உண் கண்ணாய் காணாய் ஒருவன்
வயமான் அடித்தேர்வான் போலத் தொடை மாண்ட
கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு
முன்னத்தின் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமன் பன்னாளும்
பாயல் பெறேஎன் படர்கூர்ந் தவன்வயின்
சேயேன்மன் யானுந் துயருழப்பே னாயிடைக்
கண்ணின்று கூறுத லாற்றான் அவனாயின்
பெண்ணன் றுரைத்தல் நமக்காயின் இன்னாதூஉம்
காணான் கழிதலும் உண்டென் றொருநாளென்
தோணெகிழ் புற்ற துயரால் துணிந்தோர்
நாணின்மை செய்தேன் நறுநுதால் ஏனல்
இனக்கிளி யாங்கடிந் தோம்பும் புனத்தயல்
ஊசலூர்ந் தாட ஒரு ஞான்று வந்தானை
ஐய சிறிதென்னை ஊக்கி எனக் கூறத்
தையால நன்றென் றவனூக்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன் அவன் மார்பின் வாயாச் செத்து
ஒய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்மேல்
மெய்யறியா தேன்போல் கிடந்தேன்மன் ஆயிடை
மெய்யறிந் தேற்றெழுவே னாயின்மற் றொய்யென
ஒண்குழாய் செல்கெனக் கூறி விடும்பண்பின்
அங்கண் உடையன் அவன்

2

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை இருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல

உறுபுலி உருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதல் குத்திய மதயானை
நீடிரு விடாகம் சிலம்பக் கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லா துழக்கு நாடகேள்
ஆரிடை என்னாய் நீ அரவஞ்சாய் வந்தக்கால்
நீரற்ற புலமே போல் புல்லென்றாள் வைகறை
கார்பெற்ற புலமே போல் கவின்பெறும் அக்கவின்
தீராமற் காப்பதோர் திறனுண்டேல் உரைத்தைக்காண்
இருளிடை என்னாய் நீ இரவஞ்சாய் வந்தக்கால்
பொருளில்லான் இளமை போல் புல்லென்றாள் வைகறை
அருள்வல்லான் ஆக்கம்போல் அணிபெறும் அவ்வணி
தெருளாமற் காப்பதோர் திறனுண்டேல் உரைத்தைக்காண்
மறந்திருந்தார் என்னாய் நீ மலையிடை வந்தக்கால்
அறஞ்சாரான் மூப்பேபோல் அழிதக்காள் வைகறை
திறஞ்சேர்ந்தான் ஆக்கம்போல் திருத்தகும் அத்திருப்
புறங்கூற்றுத் தீர்ப்பதோர் பொருளுண்டேல் உரைத்தைக் [காண

எனவாங்கு,

நின்னுறு விழுமங் கூறக் கேட்டு
வருமே தோழி நன்மலை நாடன்
வேங்கை விரிவிடம் நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே

3

காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்
தாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுகலான்
நீணாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினால்
பூணாகம் உறத்தழீஇப் போதந்தான் அகனகலம்
வருமுலை புணர்ந்தன் என்பதனால் என் தோழி
அருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே,

அவனுந் தான், ஏனல் இதணைத் தகிற்புகை உண்டியங்கும்
ஊர் மதியம் வரைசேரின் அவ்வரைத்
தேனின் இறாலென ஏணி இழைத்திருக்கும்
கானகல் நாடன் மகன்;
சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளி கீழ் வீழா வரைமிசைத் தேன்தொடா
கொல்லை குரல் வாங்கி ஈனா மலைவாழ்நர்
அல்ல புரிந்தொழுக லான்;
காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்றோள் குறவர் மடமகளிர்
தாம் பிழையார் கேள்வர்த் தொழுதெழ லால் தன்னையரும்
தாம் பிழையார் தாந்தொடுத்த கோல்;

எனவாங்கு,

அறத்தோடு நின்றேனைக் கண்டு திறப்பட
என்னையர்க் குய்த்துரைத் தாள் யாய்;

அவரும், தெரிகணை நோக்கிச் சிலை நோக்கிக் கண்சேந்(து)
ஒரு பகல் எல்லாம் உருத்தெழுந் தாறி
இருவர்கட் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை;
தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வம் உவப்ப உவந்து
குரவை தழீ இயாம் ஆடக் குரவையுள்
கொண்டு நிலைபாடிக் காண்;

நல்லாய்,

நன்னாள் தலைவரும் எல்லை நமர்மலைத்
தந்நாண் தாம் தாங்குவார் என்னோற் றனர்கொல்;

புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமாம் அன்றே
நனவிற் புணர்ச்சி நடக்கலும் ஆங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமாம் அன்றே;

விண்தோய்கல் நாடனும் நீயும் வதுவையுள்
பண்டறியா தீர்போல் படர்கிற்பீர் மற்கொலோ!
பண்டறியா தீர்போல் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போல் கரக்கிற்பென் மற்கொலோ!
மைதவழ் வெற்பன் மணவணி காணாமல்
கையால் புதைபெறும் கண்களும் கண்களோ!

என்னைமன், நின் கண்ணால் காண்பென்மன் யான்;

நெய்தல் இதழுண்கண், நின்கண்ணாகென் கண் மன;

எனவாங்கு,

நெறியறி செறிகுறி புரிதிரி பறியா அறிவனை முந்துறீஇ
தகைமிகு தொகைவகை அறியுஞ் சான்றவர் இனமாக
வேய்புரை மென்றோள் பசலையும் அம்பலும்
மாயப் புணர்ச்சியும் எல்லாம் உடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழில் உண் கணும் பொலிகமா இனியே

4

அகவினம் பாடுவாம் தோழி அமர்க்கண்
நகைமொழி நல்லவர் நாணு நிலைபோல்
தகைகொண்ட ஏனலுள் தாழ்குரல் உரீஇ
முகைவளர் சாந்துரல் முத்தார் மருப்பின்
வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சிப்
பகையில் நோய்செய்தான் பயமலை ஏத்தி
அகவினம் பாடுவாம் நாம்;

ஆய்நுதல் அணிகூந்தல் அம்பணைத் தடமென்றோள்
தேனாறு கதுப்பினாய் யானுமொன் றேத்துகு
வேய் நரல் விடரகம் நீயொன்று பாடித்தை

கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்
எடுத்த நறவின் குலையலங் காந்தள்
தொடுத்ததேன் சோரத் தயங்குந்தன் உற்றார்
இடுக்கண் தவிர்ப்பான் மலை;

கல்லாக் கடுவன் கணமலி சுற்றத்து
மெல்விரல் மந்தி குறைகூறுஞ் செம்மற்றே
தொல்லெழில் தோய்ந்தார் தொலையின் அவரினும்
அல்லற் படுவான் மலை;

புரிவிரி புதைதுதை பூத்ததைந்த தாழ்சினைத்
தளிரன்ன எழின்மேனி தகைவாட நோய்செய்தான்
அருவரை அடுக்கநாம் அழித்தொன்று பாடுவாம்;

விண்தோய் வரைப்பந் தெறிந்த வயாவிடத்
தண்தாழ் அருவி அரமகளிர் ஆடுபவே
பெண்டிர் நலம்வௌவித் தண்சாரல் தாதுண்ணும்
வண்டிற் றுறப்பான் மலை;

ஒடுங்கா எழில் வேழம் வீழ்பிடிக் குற்ற
கடுஞ்சூல் வயாவிற் கமர்ந்து நெடுஞ்சினைத்
தீங்கண் கரும்பின் கழைவாங்கும் உற்றாரின்
நீங்கலம் என்பான் மலை;

என நாம்,

தன்மலை பாட நயவந்து கேட்டருளி
மெய்ம்மலி உவகையன் புகுதந்தான் புணர்ந்தாரா
மென்முலை ஆகம் கவின் பெறச்
செம்மலை ஆகிய மலைகிழ வோனே.

பாடுகம் வாவாழி தோழி வயக்களிற்றுக்
கோடுலக்கை யாகநற் சேம்பின் இலைசுளகா
ஆடுகழை நெல்லை அறையுரலுள் பெய்திருவாம்
பாடுகம் வாவாழி தோழி நல் தோழிபா டுற்று ;

இடியுமிழ் பிரங்கிய விரவு பெயல் நடு நாள்
கொடிவிடு பிருளிய மின்னுச் செய் விளக்கத்து
பிடியொடு மேயும் செய்புன் யானை
அடியொதுங் கியக்கம் கேட்ட கானவன்
நெடுவரை ஆசினிப் பணவை ஏறிக்
கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின்
இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிராத்
தேன் செய் இறுஅல் துளைபடப் போகி
நறுவடி மாவின் பைந்துணர் உழக்கிக்
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் பழத்துள் தங்கு மலைகெழு வெற்பனைப்
பாடுகம் வாவாழி தோழி நல் தோழிபா டுற்று;

இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானின் இலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை ;

பொய்த்தற் குரியனோ பொய்த்தற் குரியனோ
அஞ்சலோம் பென்றுரைப் பொய்த்தற் குரியனோ
குன்றகல் நன்னாடன் வாய்மையிற் பொய்தோன்றின்
திங்களுள் தீத்தோன்றி யற்று ;

இளமழை ஆடும் இளமழை ஆடும்
இளமழை வைகலும் ஆடுமென் முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று ;

வாரா தமைவானோ வாரா தமைவானோ
வாரா தமைகுவான் அல்லன் மலைநாடன்

ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழற்கயத்து
நீருள் குவளைவெந் தற்று;
மணிபோலத் தோன்று மணிபோலத் தோன்று
மண்ணு மணிபோலத் தோன்றுமென் மேனியைத்
துன்னான் துறந்தான் மலை;
துறக்குவன் அல்லன் துறக்குவன் அல்லன்
தொடர்வரை வெற்பன் துறக்குவன் அல்லன்
தொடர்புள் இனையவை தோன்றின் விசும்பிற்
சுடருள் இருள் தோன்றி யற்று;

எனவாங்கு,

நன்றா கின்றால் தோழி நம் வள்ளையுள்
ஒன்றி நாம் பாட மறைநின்று கேட்டருளி
மென்தோள் கிழவனும் வந்தனன் நுந்தையும்
மன்றல் வேங்கைக் கீழிருந்து
மணநயந் தனனம் மலைகிழ வோற்கே.

6

மறங்கொள் இரும்புலித் தொன்முரண் தொலைத்த
முறஞ்செவி வாரணம் முன்குள கருந்திக்
கறங்குவெள் அருவி ஒலியின் துஞ்சும்
பிறங்கிருஞ் சோலை நன்மலை நாடன்
மறந்தான் மறக்கினி எல்லா நமக்குச்
சிறந்தன நாநற் கறிந்தன மாயின் அவன் திறங்
கொல்யானைக் கோட்டால் வெதிர்நெல் குறுவாநாம்
வள்ளை அகவுவம் வா, இகுளைநாம்
வள்ளை அகவுவம் வா;
காணிய வாவாழி தோழி வரைத்தாழ்பு
வாணிறங் கொண்ட அருவித்தே நம்மருளா
நாணிலி நாட்டு மலை:

ஆர்வுற்றார் நெஞ்சம் அழிய விடுவானோ
ஓர்வுற் றொருதிறம் ஒல்காத நேர்கோல்
அறம்புரி நெஞ்சத் தவன்;

தண்ணறுங் கோங்க மலர்ந்த வரையெல்லாம்
பொன்னணி யானைபோல் தோன்றுமே நம்மருளாக்
கொன்னுளன் நாட்டு மலை;

கூருநோய் எய்ப்ப விடுவானோ தன்மலை
நீரினுஞ் சாயல் உடையன் நயந்தோர்க்குத்
தேரியும் வண்கை யவன்;

வரைமிசை மேல்தொடுத்த நெய்க்கண் இறாஅல்
மழைநுழை திங்கள் போல் தோன்றும் இழைநெகிழ
எவ்வம் உறீஇயினோன் குன்று;

எஞ்சா தெல்லா கொடுமை நுவலாதி
அஞ்சுவ தஞ்சா அறனிலி யல்லனென்
நெஞ்சம் பிணிக்கொண் டவன்;

என்றியாம் பாட மறைநின்று கேட்டனன்
தாழிருங் கூந்தலென் தோழியைக் கைகவியாச்
சாயலின் மார்பன் சிறுபுறஞ் சார்தர
ஞாயிற்று முன்னர் இருள்போல மாய்ந்ததென்
ஆயிழை மேனிப் பசப்பு.

7

வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்(து)
ஏந்து மருப்பின் இனவண் டிமிர்பூதுஞ்
சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால்
ஐவன வெண்ணெல் அறைபுரலுள் பெய்திருவாம்
ஐயனை ஏத்துவாம் போல அணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
தையலாய் படுவாம் நாம்;

தகையவர் கைச்செறித்த தாள்போலக் காந்தள்
முகையின்மேல் தும்பி இருக்கும் பகையெனின்
கூற்றம் வரினும் தொலையான்தன் நட்டார்க்குத்
தோற்றலை நாணாதோன் குன்று;
வெருள்புடன் நோக்கி வியலறை யூகம்
இருள்தூங் கிறுவரை யூர்பிழி பாடும்
வருடைமான் குழவிய வளமலை நாடனைத்
தெருளத் தெரியிழாய் நீயொன்று பாடித்தை;
நுண்பொறி மான்செவி போல வெதிர்முளைக்
கண்பொதி பாளை கழன்றுகும் பண்பிற்றே
மாறுகொண் டாற்றார் எனினும் பிறர்குற்றம்
கூறுதல் தேற்றாதோன் குன்று;
புணர்நிலை வளகின் குளகமர்ந் துண்ட
புணர்மருப் பெழில்கொண்ட வரைபுரை செலவின்
வயங்கெழில் யானைப் பயமலை நாடனை
மணநாறு கதுப்பினாய் மறுத்தொன்று பாடித்தை;
கடுங்கண் உழுவை அடிபோல வாழைக்
கொடுங்காய் குலைதொறூஉந் தூங்கும் இடும்பையால்
இன்மை உரைத்தார்க் கதுநிறைக்க லாற்றாக்கால்
தன்மெய் துறப்பான் மலை;

எனவாங்கு,

கூடியவர் திறம் பாடவென் தோழிக்கு
வாடிய மென்றோளும் வீங்கின
ஆடமை வெற்பன் அளித்தக்காற் போன்றே.

8

கதிர்விரி கனைசுடர்க் கவின் கொண்ட நனஞ்சாரல்
எதிரெதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்(து)
அதிரிசை அருவிதன் அஞ்சிலை மிசைவீழ

முதிரிணர் ஊழ்கொண்ட முழவுத்தாள் எரிவேங்கை
புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித்
திருநயந் திருந்தன்ன தேங்கமழ் விரல்வெற்ப ;
தன்னெவ்வங் கூரினு நீசெய்த அருளின்மை
என்னையு மறைத்தாளென் தோழி அதுகேட்டு
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூறல் தானாணி ;
கூருநோய் சிறப்பவும் நீ செய்த அருளின்மை
சேரியு மறைத்தாளென் தோழி அதுகேட்டாங்(கு)
ஒருநீ நிலையலை எனக்கூறல் தானாணி ;
நோயட வருந்தியும் நீ செய்த அருளின்மை
ஆயமு மறைத்தாளென் தோழி அதுகேட்டு
மாயநின் பண்பின்மை பிறர்கூறல் தானாணி ;

எனவாங்கு,

இனையன தீமை நினைவனள் காத்தாங்(கு)
அனையரும் பண்பினால் நின்தீமை காத்தவள்
அருந்துயர் ஆரஞர் தீர்க்கும்
மருந்தாகிச் செல்கம் பெருமநாம் விரைந்தே.

9

விடியல்வெங் கதிர்காயும் வேயமல் அகலறைக்
கடிசுனைக் கவினிய காந்தளங் குலையினை
அருமணி அவிருத்தி அரவுநீர் உணல்செத்துப்
பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடைக் கனைபெயல்
உருமுக்கண் உறுதலின் உயர்குரல் ஒலியோடி
நறுவீய நனஞ்சாரற் சிலம்பலிற் கதுமெனச்
சிறுகுடி துயிலெழூஉஞ் சேணுயர் விறல்வெற்ப ;
கால்பொர நுடங்கல கறங்கிசை அருவிநின்
மால்வரை மலிசுனை மலரேய்க்கும் என்பதோ
புல்லாராப் புணர்ச்சியாற் புலம்பிய என்தோழி
பல்லிதழ் மலருண்கண் பசப்பநீ சிதைத்ததை ;

புகர்முகக் களிறொடு புலிபொரு துழக்குநின்
அகன்மலை அடுக்கத்த அமையேய்க்கும் என்பதோ
கடையெனக் கலுழுநோய் கைம்மிக என்தோழி
தடையின திரண்டதோள் தகைவாடச் சிதைத்ததை;

சுடருற உறநீண்ட சுரும்பிமிர் அடுக்கத்த
விடர்வரை எரிவேங்கை இணரேய்க்கும் என்பதோ
யாமத்தும் துயிலலள் அலமரும் என்தோழி
காமரு நல்லெழில் கவின்வாடச் சிதைத்ததை;

எனவாங்கு,

தன்தீமை பலகூறிக் கழறலின் என்தோழி
மறையில்தான் மருவுற மணந்தநட் பருகலான்
பிறைபுரை நுதலவர்ப் பேணிநம்
முறைவரைந் தனர்அவர் உவக்கு நாளே.

10

வீயகம் புலம்ப வேட்டம் போகிய
மாஅல் அஞ்சிறை மணிநிறத் தும்பி
வாயிழி கடாஅத்த வான்மருப் பொருத்தலோ (டு)
ஆய்பொறி உழுவை தாக்கிய பொழுதின்
வேங்கையஞ் சினையென விறற்புலி முற்றியும்
பூம்பொறி யானைப் புகர்முகங் குறுகியும்
வலிமிகு வெகுளியால் வாளுற்ற மன்னரை
நயனுடி நட்பாக்கும் வினைவர்போல் மறிதரும்
அயமிழி அருவிய அணிமலை நன்னாட;

ஏறிரங் கிருளிடை இரவினிற் பதம்பெறாஅன்
மாறினென் எனக்கூறி மனங்கொள்ளுந் தானென்ப
கூடுதல் வேட்கையால் குறிபார்த்துக் குரல்நொச்சிப்
பாடோர்க்குஞ் செவியோடு பைதலேன் யானாக;

அருஞ்செலல் ஆரிடை அருளிவந் தளிபெறுஅன்
வருந்தினென் எனப்பல வாய்வீடுஉந் தானென்ப
நிலையுயர் கடவுட்குக் கடம்பூண்டு தன்மாட்டுப்
பலசூழு மனத்தோடு பைதலேன் யானுக;
கனைபெயல் நடுநாள்யான் கண்மாறக் குறிபெறுஅன்
புனையிழாய் என்பழி நினக்குரைக்குந் தானென்ப
துனிநகை வேட்கையான் மிசைபாடும் புள்ளிற்றன்
அளிநசைஇ ஆர்வுற்ற அன்பினேன் யானுக;

எனவாங்கு,

கலந்த நோய் கைம்மிகக் கண்படா என்வயின்
புலந்தாயு நீயாயின் பொய்யானே வெல்குவை
இலங்குதாழ் அருவியோ டணிகொண்ட நின்மலைச்
சிலம்புபோற் கூறுவ கூறும்
இலங்கேர் எல்வளை இவளுடை நோயே.

11

ஒன்று, இரப்பான்போல் எளிவந்துஞ் சொல்லும் உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போல்
நல்லார்கட் டோன்றும் அடக்கமு முடையன்
இல்லோர் புன்கண் ஈகையின் தணிக்க
வல்லான் போல்வதோர் வன்மையு முடையன்
அன்னான் ஒருவன்தன் ஆண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொல் கேட்டீ சுடரிழாய் பன்மாணும்;
நின்னின்றி அமையலென் யானென்னு மவனாயின்
அன்னான்சொல் நம்புண்டல் யார்க்குமிங் கரிதாயின்
என்னுற்ற பிறர்க்குமாங் குளகொல்லோ நறுநுதால்;
அறியாய்நீ வருந்துவல் யனென்னு மவனாயின்
தமியரோ துணிகிற்றல் பெண்டிர்க்கு மரிதாயின்
அளியரோ எம்போல ஈங்கிவன் வலைப்பட்டார்;

வாழலேன் யானென்னா நீநீப்பி னவனாயின்
ஏழையர் எனப்பலர் கூறுஞ்சொற் பழியாயின்
சூழுங்கால் நினைப்பதொன் றறிகலேன் வருந்துவல்;
சூழுங்கால் நறுநுதால் நம்முளே சூழ்குவம்;

அவனை,

நாணடப் பெயர்த்தல் நமக்குமாங் கொல்லாது
பேணினர் எனப்படுதல் பெண்மையு மன்றவன்
வௌவினன் முயங்கு மாத்திரம் வாவெனக்
கூறுவென் போலக் காட்டி
மற்றவன் மேஎவழி மேவாய் நெஞ்சே.

12

ஆமிழி யணிமலை அலர்வேங்கைத் தகைபோலத்
தேமூசு நனைகவுட் டிசைகாவல் கொளற்கொத்த
வாய்நில்லா வலிமுன்பின் வண்டூது புகர்முகப்
படுமழை யடுக்கத்த மாவிசும் போங்கிய
கடிமாத் திருத்திய கமழ்கடாந் திகழ்தரும்
பெருங்களிற் றினத்தொடு வீங்கெருத் தெறுழ்முன்பின்
இரும்புலி மயக்குற்ற இகன்மலை நன்னாட;
வீழ்பெயற் கங்குலின் விளியோர்த்த ஒடுக்கத்தால்
வாழுநாட் சிறந்தவள் வருந்துதோள் தவறுண்டோ
தாழ்செறி கடுங்காப்பின் தாய்முன்னர் நின்சாரல்
ஊழுறு கோடல்போல் எல்வளை உகுபவால்;
இனையிருள் இதுவென ஏங்கிநின் வரனசைஇ
நினைதுயர் உழப்பவள் பாடில்கட் பழியுண்டோ
இனையளென் றெடுத்தரற்றும் அயன்முன்னர் நின்சுனைக்
கனைபெயல் நீலம்போற் கண்பனி கலுழ்பவால்;
பன்னாளும் படரடப் பசலையால் உணப்பட்டாள்
பொன்னுரை மணியன்ன மாமைக்கட் பழியுண்டோ

இன்னுரைச் செதும்பாற்றுஞ் செவ்வியுள் நின்சோலை
மின்னுகுதளிரன்ன மெலிவுவந் துரைப்பதால்;

எனவாங்கு,

பின்னீதல் வேண்டுநீ பிரிந்தோள்நட் பெனநீவிப்
பூங்கண் படுதலு மஞ்சுவல் தாங்கிய
வருந்துயர் அவலந் தூக்கின்
மருங்கறி வாரா மலையினும் பெரிதே.

13

கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கில் துஞ்சும் யானை
நனவில்தான் செய்தது மனத்த தாகலின்
கனவிற் கண்டு கதுமென வெரீஇப்
புதுவதாக மலர்ந்த வேங்கையை
அதுவென உணர்ந்ததன் அணிநல முருக்கிப்
பேணு முன்பிற்றன் சினந்தணிந் சும்மடங்
காணும் பொழுதின் நோக்கல் செல்லாது
நாணி இறைஞ்சு நன்மலை நன்னாட;
போதெழின் மலருண்கண் இவண்மாட்டு நீயின்ன
காதலை என்பதோ இனிதுமற் றின்னாதே
மின்னோருங் கண்ணாக இடியென்னாய் பெயலென்னாய்
இன்னதோர் ஆரிடை ஈங்குநீ வருவதை;
இன்புற அளித்தனை இவள்மாட்டு நீயின்ன
அன்பினை என்பதோ இனிதுமற் றின்னாதே
மணங்கமழ் மார்பினை மஞ்சிவர் அடுக்கம்போழ்ந் (து)
அணங்குடை ஆரிடை ஈங்குநீ வருவதை;
இருளுறழ் இருங்கூந்தல் இவண்மாட்டு நீயின்ன
அருளினை என்பதோ இனிதுமற் றின்னாதே
ஒளிறுவேல் வலனேந்தி ஒருவன்யான் என்னாது
களிறியங் காரிடை ஈங்குநீ வருவதை;

அதனால்.

இரவின் வாரல் ஐய விரவுவீ
அகலறை வரிக்குஞ் சாரல்
பகலும் பெறுவையிவள் தடமென் றோளே.

14

வாங்குகோல் நெல்லொடு வாங்கி வருவைகல்
மூங்கில மிசைந்த முழந்தா ளிரும்பிடி
தூங்கிலை வாழை நளிபுக்கு ஞாங்கர்
வருடை மடமறி யூர்விடைத் துஞ்சும்
இருநூங்கு சோலை இலங்குநீர் வெற்ப;
அரவின் பொறியும் அணங்கும் புணர்ந்த
உரவுவில் மேலசைத்த கையை ஓராங்கு
நிரைவளை முன்கைஎன் தோழியை நோக்கிப்
படிகிளி பாயும பசுங்குரல் ஏனல்
கடிதல் மறப்பித்தா யாயின் இனிநீ
நெடிதுள்ளல் ஓம்புதல் வேண்டு மிவளே
பல்கோட் பலவின் பயிர்ப்புறு தீங்கனி
அல்கறைக் கொண்டூண் அமலைச் சிறுகுடி
நல்கூர்ந்தார் செல்வ மகள்;
நீயே வளியின் இகல்மிகுந் தேருங் களிறுந்
தளியிற் சிறந்தனை வந்த புலவர்க்(கு)
அளியொடு கைதா வலை;

அதனால்.

கடமா கடவுறூஉம் கோல்போல் எனைத்துங்
கொடுமையிலை யாவ தறிந்து மடுப்பல்
வழைவளர் சாரல் வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி
உழையிற் பிரியிற் பிரியும்
இழையணி அல்குலென் தோழியது கவினே.

15.

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிலே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா என்றா ளெனயானுந்
தன்னை அறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட் (டு)
அன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா அன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தானக் கள்வன் மகன்.

16

முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று
மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கறுத் திடுவான்போற் கூர்நுதி மடுத்ததன்
நிறஞ்சாடி முறண்தீர்த்த நீண்மருப் பெழில்யானை
மல்லரை மறஞ்சாய்த்த மால்போற்றன் கிளைநாப்பண்
கல்லுயர் நனஞ்சாரற் கலந்தியலு நாடகேள்;
தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்கென அஞ்சுவர் சிறுகுடி யோரே;

ஈர்ந்தண் ஆடையை எல்லி மாலையை
சேர்ந்துவீழ் கதுப்பினள் செய்குறி நீவரின்
ஒளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்
களிறென ஆர்ப்பவர் ஏனல்கா வலரே;

ஆர மார்பினை அண்ணலை அளியை
ஐதக லல்குலாள் செய்குறி நீவரின்
கதிர்வளர் சிலம்பில் வழங்க லானாப்
புலியென் றோர்க்குமிக் கலிகெழு சிறூரே;

எனவாங்கு,

விலங்கோரார் மெய்யோர்ப்பின் இவள்வாழாள் இவளின்றிப்
புலம்புகழ் ஒருவ யானும் வாழேன்
அதனால், பொதியவிழ் வைகறை வந்துநீ குறைகூறி
வதுவை யயர்தல் வேண்டுவ லாங்குப்
புதுவை போலுநின் வரவுமிவள்
வதுவைநாண் ஒடுக்கமுங் காண்குவல் யானே.

17.

வறனுறல் அறியாத வழையமை நறுஞ்சாரல்
விறன்மலை விபலறை வீழ்பிடி உழையதா
மறமிகு வேழந்தன் மாறுகொள் மைந்தினால்
புகர்நுதல் புண்செய்த புய்கோடு போல
உயர்முகை நறுங்காந்தள் நாடோறும் புதிதீன
அயனந்தி அணிபெற அருவியார்த் திழிதரும்
பயமழை தலைஇய பாடுசால் விறல்வெற்ப;

மறையினின் மணந்தாங்கே மருவறத் துறந்தபின்
இறைவளை நெகிழ்போட ஏற்பவு மொல்லுமன்
அயலலர் தூற்றலின் ஆய்நலன் இழந்தகண்
கயலுமிழ் நீர்போலக் கண்பனி கலுழாக்கால்;

இனியசெய் தகன்றுநீ இன்னாதாத் துறத்தலின்
பனியிவள் பட்டெனப் பரவாமை ஒல்லுமன்
ஊரலர் தூற்றலின் ஒளியோடி நறுநுதல்
பீரலர் அணிகொண்டு பிறைவனப் பிழவாக்கால்;
அஞ்சலென் றகன்றுநீ அருளாது துறத்தலின்
நெஞ்சழி துயரட நிறுப்பவு மிமையுமன்
நனவினால் நலம்வாட நலிதந்த நடுங்கஞர்
கனவினால் அழிவுற்றுக் கங்குலு மாற்றுக்கால்;

எனவாங்கு,

விளியாநோ யுழந்தாளும் என்றோழி நின்மலை
முளிவுற வருந்திய முளைமுதிர் சிறுதினை
தளிபெறத் தகைபெற் றாங்குநின்
அளிபெற நந்துமிவ ளாய்நுதற் கவினே.

18

கொடியவும் கோட்டவும் நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாப்பூம் பொலன்கோதைத்
தொடிசெறி யாப்பமை அரிமுன்கை அணைத்தோளாய்
அடியுறை அருளாமை ஒத்ததோ நினக்கென்ன
நரந்தநா றிருங்கூந்த லெஞ்சாது நனிபற்றிப்
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை
நலம்பெறச் சுற்றிய குரலமை யொருகாழ்
விரன்முறை சுற்றி மோக்கலு மோந்தனன்
நறாஅ அவிழ்ந்தன்னவென்மெல் விரற்போது கொண்டு
செறாஅச் செங்கண் புதைய வைத்துப்
பறாஅக் குருகின் உயிர்த்தலு முயிர்த்தனன்
தொய்யி லிளமுலை இனிய தைவந்து
தொய்யலங் தடக்கையின் வீழ்பிடி யளிக்கும்
மையல் யானையின் மருட்டலு மருட்டினன்;

அதனால்,

அல்லல் களைந்தனன் தோழி நந்நகர்
அருங்கடி நீவாமை கூறின் நன்றென
நின்னொடு சூழ்வல் தோழி நயம்புரிந்(து)
இன்னது செய்தா ளிவளென
மன்னா வுலகத்து மன்னுவது புரைமே.

19

மின்னொளிர் அவிர்அறல் இடைபோழும் பெயலேபோல்
பொன்னகை தகைவகிர் வகைநெறி வயங்கிட்டுப்
போழிடை யிட்ட கமழ்நறும் பூங்கோதை
இன்னகை இலங்கெயிற்றுத் தேமொழித் துவர்ச்செவ்வாய்
நன்னுதால் நினக்கொன்று கூறுவாங் கேளினி.
நில்லென நிறுத்தான் நிறுத்தே வந்து
நுதலு முகனுந் தோளுங் கண்ணும்
இயலுஞ் சொல்லு நோக்குபு நினைஇ
ஐதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று
மெல்ல இயலு மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று;

எனவாங்கு,

அனையன பலபா ராட்டிப் பையென
வலைவர் போலச் சோர்பதன் ஒற்றிப்
[illegible]
புலையர் போலப் புன்கண் நோக்கித்
தொழலுந் தொழுதான் தொடலுந் தொட்டான்
காழ்வரை நில்லாக் கடுங்களி றன்னோன்
தொழூஉந் தொடூஉமவன் தன்மை
ஏழைத் தன்மையோ இல்லை தோழி.

ஊர்க்கால் நிவந்த பொதும்பருள் நீர்க்காற்
கொழுநிழல் ஞாழல் முதிரிணர் கொண்டு
கழும முடித்துக் கண்கூடு கூழை
சுவன்மிசைத் தாதொடு தாழ வகன்மதி
தீங்கதிர் விட்டது போல முகனமர்ந்(து)
ஈங்கே வருவா ளிவள்யார்கொல் ஆங்கேயோர்
வல்லவன் தைஇய பாவைகொல் நல்லார்
உறுப்பெலாங் கொண்டியற்றி யாள்கொல் வெறுப்பினால்
வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங்கொல் ஆண்டார்
கடிதிவளைக் காவார் விடுதல் கொடியியற்
பல்கலைச் சில்பூங் கலிங்கத்தள் ஈங்கிதோர்
நல்கூர்ந்தார் செல்வ மகள்;

இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து;

நல்லாய் கேள்;
ஆய்தூவி அனமென அணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் எழில்நலம்
மாதர்கொள் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை அறிதியோ அறியாயோ;

நுணங்கமைத் திரளென நுண்ணிழை அணையென
முழங்குநீர்ப் புணையென அமைந்தநின் தடமென்றோள்
வணங்கிறை வாலெயிற் றந்நல்லாய் நிற்கண்டார்க்(கு)
அணங்காகு மென்பதை அறிதியோ அறியாயோ;

முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பை
பெயறுளி முகிழெனப் பெருத்தநின் இளமுலை [யெனப்
மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய் நிற்கண்டார்
உயிர்வாங்கு மென்பதை அறிதியோ அறியாயோ;

எனவாங்கு,

பேதுற்றாய் போலப் பிறரெவ்வம் நீயறியா
யாதொன்றும் வாய்வாளா திறந்தீவாய் கேளினி
நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறைபறைந் தல்லது செல்லற்க என்னா
இறையே தவறுடை யான்.

2,

வேயெனத் திரண்டதோள் வெறிகமழ் வணரைம்பால்
மாவென்ற மடநோக்கின் மயிலியல் தளர்பொல்கி
ஆய்சிலம் பரியார்ப்ப அவிரொளி இழையிமைப்பக்
கொடியென மின்னென அணங்கென யாதொன்றுந்
தெரிகல்லா இடையின்கட் கண்கவர் பொருங்கோட
வளமைசா லுயர்சிறப்பின் நுந்தைதன் வியனகர்
இளமையான் எறிபந்தோ டிகத்தந்தாய் கேளினி;
பூந்தண்டார்ப் புலர்சாந்தின் தென்னவன் உயர்கூடல்
தேம்பாய அவிழ்நீலத் தலர்வென்ற அமருண்கண்
ஏந்துகோட் டெழில்யானை ஒன்னாதார்க் கவன்வேலின்
சேந்துநீ இனையையால் ஒத்ததோ சின்மொழி;
பொழிபெயல் வண்மையான் அசோகந்தண் காவினுள்
கழிகவின் இளமாவின் தளிரன்னாய் அதன்தலைப்
பணையமை பாய்மான்தேர் அவன்செற்றார் நிறம்பாய்ந்த
கணையினும் நோய்செய்தல் கடப்பன்றோ கனங்குழாய்;
வகையமை தண்தாரான் கோடுயர் பொருப்பின்மேல்
தகையிணர் இளவேங்கை மலரன்ன சுணங்கினாய்
மதவலி மிகுகடாஅத் தவன்யானை மருப்பினுங்
கதவவால் தக்கதோ காழ்கொண்ட இளமுலை;

இனையன கூற இறைஞ்சு நிலநோக்கி
நினையுபு நெடிதொன்று நினைப்பாள்போல் மற்றாங்கே
துணையமைத் தோழியர்க் கமர்த்த கண்ணள்
மனையாங்குப் பெயர்ந்தாளென் னறிவகப் படுத்தே.

22

வாருறு வணரைம்பால் வணங்கிறை நெடுமென்றோள்
பேரெழின் மலருண்கண் பிணையெழின் மானோக்கின்
காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதல்
கூரெயிற்று முகைவெண்பல் கொடிபுரையு நுசுப்பினாய்
நேர்சிலம் பரியார்ப்ப நிரைதொடிக்கை வீசி
ஆருயிர் வௌவிக்கொண் டறிந்தீயா திறப்பாய்கேள்;
உளனாவென் னுயிரையுண் டுயவுநோய் கைம்மிக
இளமையா னுணராதாய் நின்றவ றில்லானுங்
களைநரி னோய்செய்யுங் கவினறிந் தணிந்துதம்
வளமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;
நடைமெலிந் தயர்வுறீஇ நாளுமென் னலியுநோய்
மடமையா னுணராதாய் நின்றவ றில்லானும்
இடைநில்லா தெய்க்குநின் னுருவறிந் தணிந்துதம்
உடைமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;
அல்லல்கூர்ந் தழிவுற அணங்காகி அடருநோய்
சொல்லினு மறியாதாய் நின்றவ றில்லானும்
ஒல்லையே யுயிர்வௌவும் உருவறிந் தணிந்துதஞ்
செல்வத்தாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;

எனவாங்கு,

ஒறுப்பின்யான் ஒறுப்பது நுமரையான் மற்றிந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் பொலங்குழாய்
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி
நிறுக்குவன் போல்வல்யான் நீபடு பழியே.

தளைநெகிழ் பிணிநிவந்த பாசடை தாமரை
முளைநிமிர்ந் தவைபோலு முத்துக்கோ லவிர்தொடி
அருக்கநா றலர்காந்தள் நுண்ணேர்தண் எருருவின்
துடுப்பெனப் புரையுநின் திரண்டநேர் அரிமுன்கைச்
சுடர்விரி வினைவாய்ந்த தூதையம் பாவையும்
விளையாட வரிப்பெய்த அழகமை புனைவினை
ஆய்சிலம் பெழுந்தார்ப்ப அஞ்சில இயலுநின்
பின்னுவிட் டிருளிய ஐம்பால்கண் டென்பால
என்னைவிட் டிகத்தர இறந்தீவாய் கேளினி;
மருளியான் மருளுற இவனுற்ற தெவனென்னும்
அருளிலை இவட்கென அயலார்நிற் பழிக்குங்கால்
வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீர் ஆடிய தவந்தலைப் படுவாயோ;
உருளிழாய் ஒளிவாட இவனுண்ணோ யாதென்னும்
அருளிலை இவட்கென அயலார்நிற் பழிக்குங்கால்
பொய்தல மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ
எய்திய பலர்க்கீத்த பயம்பயக் கிற்பதோ;
ஆய்தொடி ஐதுயிர்த் திவனுண்ணோ யாதென்னும்
நோயிலை இவட்கென நொதுமலர் பழிக்குங்காற்
சிறுமுத்தனைப் பேணிச் சிறுசோறு மடுத்துநீ
நறுநுத லவரொடு நக்கதுநன் கியைவதோ;

எனவாங்கு,

அனையவை உளையவும் யானினக் குரைத்ததை
இனையநீ செய்தது தவாயாயின் சேயிழாய்
செய்ததன் பயம்பற்று விடாது
நயம்பற்று விடினில்லை நசைஇயோர் திறத்தே.

24

சுணங்கணி வனமுலைச் சுடர்கொண்ட நறுநுதல்
மணங்கமழ் நறுங்கோதை மாரிவீழ் இருங்கூந்தல்
நுணங்கெழில் ஒண்டித்தி நுழைநொசி மடமருங்குல்
வணங்கிறை வரிமுன்கை வரியார்ந்த அல்குலாய்;
கண்ணார்ந்த நலத்தாரைக் கதுமெனக் கண்டவர்க்(கு)
உண்ணின்ற நோய்மிக உயிரெஞ்சு துயர்செய்தல்
பெண்ணன்று புனையிழாய் எனக்கூறித் தொழூஉந் தொழூதே
கண்ணுநீ ராக நடுங்கினன் இன்னகாய்
என்செய்தான் கொல்லோ இஃதொத்தன் தன்கண்
பொருகளி றன்ன தகைசாம்பி உள்ளுள்
உருகுவான் போலும் உடைந்து;
தெருவின்கண், காரண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரண வாசிப் பதம்பெயர்த்த லேதில
நீநின்மேற் கொள்வ தெவன்;
அலர்முலை ஆயிழை நல்லாய் கதுமெனப்
பேரம ருண்கணின் தோழி உறீஇய
ஆரஞ ரெவ்வம் உயிர்வாங்கும்
மற்றிந்நோய் தீரும் மருந்தருளாய் ஒண்டொடீ;
நின்முகங் காணும் மருந்தினேன் என்னுமால்
நின்முகந் தான்பெறின் அல்லது கொன்னே
மருந்து பிறிதியாது மில்லேன் திருந்திழாய்
என்செய்வாங் கொல்லினி நாம்;

பொன் செய்வாம்,

ஆறு விலங்கித் தெருவின்கண் நின்றொருவன்
கூறுஞ்சொல் வாயெனக் கொண்டதன் பண்புணராந்
தேறல் எளிதென்பாம் நாம்;
ஒருவன் சாமா றெளிதென்பாம் மற்று;

சிறிதாங்கே, மாணூர் அம்பல் அலரின் அலர்கொண
நாணு நிறையு நயப்பில் பிறப்பிலி
பூணாக நோக்கி இமையா னயந்துநங்
கேண்மை விருப்புற் றவனை எதிர்நின்று
நாணடப் பெயர்த்த நயவர வின்றே.

25

எல்லா இஃதொத்தன் என்பெறான் கேட்டைக்காண்
செல்வங் கடைகொளச் சாஅய்ச் சான்றவர்
அல்லல் களைதக்க கேளி ருழைச் சென்று
சொல்லுத லுற்றுரைக் கல்லா தவர்போலப்
பல்லூழ் பெயர்ந்தென்னை நோக்குமற் றியானோக்கின்
மெல்ல இறைஞ்சுந் தலை;
எல்லாநீ முன்னத் தானொன்று குறித்தாய்போற் காட்டினை
நின்னின் விடாஅ நிழல்போல் திரிதருவாய்
என்னீ பெறாதீதென்;
சொல்லின் மறாதீவாள் மன்னோ இவள்;
செறாஅது, ஈதல் இரந்தார்க்கொன் றாற்றாது வாழ்தலிற்
சாதலுங் கூடுமா மற்று;
இவள் தந்தை, காதலின் யார்க்குங் கொடுக்கும் விழுப்
யாதுநீ வேண்டியது; [பொருள்
பேதாய், பொருள்வேண்டும் புன்கண்மை ஈண்டில்லை யாழ
மருளி மடநோக்கி னின்றோழி என்னை
அருளீயல் வேண்டுவல் யான்;
அன்னையோ, மண்டமர் அட்ட களிறன்னான் தன்னையொரு
பெண்டி ரருளக் கிடந்த தெவன்கொலோ
ஒண்டொடீ நாணில்லன் மன்ற இவன்;

ஆயின் ஏஎ;

பல்லார்க் கெள்ளப் படுமடன் மாவேறி
மல்லலூ ராங்கட் படுமே நறுநுதல்
நல்காள்கண் மாறி விடினெனச் செல்வான்னாம்
எள்ளி நகினும் வரூஉம் இடையிடைக்
கள்வர்போல் நோக்கினு நோக்குங் குறித்தது
கொள்ளாது போகாக் குணனுடையன் எந்தைதன்
உள்ளங் குறைபடா வாறு;

26

ஏஎ இஃதொத்தன் நாணிலன் தன்னொடு
மேவேமென் பாரையும் மேலினன் கைப்பற்றும்
மேலினு மேவாக் கடையு மஃதெல்லாம்
நீயறிதி யானஃ தறிகல்லேன் பூவமன்ற
மெல்லிணர் செல்லாக் கொடியன்னாய் நின்னையான்
புல்லினி தாகலிற் புல்லினென்(எல்லா
தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று;

சுடர்த்தொடீ, போற்றாய் களைநின் முதுக்குறைமை போற்
வேட்டார்க் கினிதாயி னல்லது நீர்க்கினிதென்(று) [றிக்கேள்
உண்பவோ நீருண் பவர்;

செய்வ தறிகல்லேன் யாதுசெய் வேன்கொலோ
ஐவாய் அரவின் இடைப்பட்டு நைவாரா
மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வௌவிக் கொள்ளும் அறனெனக் கண்டன்று;

அறனும் அதுகண்டற் றாயின் திறனின்றிக்
கூறுஞ் சொற்கேளான் நலிதரும் பண்டுநாம்
வேறல்ல மென்பதொன் றுண்டால் அவனொடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு.

27

நோக்குங்கால் நோக்கித் தொழூஉம் பிறர்காண்பார்
தூக்கிலி தூற்றும் பழியெனக் கைகவித்துப்
போக்குங்கால் போக்கு நினைந்திருக்கு மற்றுநாம்
காக்கு மிடமன் றினி ;
எல்லா எவன்செய்வாம் ;
பூக்குழாய் செல்லல அவனுழைக் கூஉய்க்கூஉய்
விரும்பியான் விட்டேனும் போல்வலென் தோள்மேற்
கரும்பெழுது தொய்யிற்குச் செல்வலீங் காக
இருந்தாயோ என்றாங் கிற ;
அவனின் திருந்தடி மேல்வீழ்ந் திரக்குநோய் தீர்க்கும்
மருந்துநீ யாகுத லான் ;
இஃதோ அடங்கக் கேள்
நின்னொடு சூழுங்கால் நீயும் நிலங்கிளையா
என்னொடு நிற்றல் எளிதன்றோ மற்றவன்
தன்னொடு நின்று விடு.

28

அணிமுக மதியேய்ப்ப அம்மதியை நனியேய்க்கும்
மணிமுக மாமழைநின் பின்னொப்பப் பின்னின்கண்
விரிநுண்ணூல் சுற்றிய ஈரிதழ் அலரி
அரவுக்கண் அணியுறழ் ஆரல்மீன் தகையொப்ப
அரும்படர் கண்டாரைச் செய்தாங் கியலும்
விரிந்தோதி கூந்தலாய் கண்டை எமக்குப்
பெருஞ்ம்பொன் படுகுவை பண்டு ;
எல் எல்லா மொழிவது கண்டை இஃதோதத்தன் தொய்யில்
எழுதி இறுத்த பெரும்பொன் படுகம்
உழுவ துடையமோ யாம் ;

உழுதாய் ;

சுரும்பிமிர் பூங்கோதை அந்நல்லாய் யானின்
திருந்திழை மென்றோ ளிழைத்தமற் றிஃதோ
கரும்பெல்லா நின்னுழ வன்றோ ஒருங்கே
துகளறு வாண்முகந் தொப்ப மலர்ந்த
குவளையு நின்னுழ வன்றோ இகலி
முகைமாறு கொள்ளும் எயிற்றாய் இவையல்ல
என்னுழையாய் நீமற் றினி;
எல்லா, நற்றோள் இழைத்த கரும்புக்கு நீகூறும்
முற்றெழில் நீல மலரென உற்ற
இரும்பிர வடுவென்ன உண்டற்கு மெல்லாம்
பெரும்பொன் னுண் டென்பா யினி;
நல்லாய் இகுளைகேள்
ஈங்கே தலைப்படுவன் உண்டான் தலைப்பெயின்
வேந்துகொண் டன்ன பல;
ஆங்காக அத்திற மல்லாக்கால் வேங்கைவீ
முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணாகம்
பொய்த்தொருகா லெம்மை முயங்கினை சென்றீமோ
முத்தேர் முறுவலாய் நீபடும் பொன்னெல்லா
முத்தி யெறிந்து விடற்கு

29

திருந்திழாய் கேளாய்நம் ஊர்க்கெல்லாஞ் சாலும்
பெருநகை அல்கல் நிகழ்ந்த தொருநிலையே
மன்பதை எல்லாம் மடிந்த இருங்கங்குல்
அந்துகிற் போர்வை அணிபெறத் தைஇநம்
மின்சாயில் மார்பன் குறிநின்றேன் யானாகத்
தீரத் தறைந்த தலையுந்தன் கம்பலும்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்துநஞ்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானைத்
தோழிநீ போற்றுதி என்றி அவனாங்கே
பாராக் குறழாப் பணியாப் பொழுதன்றி

யாரிவண் நின்றீர் எனக்கூறிப் பையென
வைகாண் முதுபகட்டிற் பக்கத்திற் போகாது
தையால் தம்பலந் தின்றியோ என்றுதன்
பக்கழித்துக் கொண்டீ எனத்தரலும் யாதொன்றும்
வாய்வாளேன் நிற்பக் கடிதகன்று கைமாறிக்
கைப்படுக்கப் பட்டாய் சிறுமிநீ மற்றியான்
ஏனைப் பிசாசருள் என்னை நலிதரின்
இவ்வூர்ப் பலிநீ பெறூஉமற் கொள்வேனெனப்
பலவுந் தாங்காது வாய்பாடி நிற்ப
முதுபார்ப்பான் அஞ்சின னாதல் அறிந்தியான்
எஞ்சா தொருகை மணற்கொண்டு மேற்றூவக்
கண்டே கடிதரற்றிப் பூசல்தொடங் கினனாங்கே
ஒடுங்கா வயத்திற் கொடுங்கேழ்க் கடுங்கண்
இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுளோர்
ஏதில் குறுநரி பட்டற்றால் காதலன்
காட்சி அழுங்க நம்மூர்க் கெலாஅம்
ஆகுல மாகி விளைந்ததை என்றுந்தன்
வாழ்க்கை அதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து.

1. கயமலர் உண்கண்ணாய்.

—.o:—

அவர்கள் இருவரும் காதலர்களாம்; அன்பு நிறைந்த காதலர்களாம். இன்று, நேற்று அல்ல; மிகப் பலநாட்களாகச் சிறுகச் சிறுக அவர்களிடையே வளர்ந்து வந்த அன்பு, இப்பொழுது முற்றிக் காதலாக மாறிவிட்டிருக்கிறதாம்; ஒரு நாள்கூட ஒருவரை ஒருவர் பாராமல் பிரிந்திருக்க முடியாத அளவுக்கு முற்றிவிட்டிருக்கிறதாம். யாருக்குத் தெரியும் இவர்கள் உறவும், மனநிலையும்? இதுவரைத் தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியராய் இருந்தனர். இனி...? திங்கள் கதிர்கள் முற்றிவிட்டன; அறுவடை நாள் நெருங்கிவிட்டது; தலைவி வீட்டிலேயே அடைப்பட்டுக் கிடக்கவேண்டும்—இற்செறிக்கப்படுவாள். அவளைத் தலைவன் காண்பது எப்படி? அவள் அவனைக் காண வழி உண்டா? இதுவரை தங்கள் களவொழுக்கம் பிறருக்குப் புலப்படாமல் அவர்கள் பார்த்துக்கொண்டனர்; அவ்வாறு கூடி இன்புறுவதில் மகிழ்ச்சி மிகுவதாகவும் கருதினர். அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்த 'மறை' இப்பொழுது துன்பத்தைத் தோற்றுவிப்பதாய் மாறிவிட்டது. இதனை யாரிடம் சொல்லி ஆறுதல் பெறலாம்! தோழியின் துணை தங்கள் கூட்டுறவுக்கு எவ்வளவு இன்றியமையாதது என இருவரும் ஒப்ப உணர்ந்தனர். தலைவியைக் கலந்துகொண்டு—அவள் குறிப்புணர்ந்து—தலைவன் தோழியைச் சந்தித்தான். தனக்கும் தலைவிக்கும் உள்ள உறவை விளக்கினான். தங்களுக்குள் அன்பு தோன்றி வளர்ந்து முதிர்ந்த கதையை விவரமாக உரைத்தான், தங்கள் மகிழ்ச்சிக்குத் தடை ஏற்படாமல் வழிகண்டு உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டான்—குறை இரந்தான். முன் அறிமுகமில்லாதவன் மிக உருக்கமாகக் கூறிய கதையை உண்மை எனத் தோழி ஏற்றுக்கொள்ளலாமா? அவனுக்குப் பிறர் அறியாத வண்ணம் தலைவியைச் சந்திக்கக்கூடிய இடமொன்றை—குறியிடத்தை—குறிப்பிட்டு விடலாமா? அவன் கதை உண்மையே எனத் தலைவியை ஒப்புக்கொள்ளச் செய்வது எப்படி? அவன் விரும்பும் வண்ணம், பிறர் அறியாமல், இரவுக்காலங்களில்—

இரவுக்குறியில்—தலைவி அவனைச் சந்தித்துக்கூடி மகிழ—களவொழுக்கத்தை நீட்டிக்க—விருப்பமுடையவளாய் இருப்பாளா? இச்சிக்கல்கள் அனைத்தையும் தோழி தீர்த்து நல் முடிவு கண்டதைச் சித்திரிக்கிறது இக்கவிதை.

கயமலர் உண்கண்ணாய்! காணாய்! ஒருவன்
வயமான் அடித்தேர்வான் போலத் தொடைமாண்ட
கண்ணியன், வில்லன் வரும். என்னை நோக்குபு
முன்னத்தின் காட்டுதல் அல்லது, தான்உற்ற
நோய்உரைக் கல்லான் பெயருமன்.

குளத்திலுள்ள நீல மலரைப்போன்ற ஆளை விழுங்கும் கண்களை உடையவளே! (நான் கூறுவனவற்றை ஆராய்ந்து) பார். ஒப்பற்ற ஒருவன் வலிமை மிக்க விலங்குகளின் கால் சுவடுகளை ஆராய்ந்து வருபவனைப்போல, கட்டுதல் சிறந்த வலையை உடையவனாய், வில்லை ஏந்தியவனாய் வருவான். அவன் என்னைப் பார்த்து, குறிப்பாக உணர்த்துவானே அல்லாமல், தான் அடைந்த துன்பத்தை வாய்விட்டுக் கூற முடியாதவனாய்த் திரும்பிவிடுவான்.

ஒப்புயர் வற்றவனாய் இருந்தான். ஒன்றை அறிவிக்க விரும்பி வந்தான். ஆகவே தோழி அவனைக் கவனிக்கத் தொடங்கினாள். அவன் என்ன கூற விரும்புகிறான் என்று அறிய ஆவல் கொண்டாள். ஒவ்வொரு நாளும், 'இன்று சொல்லிவிட்டே வரவேண்டும்' என்று துணிவு கொண்டு வந்தவன், அவளைக் கண்டதும் பேசமுடியாதவனாகிச் சொல்லாமலேயே திரும்பிவிட்டான். அவள் ஆவல் அதிகரித்தது; அவன் நிலைக்கு இரங்கினாள். அன்பு அரும்பத் தொடங்கிற்று.

(பல்நாளும்) பாயல் பெறேஎன் படர்கூர்ந்து, அவன்வயின்
சேயேன்மன் யானும் துயர்உழப்பேன்; ஆயிடைக்
கண்நின்று கூறுதல் ஆற்றான் அவன்ஆயின்
பெண்அன்று கூறுதல் நமக்கு; ஆயின் இன்னதூஉம்
காணான் கழிதலும் உண்டுஎன்று ஒருநாள்என்
தோள்நெகிழ்பு உற்ற துயரால் துணிதந்து, ஓர்
நாண்இன்மை செய்தேன் நறுநுதால்!

(அவன் வந்து சென்ற) பல நாட்களும் தூக்கம் பிடியாமல், (அவன் அடைந்த துன்பம் எது என்ற) எண்ணம் மிகுந்து, அவனிடத்துத் தொடர்பில்லாத நானும் துன்பப்படுவேன். அவ்விடத்து (ஆண் மகனாகிய அவனே என்) எதிர் நின்று (தன் மனத்திலுள்ளதைக்) கூறமுடியாதவனாய் இருப்பானானால், (உன் துன்பத்துக்கு நான் மிகவும் வருந்துகிறேன் என்று நான் அவனுக்குக் கூறுதல்) நம் பெண் இயல்புக்குப் பொருந்தாதது. ஆனால், இவ்வாறு நான் இரங்குவதை ஆராய்ந்து உணராதவனாய், (என்னை இரக்கமற்றவள் என்று எண்ணி, அவன் மனங்கலங்கித்தன் மனநிலையைக் கூறமுடியாத துன்பத்தாலேயே) இறந்து விடுதலும் கூடும் என்று எண்ணி, ஒரு நாள் என் தோள்களின் நெகிழ்ச்சி காரணமாய் நான் அடைந்த துன்பத்தைப் (பொறுக்கமாட்டாமல்), இனிய முகத்தை உடையவளே! துணிந்து ஓர் நாணமற்ற செயலைச் செய்தேன்.

அவன் நிலைக்கு இரங்கத் தொடங்கியவள், தன் நிலையினின்றும் இறங்கி அவனை நேசிக்கத் தொடங்கிவிட்டாள். இப்பொழுது அவளும் அவனிடம் ஒன்றைக்கூற விரும்பினாள். அவளுக்கும் நாவெழவில்லை. இருப்பினும், தான் அவனைக் காதலிப்பதை, தன் செயலால் அவனுக்கு உணர்த்திவிட்டாள். நாணின்மையைச் செய்தது காதலினாலேயே; அதனைத் தலைவி தெரிந்துகொள்ளாமலிருப்பதற்காக "தோள் நெகிழ்ச்சியைக்" கற்பித்துக் கொண்டதோடு, அந்நாணமற்ற செயலை விவரிக்கத் தொடங்குமுன், அவளை 'நறுநுதால்' எனப்பாராட்டி, அவள் கவனத்தை மாற்ற முயல்கிறாள்.

"என் கண்நின்று" என இருக்கவேண்டியதொடர், 'கண் நின்று' எனக் குறைந்து நின்றது; சொல் தொக உருபு நின்றது.

(ஏனல்) இனக்கிளி யாம்கடிந்து ஓம்பும் புனத்துஅயல்
ஊசல்ஊர்ந்து ஆட, ஒருஞான்று வந்தானை,
'ஐய! சிறிது என்னை ஊக்கி,' எனக்கூற,
'தையால்! நன்று,'என்று அவன்ஊக்க, கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன் அவன் மார்பின்.

தினைப்புனங்களிலே வந்து விழும் கூட்டமான கிளிகளைத் தூக்கி நாம் பாதுகாக்கும் கொல்லைக்கு அருகே உள்ள ஊஞ்சலில் ஒருநாள் நான் ஆடிக்கொண்டு இருக்கையிலே வந்தவனை (நோக்கி) 'ஐயா! என்னைச்சற்று ஆட்டிவிடு' என்று கேட்கவும், (அவன் மிகமகிழ்ந்து) 'பெண்ணே! நல்லது!' என்று கூறி ஆட்ட, கைகள் சோர்ந்து (விழுந்துவிட்டவளைப்போல்) நடித்து அவன் மார்பின் மீது விழுந்து விட்டேன்.

'கைநெகிழ்ந்தமையை' மீண்டும் வற்புறுத்துகிறாள். வீழ்ந்தது பொய் அன்று; கைநெகழ்ந்தது பொய்.

(வாயாச் சேத்து) ஒய்யென ஆங்கே எடுத்தனன் கோண்டான்
மெய்அறியா தேன்போல் கிடந்தேன்மன். ஆயிடை [மேல்
மெய்அறிந்து ஏற்றுஎழுவேன் ஆயின்,மற்று ஒய்யென
'ஒண்குழாய்! செல்க'எனக் கூறிவிடும் பண்பின்
அங்கண் உடையன் அவன்.

(என்னுடைய நடிப்பை உணராமல் நான்கைசோர்ந்து விழுந்ததை) உண்மை எனக்கருதி, வெகு விரைவாக அப்பொழுதே வாரி எடுத்து அணைத்துக்கொண்டவனுடைய மார்பின் மீது, மூர்ச்சித்தவளைப்போல இருந்தேன். அவ்விடத்து உடலுணர்வு பெற்று (என் நிலையை) உணர்ந்து எழுந்திருந்தேனானால், பரபரப்புடன், 'ஒளிமிக்க ஓலையை அணிந்தவளே! போய்விடு' என்று கூறி என்னை விடுவித்து விடும் நாகரிகம் நிறைந்த, சிறந்த அன்புடையவன் அவன்.

அவள் காதலுக்கு ஏங்கிக் கிடந்தவன், அவளைத் தன் கைகளில் பெற்றிருந்தும் பயன் படுத்திக் கொள்ளவில்லை. 'ஒண்குழாய்' என்னாமல், அவள் அங்கம் ஒன்றைப் புகழ்ந்து அழைத்திருப்பானாகில், அப்பொழுது மூர்ச்சித்தவள் நிலைக்கு இரங்காமல், அவளை அணைத்துக் கொண்டிருப்பதில் இன்பம் அடைந்தான் எனக் கருதத் தோன்றும். அவள் தளர்ச்சியைப் பொருட்படுத்தாது, தன் இன்பத்திலேயே நாட்டமுடையவனாய் இருப்பவன், அவள் இளமைச் செவ்வி நீங்கிய பின், அவளைத் துறந்துவிடத் துணிவானன்றோ? அவன் இத்தகைய இழி குணம் உடையவன் அல்லன் என்பதை அவன் தோழியை விளித்த

தொடர் காட்டுகின்றது. அவன் அன்பும் பரிவும் அவள் துன்பத்திற்கு இரங்குவதோடு நிற்கவில்லை. அவளுக்குத் துன்பமே தோன்றாமலிருக்க அவன் முயல்கிறான். அவள் தெளிவடைந்ததும், அந்நிலையில் பிறர் கண்டால், அவளுக்குப் பழி வரும் என்று அஞ்சி, அவளோடு அளவளாவுதலால் தான் பெறும் இன்பத்தையும் விரும்பி விட்டுக் கொடுத்து, போய் விடுமாறு வற்புறுத்துகிறான். அவன் அன்பு தலையாயது என்பதற்கு வேறு சான்று வேண்டுமோ?

தலைவனும், தலைவியும் சந்தித்தது, அவர்களுக்குள் அன்பு தோன்றி வளர்ந்தது, தலைவி தன் காதலைத் தலைவனுக்கு வெளிப்படுத்தியது ஆகிய அனைத்தையும் தலைவன் விவரித்த வண்ணமே தன் வாழ்க்கையில் நிகழ்ந்தவை போலத் தோழி திரித்துக் கூறுகிறாள். தன் செயல்களை அவள் விவரிப்பதைக் கேட்கும் தலைவி நாணமுறுவாளன்றோ? அது ஒன்றே, தலைவன் கதை உண்மை என நாட்டப் போதும். நாணத்தை எழுப்பி, பின் அதனை நீக்கி, நல் முடிவு கண்ட தோழியின் திறனே திறன்!

'சேயேன்மன்' என்ற இடத்தில் மன் மிகுதியை உணர்த்த வந்தது. ஒழிந்த இரண்டிடங்களிலும் அது அசை; தோழி தன் வாழ்க்கையில் நடந்தவை போலத் திரித்துக் கூறியவற்றைப் பிரித்துக் காட்டப் பயன் படுகிறது. மெய்யறிந்து எற்று எழுந்தால் அவன் விரைவாகப் போக விட்டுவிடுவான் என்பது நிலை நாட்டப் படவில்லை. ஏனெனில், எழுந்திருக்கும்வரைக் கதையைக் கூறிக்கொண்டு போக தலைவி இடமளிக்கவில்லை. ஆனால் தலைவன் அத்தகைய உயர்குணம் உடையவன் என்று தோழி நன்கறிவாள். குறையிரந்து நின்றபொழுது, பிறர் வருகையைக் கண்டு அவன் தோழியை அவ்வாறு எச்சரித்திருப்பான். தான் நேரில் உணர்ந்த உண்மையை, தோழி இங்கு ஓர் அனுமானத்தால் பெற வைப்பது, முன்னர் தலைவன் கூற்றால் ஒன்றும் உணர்த்த வில்லை என்று கூறியதனோடு முரண்படாமலிருக்கவே; கூறிய கதை நிகழாததொன்றேனும், அதனை ஆதாரமாகக் கொண்டு அனுமானித்த முடிவு உண்மையே என வற்புறுத்த, 'மற்று' என்ற அசை அதனைப் பிரித்துக் காட்டுகிறது.

இவ்வாறின்றி, இக் கவிதையைத் தலைவி கூற்றாகக் கொண்டு, தலைவன் குறையிரந்து நிற்பின், மறுக்காது, அவனுக்குக் குறியிடம் குறிப்பிக்க வேண்டுமென வற்புறுத்த, தோழிக்குத் தலைவி மறை புலப்படுத்தியதாகப் பொருள் விரிப்பதும் உண்டு. தலைவி தான் செய்த நாணமற்ற செயலைத் தானே கூறுதல் இயற்கையன்று.

ஹாம்லத் என்ற அரசன் தன் தம்பியால் வஞ்சித்துக் கொல்லப்பட்டான். அரசியும் கொலைக்கு உடந்தையாய் இருந்தாள். இறந்த அரசனின் ஆவி, அரச குமாரனுக்குக் கொலை நடந்த விவரத்தைக் கூறி, தன் கொலைக்குப் பழி வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. பிசாசின் பேச்சை நம்பி தன் தாயையும், சிற்றப்பனையும் கொலையாளிகளாகக் கொள்வதா? இவ் ஐயத்தைப் போக்கிக் கொள்ள, அரச குமாரன், பேய் கூறிய விவரங்களை ஓர் சிறு நாடகமாக மாற்றி அமைத்து, அதனைத் தன் தாய், சிற்றப்பன் இவர்கள் எதிரில் நடிக்கச் செய்தான். நாடகம் தன் செயல்களை விவரிப்பதை உணர்ந்த கொலையாளி, அதனை முற்றிலும் பார்க்கத் தைரியமில்லாமல், இடையே எழுந்து சென்றுவிட்டான். சென்றவன் தன் பிழைகளைப் பொறுத்தருளுமாறு ஆண்டவனை வேண்டிக் கொண்ட பின்பே ஒருவாறு ஆறுதல் பெற்றான். ஒரே விதமான பயனைப் பெறக் கபிலரும், ஷேக்ஸ்பியரும் ஒரே தன்மையான விரகுகளைக் கையாண்ட ஒப்புமை உணர்ந்து மகிழத் தக்கது.

2. இமையவில் வாங்கிய.

——: o :——

தலைவன் தினந்தோறும் இரவில் வந்து தலைவியை கூடிச்சென்றான். இருந்தும் அவள் இரண்டுவித இன்னல்களால் துன்பமடைந்தாள். நள்ளிரவில் தனியே வரும் தலைவனுக்கு ஊறு நேரும்—இரவுக்குறியின் ஏதம்—என்ற பயம் ஒன்று; தன் களவொழுக்கத்தை ஊரார் உணர்ந்து பழி கூறுவார்கள்—அலராகும்—என்ற பயம் இரண்டாவது. இவற்றைத் தோழி தலைவனுக்கு விளக்கி விரைவில் மணஞ் செய்துகொள்ளவேண்டும் என வற்புறுத்தினாள் — வரைவு கடாவினாள். அவனும் அவள் சொற்களை ஏற்றுக்கொண்டு நன்னாள் ஒன்றில் மணம் பேசவந்தான். இந்நற்செய்தியையும் இவ்வாறு நிகழத் தான் தலைவனுக்குக் கூறியவற்றையும், தோழி தலைவிக்கு உரைப்பதாக அமைந்திருக்கிறது இப் பாடல்.

இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமைஅமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக,
ஐஇரு தலையி கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத்து அம்மலை
எடுக்கல் சொல்லாது உழப்பவன் போல

இமைய மலையை வில்லாக வளைத்தவனும், (கங்கையை அணிந்ததால்) குளிர்ச்சிபெற்ற சடையை உடையவனும், விரும்பத்தக்க அருட்குணம் நிரம்பியவனுமாகிய இறைவன் உமையவளோடு பொருந்தி, உயர்ந்த கயிலைமலையில் வீற்றிருக்கவும், பத்து தலைகளை உடையவனும், அரக்கர்கள் அரசனுமாகிய இராவணன் வீரவளைகள் விளங்கும் தன் கைகளாலே அம்மலையைப் (பெயர்த்து எடுக்க எண்ணி, கைகளை) அதன் கீழே செலுத்தி, (அம்மலையையேயன்றிச் செலுத்திய தன் கைகளையும்) எடுக்க முடியாமல் வருந்துகின்றவனைப்போல,

இறைவன் இமயத்தை வளைத்ததும், கங்கையைத் தாங்கியதும் நல்லோர்க்கு அருளவே யாகையால் அவனை 'அந்தணன்' என்றார்.

உறுபுலி உருஏய்ப்பப் பூத்த வேங்கையை
கறுவுகொண்டு அதன்முதல் குத்திய மதயானை
நீடுஇரு விடர்அகம் சிலம்பக் கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லாது உழக்கும்; நாட! கேள்.

வலிமையை மிகுதியாக உடைய புலியின் வடிவத்தை ஒத்திருக்கும்படிப் பூத்திருந்த வேங்கை மரத்தை (புலி என்று எண்ணி) பகைமையின் தூண்டுதலால் சினந்து அதன் அடியிலே குத்திய மதம் மிகுந்த யானை, நீண்ட பெரிய மலைப்பிளவிடங்கள் எல்லாம் எதிரொலிக்கும்படிக் கத்தி (வெற்றி பெறுதலோடு) தன் கொம்புகளையும் வாங்கிக்கொள்ளமுடியாமல் வருந்தும். இத்தகைய மலை நாட்டுத் தலைவனே! (நான் கூறுவனவற்றைக் கவனமாகக்) கேள்.

அந்தணன் அமர்ந்திருந்த மலையைப் பகையாகக் கருதி இராவணன் இன்னல் உற்றதைப்போல, நிழலைத்தரும் வேங்கையை பகையாகக் கருதி யானை இன்னலுற்றது. விளக்கங்கருதி 'உழக்கும்' என்ற எச்சம் முற்றாக உரையில் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆர் இடை என்னாய், நீ அர(வு) அஞ்சாய் வந்தக்கால்
நீர் அற்ற புலமேபோல் புல்லென்றாள், வைகறை
கார்பெற்ற புலமேபோல் கவின்பெறும்; அக்கவின்
தீராமல் காப்பதோர் திறன் உண்டேல் உரைத்தைக்காண்

கடத்தற்கரிய வழி என்று கருதாமலும், (அவ்விடத்தில் இரவுக்காலங்களில் போக்குவரவு செய்யும்) பாம்புகளுக்குப் பயப்படாமலும் நீ வந்தபொழுது, நீரில்லாமல் வரண்டுபோன நிலத்திலுள்ள பயிரைப்போல இவள் அழகை இழந்தவளாய்க் காணப்படுகிறாள்; (நின் தலையளியால்) வைகறைக் காலத்தில், மழையைப்பெற்ற நிலத்திலுள்ள பயிரைப்போல பசுமைபெற்று விளங்குகின்றாள்; இவ்வழகு அழியாமல் இருக்கச்செய்ய ஓர் உபாயம் உண்டானால், அதனை எங்களுக்கு விளக்குவாய்.

நிலம் ஆகு பெயராய்ப் பயிரை உணர்த்திற்று. தலைவன் உடன் இல்லாமையும், அவன் வரும் வழியருமையும் தலைவியை அழகிழக்கச் செய்கின்றன. அவன் தலையளி அவளை இழந்த அழகைப் பெறவைக்கின்றது. இந்நிலை மாறாமலிருக்க, அவன் அவளை மணந்து கொள்ளவேண்டும். இதனைத் தலைவன் வாயால் பெறவைக்க முயல்கிறாள் தோழி.

இருள் இடை என்னாய், நீ இரவுஅஞ்சாய் வந்தக்கால்
பொருள் இல்லான் இளமைபோல் புல்லென்றாள், [வைகறை
அருள்வல்லான் ஆக்கம்போல் அணிபெறும்; அவ்வணி
தெருளாமல் காப்பதோர் திறன் உண்டேல் உரைத்தைக் [காண்.

இருண்ட வழி என்று கருதாமலும், நீ இரவுக்குப் பயப்படாமலும் வந்தபொழுது பொருள் இல்லாதவ

னுடைய இளமைச் செவ்வி (பாழ்பட்டுக் கிடத்தல்) போல இவளும் அழகு இழந்தவளாய்க் காணப்படுகிருள் ; (நின் தலையளியால்) வைகறைக் காலத்தில், கைம்மாறு கருதாமல் பிறர்க்கு உதவுமவன் மன நிறைவையும், மகிழ்ச்சியையும் மிகவும் பெறுதலைப் போல, (இவளும் மனமகிழ்ச்சியின் மிகுதியால்) எழில் பெறுகிருள் ; இவ் எழில் இவள் களவொழுக்கத்தால் பெற்றதே என்று பிறர் அறியாதபடிக் காக்க ஓர் உபாயம் உண்டானல் அதனை எங்களுக்கு விளக்குவாய்.

மறம்திருந்தார் என்னய்,நீ மலைஇடை வந்தக்கால்
அறஞ்சாரான் மூப்பேபோல் அழிதக்காள் ; வைகறை
திறஞ்சேர்ந்தான் ஆக்கம்போல் திருத்தகும் ; அத்திரு
புறங்கூற்றுத் தீர்ப்பதோர் பொருள்உணடேல் உரைத்தைக்
[காண்.

பிறர்க்குக் காரணமின்றி கொடுமை செய்தலினின்றும் மாருதவர் என்பதைக் கருதாமல், நீ மறவர் நடமாடும் மலை வழியே வந்தபொழுது, (இளமையில்) அறவழியில் ஒழுகாதவன் முதுமைப் பருவத்தில் (தனக்கு இரங்குவார் ஒருவரும் இல்லாமல் துன்பப் படுதலைப்)போலவே, இவளும் மனஅமைதி இல்லாமல் துன்பப்படுகிருள். (நின் தலையளியால்) வைகறைக் காலத்தில், வினைத்திறன் உடையவன் செல்வம் பெருகப்பெற்று மகிழ்தலைப்போல, இவளும் கண்டாரைக்கவர்விக்கும் அழகாகிய செல்வத்தைப்பெற்றுத் திகழ்கிருள்; இச்செல்வம் பிறர் பரப்பும் பழிச் சொல்லை அழிக்கக்கூடிய ஆற்றல்பெற்ற பொருளாக இருக்குமேயானல், அது எவ்வாறு என எங்களுக்கு விளக்குவாய்

செல்வம் பழிப்பவர் வாயை மூடும் வல்லமை உடையது ; ஆனல் அவன் அளியால் அவள் பெறும் அழகாகிய செல்வம், பிறர் வாயைத் திறந்து வைக்கிறது. மணம் நிகழ்ந்தால் அழகு மாருமலிருக்கும் ; அலரும் எழாது. முன்பு களவொழுக்கத்தில் பிறர் வாயைத் திறந்து வைத்த அழகாகிய செல்வம், இப்பொழுது தலைவியை விட்டு நீங்காமல் இருப்பதோடு, மாற்ருர் வாயையும் மூடிவிடும்.

மூன்று தாழிசைகளிலும் வைகறை வற்புறுத்தப்படுகிறது. நடுயாமத்தே தலைவன் வந்து செல்வதால், வைகறைக் காலத்தில தலைவி பொலிவுடன் காணப்படுகிறாள். காலையில் அழகுடன் விளங்குபவள், பொழுது ஏற ஏற, பிரிவுத் துயரால் நலிந்து மெலிகிறாள். இம்மாற்றத்தைக் கவனிப்பவர், இவள் களவொழுக்கமே காலைப்பொலிவுக்குக் காரணம் எனக் கண்டுகொள்வர்.

எனவாங்கு

நின்உறு விழுமம் கூறக் கேட்டு
வருமே தோழி! நல்மலை நாடன்
வேங்கை விரிஇடம் நோக்கி
வீங்குஇறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே.

என்று உனக்குத் தோன்றும் துன்பத்தை (நான் தெளிவாகக்) கூறக்கேட்டு, நல்ல மலைநாட்டுக்குத் தலைவன் வேங்கை மலர்கின்ற காலத்தைப் பார்த்து, பெருத்த முன் கைகளையும், மூங்கிலை ஒத்த தோள்களையும் உடைய உன்னை மணந்துகொள்ள, தோழி! வருகின்றான்.

வேங்கை நல்ல நாளில் மலரத் தொடங்குமாம்; இடம் இங்குக் காலத்தை உணர்த்த வந்தது.

மணம் நிகழ்ந்தால், தலைவி மாறாத இளமைச் செவ்வியையும் இடையீடற்ற மனமகிழ்ச்சியையும், பிறரை மகிழ்வூட்டுந் தகுதியையும் பெறுவாள் என்பதைத் தாழிசைகள் மூன்றும் வெளிப்படுத்தும் விதமும, முறையும் வியக்கத் தக்கன.

3. காமர் கடும்புனல்,

——: o :——

அவ்வீட்டில் பெரும் பரபரப்பு காணப்படுகின்றது. விருந்தினர் சிலர் வந்திருக்கின்றனர். அவர்களை வரவேற்பதிலும், உபசரித்து மகிழ்வதிலும் ஆவல் காட்டுகின்றனர்

ஆடவர்கள். அவ்வீட்டிலேயே, ஓர் அடைத்த அறையில் இளம்பெண் ஒருத்தி உள்ளம் துடிக்கிருள். தேம்பித்தேம்பி அவள் அழுவதை, அவ்வறைக்குள் சென்ற பின்பே அறிய முடியும். அவள் அழுகைக்கும், ஆடவர் மகிழ்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என எவர் அறிவார்? இந் நிலையில் துடிப்பவளின் தோழி முன் வருகிருள், 'தலைவி ஒப்பற்ற ஒருவனைக் காதலிக்கிருள். இதனை வெளியே ஆரவாரஞ் செய்யும் ஆடவர்களுக்கு அறிவிக்கவேண்டும். மணம் பேசவந்த விருந்தினரை—நொதுமலரை—திருப்பி அனுப்பி விடவேண்டும்—வரைவு மறுக்கவேண்டும், என்று தலைவியின் உள்ளக் கிடக்கையை வெளியிடுகிருள்—அறத்தொடு நிற்கிருள். இதனைக் கேட்ட தாய், மகளின் மன நிலையை உணர்ந்து, ஆரவாரஞ் செய்யும் ஆடவர்க்கு அதனை வற் புறுத்தி உரைக்கிருள். முன்னர் நாம் கண்ட காட்சி முற்றிலும் மாறுபடுகின்றது. துடிதுடித்த உள்ளம் மகிழ் கிறது; வெளியே விருந்தினரை உபசரிப்பதில் ஈடு பட்டிருந்தவர் மனம் கொதிக்கிறது; ஆடவர்கள் நாணி அடங்கிவிடுகின்றனர். ஒரு பெண்ணின் வாழ்வைக் காக்க முன்வந்த தோழியின் திறனையும், அவள் உள்ளக் கிளர்ச்சி யையும் அவள் கூற்றிலேயே அறிவிக்கிறது இக்கவிதை.

காமர் கடும்புனல் கலந்துஎம்மோடு ஆடுவாள்
தாமரைக்கண் புதைத்து,அஞ்சித் தளர்ந்து, அதனேடு [ஒழுகலான்
நீர்நாகம் நறும்தண்தார் தயங்கப்பாய்ந்து, அருளினல்
பூண்ஆகம் உறத்தழீஇப் போதந்தான் அகன்அகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனல், என்தோழி
அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையளே!

விருப்பம் (விளைப்பதும்) வேகம் (உடையதும்) ஆகிய தன்மைகளை உடைய ஆற்று நீரில், எங்களோடு கூடி விளையாடுபவள், (கால்கள்) தளர்ந்தபடியால், பயந்து தாமரை மலர்போன்ற கண்களை (தன் கைகளால்) மறைத்து கொண்டு அவ்ஆற்று நீரோடு மிதந்து செல்லவும், நீண்ட சுரபுன்னை மலர்களால் கட்டப்பட்டதும், மணம் மிக்கதும்,

குளிர்ச்சியை உடையதுமான மாலை விளங்கும்படி விரைவாக (நீரில்) பாய்ந்து, (அவளைக் காக்கவேண்டும் என்ற) அன்பு மிகுதியால் அணிகளைப்பூண்ட (அவளுடைய) மார்பு (தன்னுடைய மார்போடு) பொருந்தும்படி அணைத்துக்கொண்டு, (அவனைக் கரையிலே) சேர்த்தவனுடைய அகன்ற மார்பை (இவளுடைய) வளரும் தன்மையுடைய முலைகள் தீண்டின என்று (தோழியர்) கூறியதனால், என்னுடைய தோழி, பெறுதற்கரிய மழையை நாம் வேண்டும்பொழுதுபெய்விக்கச் செய்யும் பெருமையை உடையவளாயினள்.

தயங்கல் - விளங்கல்; நீராடிச் சிவந்தமையால் 'தாமரைக் கண்' என்றார். தலைவன் பாய்ந்த வேகத்தில் ஏற்பட்ட அசைவினால், அவன் மாலையிலிருந்த மலர்கள் மின்னின. இவ் உயர்ந்த மாலையைக் கழற்றி வைக்கக் கருதாது வேகமாகப் பாய்ந்தது அவன் அன்பு மிகுதியைப் புலப்படுத்துகின்றது. ஆகவே அவன் அவளைக் காதலினால் அணைத்துக் கொள்ளவில்லை என உணர்த்த விரும்பியவர், 'வருமுலை புணர்ந்தன' என்று புணர்தல் தொழிலை முலையின் மேலிட்டுக் கூறினார். பிறர் கூறக்கேட்ட அளவிலே, தலைவி அவனைக் கணவனாக வரித்துவிட்டாள் எனத் தோழி கூறியது, களவொழுக்கத்தைத் தலைவி மேற்கொள்ளவில்லை எனத் தமருக்குத் தெரிவிக்கவே.

அவனும்தான், ஏனல் இதணத்து அகிற்புகை உண்டு [இயங்கும்
வான்ஊர் மதியம் வரைசேரின், அவ்வரைத்
தேனின் இறால்என ஏணி இழைத்திருக்கும்
கான்அகல் நாடன் மகன்.

(பெருமையைப் பெற்ற இவளேயன்றி) அவனும், தினைப்புனங்களில் உள்ள பரண்களின் பக்கத்தில் (குளிர்காய) எரிக்கப்படும் அகில் கட்டைகளிலிருந்து எழும் புகையை உண்டு திரிவதும், ஆகாயத்திலே செல்லுவதுமான சந்திரன் அம்மலை உச்சியைச் சேர்ந்தால், (அதனை அங்கு உள்ள) தேன் கூடு எனவும், (அம்மலையில் உள்ள உயர்ந்த மூங்கில்கள் அதனை அடையச்) செய்யப்பட்டிருக்கும் ஏணி எனவும் (கண்டவர்) கருதும்படியான காடுகள் அகன்ற மலைநாட்டுத் தலைவன் மகன் (என்ற வகையில் பெருமை உடையவன்.)

'பெருமையளே' எனத் தேற்றேகாரத்தால் தலைவியின் உயர்வை உணர்த்தியவர், அவன் அவளுக்குத் தகுந்த கணவனே எனக் காட்ட 'அவனும் தான்' எனச் சிறப்பும்மை கொடுத்தார். பெரிய மலைநாட்டுத் தலைவன் மகன்; அருளுடையவன்; தலைவியைக் காப்பாற்றியவன்; ஆகவே அவனைக் கணவனாகத் தலைவி வரித்துக் கொண்டது தகுதி உடையதே எனத் தோழி வற்புறுத்துகிருள்.

அவன் மலையில் குளிர் காய மூட்டிய தீயின் புகை, ஆகாயத்தில் தன்வழிச் செல்லும் மதியின் ஒளியை மங்கச் செய்ததைப் போல, அவனுடைய அருளால் தோன்றிய செயல் பிறரால் தீண்டப்படாத தலைவியின் பெருமைக்கு ஊறு விளைவித்தது. அவன் மலையில் தோன்றிய புகையால் மாசுண்ட மதி, அவன் மலையில் கட்டப்பட்ட தேன்கூடாக—அவனுடைய உடைமையாக—கருதப்பட்டதைப் போல, அவன் செயலால் பெருமை குன்றிய தலைவியும், அவன் உடைமையாக - மனைவியாகத் - தோழியால் மதிக்கப்பட்டாள்.

சிறுகுடி யீரே! சிறுகுடி யீரே!
வள்ளிகீழ் வீழா; வரைமிசைத் தேன்தொடா;
கொல்லை குரல்வாங்கி ஈனு; மலைவாழ்நர்
அல்ல புரிந்து ஒழுக லான்.

சிறு குடியிருப்புகளில் இருப்பவர்களே! இம்மலையில் வாழ்பவர் (உதவி செய்தவர்க்கு நன்றி செலுத்தாமல், இவளை வேறு ஒருவனுக்குக் கொடுக்க விரும்பி) அறமல்லாத செயலைச் செய்வதால், வள்ளிக்கொடி கிழங்கு விடாது; மலையின்மேல் தேனீக்கள் கூடு கட்டமாட்டா; கொல்லையில் உள்ள தினைப்பயிர் கதிர்வாங்கி விளைவைத் தரமாட்டா.

தலைவி தானுகவே காதலனைத் தேடிக்கொண்டதற்காக, தமர் சினந்து, அவளை அயலானுக்குக் கொடுத்துவிடத் துணிவார்களோ என்று அஞ்சிய தோழி, அவர்கள் அறமல்லாத செயலால் அனைவருக்கும் தீங்கு நேரும் என எச்சரிக்கை செய்கிருர்கள். 'கொல்லை' ஆகுபெயராய்ப் பயிரை உணர்த்திற்று.

காந்தள் கடிகமழும் கண்வாங்கு இருஞ்சிலம்பின்
வாங்குஅமை மென்தோள் குரவர் மடமகளிர்
தாம்பிழையார்க் கேள்வர்த் தொழுதெழலால், தம்ஐயரு
தாம்பிழையார்த் தாம்தொடுத்த கோல்.

காந்தள் பூக்களின் மணம் மண்டியதும், காண்பவர் கண்களை (வேறு பொருள்களின் மீது செல்லவொட்டாமல்) தன்னிடத்திலேயே கவ்குவித்துக்கொள்ளும் தன்மையைப் பெற்றதும் ஆகிய பெரிய மலையின்மீது உள்ள வளைந்த மூங்கில்களைப் போன்ற (ஆனால்) மென்மையான தோள்களை உடைய மடப்பம் மிக்க குறப்பெண்கள், கற்பு நெறி பிறழாமல தம் கணவன்மாரைத் தெய்வமாகக் கருதித் தொழுகிறார்களாகையால் அவர்களுடைய அண்ணன்மாரும், தாம தொடுத்த அம்புகள் குறி தப்பாமல் தாக்கும் தன்மையை உடையவர்களாய் இருக்கிறார்கள்.

தலைவர் என்றே பொருள்படும் 'ஐயர்' என்ற சொல், வேட்டையில் மிக்க விருப்பங்காட்டக்கூடிய இளைஞரைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது. கண்கொள்ளாததும், கவர்ச்சியுடைய காட்சிகளைப் பெற்றதாயும் உள்ள பெரிய மலையாகையால், வைத்தகண் வாங்காமல் பார்க்கவேண்டிய சிறப்புடையதாய் இருக்கிறது. தேனும், தினையும், கிழங்கும் கிடைக்காமற்போம் என்று முன் எச்சரித்தவள், 'வேட்டையாடிப் பிழைப்போமே' என்று எண்ணுவார்க்கு, பெண்கள் கற்பு தவறின் வேட்டையிலும் வெற்றி கிடைக்காமற்போம் என எச்சரிக்கை செய்கிறாள்.

எனவாங்கு

அறத்தொடு நின்றேனைக் கண்டு, திறப்பட
என்ஐயர்க்கு உய்த்துரைத்தாள் யாய்.

என்று கூறி அறத்தொடு நின்ற என் மனநிலையை ஆராய்ந்து (உணர்ந்து), என் அன்னை அண்ணன்மாருக்கு வெறுப்பு தோன்றாத வகையில்) திறம்பட (அவர்கள் மனத்தில்) பதியும்படிக் கூறினாள்.

யாய் — என்தாய்.

அவரும், தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்து,
ஒருபகல் எல்லாம் உருத்து, எழுந்து, ஆறி,
இருவர்கண் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து, சாய்த்தார் தலை.

அவர்களும் (அன்னையின் சொற்களைக் கேட்டவுடன்) தம்முடைய ஆராய்ந்தெடுத்த அம்புகளைப் பார்த்தும் (வெற்றியைத் தப்பாமல் அளித்த) வில்லைப் பார்த்தும், கண்கள் சிவந்து, ஒரு பகல் முழுவதும் கோபம் மிக்குடைய வராய் இருந்து, (பின்னர்) தணிந்து, இருவரிடத்தும் குற்றம் இல்லை என்று (உணர்ந்து) சுழன்று, தலை கவிழ்ந்தனர்.

வெற்றியைத் தப்பாமல் தரும் வில்லும், அம்பும் இருந்தும், அவற்றைப் பயன்படுத்துவதற்கில்லையே என்ற எண்ணம் சினத்தை மூட்டியது; அவற்றைப் பார்க்கப் பார்க்க, அவை தம்மை பழிப்பன போல் தோன்றவே மூண்ட சினம் மிக்கது. வெகுநேரம் சென்று சினந் தணிந்தபின், தலைவியினிடமோ, அவளை அருளால் காத்த தலைவனிடமோ குற்றமில்லை என்ற உணர்வு வந்தது. குற்றமற்ற தேனும், அவர்கள் உறவு தமர் ஆற்றலைப் பழிப்பதுபோல் காணப் படுவதாலும், அப்பழியைப் போக்கிக்கொள்ள முடியாத செயலற்ற நிலையில் அது அவரை ஆழ்த்தி யிருப்பதாலும் சுழன்றனர். சுழற்சி யினின்றும் தெளிந்தபின், குற்றமில்லாததொன்று, தம்மை வீணே சினமூட்டியதையும், சுழலவைத்ததையும் உணர்ந்து இவ்வாறு ஆராயாது உணர்ச்சி வசப்பட்டு சினந்து, ஆறி, சுழன்றமைக்கு நாணித் தலை கவிழ்ந்தனர். தங்கள் இசைவை வெளிப்படுத்தா விடினும், அவர்களுடைய தலை சாய்ந்த நிலையிலிருந்து, கொது மலர்க்கு வரைவு உடன்படமாட்டார் எனத்தோழி உணர்ந்து கொண்டாள்.

தெரிஇழாய்! நீயும்நின் கேளும் புணர
வரைஉரை தெய்வம் உவப்ப, உவந்து
குரவை தழீஇயாம் ஆடக் குரவையுள்
கொண்டு நிலைப்பாடிக் காண்.

ஆராய்ந்த அணிகளைப் பூண்டவளே! நீயும் உன்னுடைய காதலனும் மணக்க(வேண்டும் என்று) இம் மலையில் உள்ள தெய்வம் மனம் விரும்ப, நாம் மகிழ்ச்சியுடன்

(தெய்வத்தைப் பரவக்) கைகோத்து ஆடும் குரவைக் கூத்தை ஆட, (அதற்குரிய) கொண்டுநிலைப் பாடலைப் பாடு.

வரை உரை தெய்வம் முருகன். ஒருவர் கூறுவனவற்றை மற்றவர் ஏற்றுக்கொள்வதுபோல் அமைந்தவை கொண்டு நிலைப் பாடல்கள்.

நல்லாய்! நன்னாள் தலைவரும் எல்லை, நமர்மலைத்
தம்நாண்தாம் தாங்குவார், என்நோற் றனர்கொல்!

நல்லவளே! நம் மணநாளாகிய நன்னாள் வரும்வரை, (தலைவனை நாமே தெரிந்து கொண்டதனால்) நம்மலையில் வாழ்வார்க்கு ஏற்படும் நாணத்தை தாமே பொறுத்துக் கொண்டிருப்பவர் எத்தகைய கடினமான நோன்பை மேற்கொண்டவராகின்றனர்!

'மலை' ஆகுபெயராய் அங்கு வாழ்வாரை உணர்த்திற்று. தம் சம்மதமின்றித் தலைவி காதலனை தெரிந்து கொண்டது, தமருக்கு நாணத்தைத்தரும்; அது மணநாள் வரை இருக்கும். தாமே பட்டினிபோன்ற நோன்பை மேற்கொண்டு, துன்பத்தைத் தேடிக் கொண்டவர் நிலையினும், தலைவியால் நாணமடைந்து அதனைப் பொறுத்துக்கொண்டிருப்பார் நிலை இரங்கத்தக்கதாகையால், தலைவி அவர்கள் செயலை வியந்து கூறுகிறாள்!

புனவேங்கைத் தாதுஉறைக்கும் பொன்அறை முன்றில்
நனவிற் புணர்ச்சி நடக்குமாம் அன்றே!
நனவிற் புணர்ச்சி நடக்கலும், ஆங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமாம் அன்றே?

தினைப் புனத்தில் உள்ள வேங்கை மலர்களின் தாது உதிர்ந்து, பொன்னைப்போல் (ஒளிவிடும்படிச் செய்த) பாறையையுடைய முற்றத்தில், (மணமானபின்) உண்மைப் புணர்ச்சி நடக்குமல்லவா? அப்பொழுதே, மாயப்புணர்ச்சியின் நினைவை நீக்கிவிடலாம் அல்லவா?

அறை — அறுக்கப்பட்ட கல்; தாது படிந்து பாறை பொன்னிறம் பெற்றது. கனவு காணும்பொழுது, மாயப்

புணர்ச்சி மகிழ்விக்கும்; விழித்துக் கொண்டதும் துன்பத்தைத் தரும். 'நல்லாய்' என்பது தொடங்கி இதுவரை தலைவி கூற்று.

விண்தோய்கல் நாடனும் நீயும் வதுவையுள்
பண்டுஅறியா தீர்போல் படர்கிற்பீர் மன்கோலோ!
பண்டறியா தீர்போல் படர்ந்தீர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போல் கரக்கிற்பேன் மற்கோலோ!

ஆகாயத்தில் படியும் (உயர்ந்த) மலை நாட்டின் தலைவனும், நீயும் மணஞ்செய்து கொள்ளுகையில், அதற்குமுன் ஒருவரை ஒருவர் பார்த்தறியாதவரைப்போல் நடந்து கொள்வீர்களன்றோ! முன் அறியாதவரைப்போல் நடந்து கொள்ளும் உங்கள் பழைய உறவை அறியாதவளைப்போல் (நானும்) மறைப்பேனன்றோ?

மைதவழ் வெற்பன் மணவணி காணாமல்
கையால் புதைபெறூம் கண்களும் கண்களோ?

மேகம் தவழ்கின்ற (உயர்ந்த) மலையின் தலைவனுடைய மணக்கோலத்தைக் காணாமல், கைகளால் அழுந்த மூடப் பெறும் கண்களும் கண்களாகுமோ?

'கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே'—சிலப்பு; கண் இருந்தும் பயனில்லை என்பதாம். தலைவி மணப்பெண்ணுகையால் 'புதைபெறும் கண்களை' உடையவளாகக் கூறப்படுகிறாள். இவை தோழி கூற்று.

என்னைமன்! நின்கண்ணால் காண்பேன் மன்யான்!

என் கண்கள் புதைபெற்றால் என்ன! உன் கண்களால் அக்கோலத்தை மிக நன்றாகக் காண்பேன் நான்.

தலைவன் எழிலைத் தானே கண்டு அறிவதினும், பிறர் விவரிக்கக் கேட்பதே மிக்க மகிழ்ச்சி அளிக்கும். இது தலைவி கூற்று

நெய்தல் இதழ்உண்கண்! நின்கண்ஆக என்கண்மன.

நெய்தல் மலரின் இதழ்களைப்போன்ற ஆளை விழுங்கும் கண்களை உடையவளே! என் கண்களும் மிகவும் உன் கண் களைப் (போன்றவையே) ஆகட்டும்.

தலைவியின் குறிப்புணர்ந்த தோழி, தானும் அவளைப் போலவே தலைவன் எழிலை விஷரிக்கக் கேட்டு மகிழவேண்டும் என விரும்புகிருள். இது தோழி கூற்று.

எனவாங்கு,

நெறிஅறி செறிகுறி புரிதிரிபு அறியா அறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை அறியும் சான்றவர் இனமாக,
வேய்புரை மென்தோள் பசலையும் அம்பலும்
மாயப் புணர்ச்சியும் எல்லாம் உடன்நீங்கச்
சேய்உயர் வெற்பனும் வந்தனன்;
பூஎழில் உண்கணும் பொலிகமா இனியே!

என்று பாடி நாம் குரவை ஆடிய காலத்து, நூல் நெறி களை நன்ருக அறிந்தவனும், (இருவரை மணத்தில்) சேர்க்க வைத்த முகூர்த்தம் மாறித் தப்புதலை அறியாதவனும் ஆகிய அறிவு சான்ற சோதிடனை முதல்வனுகக்கொண்டு, சிறப்புமிக்க தொகுத்துக்கூறல், வகுத்துக்கூறல் (என்ற இரண்டு ஆற்றலையும் இடத்துக்கேற்பக் கையாளும் திறனைத்) தெரிந்த பெரியோர் சுற்றத்தாராகச் (சூழ்ந்துவர) மூங்கிலை ஒத்த மெல்லிய (உன்) தோள்களில் (படர்ந்த) பசலையும், (அயலார் குசுகுசுவெனப் பேசும்) பழிச்சொற் களும், கனவிற் புணர்ச்சியும் ஆகிய துன்பங்கள் அனைத்தும் ஒருங்கே தொலைய (உன்னை மணக்கக் கருதி) மிக உயர்ந்த மலையின் தலைவனும் வந்தனன்! (ஆகவே உன்னுடைய) பூவை ஒத்த அழகுமிக்க ஆளைவிழுங்கும் கண்களும் இனி மிகவும் ஒளிபெறட்டும்!

பசலை — கண்ணுடியை வாயால் ஊதியவுடன், அதன் பள பளப்பான தன்மை மாறுவதைப் போல், தனிமைத் துயரால் அழகு மங்கிய மேனியின் நிறம்; அம்பல் — மெதுவாகப் பழிப்பது; இது முற்றின் அலராகும்.

4. அகவினம் பாடுவாம்.

—: o :—

தலைவி தினைப்புனங் காக்கிறாள். தலைவன் நாள்தோறும் பகலில் அவளோடு சேர்ந்திருக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. கதிர் முற்றி, அறுவடை நாள் நெருங்கவே தலைவிக்கு அச்சம் தோன்றத் தொடங்கிற்று. அவனை இரவில் சந்திக்க அவள் பயப்பட்டாள். அலருக்கு அஞ்சி, களவொழுக்கத்தை நீட்டிக்க விரும்பாத தலைவிக்கு இரங்கி, தோழி தலைவனை மணஞ்செய்து கொள்ளுமாறு தூண்டத் துணிந்தாள். தன் மன நிலையை அவனுக்கு நேரில் உரைத்து வற்புறுத்துவதைக் காட்டிலும், அவன் அதனை நன்கு உணருமாறு செய்வதே சிறந்தது என அவள் கருதினாள். தலைவன் வழக்கமாக வரும் நேரத்தில், பொழுது போக்குக் காக, அவளும் தலைவியும் நெல் குத்தும்பொழுது, தலைவன் மலையை வியந்தும், தலைவியின் மனநிலையை வெளிப் படுத்தியும் வள்ளைப் பாடல்களை இருவருமாகப் பாடினார்கள். இவர்கள் பாடுவதைக் கேட்டுக்கொண்டே வந்த தலைவன், தன் வருகையை வெளிப்படுத்தாமல், பாடல்களைக் கவனித்தான். தலைவியின் மனக்கவலையை உணர்ந்து, விரைவில் அவளை மணந்துகொள்ள ஏற்பாடு செய்வதாகத் தோழியிடம் உறுதி அளித்தான் இம்மகிழ்ச்சி தரும் செய்தியைத் தோழி தலைவிக்குத் தெரிவிப்பதைச் சித்திரிக்க வந்த இப்பாடல், அவர்கள் பாடிய வள்ளைப் பாடல்களைக் கொண்டதாகவும் அமைந்திருக்கிறது.

அகவினம் பாடுவாம்; தோழி! அமர்க்கண்
நகைமொழி நல்லவர் நாணும் நிலைபோல்
தகைகொண்ட ஏனலுள் தாழ்குரல் உறீஇ,
முகைவளர் சாந்துஉரல் முத்துஆர் மருப்பின்
வகைசால் உலக்கை வயின்வயின் ஓச்சிப்
பகைஇல் நோய்செய்தான் பயமலை ஏத்தி
அகவினம் பாடுவாம் நாம்

தோழி! அழைத்தோமாய்ப் பாடுவோம் வா, (முகத்தின் அழகை மிகுத்துக் காட்ட) பொருந்திய கண்களையும், மகிழ்ச்சியை விளைவிக்கும் இனிய மொழிகளையும் உடைய நல்ல மகளிர் நாணத்தால் தலை சாய்த்து நிற்கும் தன்மையை ஒப்ப, தினைப்புனத்தில் மணிகள் முற்றிய தால் (பாரம் தாங்காது) வளைந்து காணப்படும் அழகு கொண்ட கதிர்களை உருவிக் கொண்டுவந்து, அரும்புகள் விட்ட சந்தன மரத்தால் செய்யப்பட்ட உரலில் (இட்டு), (உள்ளே விளைந்து முற்றிய) முத்து நிறைந்த யானைத் தந்தங்களால் (செய்யப்பட்டு, பிடித்துகொள்வதற்கு) வாய்ப்பாய் அமைந்து (வேலைப்பாடு நிரம்பிய) உலக்கைகளை என்னிடமும் உன்னிடமும் (மாறி மாறி) உயர்த்திக் குத்து கையில், மருந்து காணமுடியாத நோயைச் செய்தவனுடைய பயனளிக்கும் மலையைப் புகழ்ந்து அழைத்தோமாய்ப் பாடுவோம் வா.

அகவுதல்—அழைத்தல். தன் விருப்பத்துக்குத் தலைவியை இசைய வைக்க முயல்கிறாளாகையால், அகவினம் பாடுவாம் எனத் தோழி இருமுறை அழைக்கிறாள். இது தோழி கூற்று.

முற்றி வளைந்த கதிர்களைக் குத்துவார் பயன் பெறுதலைப் போல, நல்லவரைச் சேர்ந்து இல்லறம் நடத்துவார் நல்லறம் புரிவார் என்பது குறிப்பு.

ஆய்நுதல் அணிகூந்தல் அம்பணைத் தடமென்தோள்
தேன்நாறு கதுப்பினாய்! யானும்ஒன்று ஏத்துகும்;
வேய்நரல் விடர்அகம் நீஒன்று பாடித்தை.

அழகிய நெற்றியையும், அழகு செய்யப்பெற்ற கூந்தலையும், பசுமையான மூங்கிலை ஒத்த பெருமையை யுடைய மெல்லிய தோள்களையும், மணங் கமழும் முடியை யும் உடையவளே! நானும் அவன் மலையைப் புகழ்ந்து பாடுகின்றேன்; இப்பொழுது மூங்கில் ஒலிக்கும் பிள விடங்களையுடைய அம்மலையைப் பற்றி நீ ஒரு பாட்டைப் பாடு.

விடர் — பிளவு, குகை; நெற்றிக்கு இயற்கை அழகும், கூந்தலுக்குச் செயற்கை அழகும் கொள்ளப்பட்டன. கூந்தல் நெற்றியில் படிந்திருக்கின்ற கோலத்தையும், கதுப்பு கொண்டையையும் குறிக்கும்.

கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோல்
எடுத்த நறவின் குலைஅலங்கு காந்தள்
தொடுத்ததேன் சோரத் தயங்கும்,தன் உற்றார்
இடுக்கண் தவிர்ப்பான் மலை.

தன்னைச் சேர்ந்தவருடைய துன்பத்தைத் துடைத்து மகிழ்விப்பவனுடைய மலையின் மீது, குறப்பெண்கள் மலைத் தெய்வமாகிய முருகனைத் தொழ கைகளைக் குவித்து வைத்திருக்கும் காட்சி போல, உயர்ந்த மணத்தையுடைய காந்தள் பூங்கொத்துகள், (காற்றால் அசைக்கப்பட்டு) தம்மிடத்தே உள்ள தேனைச் சொரிந்தபடி ஒன்றோடு ஒன்று பொருந்தி விளங்கும்.

'வரை' ஆகுபெயராய் முருகனை உணர்த்திற்று. காந்தள் கொத்துகள் சேர்ந்து காணப்படுவது கொடிச்சியர் கைகள் கூப்பி இருப்பதற்கு ஒப்பாகிறது. அவன் மலையிலுள்ள காந்தள் கிடைத்தற்கரிய இனிய தேனை வீணே சொரிந்து பாழாக்குதல் போல அவனும் தலைவியின் நிலைபேறில்லாத இளமைச் செவ்வியை நுகராது பாழ்படுத்துகின்றான். இது தோழி கூற்று.

கல்லாக் கடுவன் கணமலி சுற்றத்து
மெல்விரல் மந்தி குறைகூறும் செம்மற்றே,
தொல்எழில் தோய்ந்தார் தொலையின், அவரினும்
அல்லல் படுவான் மலை.

தன்னைப் புணர்ந்தவருடைய இயற்கை அழகு அழிந்தால், அவர்களைக் காட்டிலும் மிகுதியாகத் துன்பப்படும் உயர்ந்த கொள்கையுடையவனுடைய மலையில், தாவுதல் ஒழித்து வேறு ஒன்றையும் அறியாத ஆண் குரங்கு, தன்னுடைய கூட்டம் மிக்க சுற்றத்தாரோடு சென்று, மெல்லிய விரல்களையுடைய பெண் குரங்கைத் (தனக்கு

மணஞ்செய்து தரவேண்டும் என்று) கேட்டுக்கொள்ளும் சிறந்த ஒழுக்கத்தை மேற்கொண்ட தன்மையுடையது.

'தோய்ந்தார் தொல் எழில் தொலையின்' எனமாற்றிக் கூட்டுக. அவன் மலையில் வாழுங் குரங்கும் சிறந்த ஒழுக்கத்தை மேற்கொள்ளும் தன்மையுடையது எனவே, அவன் பண்பாட்டின் உயர்ச்சியைக் கூறவேண்டாம் என்பதாயிற்று. இது தலைவி கூற்று.

புரிவிரி புதைதுதை பூத்ததைந்த தாழ்சினைத்
தளிர்அன்ன எழில்மேனி தகைவாட நோய்செய்தான்
அருவரை அடுக்கம்நாம் அழித்தோன்று பாடுவாம்.

முறுக்கு விரிந்தும், மகரந்தப்பொடி மலிந்தும் உள்ள பூக்கள் செறிந்த, தாழ்ந்த கொம்புகளிலே உள்ள (மகரந்தப் பொடி விழுந்து நிறைந்த) இளந்தளிர்களைப்போல, அழகுடைய மேனியின் ஒளி மங்கும்படி துன்பத்தைத் தந்தவனுடைய ஏறுதற்கரிய பக்க மலைகளைப் பழித்து நாம் ஒரு பாட்டைப் பாடுவோம்.

இயற்கை அழகுடன் இருக்கும் தளிர் மாமைக்கவினோடு கூடிய மேனிக்கு உவமை; மகரந்தத்தால் மூடப்பெற்ற தளிர் பசப்பூரப்பட்ட மேனிக்கு உவமை. மகரந்தம், தான் தோன்ற ஆதாரமாக இருந்த மரத்தின் இலைகளையே மாசுபடுத்துவதைப் போல, தலைவனும் தனக்கு இன்பத்தைத் தந்த தலைவியின் மேனியையே வாடச் செய்கிறான். இது தோழி கூற்று.

விண்தோய் வரைப்பந்து எறிந்த வயாவிடத்
தண்தாழ் அருவி அரமகளிர் ஆடுபவே
பெண்டிர் நலம்வௌவித் தண்சாரல் தாதுஉண்ணும்
வண்டின் துறப்பான் மலை.

குளிர்ச்சி பொருந்திய மலைச்சாரலில் (உள்ள) பூக்களின் மகரந்தப் பொடியை உண்ணும் வண்டு, (உண்டபின் அப் பூக்களை விட்டுவிட்டுச் சென்று விடுவதைப்போல) பெண்களுடைய அழகைத் துய்த்து (அவரைப் பின்னர்) துறந்து விடுபவனுடைய மலையில், பந்தடித்து (விளையாடிய) தெய்வப்

பெண்கள் தம் தளர்ச்சி நீங்க மலை உச்சியிலிருந்து குளிர்ச்சி உடையதாய் இறங்கிவரும் அருவியில் நீராடுவார்கள்.

தாழ்தல் மேலிடத்திலிருந்து கீழ் நோக்கி ஓடுதல்; அவன் மலை அருவியில் தன்னை ஒழிந்த பிறமகளிரை ஆடவிட்ட கொடுமையை எண்ணித் தலைவி அவனை வண்டிற்கு ஒப்பிடுகிறாள். வண்டொடு அவனை ஒப்புமைப் படுத்தியது இறந்ததற்கு மட்டுமே. இது தலைவி கூற்று.

ஒடுங்கா எழில்வேழம் வீழ்பிடிக்கு உற்ற
கடுஞ்சூல் வயாவிற்கு அமர்ந்து நெடுஞ்சினைத்
தீங்கண் கரும்பின் கழைவாங்கும் உற்றாரின்
நீங்கலம் என்பான் மலை.

தன்னைச் சேர்ந்தாரை விட்டுப் பிரியமாட்டேன் என்று கூறுபவனுடைய மலையில், ஒன்றுக்கும் அஞ்சாத அழகுடைய ஆண் யானை தான் விரும்பிய பெண் யானைக்குத் தோன்றிய முதற் சூலால் ஏற்பட்ட மசக்கை நோய்க்கு மனம் பொருந்தி, நீண்ட கிளைகளுடையதும் இனிமையானதும், கணுக்களில் தோன்றியதுமாகிய கருப்பங் கோலை ஒடித்து வரும்.

'அழித்தொன்று பாடுவாம்' எனக் கூறினாளேனும், தலைவி அவனிடத்துக் கண்ட குறைக்கு (பரமகளிரை ஆடவிட்டமைக்கு) அவன் பொறுப்பாளி இல்லையாகையால், அவளும் அவனைப் புகழ்ந்தே பாடினாள். அவன் மலையில் உள்ள யானை தன் பிடியினிடத்து அன்புடையதாயிருப்பது போல, அவனும் தலைவிமாட்டு அன்புடையவனே. இது தோழி கூற்று.

எனநாம்

தன்மலை பாட நயவந்து கேட்டருளி
மெய்ம்மலி உவகையன் புகுதந்தான் புணர்ந்துஆரா
மென்முலைஆகம் கவின்பெறச்
செம்மலை ஆகிய மலைகிழ வோனே.

என்று நாம் அவன் மலையைப் (புகழ்ந்து) பாடவும், அதனை மிக்க விருப்பத்துடன் கேட்டு, உள்ளம் நிறைந்த மகிழ்ச்சி உடையவனாகிய மலைத்தலைவன், முயங்கி அமையாத மெல்லிய முலைகளையுடைய நின் மார்பு அழகு பெற்றுப் பொலியவும், நீ அதனால் நிலைமையை உடையவளாக ஆக வேண்டியும் (உன்னை மணம் பேச) வந்தான்.

மெய்ம்மலி உவகை—உள்ளம் பூரித்தற்குரிய மகிழ்ச்சி; 'கேட்டருளி' (ஒரு சொல் நீர்மைத்து) அணைக்க அணைக்க ஆசையைச் சிறிதும் தணிப்பிக்காது, மேலும் அணைத்துக்கொள்ள வேண்டும் என்ற வேட்கையை விளைவிப்பனவாகையால் 'புணர்ந்தாரா மென்முலை' என்றார்.

5. பாடுகம் வாவாழி தோழி.

—:o:—

தலைவியைக் காண ஆவலோடு வந்தான் தலைவன் தலைவியும், தோழியும் பாடிக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் பாட்டை அவன் மறைந்து நின்று கேட்டான். ஒருத்தி தன்னைக் கொடியவன் என்றும், இன்னொருத்தி அதனை மறுத்துரைத்தும் பாடுவதை உணர்ந்தான். தான் மணந்து கொள்ளாமல் களவொழுக்கத்தை நீட்டிப்பதே தன்னைக் கொடியவனாக்கியது எனக்கண்டான். நன்னாள் ஒன்றில் மணம் பேச வந்தான். தலைவியின் தகப்பன் அவன் வேண்டுகோளுக்கு இணங்கினான். இந்நற்செய்தியைத் தலைவிக்குத் தோழி உரைக்க வந்ததைக் கூறும் இப்பாடல், அவர்கள் பாடிய வள்ளைப் பாடல்களையும் பெற்றிருக்கின்றது.

பாடுகம் வாவாழி தோழி! வயக்களிற்றுக்
கோடு உலக்கை ஆகநல் சேம்பின் இலைசுளகா,
அடுகமை நெல்லை அறைஉரலுள் பெய்து இருவாம்

தோழி! வாழ்வாயாக; நாம் பாடுவோம் வா. வலிய யானையின் கொம்பை உலக்கையாகவும், நல்ல சேம்பின் இலையை முறமாகவும் (கொண்டு) அசைகின்ற மூங்கிலின் நெல்லை (பாறையை) அறுத்துச் செய்யப்பட்ட உரலில் இட்டுக் குத்துவோம் வா தோழி! வாழ்வாயாக! உண்மை யான உணர்ச்சியோடு (பாடுவோம் வா).

'பாடு' — வரம் பெருமை; வாங்கிடப்பவர் மன நிலை யோடு பாடுவோம் என்பது பொருள். தலைவன் மலையின் பெருமையைப் பாடுவோம் என்பதும் பொருந்தும். பல நாள் தன்னைத் தலைவன் வந்து பாராதிருந்த கொடுமையை எண்ணி வருந்தியிருக்கும் தலைவியை வருந்தி அழைக்கிறாளாகையால் அவளை 'நல் தோழி' எனப் புகழ்வதோடு, பல முறை வேண்டி அழைக்கிறாள்.

இடிஉமிழ்பு இரங்கிய இரவுபெயல் நடுநாள்
கொடிவிடுபு இருளிய மின்னுச்செய் விளக்கத்துப்
பிடியோடு மேயும் செய்புன் யானை
அடிஒதுங்கு இயக்கம் கேட்ட கானவன்,
நெடுவரை ஆசினிப் பணவை ஏறிக்
கடுவிசைக் கவணையில் கல்கை விடுதலின்.

இடி ஒளியைக் கக்கி ஒலிக்கும் இரவில், மழை பெய்யும் நடுநிசியில், கொடி படர்வதுபோல ஒளிவிட்டு, உடனுக்குடன் இருளைச்செய்த மின்னல் உண்டாக்கிய ஒளியைப் (பயன் படுத்திக்கொண்டு) தன்னுடைய பிடியுடனே வந்து புன்செய் நிலங்களில் மேயும் யானையின் அடி எடுத்துவைக்கும் ஓசையைக் கேட்ட மறவன், உயர்ந்த மலையிலுள்ள ஆசினி மரத்தில் அமைத்த பரணின் மீது ஏறி, (கற்களை) வேகமாகச் செலுத்தும் தன்மையையுடைய கவணில் (இருந்த) கல்லை விடுவிப்பதனால்,

இடி இடிக்கும் போது மின்னுவதை ஒளியை உமிழ்வதாகக் கூறியிருக்கிறார். மின்னல் தோன்றிய பின்னரே, ஓசை கேட்கு மாகையால் 'உமிழ்பு இரங்கிய' என்றார். இரங்குதல் - ஒலித்தல்; இயக்கம் - போக்கு; யானை இருளில் நிதானித்து நடக்கின்றன

லாகையால் ' ஒதுங்கு இயக்கம் ' என்றார். மின்னல் வெட்டும் பொழுது நின்று, இருண்டதும் மெதுவாய் நகரும் என்பதனை 'அடி ஒதுங்கு இயக்கம்' என்ற தொடர் குறிப்பிடுகின்றது. பணவை - பரண்.

இறுவரை வேங்கையின் ஒள்வீ சிதறி,
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிரா,
தேன்செய் இறாஅல் துளைபடப் போகி,
நறுவடி மாவின் பைந்துணர் உழக்கி,
குலைஉடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் பழத்துள் தங்கும் மலைகெழு வெற்பனைப்
பாடுகம் வாவாழி தோழி!நல் தோழி!பாடு உற்று.

(அக்கல்) வெப்பத்தினால் பிளவுபட்ட (பாறைகளை உடைய) மலையில் உள்ள வேங்கை மரத்தின் ஒளி பொருந்திய மலர்களை (எல்லா பக்கங்களிலும்) தூற்றி ஆசினியின் மென்மையான பழங்களுள் முற்றி அளிந்தவற்றை உதிர்த்து, தேன் வண்டுகள் கட்டிய கூட்டை துளை படும்படி ஊடுருவிச் சென்று, நல்ல வடுக்களையுடைய மாமரத்தின் பசுமையான கொத்துகளைக் கலக்கி, தார் வீழ்ந்த வாழை யின் வளப்பமான மடலைக் கிழித்துக்கொண்டு (சென்று) பலாப் பழத்தினுள் தங்கும், வளம் மிக்க குன்றுகள் பல வற்றை உடைய பெரிய மலைநாட்டுத் தலைவனை, தோழி! பாடுவோம் வா! உண்மையான உணர்ச்சியுடன் பாடுவோம் வா. இது தோழி கூற்று.

எறியப்படும் கல் முதலில் மேல் நோக்கிச் சிறிது தூரஞ் சென்று, பின்னர் படிப்படியாகக் கீழ் நோக்கி வந்து தரையைச் சேரும் என்ற உண்மையைக் கானவன் விட்ட கல் தாக்கிய பொருள்களை விவரிப்பதன் வாயிலாய்ப் பெறவைத்திருக்கிறார். குறிக்கோளையும் அடையாது பல நல்ல பொருள்களையும் பாழ் படுத்திய கானவன் முயற்சியைப் போல, அவன் தலைவனாகிய மலைக் கிழவனின் முயற்சியும் — முயற்சியின்மையும் — அவனையும் இன்பமடையச் செய்யாது, தலைவியின் நலனையும் பாழ் படுத்துகின்றது.

இலங்கும் அருவித்து, இலங்கும் அருவித்தே!
வானின் இலங்கும் அருவித்தே! தான்உற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை.

தான் ஏற்ற சபதத்தைப் பாதுகாக்கும் எண்ணம் இன்றியே, பொய்யாகச் சபதஞ் செய்தவனுடைய மலை, விளங்குகின்ற அருவிகளை உடையது! இந்திர வில்லைப் போன்ற எழில்மிக்க அருவிகளை உடையது!

வான் ஆகுபெயராய் வானவில்லை உணர்த்திற்று. 'இந்திர வில்லின் எழில் கொண்டு இழுமென் று வந்தீங்கு இழியும் மலையருவி' -சிலப்பு; தலைவன் கொடுமையையே நினைந்திருக்கும் தலைவி, அவன் 'சூள் செய்தபொழுதே பொய்த்தான்' எனப் பழித்து கூறுகிறாள். பொய் யொழுக்கம் உடையவனுடைய மலையிலும், மழை பெய்து, அருவிகள் ஓடுகின்றனவே என்ற வியப்பு காரணமாய்ப் பல முறை கூறுகிறாள். இது தலைவி கூற்று.

பொய்த்தற்கு உரியனோ? பொய்த்தற்கு உரியனோ?
'அஞ்சல்ஓம்பு' என்றாரைப் பொய்த்தற்கு உரியனோ?
குன்றுஅகல் நல்நாடன் வாய்மையில் பொய்தோன்றின்
திங்களில் தீத்தோன்றி அற்று.

பொய் ஒழுக்கத்தைப் பேணும் தகுதியுடையவனோ? 'நீ அஞ்சாதே. (நான் உன்னைக் கைவிட மாட்டேன்) என் சொற்களை நம்பு' என்று (உறுதி கூறித்) தன் உரையைப் பற்றுக்கோடாகக் கொள்ள வைத்தவர்களைப் (பாதுகாக்காமல்) பொய் ஒழுக்கத்தை மேற்கொள்ளும் தகுதியுடையவனோ? பல குன்றுகளைப்பெற்று அகன்ற நல்ல மலை நாட்டுத் தலைவனுடைய பேச்சில் பொய் உண்டாகுமேயானால், அது குளிர்ச்சி மிக்க சந்திரனிடத்து வெப்பமான கிரணங்கள் உண்டாவதை ஒக்கும்.

'சூள் பேணாதவை' தோழியும் ஒப்புகிறாள்; ஆனால் சபதஞ் செய்யும்பொழுதே பொய்த்தான் என்ற எண்ணத்தைப் போக்க முன் வருகிறாள். சந்திரனிடத்து வெம்மை தோன்றாததைப் போல், அவனிடத்தும் பொய் தோன்றாது என்பது கருத்து. அனுபவிப்பவர் மன நிலைக்கு ஏற்றபடி சந்திர

கிரணங்கள் தண்மையும், வெப்பமும் உடையவாகத் தோன்றுதலைப் போலவே, தலைவன் ஒழுக்கமும் தலைவிக்குப் பொய் ஒழுக்கமாகத் தோன்றுகிறது. அவன் சூள் பேணாமைக்குத் தக்க காரணம் இருக்கவேண்டும் என்பது தோழியின் உறுதி. இது தோழி கூற்று.

இளமழை ஆடும்! இளமழை ஆடும்;
இளமழை கைகலும் ஆடும்! என் முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று.

என் முன் கையில் உள்ள வளையல்கள் கழன்றுபோகும்படிச் செய்து, என்னை அருள் செய்தற்கு வராதவனுடைய மலையில் இளமழை உலவும்! இளமழை தினமும் உலவும்!

கருத்தங்கி வந்து சூல் முதிர்தற்கு மலையில் மேய்கின்ற மழை என்பது தோன்ற இளமழை என்றார். இத்தகைய இளமழை உலவும்பொழுது, தட்ப ஒட்ப நிலை மிக்க மகிழ்ச்சி அளிப்பதாய் இருக்கும். இக்காலத்தில், அவன் வராமலிருந்து, அவள் இயற்கையால் அடையக் கூடிய இன்பத்தையும் அடையவொட்டாமல் செய்கிறான். இது தலைவி கூற்று.

வாராது அமைவானோ? வாராது அமைவானோ?
வாராது அமைகுவான் அல்லன்; மலைநாடன்
ஈரத்துள் இன்னவை தோன்றின், நிழல்கயத்து
நீருள் குவளைவெந் தற்று.

வராமல் பொருந்தி இருப்பானோ? (அவன்) வராமல் பொருந்தி இருப்பவன் அல்லன். மலைத் தலைவனுடைய அன்பில் (அவன் உன்னைத் துன்பம் அடையச் செய்வது போன்ற) கொடுமை தோன்றுமானால், அது நிழலில் உள்ள குளத்திலிருக்கும் குவளை மலர் வெந்து கருகியதை ஒக்கும்.

ஈரம் - அன்பு. அவன் விரும்பி வராதிருக்கவில்லை, தவிர்க்க முடியாத தடையே அவனை வராமலிருக்கச் செய்கிறது என்று தோழி கருதுகிறாள். இது தோழி கூற்று.

மணிபோலத் தோன்றும் ! மணிபோலத் தோன்றும் !
மண்ணா மணிபோலத் தோன்றும்!என் மேனியைத்
துன்னான் துறந்தான் மலை.

என்னை நெருங்கி வராமல் நீங்கியிருப்பவனுடைய மலை நீலமணிபோலத் தோன்றும்! கழுவாத நீலமணிபோலத் தோன்றும்.

'மண்ணா மணி' மணியின் இயற்கை எழிலைக் குறிப்பிடுகிறது. அவன் மலையும் அதன் மீதுள்ள பொருள்களும் இயற்கை எழிலுடன் ஒளி சிறந்து விளங்குகின்றனவேனும், அவன் அன்பற்றவனாய்க் காணப் படுகின்றானே என்று தலைவி வருந்துகிறாள். வருத்த மிகுதியால் பேசும் தலைவியின் கூற்றுகள் குறைந்த அடிகளால் இயன்றும், அவளுக்கு ஆறுதல் கூறும் தோழியின் கூற்றுகள் நான்கடி உடையவையாயும் இருத்தல் கவனிக்கத் தக்கது. இது தலைவி கூற்று.

தலைவி முதன் முதலாகத் தலைவன் சூள் பொய்த்தமையைக் கூறிவிட்டு, பின்னர் அதன் காரணமாகத் தன் வளைகள் கழன்றதையும், மேனி வாடியதையும் குறிப்பிடுகிறாள். இம் முறைவைப்பு காரண காரியத் தொடர்புடையதாய், தலைவியின் துன்ப எல்லையைப் படிப்படியாய்ப் பெருக்கிக் காட்டுவதாய் அமைந்திருக்கிறது. வளை ஒழிந்தாலும், பின் செய்து கொள்ளலாம்; மேனி மாறுபாடு அடைந்தால், அதனை முன்னர் இருந்த இயற்கை எழிலைப் பெறச்செய்வது எப்படி? மேனி கட்டுத் தளர்வதையும் பொருட்படுத்தாமல் இருக்கின்றானே என்பது தலைவியின் குற்றச் சாட்டு.

துறக்குவன் அல்லன் ; துறக்குவன் அல்லன்
தொடர்வரை வெற்பன துறக்குவன் அல்லன் ;
தொடர்புள் இனையவை தோன்றின், விசும்பில்
சுடருள் இருள்தோன்றி அற்று.

நம்மைக் கைவிடும் (இழிகுணம்) உடையவன் அல்லன் ; தொடர்ச்சியான பல மலைகள் (சேர்ந்த பெரிய) மலைநாட்டுத் தலைவன் நம்மைக் கைவிடுபவன் அல்லன்; (அவன்) நட்பில் (இத்தகைய) கொடுமை தோன்றுமானால், அது ஆகாயத்தி [illegible]

எனவாங்கு

நன்று கின்றால், தோழி!நம் வள்ளையுள்
ஒன்றி,நாம் பாட, மறைநின்று கேட்டருளி,
மென்தோள் கிழவனும் வந்தனன் ; நுந்தையும்
மன்றல் வேங்கைக் கீழ்இருந்து
மணம்நயந் தனன்நம் மலைகிழ வோர்க்கே.

என்று நாம் பாடியது, தோழி ! நமக்கு நன்மையைப் (பயப்பதாய்) ஆகியது. நம்முடைய வள்ளைப் பாட்டில் கருத்தைச் செலுத்தி, நாம் பாடிக்கொண்டிருக்க, (நமக்குத் தெரியாமல்) மறைந்து நின்று கேட்டவனும் உன்னுடைய மெல்லிய தோள்களை உரிமையாக உடையவனுமாகிய தலைவன் மணம் பேச வந்தான். உன் தந்தையும் மண முடைய வேங்கை மரத்தின் கீழ் இருந்தபடி, அம்மலைத் தலைவனுக்கு உன்னை மணஞ் செய்விக்க விரும்பி (ஏற்றுக் கொண்டான்).

தலைவன் வந்ததனைக் காண முடியாதபடி கருத்தொன்றி வள்ளைப்பாட்டைப் பாடுதலில் ஈடுபட்டிருந்தனர் எனக்கூறலும் ஏற்கும். நன்னாள் கண்டு பூக்கும் வேங்கை நற்செயல்கள் சூழச் சிறந்த இடமாகையால் 'மன்றல் வேங்கை' என்றார்.

6. மறங்கொள் இரும்புலி.

—:o:—

தலைவியும் தோழியும் தினைப்புனத்தில் இருக்கின்றனர். இருவர் முகங்களும் வாடி இருக்கின்றன. தலைவன் சில நாட்களாக வாராமல் இருந்ததே இவ்வாட்டத்திற்குக் காரணம். பொழுதைக் கழிப்பதே அவர்களுக்குக் கடின மாய் இருந்தது. நெல் குத்தியாவது பொழுதைப் போக்கு வோம் எனத்தோழி தலைவியை அழைக்கிறாள். தலைவிக்குப் பொழுது போக்காக ஒன்றைச் செய்யக்கூட மனமில்லை.

அவள் வருத்தத்தை உணர்ந்து அவன் மலையைப் பார்க்கலாம் வா எனத் தோழி அழைக்கிறாள். இருவருக்கும் பேச்சு வளர்ந்தது. அது அவன் மலையைப்பற்றியும், அவனைப் பற்றியும், அவர்கள் கருத்துக்களை வெளியிடும் பாடல்களாய் அமைந்திருக்கிறது. எதிர்பாராத முறையில், அன்று தலைவியைக் காணவந்த தலைவன், அவர்கள் பாட்டு முடியும் வரை மறைந்தபடி கேட்டுக்கொண்டிருந்து, பின் தலைவியின் பின்புறமாகச் சென்று அவள் கண்களைப் பொத்துகிறான். தலைவி துன்பம் நீங்கிப் பூரித்துப் பொங்குகின்றாள்.

மறங்கோள் இரும்புலித் தொல்முரண் தொலைத்த
முறம்செவி வாரணம் முன்குளகு அருந்திக்
கறங்குவெள் அருவி ஒலியில் துஞ்சும்.
பிறங்குஇருஞ் சோலை நன்மலை நாடன்
மறந்தான் ; மறக்கஇனி எல்லா! நமக்குச்
சிறந்தன நாம்நன்கு அறிந்தனம் ஆயின், அவன்திறம்
கோல்யானைக் கோட்டால் வெதிர்நெல் குறுவா,நாம்
வள்ளை அகவுவம் வா ! இகுளை! நாம்
வள்ளை அகவுவம் வா !

கொடுமையைத் (தன் இயல்பாகக்) கொண்ட பெரிய புலியாகிய பழம் பகையை ஒழித்ததும், முறம்போன்ற காதுகளை உடையதுமான யானை, (பகை தீர்ந்த மன அமைதியுடன்) தனக்கு முன்னே (தழைத்திருந்த) குளகை உண்டு, (தளர்ச்சி நீங்க) ஒலிக்கின்ற வெண்மையான அருவியின் ஒலியைத் (தாலாட்டாகக்கொண்டு) தூங்கும்; நாள்தோறும் மிகுகின்ற பெரிய சோலைகளைக் கொண்ட நல்ல மலைநாட்டுத் தலைவன் (நம்மை) மறந்தான். (அவன் போக்கின்படியே) மறக்கட்டும்; ஏடி! நமக்குப் பெருமையைத் (தரக்கூடிய கடமைகளை) நாம் நன்றாக உணர்ந்தவர்களேயானால், அவன் தன்மையை, (பகையைக்) கொன்று (வெற்றி பெற்ற) யானையின் கொம்புகளால் (செய்யப்பட்ட உலக்கைகளின் உதவியால்) மூங்கில் நெல்லைக் குத்தியபடி, நாம் வள்ளைப் (பாட்டாகப் பாடி) அழைப்போம் வா! பெண்ணே! நாம் வள்ளை பாடி அழைப்போம் வா!

முரண் — மாறுபாடு, பகை ; தொன் முரண் — பழைமையான பகை ; குளகு — யானை உண்ணும் அதிமதுரத் தழை ; 'எல்லா', 'இகுளை' என்பன பெண்களை முன்னிலைப் படுத்தும் சொற்கள் ; குறுவா — குத்தி, செய்யா என்னும் வாய்பாடு ; 'துஞ்சும் மலை நாடன்' என்ற எச்சத்தை விளக்கங் கருதி முற்றாய் உரையில் கொள்ளப் பட்டிருக்கிறது. **'வள்ளைபாடி ஆடி ஓடி வாளனை அழைக்குமே' கலிங்கத்துப்பரணி.**

கொடுமையைக் குணமாகக் கொண்ட புலியை வென்று, எளிதில் கிடைத்த அதிமதுரத் தழையை உண்டு, அருவி ஒலி தாலாட்ட, கவலையில்லாமல் தூங்கும் யானைகள் வசிக்கும் சோலை களுக்குத் தலைவனாய் இருந்தும், பழியைப் பரப்புவதையே தொழிலாகக் கொண்ட அயலார் அலரை வென்று, தலைவியை மணந்து, பலரும் புகழ இல்லறம் நடத்துதலை நினையாதிருக் கின்றானே என்பது குறிப்பு.

காணிய வாவாழி தோழி! வரைத்தாழ்பு
வாள்நிறம் கொண்ட அருவித்தே, நம்அருளா
நாணிலி நாட்டு மலை.

நமக்கு அருள் செய்யாது (இருப்பதோடு அதற்காக) வெட்கப்படாமலும் இருப்பவனுடைய நாட்டைச் சேர்ந்த மலை, (உயர்ந்த) குன்றுகளிலிருந்து தாழ்ந்து (ஓடிவரும்) ஒளி பொருந்திய நிறங் கொண்ட அருவிகளை உடைய தாயிருக்கின்றதே! தோழி! வாழ்வாயாக! இவ்விந்தையை ஆராய்வோம் வா.

இருமுறை அழைத்தும் தலைவி நெல் குத்த இசையவில்லை. அவள் வருத்தத்தின் எல்லையை உணர்ந்த தோழி, தலைவன் மலையைப் பற்றிப் பேசும் பொழுதே அவனைப் பற்றிய தன் கருத்தையும் வெளியிடுகிறாள். அழகிய அருவிகள் ஓடி வரும் மலையைப் பெற்றவனாயிருந்தும், தலைவியைத் துன்பக் கண்ணீர் சொரியச் செய்கிறானே என்பது குறிப்பு. இதுவரை தோழி கூற்று.

ஆர்வுற்றார் நெஞ்சம் அழிய விடுவானோ
ஓர்வுற்று ஒருதிறம் ஒல்காத நேர்கோல்
அறம்புரி நெஞ்சத் தவன்.

நன்கு ஆராய்ந்து ஒரு புறமும் சாயாத நேர்மையான ஒழுக்க முறையை மேற்கொண்டு நல்லவைகளையே நாடிச் செய்யும் மனப்பான்மை உடையவன், (தன்னிடத்து) விருப்பங்கொண்டவர்மனத்தை துன்பமடையச்செய்வானோ!

கோல் - தலைவன் நடத்தையின் சின்னம். செங்கோல் போல் கொள்க. இவ்வாறின்றி, அதனைத் துலாக் கோலாக்கி, அது ஒருபுறமும் குறைவைத் தோற்றுவிக்காமல் இரண்டு தட்டுகளிலும் உள்ள பொருள்களை ஒப்ப நிறுப்பது போல, இவனும் வழக்கொடு வந்த இரு திறத்தாரும் குறை கூற முடியாதபடி நடுவு நிலை பிறழாது வழக்கைத் தீர்க்கும் வல்லமையுடையவன் எனக் கூறுவதும் பொருந்தும். அவனைப் பழித்த தோழிக்கு, அவன் நடத்தை அமைதியுடையதே எனக் காட்ட முற்படுகிறாள் தலைவி. தன்னைப் பார்க்க வருவதற்காக, அவன் நாட்டுத தலைவனுக்குரிய கடமைகளை நழுவ விடுவது, அவன் பெருமைக்குச் சிறுமையைச் செய்யுமாகையால், அவன் வாராதிருக்கவேண்டும் என்று தலைவி கூறுகிறாள். இது தலைவி கூற்று.

தண்நறும் கோங்கம் மலர்ந்த வரைஎல்லாம்
பொன்அணி யானைபோல் தோன்றுமே! நம்அருளாக்
கோன்ஆளன் நாட்டு மலை.

நமக்கு அருளாததால், பயனின்மையை ஆள்பவனாய் (மாறிவிட்டவன்) மலையின்மீது, குளிர்ச்சி பொருந்திய மணம் மலிந்த கோங்க மலர்கள் அலர்ந்திருக்கும் பக்க மலைகள் அனைத்தும், பொன் ஆரம்பூண்ட யானைகளைப்போல் (பொலிவுடன்) காணப்படுமே!

கொன் — வறிது, பயனின்மை. அவளுக்கு அருளினால், இன்பத்தை ஆள்வான். கோங்கம் மலர்ந்து அவன் மலையின் அழகைப் பெருக்கிக் காட்டியதைப் பார்த்த பின்னும் தலைவியைத் தன் தலையளியால் எழில்பெறச் செய்யவேண்டும் என்ற விருப்பமில்லாதிருக்கிறானே என்பது குறிப்பு. இது தோழி கூற்று.

கூருநோய் ஏய்ப்ப விடுவானோ? தன்மலை
நீரினும் சாயல் உடையன், நயந்தோர்க்குத்
தேரீயும் வண்கை அவன்.

தன் மலையில் பாயும் குளிர்ந்த நீரைக்காட்டிலும் சிறந்த சாயலை யுடையவன், (ஒன்றை நாடித்) தன்னைத்தேடி வந்தவர்க்குத் தேர்களைத் தரும் கொடைச் சிறப்பு உடையவன் (பொறுகக முடியாத அளவுக்கு) மிகுகின்ற நோய் (நம்மைப்) பொருந்த விடுவானோ?

சாயல் ஐம்பொறிகளுக்கும் இன்பம் பயக்கும். அருவிநீர் காட்சி இன்பத்தையும், ஊற்றின்பத்தையும் தரும். கூர்தல் — மிகுதல். இது தலைவி கூற்று.

வரைமிசை மேல்தொடுத்த நெய்க்கண் இறாஅல்
மழைநுழை திங்கள்போல் தோன்றும், இழைநெகிழ
எவ்வம் உறீஇயினான் குன்று.

(நம்) அணிகள் கழலும்படி (நம் மீது) துன்பத்தை திணித்தவனுடைய மலையில், உயர்ந்த பக்க மலையின்மீது கட்டப்பட்ட தேனை நிறையப்பெற்ற தேன் கூடுகள், மேகத்தில் நுழையும் சந்திரனைப்போல் தோன்றும்.

முன்னர் 'அருவித்தே', 'தோன்றுமே' என்று வியந்தது போலன்றி இங்குத் தோழி 'தோன்றும்' எனக் கூறியது, தலைவி தலைவனைப் புகழ்ந்துரைத்தவற்றைத் தான் ஏற்றுக் கொண்டமையைப் புலப்படுத்தவே. தலைவிக்கு மகிழ்ச்சியூட்டவும், அவள் அவனிடத்துக் கொண்ட அன்பைச் சிறப்பிக்கவுமே, தோழி தலைவன் மலையைப் பழிப்பதுபோல் பேசுகிறாளாகையால் தன் சொற்களைத் தெரிந்து பயன் படுத்துகிறாள். மலையில் உள்ள தேன் கூடு சந்திரனாகக் கருதப்படும் என்றது மலையின் உயர்வை விளக்க வந்தது. இத்தகைய பெரிய நாட்டுத் தலைவனாயிருந்தும், தன்னை நயந்தார்க்கு நன்மை செய்யாதிருக் கின்றானே என்பது குறிப்பு. இது தோழி கூற்று.

எஞ்சாது எல்லா! கொடுமை நுவலாதி;
அஞ்சுவது அஞ்சா அறனிலி அல்லன், என்
நெஞ்சம் பிணிக்கொண் டவன்.

என் உள்ளத்தைத் (தன் அன்பால் தன்னுடையதாக) அகப்படுத்திக்கொண்டவன், அஞ்சவேண்டியவற்றுக்கு

அஞ்சாதவனும் அறநெறியை விரும்பாதவனும் அல்லன். (ஆகவே) அவனுடைய கொடுமைகளை ஏடி! ஓயாமல் கூறிக் கொண்டிராதே.

தலைவியின் கருத்துக்களைத் தோழி ஓரளவு ஒப்புக் கொண்டதைப் போலவே, தோழி கூறியவற்றையும் தலைவி முற்றிலும் மறுக்க விரும்பவில்லை. 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை', குறள்.

என்றுயாம் பாட மறைநின்று கேட்டனன்;
தாழ்இரும் கூந்தல் என்தோழியைக் கைகவியாச்
சாயல்இன் மார்பன் சிறுபுறம் சார்தர,
ஞாயிற்று முன்னர் இருள்போல மாய்ந்தது என்
ஆய்இழை மேனிப் பசப்பு.

என்று நாங்கள் அவனைப்பாட, (எங்களுக்குத் தெரியாமல்) மறைவாக இருந்து கேட்டான்; (கண்டார் விரும்பும்) இனிய சாயலையுடைய மார்பைப்(பெற்ற தலைவன்) திடீரென தலைவியின் பின்புறமாக வந்து அவள் (கண்களை) தன் கைகளால் மூடிக்கொண்டு, தாழ்ந்தும் கருத்தும் உள்ள கூந்தலையுடைய என் தோழியை அவள் முதுகுப் புறமாகவே அணைத்து நிற்கவும், சூரியன் முன்னர் இருளைப் போல, ஆராய்ந்த ஆபரணங்களை அணிந்த என் தோழியின் மேனியை மூடியிருந்த பசலை நிறம் முற்றிலும் நீங்கி விட்டது.

7. வேங்கை தொலைத்த.

—:o:—

தலைவன் களவொழுக்கத்தை நீட்டிக்கிறான். அவனை விரைவில் வரைந்து கொள்ளத் தூண்ட தோழியும், தலைவியும் விரும்பினர். அவன் வரும் நேரம் நோக்கி முருகனை புகழ்வார்போல, அவனைப் புகழ்ந்து பாடினர். தலைவன் வரவால் தலைவி மகிழ்வதையும், அவன் பிரிவால்

மெலிவதையும், தோழி வெளிப்படுத்திக் கூறினள். இதனைக் கேட்கும் தலைவன், தலைவி என்றும் மெலியாதிருக்க வரைய நினைப்பான் என்பது அவள் நோக்கம்.

வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்து
ஏந்து மருப்பின் இனவண்டு இமிர்பூஊதும்
சாந்த மரத்தின் இயன்ற உலக்கையால்
ஐவன வெள்நெல் அரைஉரலுள் பெய்து இருவாம்;
ஐயனை ஏத்துவாம் போல அணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனை
தையலாய்! பாடுவாம் நாம்.

புலியைக் கொன்றதும், மதத்தினையும், புள்ளிகளையும் (உடையதுமான) யானையின் (நிமிர்ந்து வளர்ந்த கொம்புகளாலும், கூட்டமான வண்டுகள் ஒலித்துக்கொண்டே தாதை உண்ணும் (தகைமையுடைய) சந்தன மரத்தாலும் செய்யப்பட்ட உலக்கைகளால், ஐவனமாகிய வெண்மையான நெல்லை (பாறையை) அறுத்துச் (செய்யப்பட்ட) உரலில் இட்டுக்குத்துவோம். (அவ்வாறு குத்தும்பொழுது நம் தலைவனாகிய) முருகனைப் புகழ்ந்து பாடுபவர்களைப் போல, அழகுகொண்ட மேகங்கள் உண்டாகும் (பெருமையையுடைய) உச்சிகளைப்(பெற்று) பயனளிக்கும் மலைநாட்டுத் தலைவனை, பெண்ணே! நாம் பாடுவோம்,

வெறி — மயக்கம்; பொறி — புள்ளி, ஐவனம் — மலைநெல். இவர்கள் மலைத் தலைவனைப் புகழ்வதைப் பிறர் கண்டுகொள்ளாமல் இருக்க, முருகனைப் புகழ்வதுபோல் அமைந்த, ஆனால் தம் தலைவனையே குறித்த பாடல்களைப் பாட விரும்பினர். தலைவன் முருகனோடு ஒப்பிட்டுச் சொல்லக்கூடிய பெருமையுடையவன் என்பது குறிப்பு. இது தோழி கூற்று.

தகையவர் கைச்செறித்த தாள்போலக் காந்தள்
முகையின்மேல் தும்பி இருக்கும்; பகைஎனில்
கூற்றம் வரினும் தொலையான்,தன் நட்டார்க்குத்
தோற்றலை நாணாதோன் குன்று.

பகையாக எதிர்வரின் எமன் வந்தாலும் மனம் அழியாதவனும், தன்னை விரும்பியவர்க்குத் தோற்றுப்போவதற்குச் சிறிதும் வெட்கப்படாதவனுமாகிய (நம் தலைவனுடைய) மலையில், மகளிர் தம் விரலிலே பொருத்திய மோதிரத்தைப் போல, காந்தள் மொட்டின் மீது (அது அலரும் காலத்தை எதிர்பார்த்தபடி) தும்பி வீற்றிருக்கும்.

தகை — அழகு, தகுதி; அதனையுடையவர் தகையவர்; காந்தள் உவமிக்கப் பட்டமையின் மகளிரைக் குறிக்க வந்தது. அவன் மலையிலுள்ள தும்பி, பொறுமையுடன் காந்தள் மலரும் காலத்தை எதிர்நோக்கிப் பார்த்திருத்தலைப் போல, அவனும் மணம் பேசவேண்டிய நன்னாளை எதிர்நோக்கியபடித் தன் ஆவலை அடக்கிக் கொண்டிருக்கிறான். இது தலைவி கூற்று.

வெருள்புடன் நோக்கி வியல்அறை யூகம்
இருள்தூங்கு இறுவரை ஊர்புஇழிபு ஆடும்
வருடைமான் குழவிய வளமலை நாடனைத்
தெருளத் தெரிஇழாய்! நீஒன்று பாடித்தை.

அகன்ற பாறையின் மீது (வீற்றிருந்த) கருங்குரங்கை (நெருங்கிச் சென்று, அது முகஞ்சுளித்ததைப்) பார்த்துப் பயப்பட்டு, (மலை உச்சியைவிட்டு ஓடிப்போய்) இருள் கவிந்த பக்க மலையில் ஏறி இறங்கி விளையாடும் வருடை மான் குட்டிகளை உடைய, வளப்பம் மிக்க மலையின் தலைவனை, ஆராய்ந்த அணிகளைப் பூண்டவளே! விளங்க நீ ஒரு பாடலைப் பாடு.

வெருளுதல் — பயப்படுதல்; அறை — அறுக்கப்பட்ட பாறை, யூகம் — கருங்குரங்கு; இறுவரை — பெருமலையினின்றும் வெப்பத்தாலும், அருவிகளாலும் பிரிந்த (பிளந்த) பக்கமலை. அதனைச் சூழ்ந்த உயர்ந்த மலைகளின் நிழலால், அது எப்பொழுதும் இருண்டிருக்குமாதலால் 'இருள்தூங்கு இறுவரை' என்றார். இது தோழி கூற்று.

அவன் மலையில் வாழும் மான் குட்டிகள் பயப்பட வேண்டாத குரங்குக்குப் பயந்து, வெளிச்சமுடைய மலை உச்சியை விட்டு நீங்கி, இருண்ட பக்கமலையில் சென்று ஆடுவதைப் போல,

அவனும் பயப்பட வேண்டாத தலைவியின் சுற்றத்தாருக்குப் பயந்து, மணந்து இன்புற்றிருக்க முயலாமல், இன்பத்துக்கு இடையூறுகள் விளைவிக்கும் களவொழுக்கத்தை மேற்கொண்டிருக்கிறான்.

நுண்பொறி மான்செவி போல வெதிர்முளைக்
கண்பொதி பாளை கழன்றுஉகும் பண்பிற்றே,
மாறுகொண்டு ஆற்றார் எனினும், பிறர்குற்றம்
கூறுதல் தேற்றாதோன் குன்று.

பகைமை பூண்டு, (தம் மனத்தே புகவிட்ட பகைமைத் தீயைத்) தாங்கமாட்டாதவராய், (தொடர்ந்து துன்பத்தைச் சூழ்வார்) என்றாலும் பிறர் பிழைகளை வெளிப்படுத்திக் கூறுதலைப் பொறுக்காதவனுடைய மலையில் நுண்மையான புள்ளிகளை உடைய மான் காதுகளைப் போன்ற மூங்கில் முளையின் கணுக்களை மூடிக்கொண்டிருக்கும் பாளைகள் கழன்று விழும் தன்மையுடையன.

'பொறியை'ப் புலனின் சூக்குமமாகக் கொண்டு, 'நுண்ணிய சத்தங்களையும் கேட்கும் சூக்கும இந்திரியத்தையுடைய மான் செவி' என உரைத்தலும் பொருந்தும். இது தலைவி கூற்று.

பாளை, முளைத்தெழும் கணுக்களைக் காக்க, அதனைப் பிறர் அறியாதவாறு மூடிக்கொண்டிருந்து, பக்குவமான காலத்தில் தானே கழன்றுவிடுதலைப் போல, அவனும் தலைவி தன்னிடத்துக் கொண்ட காதலைப் பிறர் அறியாதவாறு களவொழுக்கம் ஒழுகி மறையாக வைத்திருந்து, தக்க காலத்தில் தானாகவே பலர் அறிய மணம் புரிவான்.

புணர்நிலை வளகின் குளகுஅமர்ந்து உண்ட
புணர்மருப்பு எழில்கொண்ட வரைபுரை செலவின்
வயங்குஎழில் யானைப் பயமலை நாடனை
மணம்நாறு கதுப்பினாய் மறுத்து ஒன்று பாடித்தை,

இணைந்திருக்கும் கொம்புகளினால் அழகு பெற்றதும், மலையை ஒத்திருக்கின்றதும், தன்னுடைய (பெருமிதமான) நடையினால் விளங்குகின்ற கம்பீரத்தை உடையதுமாகிய

யானை வாழ்வதும், பயன்தருவதுமான, மலையையுடைய நாட்டின் தலைவனை, மணம் கமழும் கொண்டையை உடைய வளே ! பழித்து ஒரு பாடலைப் பாடு.

'வளகு' புதருக்கும் 'குளகு' அதன் தழைக்கும் பெயர்கள். அவன் மலையில் உள்ள யானை, பிடியுடன் கூடி, விரும்பியதை உண்டு, பிறர் போற்றும் பெருமிதமான நடையுடையதாய்த் தன்னிச்சைப் படி திரிந்து மகிழ்ந்திருத்தலைப் போல, அவனும் தலைவியோடு கூடி இல்லறத்தை நல்லறமாய் நடத்தி, பிறர் பாராட்டுதல்களைப் பெற்று மகிழ்ந்திருப்பான். யானைக்கு விருந்தயர்தல் இன்மையின், உண்டுமகிழ்ந்தது, இவன் உண்பித்து மகிழ்வான் என்பது குறிப்பு. இது தோழி கூற்று.

கடுங்கண் உழுவை அடிபோல வாழைக்
கோடுங்காய் குலைதோறூஉம் தூங்கும், இடும்பையால்
இன்மை உரைத்தார்க்கு, அதுநிறைக்கல் ஆற்றுக்கால்
தன்மெய் துறப்பான் மலை.

வறுமையின் (கொடுமையால் மானம் இழந்து) தம் இன்மையைக் கூறி (இரந்தவர்களுக்கு) அவர்கள் இல்லை என்றதைத் (தந்து அவர் விருப்பத்தை) நிறைக்க முடியா விடின், தன் உயிரையே இழந்துவிடத் (துணிபவன்) மலையில், கொடிய கண்களை உடைய புலியின் பாதங்களைப்போன்ற வாழையின் வளைந்த காய் (நிறைந்த சீப்புகள்) குலைகளி லெல்லாம் இருக்கும்.

உழுவை — புலி ; அசையாதிருக்கும் தன்மையைத் 'தூங்கும்' என்றார். உணவாகும் வாழைக்காய்கள், கொடிய புலியின் விரல்களை ஒத்திருப்பனபோல, நன்மையைப் பயக்கும் அவன் நட்பும் துன்பமுடையதுபோல் தோன்றுகிறது. பழித்துப் பாட வேண்டிக்கொண்ட தோழிக்குத் தலைவி பழிப்பதுபோல் புகழ்ந்தே பாடினாள். ஓரளவு துன்பத்தைத் தரினும், அவன் தனக்கு மகிழ்ச்சியைச் சூழும் இயல்புடையவனே என்பது தலைவியின் உறுதி. இது தலைவி கூற்று.

எனவாங்கு

கூடி அவர்திறம் பாடஎன் தோழிக்கு
வாடிய மெல்தோளும் வீங்கின,
ஆடுஅமை வெற்பன் அளித்தக்கால் போன்றே.

என்று நாங்கள் இருவரும் சேர்ந்து அவர் பெருமையைப் பாடும்பொழுதே, என்னுடைய தோழிக்கு அவளுடைய வாட்டமுற்றிருந்த மென்மையான தோள்கள், அசைகின்ற மூங்கில் நிறைந்த மலைத்தலைவன் தலையளி செய்தாற் போலவே பூரித்துப் பெருத்து விளங்கின.

தலைவன் மறைந்திருக்கும்பொழுது — சிறைப் புறமாக இருக்கையில் — அவன் கேட்க, அவன் முன் செய்த தலையளியை நினைந்து கூறி மகிழ்தலால், இவள் என்றும் மகிழ்ச்சி மாறாமலிருக்க அவன் மணக்கத் துணிவான் என்பது தோழியின் நோக்கம்.

8. கதிர்விரி கனைசுடர்.

——:o:——

அவனுக்குப் பலமுறை சொல்லிவிட்டாள்; அவன் கேட்டதாகத் தெரியவில்லை. தலைவி தத்தளிக்கிறாள்; அவளால் துன்பம் தாங்கமுடியவில்லை. அவள் துன்பப் படக் காரணம் என்ன என்று பிறர் கேட்கத் தொடங்கு வார்களே—அலராகுமே—என்ற பயத்தால், தலைவி மிகவும் முயன்று தன் துன்பத்தைப் பொறுத்துக்கொண்டிருக் கிறாள். தலைவனுக்கோ மணஞ்செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் எழுந்ததாகத் தெரியவில்லை; நாள்தோறும் தலைவியைத் தனியே சந்தித்து மகிழ்வதோடு அவன் ஆவல் அடங்கி விடுகின்றது—வரையாது வந்து ஒழுகு கின்றான். அவனுடைய பொறுப்பற்ற போக்குக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் என்று தோழி துணிந்துவிட்டாள். அவனைத் தலைவி சந்திக்காதபடி செய்ய—அல்ல குறிப்படும் படி செய்ய—நினைத்தாள்; ஆனால் தலைவி வருந்துவளே

என்று பயந்தாள். அவள் தலைவியின் நிலையை உருக்கமாகக் கூறி, அவனை மணஞ் செய்துகொள்ளத் தூண்டுவதைச் சித்திரிக்கிறது இப்பாடல்.

கதிர்விரி கனைசுடர்க் கவின்கொண்ட நனஞ்சாரல்
எதிர்எதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்து
அதிர்இசை அருவி, தன் அஞ்சினை மிசைவீழ,

சூரியனுடைய கிரணங்கள் விரிகின்றதனால், மிக்க ஒளியைப்பெற்று அழகு மிகப்பெறும் அகன்ற மலைச்சரிவுகளில், ஒன்றுக்கொன்று எதிர்ப்பட்டு வளர்ந்து உயர்ந்து (தோன்றும்) பெரிய மலைத் தொகுதிகளின் (உச்சிகளிலிருந்து) முழங்குகின்ற ஓசையுடன் (ஓடிவரும்) அருவிகள், தன்னுடைய அழகிய கிளைகளின் மீது விழுவதனால்,

நன-அகன்ற; அடுக்கம்-தொகுதி, கூட்டம். கனை-நெருங்கிய.

முதிர்இணர் ஊழ்கொண்ட முழவுத்தாள் எரிவேங்கை
வரிநுதல் எழில்வேழம் பூநீர்மேல் சொரிதரப்
புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறுஎய்தித்
திருமகள் இருந்துஅன்ன தேம்கமழ் விரல்வெற்ப!

(பசிய) நிறத்தைக்கொண்டு முற்றிய கொத்துகளையும், மத்தளம் போன்ற (அடி மரத்தையும்) நெருப்பைப்(போல் ஒளியுள்ள மலர்களையும் உடைய) வேங்கை மரம், புள்ளிகள் நிறைந்த நெற்றிகளை உடைய அழகிய யானைகள் பூவோடு கூடிய நீரைத் தன்மீது சொரிய, கட்டு தளரும் தாமரை மலரிடத்துச்சிறப்புடன் வீற்றிருக்கும் திருமகள் இருப்பைப் போலத் (தோன்றும்); மணம் நிறைந்ததும், வெற்றியையுடையதுமான மலைகளின் தலைவனே!

ஊழ்-நிறம். பூநீர்-மென்மையும் தூய்மையும் உள்ள நீருமாம். பொன்னின் நிறத்தை ஒத்த பூக்களையுடைய வேங்கை திருமகளுக்கும், எதிர் எதிரே உயர்ந்து தோன்றும் மலைகள் யானைகளுக்கும், அவற்றில் இறங்கிவரும் அருவிகள் யானை நீரைச் சொரிதற்கும் உவமைகள். ஊழ்கொண்ட முதிரிணர் எனமாறிக் கூட்டுக.

தன்எவ்வம் கூறினும் நீசெய்த அருளின்மை
என்னையும் மறைத்தாள்என் தோழி, அதுகேட்டு
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூறல். தான்நாணி.

என்னுடைய தோழி, தன்னுடைய துன்பம் மிகுந்த பொழுதும், (அதன் காரணத்தை வினவி) நீ செய்த இரக்கமற்ற செயலைக்கேட்டு, உன்னை நான் பிறர் எதிரில் பழிகூறுதலுக்கு வெட்கப்பட்வளாய், அதனை என்னையும் அறியவொட்டாமல் மறைத்திருந்தாள்.

கூருநோய் சிறப்பவும் நீசெய்த அருளின்மை
சேரியும் மறைத்தாள்என் தோழி, அதுகேட்டாங்கு
ஓரும்நீ நிலையிலை எனக்கூறல் தான்நாணி.

என்னுடைய தோழி, தன்னுடைய மிகுதியான நோய் மேலும் அதிகமாயும், (அதன் காரணத்தை வினவி) நீ செய்த இரக்கமற்ற செயலைக் கேட்டறிந்து, நீ நிலையற்றவன் எனப் பழிக்கப்படுதற்கு வெட்கப்படவளாய், அதனைச் சேரியில் உள்ள எவரும் அறியவொட்டாமல் மறைத்திருந் தாள்.

ஓர்தல்—கேட்டல், அறிதல்,

நோய்அட வருந்தியும் நீசெய்த அருளின்மை
ஆயமும் மறைத்தாள் என் தோழி, அதுகேட்டு
மாய!நின் பண்பின்மை பிறர்கூறல் தான்நாணி.

மாயம் வல்லவனே! என்னுடைய தோழி, தன்னுடைய நோய் அவளைக் கொல்லும் (அளவுக்கு அதிகப்பட) வருந்தினளேனும், (அதன் காரணத்தை வினவி) நீ செய்த இரக்கமற்ற செயலைக்கேட்டு, உன் குண மின்மையை ஆயத்தார் கூறுதலை வெட்கப்பட்ட வளாய், அதனை அவரும் அறியவொட்டாமல் மறைத் திருந்தாள்.

தன்னோடு வேறுபாடில்லாமல் வாழும் தோழிக்கே முதலில் மறைத்தாள் தலைவி. பொறுக்கும் அளவைக் கடந்தபின் தோழிக்கு மறைக்கமுடியாமல் தவித்தாள்; இருந்தும் ஊரார் அறியவொட்டாமல் மறைக்க வெளிச்செல்வதை விட்டுவிட்டாள். நோய் மேலும் மிகுந்தது. அவளோடு விளையாடும் ஆயத்தாருக்கு மறைப்பது எப்படி? இச்செயற்கரிய செயலை, தலைவி தலைவன் பெருமையைக் காக்கச் செய்து முடித்திருப்பதை உணர்த்துகின்றாள் தோழி; இதனைக் கூறும்பொழுது, இதுவரை பொறுமையுடன் பேசி வந்தவள் 'மாய!' எனத்தலைவனைப் பழித்துக் கூறினாள். தலைவியின் துன்பத்தின் எல்லையை இதனால் அறிந்த தலைவன், விரைவில் மணந்து கொள்ளுவதாக வாக்களித்தான். இந்நற்செய்தியைத் தலைவிக்குச் சொல்ல, அவனோடு விரைந்து செல்கிறாள் தோழி.

எனவாங்கு

இனையன தீமை நினைவனள் காத்துஆங்கு
அனையரும் பண்பினால் நின்தீமை காத்தவள்
அரும்துயர் ஆர்அஞர் தீர்க்கும்
மருந்தாகிச் செல்கம் பெரும!நாம் விரைந்தே

என்று (உன்னைச்சேரும்) இவ்வித பழிகளை நினைத்தவளாய், (அவை உன்னைச் சேராதபடி) பாதுகாத்து, அப்பொழுதே, அவளுடைய அருமையான பொறுமைக் குணங் காரணமாக, நீ அவளுக்குச் செய்த கொடுமையையும் பொறுத்துக்கொண்டிருந்தவளுடைய மிக்க துன்பமாகிய நிறைந்த நோயைப் போக்கும் மருந்தாக ஆகிப் பெரும! நாம் அவளிடம் விரைந்து செல்வோம்.

அனை-அத்தகைய; அவனுக்கு பழி சேராது பார்த்துக் கொண்ட குணச் சிறப்பைச் சுட்டுகின்றது; அரும்துயர்-பொறுத்தற்கரிய துன்பம். அவள் துன்பத்தைப் போக்கும் மருந்து தலைவன் அவளை மணப்பதே.

9. விடியல்வெம் கதிர்காயும்.

—:o:—

தலைவன் மணந்து கொள்வதாகக் கூறிச்சென்று பல நாட்களாயின. அவன் வரவில்லை; வரைய முயற்சி செய்ததாகவும் தெரியவில்லை. தலைவி கலங்குகிறாள். இரவைத் தூக்கமின்றிக் கழிக்கிறாள். இந்நிலையில் தலைவன் சுற்றத்தாருடன் வந்து தலைவியை மணத்தில் கொடுக்குமாறு அவள் தமரைக்கேட்டு, அவர்கள் இசைவையும் பெற்றான். இந் நற்செய்தியைத் தலைவிக்குக்கூறி ஆறுதல் சொல்ல வந்த தோழி, தலைவனை வரைய முயற்சிக்கத் தான் தூண்டியதையும், அவன் முயற்சி தடைப்பட்டதால் காலக்கழிவு நேர்ந்ததையும் கூறுவதை இப்பாடல் சித்திரிக்கிறது.

விடியல்வெம் கதிர்காயும் வேய்அமல் அகல்அறைக்
கடிசுனைக் கவினிய காந்தள்அம் குலையினை,
அருமணி அவிர்உத்தி அரவுநீர் உணல்செத்துப்
பெருமலை மிளிர்ப்புஅன்ன காற்றுடைக் கனைபெயல்
உருமுக்கண் உறுதலின்,

விடியற்காலத்தே (மிகவும்) விரும்பப்படுகின்ற சூரியனை மறைத்து (நிழலைச் செய்யும்) மூங்கில் அடர்ந்த, அகன்ற பாறையில் (உள்ள) குளிர்ந்த சுனையில் இருக்கும் அழகைப் பரப்பும் காந்தள் மலர்க்கொத்தை, பெறுதற்கரிய மாணிக்கத்தையும், (படத்தின்மீது) விளங்கும் வரிகளையும் உடைய பாம்பு நீர் உண்பதாக எண்ணி, பெரிய மலைகளையும் கீழ்மேலாகப் புரட்டும் வல்லமையுடைய காற்றோடு கலந்த, செறிந்த மழை (பொழிகையில்) இடி இடிக்கவும்,

வேய் — மூங்கில்; அமல் — நெருங்கிய; காய்தல் — வெறுத்தல்; உத்தி — பாம்பின்படத்தில் உள்ள வரி. இயற்கை நிகழ்ச்சி ஒன்றை, காந்தளைப் பாம்பாக மதித்து இடி இடித்தது என அவற்றின் பகைமையைப் பயன் படுத்தி விவரிக்கிறார். அவன் மலையில் உள்ள

அழகிய காந்தளும் கொடிய பாம்பாகக் கருதப்பட்டது போல, அவனுடைய இனிய உறுதி மொழிகளும், நிலையற்றவையாகவும், கொடுமை புடையனவாகவும் தோன்றுகின்றன.

உயர்குரல் ஒலிஒடி

நறுவீய நனம்சாரல் சிலம்பலின், கதும்எனச்
சிறுகுடி துயில்எழூஉம் சேண்உயர் விறல்வெற்ப!

(இடி இடிக்கவும் அதனால்) எழுந்த பலமான ஓசையின் ஒலி பரவிச்(சென்று), நல்ல மணமுள்ள மலர்களையுடைய அகன்ற மலைச்சாரல்களைத் (தாக்க, அவை) எதிரொலிப்பதனால், (அவ்வோசையைத் தாங்காது, குளிர் ஒடுக்குவதையும் கவனிக்காமல்) விரைவாகச் சிறுகுடியில் உள்ளார் துயில் உணர்வர்; இத்தகைய மிக உயர்ந்ததும், வெற்றியை உடையதுமான மலையின் தலைவனே!

சிலம்புதல் — எதிரொலித்தல்; 'எழூஉம்' என்ற எச்சம், விளக்கங்கருதி முற்றாக உரையில் கொள்ளப்பட்டது. அயர்ந்து தூங்குவாரைக் காரணமின்றி எழுப்ப இடி இடிக்கும் மலையின் தலைவனாகையால், அவனும் தன் சொற்களை நம்பி இருப்பவரைக் காரணமின்றி கலங்கச் செய்யும் தன்மையுடையவனாய் இருக்கிறான்.

கால்பொர நுடங்கல கறங்குஇசை அருவிநின்
மால்வரை மலிசுனை மலர்ஏய்க்கும் என்பதோ,
புல்ஆராப் புணர்ச்சியால் புலம்பிய என்தோழி
பல்இதழ் மலர்உண்கண் பசப்பநீ சிதைத்ததை;

அணைக்க அணைக்க (இன்பம் பெருகி, மேலும் அணைத்துக்கொள்ளுதலை விரும்பச்செய்யும்) மனநிறைவை அளிக்காத கூட்டத்தைப் (பெருமையால்) மிக வருந்திய என்னுடைய தோழியின் பல இதழ்களையுடைய மலர் போன்ற ஆளைவிழுங்கும் கண்கள் பசக்கும்படி, நீ அவற்றின் அழகைக் கெடுத்தது, காற்று தாக்கியும் அசையாது (வழிமாறுதலும்), ஒலிக்கின்ற (இனிய) ஓசையையுடையதுமாகிய அருவி (பாயும்) நின் பெரிய மலையில்(உள்ள) பலவாகிய சுனைகளில் உள்ள மலரை(அவை-கண்) ஒத்திருக்கும் என்ற எண்ணமோ?

ஒப்புயர்வற்ற தன்மை தன் மலைக்கு என்றும் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு தலைவியின் அழகிய கண்களின் அழகைச் சிதைத்ததாகத் தோழி கூறுகிறாள்; அவன் சுயநலம் மிக்கவன் எனக் கூற விரும்பியவள் இவ்வாறு மறைத்துக் கூறுகிறாள். வரும் தாழிசைகளுக்கும் இது ஒக்கும்.

அவன் மலையில் ஓடும் அருவிகள் பலமான காற்றடிக்கவும் அசையாமல், தம் இயற்கையான வழிகளை விட்டுப் பிறழாமல் பாய்வதைப் போல, அவனும் தலைவியை வரைந்து கொள்ளச் செய்யும் முயற்சியில் தடைகள் ஏற்படின் அவற்றால் மனமழியாது முயன்று தான் அளித்த உறுதி மொழி பிறழாமல் பாதுகாக்க வேண்டும் எனத் தோழி எச்சரிக்கிறாள்.

புகர்முகக் களிற்றொடு புலிபொருது உழக்கும்நின்
அகல்மலை அடுக்கத்த அமைஎய்க்கும் என்பதோ,
கடைஎனக் கலுழும்நோய் கைம்மிக என்தோழி
தடையின திரண்டதோள் தகைவாடச் சிதைத்ததை;

இறந்துவிடும் நிலையை (இவள் அடைந்துவிடுவாள் என்று சொல்லும்படிக்) கலங்கச் செய்யும் நோய் (இவளால் பொறுக்கக்கூடிய)எல்லையைக் கடக்க, என் தோழியினுடைய பெருத்துத் திரண்ட தோள்கள் அழகு அழியும்படி நீ கெடுத்தது, புள்ளிகள் பொருந்திய முகத்தை உடைய யானையோடு புலி சண்டையிட்டு (வென்று) திரியும் உன் அகன்ற மலைத்தொடர்களில் உள்ள மூங்கிலை (அவை – தோள்கள்) ஒத்திருக்கும் என்ற எண்ணமோ?

புகர் — புள்ளி; உழத்தல் — திரிதல்; அமை — மூங்கில்; கடை — இறுதி; தடைதல் — பெருத்தல். அவன் மலையில் உள்ள புலி தன் உணவாகிய யானையை, அதனைக் கொல்லத் தோன்றும் துன்பங்களுக்கு அஞ்சாது கொன்று திரிவதைப் போல அவனும் தலைவியை மணப்பதற்குத் தோன்றும் தடைகளைப் பொருட்படுத்தாது, தான் விரும்பியபடி அவளை மணந்து மகிழ்ந்திருக்கவேண்டும் என்று தோழி வற்புறுத்துகிறாள்.

சுடர்உற உறநீண்ட சுரும்புஇமிர் அடுக்கத்த
விடர்வரை எரிவேங்கை இணர்எய்க்கும் என்பதோ,
யாமத்தும் துயிலலள் அலமரும், என்தோழி
காமரு நல்எழில் கவின்வாடச் சிதைத்ததை.

நள்ளிரவிலும் தூங்காமல் மனஞ்சுழன்று வருந்தும் என்னுடைய தோழியின் (கண்டார்க்கு) விருப்பத்தை விளைவிக்கும் நல்ல அழகை மாண்பு இழக்கும்படிக் கெடுத்தது, சூரியனையே (சென்று)பொருந்தும்படி மிக உயர்ந்ததும், தேன்வண்டுகள்(ஓயாது) ஒலித்துக்கொண்டிருப்பதும் ஆகிய தொடர்ந்துள்ள பல குன்றுகளையும், குகைகளையும் உடைய (உன்) மலையில் (இருக்கும்) நெருப்பைப்போன்ற (ஒளியுடைய) வேங்கை மலர்க் கொத்துகளின் அழகை (அது—அவள் அழகு) ஒத்து இருக்கும் என்ற எண்ணமோ?

'உற'-பொருந்த; மிக, யாமம்—நள்ளிரவு; அவனுடைய மலை உயரத்தால் பெருமை உடையதாய் இருப்பதனோடு, தன்னிடத்தே வசிக்கும் தேனீ, விலங்குகள் இவற்றைப் புரக்க மரங்களையும், குகைகளையும் பெற்றிருத்தலைப் போலவே, அவனும் தலைவியை மணந்து இல்லறத்தை மேற்கொண்டு உயர்வடைய வேண்டுமென்றும், தன்னைச் சேர்ந்த சுற்றத்தாரையும், விருந்தினரையும் ஆதரித்து மகிழ்விக்க வேண்டும் என்றும் தோழி வற்புறுத்துகிறாள். தலைவனைத் தடுத்து நிறுத்தித் தன்பால் இழுத்துக் கொண்ட கண்களை முதலிலும், அவனை அணைத்துக்கொண்ட தோள்களை அடுத்தும், அவனைத் தொடர்ந்து அன்புடையவனாக இருக்கச் செய்ய உதவிய மேனியைப் பின்னரும் கூறியிருக்கும் தாழிசைகளின் முறைவைப்பு உணர்ந்து மகிழத்தக்கது.

எனவாங்கு

தன்தீமை பலகூறிக் கழறலின், என்தோழி!
மறையில்தான் மருவுற மணந்தநட்பு அருகலான்,
பிறைபுரை நுதலவர்ப் பேணி,நம்
உறைவரைந் தனர்அவர் உவக்கு நாளே.

என்று அவர் நமக்குச் செய்த கொடுமைகள் பலவற்றையும் சொல்லி, (உன்னைக் கலங்க வைத்ததற்காக)ப் பழித்து (நான் பேசவும்), என்னுடைய தோழி! பிறர் அறியாமல் அவர் (நம்மோடு) பொருந்தியிருந்த களவொழுக்கமாகிய நட்பு (நாம் இற்செறிக்கப்பட்டதன் விளைவாக) சுருங்கி விடவே, பிறையை ஒத்த (உன்னுடைய) நெற்றியைப் (பிரியாது இருத்தலை) அவர் விரும்பி, (மணம்பேச வந்து) நம்மோடு வாழ்தலை அவர் விரும்பிய நாளிலேயே (பெறும்படி) வரைவு முடித்தனர்.

கழறல் - இடித்துச் சொல்லுதல்.

10. வீயகம் புலம்ப.

—:o:—

இடி இடிக்கிறது. மழை பெய்கிறது. காரிருள் கவிந்திருக்கிறது. பேயும் நடமாடப் பயப்படும் அந் நடு நிசியில் தலைவன் குறியிடத்துக்கு வந்தான். நொச்சிப் பூவை பரித்துப் போட்டான். பூவிழுந்த ஓசை தலைவிக்கோ, தோழிக்கோ கேட்கவில்லை. ஆகவே தலைவன் திரும்பிப் போக நேர்ந்தது. அவன் நிச்சயமாக வந்திருப்பான்; ஏமற்றமடைந்து திரும்பி இருப்பான் எனத் தலைவி நினைத்தாள். இயற்கை காரணமாக ஏற்பட்ட ஏமாற்றத்துக்கு, அவன் தன்னைப் பொறுப்பாளியாகக் கருதுவானே என்று கலங்கினாள். தன் கலக்கத்தைத் தோழிக்குக் கூறினாள். அடுத்த நாள் தலைவன் வந்தான். அவனைத் தோழி முதலிற் சென்று கண்டாள். தலைவியின் மனக்கவலையை விவரித்தாள். அவளுக்கு ஆறுதல் அளிக்க வழி சொல்லிக் கொடுத்தாள். இவற்றைச் சித்திரிக்கிறது இப்பாடல்.

வீயகம் புலம்ப வேட்டம் போகிய
மாஅல் அம்சிறை மணிநிறத் தும்பி,
வாய்இழி கடாத்த வான்மருப்பு ஒருத்தலோடு
ஆய்பொறி உழுவை தாக்கிய பொழுதின்,
வேங்கைஅம் சினைஎன விறல்புலி முற்றியும்,
பூம்பொறி யானைப் புகர்முகம் குறுகியும்,
வலிமிகு வெகுளியால் வாள்உற்ற மன்னரை
நயன்நாடி நட்பாக்கும் வினைவர்போல் மறிதரும்;
அயம்இழி அருவிய அணிமலை நல்நாட!

பூ தனிமையை அடையும்படி, வேட்டைமேல் சென்ற அழகிய இறக்கைகளையும், நீலமணி போன்ற நிறத்தையும் உடைய தும்பி, வாயிலிருந்து சொரிகின்ற மத நீரையும், வெண்மையான தந்தங்களையும் உடைய ஆண்யானையோடு அழகிய வரிகளையுடைய புலி போர் செய்தபொழுது

வேங்கைமரத்தின் அழகிய கொம்பு என்று கருதி வெற்றியை உடைய புலியை வட்டமிட்டும், பூக்கள் பெருந்தியிருப்பது போல் தோன்றும் யானையின் புள்ளிகளையுடைய முகத்தை நெருங்கியும், வல்லமையை மிகுதிப் படுத்தும் கோபம் காரணமாக வாளால் போர் செய்யும் அரசர்களை, நல்ல உபாயத்தைத் தெரிந்து சந்து செய் விக்கும் தொழில் நுட்பம் அறிந்தவர் (அவ்வரசரிடையே மாறிமாறிச் செல்வதைப்) போலப் போய்வரும்; இத்தகைய சிறப்பினை உடைய) பள்ளத்தை (நோக்கிப்) பாயும் அருவிகளைப் பெற்ற அழகிய மலைகள் (நிறைந்த) நல்ல நாட்டின் தலைவனே!

வேட்டம் — வேட்டை; கடாம் — மதநீர்; ஒருத்தல் விலங்கு களில் ஆணைக் குறிக்குஞ் சொல்.

நயன் — பசை; இங்கு இருவரையும் சினம் தணியச்செய்யும் உபாயம். வரிகளையுடைய புலியை வேங்கையின் சினை என்று எண்ணிய தும்பி ஏமாற்றம் அடைந்து, பின் யானையின் மதநீரை உண்ண அதனிடம் சென்றது. அவன் மலையிலுள்ள தும்பி தனக்கு உணவைத்தரும் பூவைத் தனியே தவிக்கவிட்டு, வேட்டை மேற் சென்று துன்பமுற்றதைப்போல, அவனும் தனக்கு இன்பம் தரும் தலைவியைப் புறக்கணித்துவிட்டு, வேறுவகையில் இன்பம் பெற முயல்வது துன்பமாய் முடியும் எனத்தோழி தலைவனை எச்சரிக்கிறாள்.

ஏறுஇரங்கு இருள்இடை இரவினில் பதம்பெறுஅன்
'மாறினேன்' எனக்கூறி மனம்கொள்ளும் தான்என்ப,
கூடுதல் வேட்கையில் குறிபார்த்துக் குறல்நோச்சிப்
பாடுஓர்க்கும் செவியோடு பைதலேன் யான்ஆக.

அவனோடு கூடவேண்டும் என்ற விருப்பமிகுதியால், (அவன் வரவை அறிவிக்கும்) குறியை எதிர்பார்த்து, நொச்சிப்பூங்கொத்து விழும் (ஓசையைக்) கேட்கும் (கருத்தோடு இணைந்த) செவியோடு (காத்திருந்து, ஓசை ஒன்றும் கேட்காமையால், அவன் வரவில்லையே என்று) வருந்திய வளாய் நான் இருக்கவும், அவன் இடி இடிக்கும் (சமயத்தில் இருட்டு வழியை (அஞ்சாது கடந்து வந்து) அந் நள்

ளிரவில் என்னோடு கூடும் செவ்வியைப் பெறாதவனாய்த் (திரும்ப நேரிட்டதால்) நான் மனம் மாறிவிட்டேன் என்று சொல்லிக் (கொண்டு, அதனையே) நிச்சயப்படுத்திக் கொள் வான்.

மனங்கொள்ளல் — உறுதிகொள்ளுதல்; பாடு — ஒலி. பைதல் — வருத்தம். 'என்ப' அசை; 'மாறினென்' என்ற இறந்தகாலம் உறுதிபற்றிவந்தது. தலைவி கூறியபடியே தோழி தலைவனுக்குக் கூறுகிறாள். இவை வரும் தாழிசைகளுக்கும் ஒக்கும்.

அரும்செலவு ஆர்இடை அருளிவந்து அளிபெறாஅன்
'வருந்தினேன்' எனப்பல வாய்விடூஉம் தான்என்ப,
நிலைஉயர் கடவுட்குக் கடம்பூண்டு தன்மாட்டுப்
பலசூழும் மனத்தோடு பைதலேன் யான்ஆக.

(நான் களவொழுக்கத்தை விட்டு மணஞ் செய்து கொள்ளும்படி — கற்பொழுக்கத்தை மேற்கொள்ளும்படி) என் நிலையை உயர்த்த (அருளும்) கடவுளுக்குச் (செய்ய வேண்டிய) கடன்களைக் (குறைவில்லாமல் செய்து முடிப்ப தாக) மேற்கொண்டு, (இந் நள்ளிரவில் வருபவன் வழியில் துன்பம் ஒன்றும இல்லாமல், விலங்குகளுக்கோ, மனிதர் களுக்கோ அகப்படாமல் வரவேண்டுமே, என்பவை போன்ற) அவனைப்பற்றிய எண்ணங்களையே நினைக்கும் மனத்தோடு (அவன் எனக்காக இரவில் வருவதற்கு இரங்கி) வருந்துபவளாய் நான் இருக்கவும், அவன் கடப்பதற்குக் கஷ்டமான (துன்பம்) நிறைந்த வழியை (என்னிடம் கொண்ட) அன்பு மிகுதியால் கடந்துவந்து, (அவனிடம் எனக்குள்ள) அன்புமிகுதியால் அடையும் இன்பத்தை அடையாமல் (திரும்ப நேர்ந்தவன்) (இவ் ஏமாற்றத்துக்கு) நான் மிகவும் வருந்தினேன் என்று பல (முறை) சொல்லி (வருந்துவான்

கனைபெயல் நடுநாள்யான் கண்மாறக் குறிபெறாஅன்
புனைஇழாய் என்பழி நினைக்குஉரைக்கும் தான்என்ப,
துளிநசை வேட்கையால் மிசைபாடும் புள்ளின்தன்
அளிநசை ஆர்வுற்ற அன்பினேன் யான்ஆக.

(தன்னைக்காக்கும்) மழையை விரும்பி, அன்பு மிகுதியால், (அதனைப்பயக்கும்) வானத்தைப் (புகழ்ந்து) பாடும் வானம்பாடிப் பறவையைக்காட்டிலும், அவன் தலையளியை விரும்பி (அவனிடம்) நிறைந்த அன்புடையவளாய் நான் இருக்கவும், செறிந்த மழை (பெய்யும்) நள்ளிரவில் நான் (தடுமாற்றத்தால்) இடம்பெயர்ந்ததால் குறிஇடத்தில் என்னைக் காணப் பெறாதவனாய்த் (திரும்ப நேர்ந்த) அவன், அழகாகப்பூட்டப்பட்டுள்ள ஆபரணங்களை அணிந்தவளே! உனக்கு (என்னைத்தான் காணப்பெறாது) என்னுடைய தவறு (எனக்) கூறுவான்.

கூட்டம் நிகழாததால், தலைவன் வருந்தியதை முதல் தாழிசையில் கூறி, அவன் தன்னைப்போலவே தலைவியும் வருந்தியிருப்பாள் எனக்கொண்டு, அவள் நிலைக்கு இரங்கியதை இரண்டாம் தாழிசையில் விளக்கி, இறுதியில் இவ்வாறு இருவரும் கலங்கக் காரணம் தலைவியே எனத் தலைவன் கூறுவதைக் கூறும் முறை வைப்பு உணர்ந்து மகிழத்தக்கது. இவ்வாறு தலைவன் மன நிகழ்ச்சிகளைத் தெரிந்து கூறியவள் தலைவி; அதனால் இக்காதலர்கள் ஒருவரிடத்து ஒருவர் கொண்டிருந்த பற்றின் செறிவு வெளிப்படுகிறது.

எனவாங்கு,

கலந்தநோய் கைம்மிகக் கண்படா; என்வயின்
புலந்தாயும் நீஆயின் பொய்யானே வெல்குவை;
இலங்குதாழ் அருவியோடு அணிகொண்ட நின்மலைச்
சிலம்புபோல் கூறுவ கூறும்
இலங்குஏர் எல்வளை இவளுடை நோயே.

(இவளைப்) பொருந்தி இருக்கும் நோய் (இவளுடைய பொறுமையின்) எல்லையைக் கடந்திருப்பதால், இவள் அதனைத் தாங்க முடியாதவளாய் இருக்கிறாள்; என்னிடத்தே கோபங்கொண்டனைப்போல நீ (நடித்தாயானால்) அப்பொய்த் தோற்றத்தால் இவள் (வருத்தத்தைப் போக்குவதில்) வெற்றி கொள்வாய்; விளக்கம் உடையதாய் ஓடிவரும் அருவியின் ஓசையோடு மாறுபடாத) அழகுடைய உன்மலைச்சாரலின் எதிரொலியைப்போல, அழகுமிகுந்து ஒளியைவிடும் வளைகளைப் பூண்ட இவளுடைய நோயால் (வருந்தும் மனம்) நீ கூறுவதையே (எதிரொலித்துக்) கூறும்.

11. ஒன்று இரப்பான்போல்.

—: o :—

என்ன செய்வது என்று தோழிக்குத் தெரியவில்லை. தலைவி தைரியமற்றவள்; தலைவன் தரும் தொல்லையோ நாளுக்கு நாள் அதிகப்படுகிறது. 'நீ பரபரப்புடன் நடந்துகொண்டால் தான் என் உயிர் நிற்கும்' என இறுதி எச்சரிக்கையும் விடுத்துவிட்டான். என்ன செய்வது? தனக்கு உண்மை தெரிந்துவிட்டது எனத் தோழி அறிவிப்பதைத் தலைவி எப்படி ஏற்றுக் கொள்ளுவாளோ? களவொழுக்கத்தை மேற்கொள்ள விரும்புகிறாளோ, இல்லையோ? இச்சிக்கல்களைப் பற்றிச் சிந்திக்க சிந்திக்க திகைப்பு அதிகப் பட்டதே ஒழிய, தோழிக்குத் தகுந்த வழி விளங்கவில்லை; தான் தைரியத்துடன் ஒரு முடிவுக்கு வந்து, அதனை இருவரையும் ஏற்கவைப்பதே சிறந்தது என்று துணிகிறாள். தோழியின் தொல்லையையும், அதனின்றும் அவள் தன்னை விடுவித்துக் கொண்ட விதத்தையும் விவரிக்கிறது இப்பாடல்.

ஒன்று, இரப்பான்போல் எளிவந்தும் சொல்லும்; உலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையும் உடையன்;
வல்லாரை வழிபட்டு ஒன்றுஅறிந் தான்போல்
நல்லார்கண் தோன்றும் அடக்கமும் உடையன்,
இல்லோர் புன்கண் ஈகையின் தணிக்க
வல்லான் போல்வதோர் வன்மையும் உடையன்;
அன்னான் ஒருவன்தன் ஆண்தகை விட்டுஎன்னைச்
சொல்லும்சொல் கேட்டீ, சுடரிழாய்! பன்மாணும்.

ஒளி விடுகின்ற அணிகளைப் பூண்டவளே! என்னிடத்தில் எதனையோ யாசித்துப் பெற (விரும்பியவனைப் போல்), பிறர் கண்டு இகழக்கூடிய ஏழ்மை நிலையை மேற்கொண்டு தன் குறையைக் கூறுவான்; உலகம் முழுவதையும் அடக்கி ஆளும் தன்மையை உடையவனைப் போல பெருமிதம்

உடையவனாகக் காணப்படுகிறான்; பிறர்க்கு அறிவிக்கும் ஆற்றல் உடைய அறிஞர்களை வேண்டி நின்று (அறிய வேண்டியவற்றுள்) சிறந்த ஒன்றை நன்றாக உணர்ந்தவனைப் போல, நல்லவரிடத்துத் தோன்றும் (உயர்ந்த பண்பாகிய) அடக்கத்தை உடையவனாக இருக்கிறான்; பொருள் இல்லாதவனுடைய வறுமையைத் தன் கொடையினால் போக்க முடிந்தவனைப் போன்ற வல்லமையும் உடையவனாய் இருக்கிறான்; இத்தகைய (சிறப்புகளைப் பெற்றிருக்கும்) ஒப்பற்ற தன்மையை உடைய ஒருவன் தன் உரிமையைக் கைவிட்டு, என்னிடம் பலமுறைகள் சொல்லிய சொற்களைக் கேள்.

தலைவனுடைய குணங்களை உயர்த்திக் கூறுகிறாள் தோழி; இப்படிப்பட்டவன் இரந்து கேட்பதை மறுப்பது நமக்கு இழிவையே தரும் எனத் தலைவியை எண்ணிக் கொள்ளத் தூண்டுவதே அவள் நோக்கம். அடக்கம் தெரிந்தவன் அனைத்தையும் அறிந்தவனாகக் கருதப்படுவது கவனிக்கத் தக்கது.

'நின்னின்றி அமையலேன் யான்' என்னும் அவனாயின்;
அன்னான்சொல் நம்புண்டல் யார்க்கும்இங்கு அரிதாயின்;
என்உற்ற பிறர்க்கும்ஆங்கு உளகொல்லோ, நறுநுதால்?

அவனோ, நீ இல்லாமல் நான் வாழ்க்கையில் நிறைவைப் பெற்றவனாகமாட்டேன் என்று சொல்லுகிறான்; (நாம் இல்லாது வாழ்க்கையே பாழாகும் எனச் சாதிக்கும்) அத்தகையவனுடைய சொற்களை (அவற்றின் உண்மையை அறிய வாய்ப்பு இல்லையாகையால்) நம்புதல் எவருக்கும் முடியாதது; நல்ல முகமுடையவளே! என்னைச் சேர்ந்த (அவன் உண்மையை உரைத்தானா என்று முடிவு செய்ய வேண்டிய) பொறுப்பு, வேறு எவருக்கேனும் இருக்கின்றதோ?

தலைவனும், தலைவியும் அவன் கூறிய அளவுக்கு அன்புமிக்க காதலர்கள் தாமா என அறிவதற்குத் தோழி சொற்கள் உதவுகின்றன. 'நின்னின்றி அமையலேன்' என அவன் கூறியதாகச் சொல்லுகையில் களிப்பும், 'அன்னான் சொல் நம்புண்டல் அரிது' என்று கூறுகையில் கவலையும். 'என்னுற்ற பிறர்க்கும் உளகொல்'

என்னும் பொழுது இரக்கமும் தலைவிக்குத் தோன்றும். இவை தலைவி அவனிடத்துச் கொண்டுள்ள அன்புமிகுதியை உணர்த்தும் சான்றுகள்.

அறியாய்நீ, வருந்துவல் யான்' என்னும் அவனாயின்;
தமியரே துணிகிற்றல் பெண்டிர்க்கும் அரிதாயின்;
அளியரோ எம்போல ஈங்குஇவன் வலைப்பட்டார்!

அவனோ, 'நான் மிகவும் துன்பப்படுகின்றேன்; அதன் எல்லையை நீ அறியாதவளாய் இருக்கிறாய்' என்று சொல்லுகிறான்; பெண்களுக்கு (பிறரோடு சூழாமல்) தாமே ஒரு துணிவுக்கு வருதல் அரிது, என்னைப்போல் இவன் வலையில் சிக்கியவர் இரங்கத்தக்கவர்களே!

தலைவி அவனிடத்து அன்புகொண்டவள் என உணர்ந்த தோழி, இங்கு அவளைப் பரிகசிக்கின்றாள். தோழிக்கு மறை புலப்பட்டுவிட்டதே எனக் கவன்ற தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள் என்பதும் ஏற்கும். அவன் வலையில்பட்ட நான், உன்உதவி இன்றி அவனுக்கு ஒன்றுங் கூற முடியாதவளாய்த் திகைப்பது போலவே, அவன் வலைப்பட்டிருக்கும் நீயும், இனி என் உதவியின்றி அவனைக் கூடி மகிழ்தல் முடியாது என்பது குறிப்பு.

வாழலேன் யான்என்னும் நீநீப்பின் அவனாயின்;
ஏழையர் எனப்பலர் கூறுஞ்சொல் பழியாயின்;
சூழுங்கால் நினைப்பதொன்று அறிகிலேன் வருந்துவல்.

அவனோ, 'நீ கைவிட்டால் நான் வாழமாட்டேன்' என்கிறான்; பெண்கள் அறிவில்லாதவர் எனப் பலரும் கூறுவது வீண் பழியே; (இருப்பினும்) அவன் துயரை நீக்க வழியை) ஆராயும்பொழுது, நல்ல வழியொன்றினைக் காண முடியாமல் வருந்துகிறேன்.

தலைவி களவொழுக்கத்தை விரும்பி ஏற்றுக்கொள்வாளா என்று அறியத் தோழிபோடும் தூண்டில் இத்தாழிசை.

சூழுங்கால், நறுநுதால்! நம்முளே சூழ்குவோம்.

நல்ல முகத்தை உடையவளே! (அவன் துயரைப் போக்க வழி காண முயலும்போது, நமக்குள்ளேயே ஆராய்ந்து கொள்வோம்.

தலைவி வழி எதனையும் கூறவில்லை. ஆனால் மறை பிறர்க்குப் புலப்படாமல் பாதுகாக்கவேண்டும் என்ற ஆவல் உடையவளாய் இருக்கிறாள். இது தலைவி கூற்று.

அவனை
நாண்அடப் பெயர்த்தல் நமக்கும்ஆங்கு ஒல்லாது;
பேணினர் எனப்படுதல் பெண்மையும் அன்று; அவன்
வெளவினன் முயங்கு மாத்திரம்; வாவெனக்
கூறுவென் போலக் காட்டி,
மற்றுஅவன் மேஎவழி மேவாய் நெஞ்சே!

நாணம் நம்மை வருந்தச்செய்யவும் அதனைப் (பொருட்படுத்தாமல், அவனை எதிர்சென்று போய்ப்) போக்குதல் நமக்குச் செய்ய முடியாதது; (களவொழுக்கத்தை) விரும்பிக் கைகொண்டனர் என்று (பிறரால் இகழ்ந்து) பேசப்படுதல் நம் பெண் தன்மைக்கு ஏற்காதது; அவன் (உன் நிலையை ஆராயாமல்) வலியக் கொண்டுசென்று கூடும் அளவுக்கு ஆத்திரமுடையவனாய் இருக்கிறான்; (களவொழுக்கத்தை மேற்கொள்ளத் துணிந்து குறியிடத்தே) வா என்று கூறுபவள்போல (அவனுக்குக் குறியிடம் ஒன்றைச்) சுட்டி, (அங்கு அவனைச் சந்தித்து, நம் மனத்திலுள்ளவற்றை உணர வைத்து,) அவனும் நமக்கு நன்மையைச் சூழ்வான், ஆகையால்) அவன் விரும்பிய வழியை (களவொழுக்கத்தை மேற்கொள்ளுதலையோ, வரையும்வரைப் பொறுத்திருத்தலையோ) மனமே! (நீயும்) மேற்கொள்ளுவாய்.

தனக்கும் துணிவில்லாமல், தலைவியும் ஒரு வழி சொல்லாமல் இருக்கும் நிலையில் தோழி செய்யக்கூடியது இதுஒன்றே. சுரிதகம் தோழி இனி என்ன செய்யவேண்டும் என்று மனத்தே ஆராய்ந்ததனை, வாய்விட்டுச் சொல்லியதுபோல் அமைந்திருக்கிறது.

12. ஆமிழி அணிமலை.

—.o.—

தலைவி இற்செறிக்கப்பட்டாள், தலைவன் தவருமல் தினந்தோறும் இரவில் வந்து அவளைக் கூடிச்சென்றான். அவர்கள் களவொழுக்கத்தை அன்னை எவ்விதத்திலோ கண்டுகொண்டாள். தலைவன் வந்த சமயத்தில் விழித்துக் கொண்டு, தலைவியை வெளிக் கிளம்ப முடியாமல் செய்து விட்டாள். ஏமாற்றம் அடைந்து திரும்பினான் தலைவன். அவனைத் தோழி, அடுத்தநாள் சந்தித்து, அவன் ஏமாற்ற மடைய நேர்ந்த காரணத்தையும், தலைவியின் மன நிலையையும் விவரித்துக்கூறி வரைவு கடாவினாள். அவள் தலைவனுக்குக் கூறியவற்றை அப்படியே தலைவிக்கு உரைப் பதுபோல் அமைந்திருக்கிறது இப்பாடல்.

ஆம்இழி அணிமலை அலர்வேங்கைத் தகைபோலத்
தேமூசு நனைகவுள், திசைகாவல் கோளற்குஒத்த
வாய்நில்லா வலிமுன்பின், வண்டுஊது புகர்முகம்
படுமழை அடுக்கத்த, மாவிசும்பு ஓங்கிய
கடிமரத் துருத்திய கமழ்கடாம் திகழ்தரும்
பெருங்களிற்று இனத்தொடு வீங்குஎருத்து எறுழ்முன்பின்
இரும்புலி மயக்குற்ற இகல்மலை நல்நாட!

நீர் (அருவிகளாய்) இறங்கிவரும் அழகிய மலையில் பூக்கின்ற வேங்கை (மலர்களின்) சிறப்பினைப் போலவே, தேன்வண்டுகள் (எப்பொழுதும்) மொய்த்துக்கொண் டிருக்கும் (மதநீரால்) நனைந்த கன்னங்களையும், (எட்டு) திசைகளின் காவலை ஏற்றுக்கொள்ளுந் தகுதியையும் (பகைவிலங்குகள் ஒன்றும்) எதிர்நிற்காத வல்லமை யையும், வண்டுகள் ஒலித்துக்கொண்டிருக்கும் புள்ளிகளை யுடைய முகங்களையும் (பெற்று), ஓயாத மழையினையுடைய மலைகளில் வாழ்வனவும், உயர்ந்த ஆகாயத்தின் அளவுக்கு ஓங்கிய மிகுதியான மரங்களை உடைய ஆற்றிடைக் குறை

களில் வாழ்வனவும் (ஆகிய) மணம் கமழும் மதத்தோடு விளங்கும் பெரிய யானைக் கூட்டங்களோடு, பெருத்திருக்கின்ற கழுத்துகளையும் மிக்க வல்லமையையும் உடைய புலிகள் மாறுபட்டுச் சண்டையிடும் மலைகளை உடைய நல்ல நாட்டின் தலைவனே !

ஆம் — நீர்; 'தேன் மூசு' என்றிருக்கவேண்டிய தொடர் 'தேமூசு' எனக்குறைந்து வந்தது. 'வாய்நில்லா' என்பது 'கண்ணின்று' (குறி. 1) எனவந்ததைப்போல், சொல்தொக உருபுநின்றது. முன்பு, எறும் — வலிமை; 'வலி முன்பின்,' எறும் முன்பின்' என ஒரே பொருளுடைய சொற்கள் மிகுதியை உணர்த்த அடுக்கிவந்தன. அருத்தி — ஆற்றிடைக்குறை; ஆறு இரண்டாகப் பிரிந்து கூடுவதால் ஏற்படும் இடை நிலம். கடி — மிகுதி, செறிவு, நெருக்கம். வேங்கை மலர்களை மொய்ப்பதைப் போலவே, வண்டுகள் யானையின் மத நீரை உண்ண அதன் கன்னங்களை மொய்க்கின்றன. மலைவாழ்வன, ஆறு வாழ்வன, காடு வாழ்வன, என யானைகளை மூன்று வகைகளாகப் பிரித்துக் கூறுவது வழக்கம்.

வீழ்பெயல் கங்குல்நின் விளிஓர்த்த ஒடுக்கத்தால்
வாழுநாள் சிறந்தவள் வருந்துதோள் தவறுண்டோ ?
தாழ்செறி கடுங்காப்பின் தாய்முன்னர், நின்சாரல்
ஊழ்உறு கோடல்போல் எல்வளை உகுபவால்!

(இடைவிடாமல்) பெய்கின்ற மழையை உடைய இரவில், (நடுநிசியில்) உன் குரலைக் கேட்டதனால் உண்டாகும் மன ஒடுக்கத்தால் (தன்னுடைய) வாழ்நாள் மிகப்பெற்றவளுடைய மெலிகின்ற தோள்களுக்குப் பழி (எதுவேனும்) உண்டோ? தாழ்பொருத்தி வைத்திருப்பது போன்ற கடுமையான காவலை மேற்கொண்டுள்ள தாயின் முன்னர், உன் மலைச்சாரலில் நல்ல நிறத்தைப்பெற்ற கோடல் பூக்கள் (அலர்ந்தபின், உதிர்தலைப்)போல, ஒளிவிடும் (இவளுடைய) வளைகள் கழன்று விழுகின்றனவே !

ஒடுக்கம் — தன்னிலை அடைதல்; மனம் அசைவின்றித் தன்னிலையில் நிற்கும்பொழுது மூச்சும் நிற்கும் என்பது யோக நூலார் துணிபு. அவ்வாறு மூச்சு நிற்கும்பொழுது, இவள் இறந்து விடுவதில்லை; அதற்கு மாறாக ஒளியுடன் ஒரு கணம்

காணப்படுகிருள். தன் வருகையைத் தலைவிக்கு அறிவிக்க அவன் குரல் கொடுத்தவுடனே, அதனை வேறு யாராகிலும் கேட்டு விடப் போகிறார்களே என்ற அச்சம் ஒரு கணம் அவள் மூச்சை நிறுத்திவிடுகிறது. எனினும், அக்குரலை இருளையும், மழையையும் பொருட்படுத்தாமல் வந்த அவனுடைய அன்பு மிகுதியையும் அவளுக்கு உணர்த்துகின்ற தாலையால், அடுத்த கணம் அவள் பொலிவுடன் காணப்படுகிருள். தலைவன் தவருது வந்தும் தான் அவனோடு கூடியிருக்க முடியவில்லையே என்ற எண்ணம் அவள் தோள்களை மெலியச் செய்கிறது.

இனைஇருள் இதுஎன ஏங்கிநின் வரல்நசைஇ
நினைதுயர் உழப்பவள் பாடுஇல்கண் பழிஉண்டோ?
இனையள்என்று எடுத்துஅரற்றும் அயல்முன்னர், நின்சுனைக்
கனைபெயல் நீலம்போல் கண்பனி கலுழ்பவால்!

இத்தகைய (செறிந்த) இருளாயிருக்கின்றதே (அவர் ஏதமின்றி வரவேண்டுமே) என்று ஏங்கியவளாய் உன்னுடைய வருகையை விரும்பி, அதுவே நினைவாக (கழிகின்ற ஒவ்வொரு கணமும் நீ இன்னும் வரவில்லையே என்று) துன்பப் படுபவளுடைய தூக்கம் இல்லாத கண்களுக்குக் குற்றம் (ஏதுவேனும்) உண்டோ? களவொழுக்கத்தை மேற்கொண்டிருக்கிருள் இவள் என்று உரக்கச் சொல்லிப் பரிகசிக்கும் அயலார் முன்னிலையில், உன் மலைச் சுனையில் உள்ள மிக்க மழையைப் பெற்ற குவளை மலர்களைப் போலவே, (இவள் கண்கள்) நீரைச் சொரியுமே!

பல்நாளும் படர்அட்டப் பசலையால் உணப்பட்டாள்
பொன்உரை மணிஅன்ன மாமைக்கண் பழிஉண்டோ?
இன்நுரைச் சேதும்புஅரற்றும் செவ்வியுள் நின்சோலை
மின்உகு தளிர்அன்ன மெலிவுவந்து உரைப்பதால்.

(உன்னைக் காணுது கழித்த) பல நாட்களும் உன் நினைவாகிய துன்பம் வருத்துவதனுல், பசலை நோயால் (தன்மேனி அழகு) உண்ணப்பட்டவளுடைய, பொன்னை உரைத்துச் செய்யப்பட்ட மணிபோன்ற (இவளுடைய) மாமை நிறத்தினிடத்துக் குற்றம் (ஏதுவேனும்) உண்டோ?

இனிமையானதும், நுரைகளையுடையதுமான சின்னீர் அலைக்கும் காலத்தில், உன்னுடைய சோலையில் உள்ள ஒளி நீங்கிய தளிர்களுக்குத் தோன்றுவது போன்ற (நிறக் கேடாகிய) துன்பம் பொருந்தி (இவளுடைய களவொழுக் கத்தைப் பிறர்க்கு) வெளியிடுகின்றதே!

மாமை — பொன்னை ஒத்தநிறம்; இது மகளிர் எழிலை மிகுதிப்படுத்தும்; அதனால் 'மாமைக்கவின்' என்று கூறப்படும். பசலை மாமைக்கவினைத் தொலைத்து, மகளிர் மேனியை ஒளி மங்கச் செய்வதால் நோய் எனப்பட்டது. இதனையும் பொன்னுக்கு (ஒளிமங்கித்தோன்றும் பொன்னுக்கு) ஒப்பிடுவர். ஆகவேதான் மாமைக்கு 'பொன்உரைமணி' உவமிக்கப்பட்டது 'சின்னீர்' புது மழையைக் குறிப்பிடுகின்றது. தண்ணீர் எப்பொழுதும் தங்கு வதால் தளிர்கள் நிறம் மாறி வெளுக்கும்.

எனவாங்கு,

பின்ஈதல் வேண்டும்நீ பிரிந்தோள்நட்பு எனநீவிப்
பூங்கண் படுதலும் அஞ்சுவல், தாங்கிய
அருந்துயர் அவலம் தூக்கின்
மருங்குஅறி வாரா மலையினும் பெரிதே!

என்று (உன்னுடைய நிலையையும், மனக்கவலையையும் எடுத்துக்கூறி) காவல் மிகுதி காரணமாக (உன்னோடு) பிரிந்திருக்கிறவளுடைய உறவை நீ (அவளை வரைவதால் இனி உன்னிடமிருந்து அவள் பிரியமுடியாதபடி) பின்னி விடுதல் வேண்டும் என்று (வற்புறுத்திவிட்டு அவனை) நீங்கி, (மீண்டும் ஒன்றைக்கூற நினைத்துக்கொண்டவளைப் போலத் திரும்பி, இவள் இப்பொழுது) பொறுத்துக்கொண்டிருக்கும் மிகுதியான துன்பத்தின் (அளவை) ஆராய்ந்து பார்த்தால், (அது) அருகே சென்று அளந்து அறிய முடியாத மலையைக் காட்டிலும் பெரியதாகையினால், (நீ வரைவு முயற்சியை விரைவாகச் செய்து முடிக்காவிடின்) பூப்போலும் கண்களை உடைய இவள் இறந்துவிடுதலையும் அஞ்சுகிறேன். (என்று கூறினேன்.)

தோழி வரைவு கடாஅய் விதத்தைத் தலைவிக்கு அறிவித்த தாகப் பொருள் விரிக்காவிடின், சரிதகத்தின் முதலடியில் உள்ள 'என' என்பதை அசையாகக் கொள்ள நேரிடும்; படுதலைத் தூங்குதலாகக்கொண்டு, தலைவி தூங்கினாள் என்றால் ஓரளவு துயரந்தீர்ந்தாள் அல்லளோ என்ற ஐயத்துக்கு இடம்தர நேரிடும்.

13. கொடுவரி தாக்கி.

—: o :—

தலைவன் இரவில் வந்து போகிறான். அவன் வருகை யால் தலைவி துன்பமே அடைகிறாள். ஆகவே அவனைப் பகலில் வருமாறு கேட்டுக் கொள்வதை இப்பாடல் விவரிக்கிறது.

கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கின் துஞ்சும் யானை
நனவில்தான் செய்தது மனத்தது ஆகலின்
கனவில் கண்டு கதும்என வெரீஇ,
புதுவ தாக மலர்ந்த வேங்கையை
அதுஎன உணர்ந்து,அதன் அணிநலம் முருக்கி,
பேணா முன்பின்தன் சினம்தணிந்து; அம்மரம்
காணும் பொழுதின் நோக்கல் செல்லாது
நாணி இறைஞ்சும் நல்மலை நல்நாட!

வளைந்த கோடுகளை உடைய புலியை (எதிர்த்துப் போரிட்டு) வெற்றி பெற்றதால் உண்டான அயர்ச்சியோடு, உயர்ந்த மலையின் சாரலிலே தூங்கும் யானை, நனவில் அது செய்தவை (போர் நிகழ்ச்சிகள்) அதன் மனத்தை விட்டு நீங்காமலிருந்தால், (தூக்கத்திலும் புலியோடு போர் செய்வ தாகக்) கனவு கண்டு, விரைவாகப் பயந்து, எழுந்து புதிதாகப் பூத்து (விளங்கிய) வேங்கை மரத்தை (தூக்க மயக்கத்தில்) அப்புலியே என்று எண்ணி, அதன் அழகிய செவ்வியைக் கெடுத்து, (பகையின் தூண்டுதலால்)

அடங்காத வல்லமையினால் தோன்றிய தன் கோபம் அடங்கி (பின்னர்) அம்மரத்தைக் காணும்திறம் பார்வையை (அதன் மீது) செலுத்தாமல், நாணித் தலை குனிந்து செல்லும் (தன்மையுடைய) வளம் மிகுந்த மலைகளை உடைய சிறந்த நாட்டின் தலைவனே!

கோபத்தின் நிலைக்களன் முரட்டுத்தனம் ஆகையால் 'பேணு முன்பின் சினம்' எனப்பட்டது. அவன் மலையில் வாழும் யானை தன் பகையாகிய புலியை வென்றதேனும், தனக்கு ஆதரவான வேங்கையோடு மயக்கத்தால் மாறுபட்டு மனத்தளர்ச்சி அடைந்து நாணி நடத்தலைப்போல, அவனும் தன் ஒழுக்கத்துக்குத் தடையான இரவுக் குறியின் ஏதங்களை அஞ்சாது அவற்றைக் கடந்து வந்தானேயானாலும், தனக்கு நன்மை செய்யக்கூடிய தலைவியின் சுற்றத்தாரை ஆராய்ச்சியின்மையால் இடையூறு செய்வர் எனக்கொண்டு, அவர்களுக்கு எதிர் நிற்க அஞ்சி மறைந்த களவொழுக்கத்தை மேற்கொண்டிருக்கிறான்.

போதுஎழில் மலர்உண்கண் இவள்மாட்டு நீஇன்ன
காதலாய் என்பதோ இனிது;மற்று இன்னாதே
மின்ஓரும் கண்ணாக, இடிஎன்னாய் பெயல்என்னாய்
இன்னதோர் ஆர்இடை ஈங்குநீ வருவதை.

மலரும் செவ்வியை உடைய அழகிய மலர்போன்ற ஆளை விழுங்கும் கண்களை உடைய இவளிடத்து நீ இத்தகைய அன்புடையவன் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது; ஆனால், மின்னலைக் கவனிக்கும் கண்களோடு, இடி என்றும் மழை என்றும் பாராமல், இத்தகைய கடத்தற்கரிய வழியைக் (கடந்து) நீ இங்கு வருவது துன்பத்தைத் தருகிறது.

செறிந்த இருளில் மின்னலின் உதவியால், வழி நடக்க வேண்டும் என்பதை, 'மின் ஒருங்கண்' குறிப்பிடுகின்றது.

இன்புற அளித்தனை இவள்மாட்டு நீஇன்ன
அன்பினை என்பதோ இனிது;மற்று இன்னாதே
மணம்கமழ் மார்பினை மஞ்சுஇவர் அடுக்கம்போழ்ந்து
அணங்குடை ஆர்இடை ஈங்குநீ வருவதை.

மகிழ்ச்சி அடையும்படி அளிசெய்தாய் (ஆகையால்) இவளிடத்து நீ இத்தகைய அன்புடையவனாய் இருக்கிறாய் என்பது விரும்பத்தக்கது; ஆனால் மணம் வீசும் மார்பினை உடையவனாய் நீ, மேகங்கள் படிந்திருக்கின்ற பக்க மலைகளைக் கடந்து, அணங்குகள் நடமாடும் இக்கடத்தற்கரிய வழியைக் (கடந்து) இங்கு நீ வருவது துன்பம் தருகிறது.

இவர்தல்—படர்தல்; போழ்தல்—பிளத்தல், இருபக்க மலைகளுக்கு இடையே உள்ள வழியே வந்ததை இங்கு உணர்த்துகிறது; அணங்கு-வருத்தும் தெய்வம்; மேகம் படர்ந்திருப்பதால் மின்மினிகளின் ஒளியும் இல்லாத செறிந்த இருளாயிற்று.

இருள்உறழ் இரும்கூந்தல் இவள்மாட்டு நீஇன்ன
அருளினை என்பதோ இனிது;மற்று இன்னாதே
ஒளிறுவேல் வலன்ஏந்தி ஒருவன்யான் என்னாது
களிறு இயங்கு ஆர்இடை ஈங்குநீ வருவதை

இருட்டை ஒத்த கரிய கூந்தலை உடைய இவளிடத்தில் நீ இத்தகைய அன்பு மிகுதி உடையவனாயிருக்கிறாய் என்பது மகிழ்ச்சி தருகிறது. ஆனால், ஒளிவிடும் வேலை வலக்கையில் ஏந்தியவனாய் 'நான் தனியே வருகிறேன்' என்று அஞ்சாமல், நீ யானைகள் போக்குவரவு செய்யும் கடத்தற்கரிய வழியைக் (கடந்து) இங்கு வருவது துன்பத்தைத் தருகிறது.

உறழ்—உவமவுருபு; மாறுபாடு என்பதும் பொருந்தும்;

அதனால்,

இரவின் வாரல், ஐய! விரவுவீ
அகல்அறை வரிக்கும் சாரல்
பகலும் பெறுவைஇவள் தடமென் தோளே.

ஆகவே, தலைவ! இனி இரவுக் காலத்தில் இங்கு வர வேண்டாம். இவளுடைய அகன்ற மெல்லிய தோள்களை, மலர்கள் பல கலந்து கோலம் இழைத்திருப்பதுபோல் காணப்படும் இம்மலைச்சாரலிடத்தே, பகற் காலத்திலும் (அணைக்கப்) பெறுவாய்.

14. வாங்குகோல் நெல்லொடு.

—— . o . ——

அவன் கெட்டிக்காரன், வந்தான்; கண்டான்; வென்றான் தலைவி அவன் காதலை ஏற்றுக் கொண்டுவிட்டாள். இனி அவள் பொறுப்பு அதிகமாயிற்று. அவனை அவள் வெற்றி கொள்ளவேண்டும்; எப்பொழுதும் பிரியாதிருக்கச் செய்ய வேண்டும். தோழி தலைவியை எப்படிப் பாராட்டவேண்டும் எனத் தலைவனுக்குக் கூறியதை விவரிக்கிறது இப்பாடல்

வாங்குகோல் நெல்லொடு வாங்கி. வருவைகல்
மூங்கில் மிசைந்த முழந்தாள் இரும்பிடி
தூங்குஇலை வாழை நளிபுக்கு, ஞாங்கர்
வருடை மடமறி ஊர்விடைத் துஞ்சும்;
இருள்தூங்கு சோலை இலங்குநீர் வெற்ப!

சூரியன் தோன்றும் காலத்தில், தானாக வளைந்திருக்கும் மூங்கிலை நெல்லோடு வளைத்துத் தின்ற முழங்காலையுடைய பெரிய பெண் யானை, நெருங்கிய இலைகளையுடைய வாழைக் காட்டினுள் புகுந்து, அங்கே வருடைமானின் மடப்பம் பொருந்திய குட்டிகள் ஓடியாடும் இடத்தில் தூங்கும்; இருள் நிறைந்த சோலைகளையும், விளங்குகின்ற அருவிகளையும் உடைய மலைநாட்டுத் தலைவனே!

மிசைதல்-உண்ணல்; யானை வளைந்த மூங்கிலை முழங்கால்களில் இடுக்கிக்கொண்டு, துதிக்கையால் அதனை வளைத்து ஒடித்துத் தின்றது. தூங்கு-அசை, செறி; நளி-நெருக்கம், செறிவு; மறி - குட்டி; இருள் தூங்குதல் - இருள் கவிந்திருத்தல்; அவன் மலையில் வாழும் யானை பாடுபடாமல் பெற்ற மூங்கிலைத் தின்று, கவலையின்றி வாழைக் காட்டில் தூங்கியதைப்போல, அவனும் முயற்சியின்றிப் பெற்ற தலைவியைக்கூடி, அவளைப் பற்றிய கவலையின்றி, வரைவு முயற்சி செய்யாமல் இருந்துவிடுவானோ என்பது குறிப்பு. தோழியின் அச்சத்தை இது உணர்த்துகின்றது.

அரவின் பொறியும் அணங்கும் புணர்ந்த
உரவுவில் மேல்அசைத்த கையை; ஓராங்கு
நிரைவளை முன்கைஎன் தோழியை நோக்கிப்
படிகிளி பாயும் பசுங்குரல் ஏனல்
கடிதல் மறப்பித்தாய்; ஆயின் இனிநீ
நெடிதுஉள்ளல் ஓம்புதல் வேண்டும்.

பாம்பின் அடையாளத்தோடு வருத்தும் தன்மையும் சேர்ந்த வல்லமையுடைய வில்லின்மீது வைத்த கையை உடையவனாய் இருக்கிறாய்; சேர நிறைந்த வளைகளைப் பூண்ட முன் கைகளை உடைய என் தோழியை நீ (பார்த்த) பார்வையினால், (பசித்து) வந்துவிழும் கிளிகள் அலையும் பசிய கதிர்களை உடைய தினைப் பயிரில் (அவை விழ ஓட்டாமல்) (அவளை) ஓட்டுதலை மறக்கச் செய்தாய், ஆகையால் இனி நீ (இவளை) மிகுதியும் நினைத்தலை (மேற்கொண்டு, அதனைப்) பாதுகாத்தல் வேண்டும்.

அணங்கு-வருத்தும் தெய்வம்; இங்கு குணம் மட்டும் கொள்ளப் பட்டது. பாம்பின் வடிவத்தைப்பெற்று அச்சத்தை விளைவிப்பதும், எய்வித்தாரைக் கொல்லும் இயல்புடையதுமாகிய வில்லைப் பிடித்தவன் அன்புடையவனாய் இருப்பானோ என்று அஞ்சுகிறாள் தோழி; கண்டாரைக் கவர்விக்கும் அழகிய வளைகள் நிறைந்த மெல்லிய கைகள் அவனையும் கவர்ந்தது கண்டு சற்று ஆறுதலடைகிறாள். அவனுடைய அச்சுறுத்தும் தோற்றத்தையும், அதனோடு முரண்பட்ட தலைவியின் கவர்ச்சியான தோற்றத்தையும் தோழி விவரிப்பது, அவன் தன்னிலைவிட்டுத் தலைவியைப்போல் ஆகவேண்டும் என வற்புறுத்தவே. அவள் குறிப்பாக இன்னொரு முறையும் இதனையே வற்புறுத்துவதைக்காண அவள் மனநிலை நமக்குப் புலனாகிறது. வில்லின்மேல் வைத்த கையோடு, வேட்டை மேல் வந்தவன, தலைவியை அவள் தொழிலை மறக்கச் செய்தது போல, அவனும் தன் தொழிலை மறந்து, அவள் நினைவாகவே இருக்கவேண்டுமாம்.

இவளே

பல்கோள் பலவின் பயிர்ப்புஉறு தீங்கனி
அல்குஅறைக் கொண்டுஉண் அமலைச் சிறுகுடி
நல்கூர்ந்தார் செல்வ மகள்.

இவள், பல குலைகளையுடைய பலாமரத்தின் பிசினை யுடைய இனிய பழங்களை, (அவை பாந்து) கிடந்த பாறையிலிருந்து கொண்டுவந்து உண்கின்ற சோற்று வளப்பம் மிக்க சிறுகுடியிருப்பில் வசிக்கும், பிள்ளை இல்லாமல் வறுமைப் பட்டவருடைய செல்வமான பெண்.

கோள்—குலை; பயிர்ப்பு—பிசின்; அல்கு—கிடந்த; அமலை—சோற்றுத்திரள். பாறையிலே கிடந்த பழத்தைத் தின்பவர் என்றதனுல், வளப்பம் மிக்குடைய மலை என்றும், அதன் மீது வாழ்பவர் வருத்தம் தெரியாமல் வாழ்பவர் என்றும் விளக்கினுள்.

நீயே, வளியின் இயல்மிகும் தேரும் களிறும்
தளியின் சிறந்தனை, வந்த புலவர்க்கு
அளியோடு கைதூ வலை.

நீ கொடையில் மழையைக் காட்டிலும் சிறந்தவனுகையால், காற்றைக் காட்டிலும் வேகமாகச் செல்லும் தேர்களையும், யானைகளையும் உன்னிடம் வந்த புலவர்களுக்கு மிக்க அன்புடனே வாரி வழங்குவாய்.

வளி—காற்று; தளி—மழை; அளி—அன்பு. கைதூவல்—கையொழிதல்; இங்கு கைதூவலை என்பது, கொடுத்தல் தொழில் எப்பொழுதும் ஓயாமல் நடப்பதை உணர்த்துகின்றது.

அதனுல்,

கடுமா கடவுறூஉம் கோல்போல்) எனைத்தும்
கோடுமையிலை ஆவது அறிந்து மடுப்பல்;
வழைவளர் சாரல் வருடை நன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி,
உழையின் பிரியின் பிரியும்
இழைஅணி அல்குல் என்தோழியது கவினே!

(உயர்ந்த குணத்தை உடையவன்) ஆகையால், வேகமாகச் செல்லும் மிருகங்களைச் செலுத்தும் கோல் போல, நீ சிறிதும் கொடுமை இல்லாதவனுக இருப்பதை

அறிந்து (இவளை உன்னோடு) பொருத்துகிறேன்; இப்பொழுது இளையவளாயிருக்கையில் (சுரபுன்னை வளரும் மலைச்சாரலில் உள்ள வருடைமானின் குட்டியை வளர்ப்பவர்களைப் போல (பெரிதும்) பாராட்டிவிட்டு, (பின்னர்) இவளிடத்திருந்து (சிறிது நேரம்) நீ (இவளைப் பிரிந்தால் மேகலையை அணிந்த அல்குலினை உடைய என் தோழியின் அழகும் (அவளைவிட்டு அப்பொழுதே) அகன்றுவிடும்.

கோல்—தாற்றுக்கோல்; வழை-சுரபுன்னை; இயற்கையாய் வேகமாகச் செல்லும் மாட்டுக்கு, தாற்றுக்கோலினால் துன்பம் நேரவே நேராது. ஆகவே அவன் அன்புடையவரிடத்துத் தானும் அன்புடையவனாய் இருப்பான் என விளங்குகிறது.

15. சுடர்த்தொடீஇ கேளாய்.

—: o :—

அவன் ஒரு போக்கிரி; தெருவில் விளையாடும் பெண்களுக்குத் தொல்லை தருவது அவன் விரும்பி மேற்கொண்ட தொழில். சிறு வயதில் விளையாட்டாகக் குறும்பு செய்து தேர்ந்தவன், காளைப் பருவத்திலும் தன் தொழிலைத் தொடர்ந்து நடத்துகிறான்; முன்னர்ப் பெண்களை அழ வைத்து வேடிக்கை பார்த்தவன், அனுபவ முதிர்ச்சியால் இப்பொழுது திகைக்க வைத்து மகிழ்கிறான். அவன் என்ன செய்தான்; தலைவி அதனை எப்படி ஏற்றுக் கொண்டாள்? இவற்றைத் தலைவியே தன் மழலை மாறாத சொற்களால் தோழிக்கு உரைப்பதைச் சித்திரிக்கின்றது இச்சிறு கவிதை.

சுடர்த்தொடீஇ! கேளாய்; தெருவில்நாம் ஆடும்
மணல்சிற்றில் காலில் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டுஓடி,
நோதக்க செய்யும் சிறுபட்டி,

ஒளிவிடும் வளையல்களை அணிந்தவளே! கேள்: தெருவில் விளையாடுங் காலங்களில் நாம் மணலால் கட்டும் சிறு வீடுகளைத் தன் காலால் (உதைத்து) இடித்தும், (நாம் கூந்தலிலே) சூடியிருக்கும் மலர் மாலையை உருவி எறிந்தும், (விளையாடப் பயன் படும் நம்முடைய) கோடுகள் இழைத்த பந்தை எடுத்துக் கொண்டு ஓடியும், (நாம்) வருந்தத் தக்க (குறும்புச்) செயல்களைச் (சிரித்துக் கொண்டே) செய்யும் சிறு போக்கிரி,

மேலோர்நாள்,

அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிலே,
'உண்ணுநீர் வேட்டேன்' எனவந்தாற்கு, அன்னை
'அடர்பொன் சிரகத்தால் வாக்கிச் சுடர்இழாய்!
உண்ணுநீர் ஊட்டிவா' என்றாள்; என, யானும்
தன்னை அறியாது சென்றேன்;

முன் ஒரு நாள் நானும் என் தாயும் வீட்டில் இருந்த பொழுது, குடிக்க நீர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வந்தவனுக்கு, என் தாய் ஒளிவிடும் அணிகளைப் பூண்டவளே! விளங்குகின்ற பொன்னைப்போல் (ஒளிவிடத் தேய்த்த) பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டு, (இவனை) நீர் குடிப்பித்து வா என்றாள்; என, நானும் அவனை (போக்கிரி ஆயிற்றே; குறும்பு செய்வானே என்று) கருதாமல் (தண்ணீர் எடுத்துக் கொண்டு சென்றேன்;

மற்று என்னை

வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு,
'அன்னாய்! இவன்ஒருவன் செய்ததுகாண்!' என்றேனா;

(அவன்) என்னை வளையலணிந்த முன்கையை பிடித்துக் கொண்டு (மெல்ல) இழுக்கவும், சழன்று, அம்மா! இவன் செய்ததனை வந்து பார் என்று கத்திவிட்டேன்.

'சுழற்சி' மனக்கலக்கம்; அதிர்ச்சி காரணமாய் ஏற்படும்.

அன்னை அலறிப் படர்தர, தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா.

தாய் (என்னடீ செய்தான்? என்னடீ செய்தான்? என்று) கதறிக் கொண்டு ஓடிவர, அவனை நான் நீர் குடிக்கும்பொழுது விக்கினான் என்றேன்.

அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ,

தாயும் அவனை (அவசரம் ஏன் என்று) வைது நீங்க,

மற்று என்னைக்
கடைக்கணால் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டஞ்
செய்தான்அக் கள்வன் மகன்,

என்னைத் தன் கடைக்கண்ணால் கொன்று விடுவானைப் போலவே பார்த்துப் பலமுறை நகைத்தான் அக்கள்வன் மகன்.

தாயின் எதிரில், பட்டப் பகலில், விழித்திருக்கும் பொழுதே தன் மனத்தை பறிகொண்டவன், தொழிலைக் கற்றுக் கொண்டவனல்லன், பிறப்பிலேயே இக்குணம் பெற்றவனாய் இருக்கவேண்டும் என்று தான் வியந்ததை நயம் தோன்றத் தலைவி 'கள்வன் மகன்' என்றாள்.

அன்னையிடம் பொய் கூறி அவனைத் தலைவி தப்புவித்ததும், அவளைத் தன் வலைக்குள் அகப்படுத்திக் கொண்ட செருக்கினால், அவன் கோபித்துப் பார்த்தான். இனி, அவன் அளி செய்யாவிடின், தான் இறந்துவிட நேரிடும் எனத் தோழியை உணரவைக்க, தலைவி தன் மன நிலையை அவன் பார்வையின் மேல் ஏற்றிக் 'கொல்வான் போல்' நோக்கியதாகக் கூறினாள்.

'கொல்வான் போல்' நோக்கினான் ஆனாலும் தனக்கு உறுதியாக அளி செய்வான் எனத் தோழிக்கு அறிவிக்க 'நகைக் கூட்டஞ் செய்தான்' என்று கூறினாள்.

அன்னையின் கோபத்துக்கு ஆளாக்காததற்கு நன்றி தோன்ற முதலில் சிரித்தான்; பின், அவள் பொய் சொல்லியது தன்னிடத்துக் கொண்ட காதல் காரணமாகவே என எண்ணிப் பெருமிதத்துடன் சிரித்தான்; பிறன் ஒருவனைத் துன்பத்தினின்றும் காப்பாற்றிய மகிழ்ச்சிக் குறியைத் தலைவியின் முகத்தில் கண்டவன், அது தன் காதலை ஏற்றுக் கொண்டதை அறிவிக்கும் குறி எனக் கொண்டு, வெற்றி உவகையால் மேலுஞ் சிரித்தான். அவன் மன நிலையை வெளிக் காட்டப் பலமுறை நகைத்ததனை 'நகைக் கூட்டஞ் செய்தான்' எனத் தலைவி கூறுகிறாள்.

தலைவியின் விளையாட்டுக் காலத்தில், தலைவன் அவள் கட்டிய சிறு மணல் வீடுகளை அழித்ததும், தலைப்பூவை அறுத்து எறிந்ததும், பந்தை எடுத்துக்கொண்டு ஓடியதும், முறையே அவன் பின்னர் அவள் மன அமைதியைக் கலைத்ததையும், விளையாட்டு விருப்பத்தைப் போக்கியதையும், மனத்தைப் பறி கொண்டதையும் குறிப்பிடும் நயம் உணர்ந்து மகிழத் தக்கது.

காமஞ்சாலா இளமையோளாக இருக்கையில் நிகழ்ந்தவற்றைக் காமஞ்சான்றபின் தலைவி தோழிக்கு உரைத்தது இது. மறை புலப் படுத்தல் இதன் பயன்; தோழியைக் கையுறை ஏற்கத்தூண்டுவது இதன் நோக்கம். கொறுமலர் வரைவின்கண் தலைவி அறத்தொடு நின்றது எனவும் கூறலாம்.

16. முறஞ்செவி மறைப்பாய்பு.

—:o.—

தலைவன் இரவு வேளைகளில் தப்பாமல் வந்து செல்கிறான். அவன் வந்து போவதில் விருப்பங் காட்டினாலும், தலைவிக்கு அலர் எழுந்து விடப் போகிறதே என்ற அச்சம் அதிகமாயிருந்தது. அவள் அச்சத்தை அகற்றத் தோழி தலைவனை வரைய வற்புறுத்தியதைச் சித்திரிக்கிறது இக் கவிதை. 'தலைவி அலருக்கு அஞ்சுகிறாள்; ஆகவே விரைவில் மணந்துகொள்' எனக் கூறுவதைத் தலைவன் பொருட் படுத்தமாட்டான் எனத்

தோழி எள்கூறிவாள். அதனால் 'நீ இரவில் வந்துபோவதை நாங்கள் மிகவும் விரும்புகிறோம்; ஆனால் வழியில் உனக்கு ஊறு விளையுமே' என்று மிகவும் அஞ்சுகிறோம்; எனவே தலைவியை விரைவில் மணந்துகொண்டு எங்கள் அச்சத்தை அகற்று' என்று கேட்டுக் கொண்டாள். தலைவனுக்குக் களவொழுக்கத்தை நீட்டிப்பதில் உள்ள விருப்பத்தைத் தூண்டியவள் போலவே பேசி, தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்ட தோழியின் திறனை நன்கு வெளிப்படுத்துகிறது இக்கவிதை.

முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று,
மறம்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்குஅறுத் திடுவான்போல் கூர்நுதி மடுத்து,அதன்
நிறஞ்சாடி முரண்தீர்த்த நீள்மருப்பு எழில்யானை,
மல்லரை மறஞ்சாய்த்த மால்போல்தன் கிளைநாப்பண்
கல்உயர் நனஞ்சாரல் கலந்துஇயலும் நாட!கேள்.

முறங்களைப் போல அகன்றிருக்கும் காதுகளின் மறைவிடமாக (வந்து) பாய்ந்து போர் செய்த புலியைக் கோபித்து, கொடுமையை மேற்கொண்ட நூற்றுவர் தலைவனாகிய துரியோதனனைத் துடையைக் கீறி (அவன் உயிரைப் போக்கிய) வீமனைப் போல, தன்னுடைய நீண்ட கொம்புகளின் கூர்மையான நுனிகளை (அப்புலியின் உடலில்) செலுத்தி, அதன் உயிர் நிலையை அறைந்து, பகையைப் போக்கிக் கொண்ட அழகிய யானை தன் சுற்றத்தின் நடுவே சென்று சிகரங்கள் உயர்ந்த மலைச்சாரலில் அவற்றோடு சேர்ந்து திரியும் (பெரிய மலை) நாட்டுத் தலைவனே! (நான் கூறுவதனைக்) கேள்.

குறங்கு—துடை; நிறம்—மருமத்தானம். தன்னை எதிர்பாராத முறையில் வந்து தாக்கிய புலியைக்கொன்ற யானை மகிழ்ச்சியுடன் திரிதலைப்போல, தலைவனும் இரவுக்குறியில் அவன் எதிர்பாராத வகையில் தோன்றும் இடையூறுகளைத் தலைவியை மணப்பதால் அறவே நீக்கி, மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்பது குறிப்பு.

தாமரைக் கண்ணியை, தண்நறும் சாந்தினை,
நேர்இதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்,
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉம்
அணங்குஎன அஞ்சுவர் சிறுகுடி யோரே;

தாமரை மலர்களால் கட்டப்பட்ட மாலையை அணிந்தவனாய், குளிர்ச்சி பொருந்தியதாய் மணம் வீசும் சந்தனத்தைப் பூசியவனாய், ஒன்றோடொன்று ஒத்திருக்கும் இதழ்களால் கட்டப்பட்ட மாலையை அணிந்த இவள் குறிப்பிட்ட குறி இடத்துக்கு நீ வருவாயானால், (உன்னை) மணத்தைப் பரப்பும் தன்மையை உடையனவாய்இருக்கும் இம்மலைகளிலே இயங்குவாரை எதிர்த்து நின்று பலி ஏற்கும் அணங்கு எனக்கருதி இச்சிறு குடியிருப்பில் உள்ளோர் பயப் படுவார்.

ஈர்ந்தண் ஆடையை, எல்லி மாலையை,
சோர்ந்துவீழ் கதுப்பினாள் செய்குறி நீவரின்,
ஒளிதிகழ் ஞெகிழியர், கவணையர், வில்லர்
களிறுஎன ஆர்ப்பவர் ஏனல்கா வலரே;

குளிர்ச்சி மிக்க ஆடையை உடையவனாய், இரவிற்கு ஏற்ற கோலத்தைக் கொண்டவனாய், தோள்களின் மீது குலைந்து விழும் கொண்டையை உடைய இவள் குறிப்பித்த குறியிடத்தை நோக்கி நீ வருவையானால், ஒளிவிளங்கும் குறைக் கொள்ளியை உடையவராய், கல் எறியும் கவணை உடையவராய், வில்லை ஏந்தியவராய் தினைப்புனங்களைக் காக்கும் காவலராகிய குறவர் (உன் வருகையை) யானையின் வரவு என எண்ணி ஆரவாரஞ் செய்வர்.

ஈர்ந்தண் ஆடை—பனியால் நனைந்த ஈரமான ஆடை; தன் வரவை அறிந்து கொள்ளாமலிருக்க, இரவில் சாயம் தோய்த்த ஆடையை அணிந்து வருதல், இரவிற்கேற்ற கோலம்; குறைக் கொள்ளி புலிகளைப் பயப்படுத்தவும், குளிர் காயவும் பயன்படும்; கவணும், வில்லும் விலங்குகளை விரட்டப் பயன்படும்.

ஆர மார்பினை, அண்ணலை, அளியை,
ஐதுஅகல் அல்குலாள் செய்குறி நீவரின்,
கறிவள்ர் சிலம்பில் வழங்கல் ஆனுப்
புலிஎன்று ஓர்க்கும்இக் கலிகேழ் ஊரே;

சந்தனம் பூசப் பெற்ற மார்பை உடையவனாய், தலைமைத் தகுதியையும் அருளையும் உடையவனாய், மெல்லிய அகன்ற அல்குலையுடைய இவள் காட்டிய குறியிடத்துக்கு நீ வருவையாயின், மிளகுக்கொடி படரும் மலைச் சாரலில் போக்குவரவு செய்தலில் குறையாத புலி என்று (உன்னைக்) கருதுவர் இச்செருக்கு மிகுந்த ஊரில் உள்ளார்.

அணங்கு, களிறு, புலி என்று தலைவனைக் கருதும் குறவரால் அவனுக்குத் துன்பம் ஏற்படும்; அதுவேயன்றி அண்ணலும், அளி செய்பவனுமாயும் இருப்பவனை அணங்காகக் குறவர் கருதுவது அலர் எழாமலிருக்க உதவுமேனும் அவனுக்கு இழுக்கேயன்றோ?

எனவாங்கு

விலங்குஒரார் மெய்ஓர்ப்பின் இவள்வாழாள்; இவள்
புலம்புகழ் ஒருவ! யானும் வாழேன்; [அன்றிப்

(தினைப்புனங்களைக் காப்பவரும், இவ்வூராரும் உன்னை) விலங்காகக் கருதாமல், (நீ யார், ஏன் இரவில் வருகிறாய் என) உண்மையை உணர்வார்களேயானால், (அவ்வறிவு அலரெழச் செய்யுமாகையால்) இவள் உயிர் துறப்பாள்; இவள் இல்லாமல், உலகம் போற்றும் ஒப்பற்றவனே! நானும் வாழமாட்டேன்.

தாழிசைகளில் அவனைப் பிழைபட உணர்வதால் வரும் ஏதங்களை விவரித்த தோழி, இங்கு அவனை நன்குணர்வதால் வரும் விளைவை வற்புறுத்துகிறாள்.

அதனால், போதிஅவிழ் வைகறை வந்து,நீ குறைகூறி
வதுவை அயர்தல் வேண்டுவல்; ஆங்குப்
புதுவை போலும் நின்வரவும், இவள்
வதுவைநாண் ஒடுக்கமும் காண்குவல் யானே.

ஆகவே (கவிந்த இருளின் செறிவு) நீங்கப் பெறும் வைகறைப் பொழுதிலே வந்து, நீ இவள் (சுற்றத்தாரிடம்) உன் மனக் குறைகளை கூறி, இவளை மணமுடித்துக்கொள்ள நான் விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன், அப்பொழுது (இவளை) அதற்கு முன் கண்டறியாதவனைப் போல் பாராட்டிக்கொண்டு வரும் உன் வரவையும், நாணத்தால் தோன்றும் இவளுடைய பதுங்கிய போக்கையும் நான் காண்பேன்.

பொதி அவிழ் வைகறை--மலர்கள் கட்டுதளரும் காலம் எனலும் பொருந்தும்; 'வதுவை நாண்' பலரறிய அவனோடு முதன்முறை யாகத்தொடர்பு கொள்வதால் ஏற்படும் வெட்கம்;

17. வறனுறல் அறியாத.

—:o:—

தலைவனும் தலைவியும் மிக எச்சரிக்கையாகவே நடந்து கொண்டனர்; இருந்தும் அவர்கள் உறவு எவ்வாறோ ஒரு சிலருக்குத் தெரிந்துவிட்டது. இதனை அறிந்தாள் தோழி. அலர் பரவி விடுமே எனப்பயந்தாள்; சில காலம் தலைவன் தலைவியைப் பார்க்க வருவதை நிறுத்திக்கொண்டால், அயலார் குசுகுசுவெனப் பழி தூற்றுவது நின்றுவிடும் எனக் கூறினாள். தன் நன்மைக்கே வாமல் இருக்கின்றான் என்று உணர்ந்தும், தலைவியால் அவனைப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை. அவள் ஆற்றாமையைப் போக்க, ஒரு நாள் அவனை வரச்சொல்லி ஏற்பாடு செய்தாள் தோழி; வந்தவனை விரைவில் வரைந்துகொள்ள வற்புறுத்த அவ் வாய்ப்பைத் தோழி பயன்படுத்திக் கொண்டதைச் சித்திரிக்கிறது இப்பாடல்.

வறன்உறல் அறியாத வழைஅமை நறுஞ்சாரல்
விறல்மலை வியல்அறை வீழ்பிடி உழையதா
மறம்மிக வேழம்,தன் மாறுகோள் மைந்தினால்
புகர்நுதல் புண்செய்த புய்கோடு போல,
உயர்முகை நறுங்காந்தள் நாள்தோறும் புதிதுஈன,
வயல்நந்தி அணிபெற, அருவிஆர்த்து இழிதரும்;
பயம்மழை தலைஇய பாடுசால் விறல்வெற்ப!

பஞ்சம் உண்டாவதை (எக்காலத்தும்) கண்டறியாததும் சுரபுன்னை அடர்ந்து இருப்பதால் மணம் மிக்கதுமான சாரல்களைப்பெற்ற சிறப்பினை உடைய (பெரிய) மலையின் அகன்ற பாறையில், தான் காதலித்த பெண் யானை தன்னோடு இருக்கவும், மிருக பலம் மிக்க ஆண் யானை, (தனக்குப் போட்டியாக வந்த வேற்று யானையோடு) மாறு பட்டு, (தன்னுடைய) மிகுதியான வல்லமையால் (அதன்) புள்ளிகள் நிறைந்த நெற்றியில் புண்ணை உண்டாக்கிப் பிடுங்கி (எடுத்துக்கொண்ட தன் இரத்தந் தோய்ந்த) தந்தங்களைப் போல, சிறந்த அரும்புகளையும், நல்ல மணத்தையும் உடைய காந்தள் தினந்தோறும் புதிய பூக்களைப் பூத்து (புதுமைக் கவின்பெற்று விளங்கவும்,) வயல்கள் பயிர் நிறைந்து அழகு பெறவும், அருவிகள் ஆரவாரத்துடன் ஓடிவரும்; (இவற்றிற்குக் காரணமான) பயனைத்தரும் மேகங்கள் எப்பொழுதும் தங்கியிருக்கின்ற பெருமை நிறைந்த வெற்றியையுடைய மலைத் தலைவனே!

வழை — சுரபுன்னை; அமை — நெருங்கிய; விறல் — வெற்றி; நந்தி —நிறைந்து; எக்காலத்தும் மேகம் தங்கியிருக்கும் உயர்ந்த மலையாகையால், வறன் உறல் அறியாததும், பெயல் பிழைப்பறியாததுமாகிய சிறப்புகளுடையதாய் இருக்கின்றது. இரத்தந் தோய்ந்த நுனிகளையுடைய தந்தங்கள் காந்தள் பூக்களுக்கு உவமை. அவன் மலையில் நாள்தோறும் புதியனவாகப் பூக்கும் மணம் மிக்க காந்தள் மலர்களைப்போல், அவனும் நற்குணம் நிறைந்தவனாய் இருப்பவனேயாயினும், கொல்லும் தொழிலைச் செய்து இரத்தந் தோய்ந்த தந்தங்களை நிறத்தால் அக்காந்தள் மலர்கள் ஒத்திருக்கின்றதைப்போல, அவனும் அயலார் பார்வைக்கு தலைவிக்கு அளி செய்யாத கொடுமை செய்பவனைப் போலவே காணப்படுகின்றான் என்பது குறிப்பு.

மறையின்நின் மணந்து,ஆங்கே மருவறத் துறந்தபின்
இறைவளை நெகிழ்புஓட ஏற்பவும் ஒல்லுமன்,
அயல்அலர் தூற்றலின் ஆய்நலன் இழந்தகண்
கயல்உமிழ் நீர்போலக் கண்பனி கலுழாக்கால்.

(நின்பிரிவு காரணமாக) தன் சிறந்த அழகை இழந்த இவள் கண்கள், அயலார் பழியைப் பரப்புவதனால் (மேலும் வருந்தி) கயல் மீன்கள் நீரைக் கொப்புளித்தலைப்போல நீரைச் சொரிகின்றன; (இத்தன்மை இல்லையேல்) உன்னைக் களவொழுக்கத்தில் புணர்ந்து, அப்பொழுதே உன்னால் அணைக்கப்பெறுதலை முற்றிலும் இழந்த (இவள்) பின்னர் (அத்துறவு காரணமாக) தன் முன் கைகளில் உள்ள வளையல்கள் கழன்று விழுதலாகிய (மெலிவைப் பொறுமையுடன்) ஏற்றுக்கொள்ளுதலைச் செய்வாள்.

மறை — களவு ; மருவுதல் — அணைத்தல் ; இறை — முன்கை ; ஒல்லும் — கூடும் ; பனி - துளிக்கும் கண்ணீரைக் குறிக்கின்றது. இவள் பிரிவை ஆற்றியிருக்கப் பாடு படுகிறாள், ஆனால் பிரிவுத் துயர் இவளை வெற்றிகொண்டு, களவை வெளிப்படுத்தி விடுகின்றது எனத் தோழி வற்புறுத்துகிறாள்.

இனியசெய்து அகன்று,நீ இன்னாதாத் துறத்தலின்
பனிஇவள் படர்எனப் பரவாமை ஒல்லுமன்
ஊர்அலர் தூற்றலின் ஒளிஓடி நறுநுதல்
பீர்அலர் அணிகொண்டு பிறைவனப்பு இழவாக்கால்.

(நின்பிரிவு காரணமாக) இவளுடைய நல்ல நெற்றி தன் ஒளியை இழந்து, ஊரார் பழி கூறுவதனால், பீர்க்கம் பூவின் அழகை ஏற்றுக்கொண்டு. (தனக்கு இயற்கையாய் இருந்த) மதியின் அழகை இழந்துவிட்டது. (இத்தன்மை இவள் வருந்துகின்றாள் என்பதனைப் புறத்தார்க்கு அறிவிக்கின்றது) இல்லையேல் கூடியிருக்கும்பொழுது இவளுக்கு மகிழ்ச்சியைத் தந்து (இவள் நன்மைக்காகவே என்றாலும்) பிரிந்து, நீ இவளுக்குத் துன்பந்தரத் தக்கபடி

இவளைக் காண வாராமலிருப்பதால், இவள் உடலின் நடுக்கம் (நீங்காமல் இருக்கும்) உன் நினைவு காரணமாகத் தோன்றியதே என்றுகொண்டு, (அவள் நலமின்மை) (ஆயத்தாருக்கும் தாய்க்கும்) வெளிப்படாமலிருக்கச் செய்யவும் கூடும்.

பனி — நடுக்கம்; படர் — நினைவு; மேல் தாழிசையில் தலைவி ஆற்றியிருக்கச் செய்த முயற்சியையும், அவள் வெற்றி பெருமையையும் கூறிய தோழி, இங்கு, மறை புலப்படாமல் இருக்கத் தான் மேற்கொண்ட முயற்சியும் பயனளிக்கவில்லை என வற்புறுத்துகிறாள்.

'அஞ்சல்' என்று அகன்று,நீ அருளாது துறத்தலின்,
நெஞ்சுஅழி துயர்அட நிறுப்பவும் ஒல்லுமன்,
நனவினால் நலம்வாட நலிதந்த நடுங்குஅஞர்
கனவினால் அழிவுற்றுக் கங்குலும் ஆற்றாக்கால்;

நனவுக் காலத்தில் (-விழித்திருக்கும்பொழுது—இவள்) அழகு கெடும்படித் துன்பத்தைச் செய்த, நடுங்குதற்குக் காரணமான நோய், கனவுக்காலத்தும் (-தூங்கும்பொழுதும்-) இவளை அழித்தலை மேற்கொண்டு, ஒவ்வொரு இரவிலும் இவளை ஆற்றியிருக்க முடியாதபடி செய்யாவிட்டால், '(நான் உன்னைப் பிரிவேன் என்று) அஞ்சாதே' எனக்கூறி, பிரிந்து சென்று, நீ மீண்டும் வாராமலேயே இவளைத் துறந்துவிட்டதனால், இவள் மனதை அறுக்கும் (நின்னைப்பற்றிய நினைவாகிய) துன்பம், (இவள் உயிரைக்) கொல்ல, இவள் இறந்துபடாமல் இருக்கவும் கூடும்.

இத்தாழிசையில், தான் தேறுதல் கூறி இவளை உயிரிழக்காமலிருக்கச்செய்வதோடு, இவளும் பகற்காலத்தில் தன் துன்பத்தை பொறுத்துக் கொண்டிருக்கிறாள் எனத் தோழி, தான், தலைவி ஆகிய இருவரும் செய்த முயற்சிகள் பயனளியாததைப் புலப்படுத்துகிறாள்.

எனவாங்கு

விளியாநோய் உழந்துஆழு என்தோழி, நின்மலை
முளிவுற வருந்திய முளைமுதிர் சிறுதினை,
தளிபெறத் தழைகபெற் றாங்கு,நின்
அளிபெற, நந்தும்இவள் ஆய்நுதல் கவினே.

என்று கூறும்படியாக, அழையாத நோயினால் மிகவும் துன்பப்பட்டு அமையாத என் தோழி, உன் மலையில் உள்ள உலர்தலைப் பொருந்தி வருந்திய முளைத்தல் மிக்க சிறிய தினைப்பயிர், மழையைப் பெறவும் அழகுபெற்றுத் தழைத்ததைப்போல, உன் அளியைப் பெற்றவுடன் தன்னுடைய அழகிய நெற்றியின் எழில் நிறையப்பெற்று விளங்குவாள்.

18. கொடியவும் கோட்டவும்.

——: o :——

அவள் தனியே இருக்கிறாள்! அவன் தன் கண்களை ஒரு முறை கசக்கிக்கொண்டு பார்த்தான். ஆம். அவளே தான்! இந்த வாய்ப்புக்கு அவன் எத்தனை நாட்கள் ஏங்கித் தவம் கிடந்தான்? அது அவளுக்கு எப்படி தெரியும்? இன்றுதான் அவனுக்கு நல்ல காலம் பிறந்ததுபோலும்! இதுகாறும் கட்டுண்டிருந்த அவன் உணர்ச்சிகள், சுதந்திரம் பெற்றுவிட்டன; அவன் அவற்றுக்கு அடிமையானான். அவனுக்கே 'என்ன செய்தோம்' என்று கூறமுடியாமல் நடந்துகொண்டான். ஆனால் அவன் செயல்கள் அனைத்தும், அவளிடத்து அவன் கொண்டிருந்த அன்பு மிகுதியை வெளிப்படுத்துவனவாகவே இருந்தன. அதனால் அவனைப் போலவே அவளும் அவனுடைய உணர்ச்சியால் உந்தப்பட்ட செயல்களுக்கு கட்டுப்பட்டாள். இருவரும் அன்றைக்குப் பிரிந்தனர். அதன் பின்னரே, அவளுக்கு உலகம் என்று

ஒன்று இருப்பது தெரிந்தது. அவன் என்ன செய்தான்? அவள் என்ன செய்தாள்? இனி அவர்கள் எப்படி நடந்து கொள்ளுவார்கள்? நம் ஆவலைத் தீர்க்க அவளே முன் வருவது நம் நல்வினைப் பயனே!

கோடியவும் கோட்டவும் நீர்இன்றி நிறம்பெறப்
பொடிஅழல் புறம்தந்த பூவாப்பூம் பொலன்கோதை
தொடிசெறி யாப்புஅமை அரிமுன்கை அணைத்தோளாய்!
'அடிஉறை அருளாமை ஒத்ததோ நினக்'கென்ன

கொடிகளிலும், கொம்புகளிலும் பூக்கும் பூக்களை (ஒத்தவையாய்), தண்ணீர் இல்லாமலேயே, (அவை) நல்ல நிறத்தைப் பெற்று விளங்கும்படி, பொடி மூடிய நெருப்பு அவற்றின் வெளிப்புறத்தை (அழகுடையதாகச்) செய்த, (பூத்தல் தொழிலும் வாடும் தன்மையும் இல்லாத) பூக்கள் (நிறைந்த) பொன்னாலாகிய மாலையையும், வளைகள் நெருங்கியும் கட்டுவடம் அமைந்தும், அரி படர்ந்தும் உள்ள முன் கையினையும், விருப்பத்தை விளைவிக்கும் தோளினையும் உடையவளே! '(நான்) உன் அடியிலே தங்குதலை அருளாமல் இருத்தல் உன் இயல்புக்குப் பொருந்துவதுதானோ' எனக் கேட்டு,

முன் தாங்கிகளைப்போலவே, வளைகள் கழலாமல் காக்கப் புனைவது கட்டுவடம். நீரில்லாமலிருந்தும், தன் மாலையில் உள்ள பூக்களை அலர்ந்த செவ்வி மாறாமலும், நிறம் மங்காமலும் பாதுகாக்கும் இயல்புடையவளாகையால், சேர்ந்தாரைக் காக்கும் தன்மை அவளுக்கு இருப்பது வெளியாகிறது. அவளைத் தன்னை விரும்பத் தூண்டுவதற்காகவே, தலைவன் இவ்வாறு புகழ்கிறான்.

நரந்தம்நாறு இரும்கூந்தல் எஞ்சாது நனிபற்றி,
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை
நலம்பெறச் சுற்றிய குரல்அமை ஒருகாழ்
விரல்முறை சுற்றி மோக்கலும் மோந்தனன்;

கஸ்தூரியைப்போல் மணம் வீசுகின்ற கருமையான கூந்தலை முழுவதும் நன்றாகப் பிடித்துக்கொண்டு, பொன்னாலே செய்யப்பட்ட மகர மீனின் வாயைப்போல் (பிளந்த வாயையுடையதாக அமைக்கப்பட்ட) தலைஅணி விழுங்கிய (-மறைத்துக்கொண்டிருக்கின்ற-) முடியில், அழகு பெறச் சுற்றிக்கட்டிய கொத்துகளால் அமைந்த ஒப்பற்ற மாலையை, தன் கை விரலில் ஒழுங்காகச் சுற்றிக்கொண்டு மோந்து பார்த்தலையும் செய்தான்;

நாரந்தம்-கஸ்தூரி; 'மகர வாய்' ஆகுபெயராய் அணியை உணர்த்திற்று. காழ்-வடம், சரம்; மாலை மங்கலமாக முடியைச் சுற்றிக் கட்டப்பட்டிருக்கிறது. குரல்-பூங்கொத்து.

நறுஅவிழ்ந்து அன்னஎன்மேல் விரல்போது கொண்டு
செறுஅச் செங்கண் புதைய வைத்துப்
பறுஅக் குருகின் உயிர்த்தலும் உயிர்த்தனன்;

நல்ல மணமுள்ள மலர்கள் விரிந்திருப்பதை ஒத்த என்னுடைய மெல்லிய விரல்களாகிய மலர்களைக்கொண்டு, (கோபிக்காதிருந்தும்) சிவந்த தன் கண்கள் அழுந்தும்படி பதித்து, (பறவையின் வடிவை ஒத்த ஆனால்) பறக்காத உலைமூக்கு வெப்பமான காற்றை வெளிவிடுதலைப்போல பெருமூச்செறிதலையும் செய்தான்;

கூட்டம் பெறும் குறிப்பு தோன்றக் கண் சிவந்தது.

தொய்யில் இளமுலை இனிய தைவந்து
தொய்யல் அம்தடக்கையின் வீழ்பிடி அளிக்கும்
மையல் யானையின் மருட்டலும் மருட்டினன்;

தொய்யில் குழம்பால் (வில்,கரும்பு முதலியவை) எழுதப்பட்டிருக்கும் என்னுடைய முதிர்ச்சியடையாத இளமுலைகளை (நான்) மகிழ்ச்சி அடையும்படித் தடவி, நிலத்தைத் துழாவிச் செல்லும் அழகிய நீண்ட துதிக்கையால் தான் விரும்பிய பெண் யானைக்கு அருள் செய்வதும் மயக்கத்தைத் தோற்றுவிப்பதுமான ஆண் யானையைப் போல என்னை மயக்கவும் செய்தான்.

தொய்யில் - அப்பெயர் கொண்ட குழம்பு; தொய்யல் - உழுதல்; தன் துதிக்கையால் பிடியைத் தடவிக்கொடுத்து மயக்கிற்று யானை; இவனும் அவளை அணைத்துக்கொண்டான் என்றவாறு.

அதனுல்,

அல்லல் களைந்தனன் தோழி! நல்நகர்
அரும்கடி நீவாமை கூறின் நன்றெ்ன
நின்ஞெடு சூழ்வல்; தோழி! 'நயம்புரிந்து
இன்னது செய்தாள் இவள்' என
மன்ஞ உலகத்து மன்னுவது புரைமே!

இவ்வாறெல்லாம் செய்ததனுல், தோழி! என் மனத் துயரை (முற்றிலும்) நீக்கிஞன்: நம்முடைய நன் மனையில் கடத்தற்கரிய காவல் (எப்பொழுதும்) நீங்காமலிருப்பதை (அவனுக்கு) கூறிஞல், (அது நமக்கும் அவனுக்கும்) நன்மையைத்தரும் என்று உன்னேடு ஆராய்ந்து துணிகிறேன்; (இல்லையேல்) தோழி! விருப்பமிகுதியால் இவள் (நாணின்றிக்) களவொழுக்கத்தை மேற்கொண்டாள் என, (நாணின்றிக்) களவொழுக்கத்தை மேற்கொண்டாள் என்று (ஒருபழி) இந்நிலையற்ற உலகத்தில் நிலையுள்ளதாகப்பொருந்தி விடுமே!

அலருக்கு அஞ்சிஞள் தலைவி; தாஞகச்சூழ்ந்த முடிவை தோழியோடு சூழ்ந்து செய்ததைப்போலக் கூறுவதும், தோழியை இருமுறை விளிப்பதும், அலர் தோன்றவொட்டாமலிருக்க எடுதது க் கொள்ளும் முயற்சியில் அவள் காட்டும் பரபரப்பும், அவளுடைய அலரச்சத்தின் அளவை வெளிப்படுத்துகின்றன. அலர்தோன்றின் தன் உயிர் நீங்கும் என்பதை, தனக்கு நிலையற்றதாக ஆகும் உலகத்தை, அலர் நிலையுள்ளதாக்கிக் கொள்ளும் எனக் கூறிப் பெற வைக்கிருள். அவதிப்படும் அவன் நிலைக்கு இரங்கிக் களவொழுக்கத்தை மேற்கொண்டாலும்கூட அலர் தோன்றும். அலரில் உயர்ந்தது, தாழ்ந்தது என்ற பாகுபாடு இல்லை.

'கடி' என்பதனை 'மணம்' எனக்கூறி, கொதுமலர் வரைவின் கண் தலைவி தோழிக்கு அறத்தொடு நின்றதாகப் பொருள் விரிப் பதில் பயன் இல்லை. தலைவி நன்மணம் எய்திய சிறப்பை உலகம்

புகழ, அம்மணம் அலர் எழுந்தபின் நிகழ வேண்டும். இல்லையேல் இவள் நன்மணம் பெற்றாள் என எவர் அறிவார்? அலர் எழுந்தபின் பிழைமணம் பட வாய்ப்பில்லை. ஆகவே, அலர் தோன்ற வாய்ப்பு அளிக்காமல், தலைவனை களவொழுக்கத்தை மேற்கொள்ளாமல், வரைவு முயற்சி செய்யத் தூண்டுமாறு தோழியைத் தலைவி கேட்டுக் கொண்டதைச் சித்திரிப்பதே இக்கவிதையின் குறிக்கோள்.

19. மின்னொளிர் அவிர் அறல்.

—:o:—

வழியே சென்றவளை நிறுத்தினான். என்ன துணிவு! நெருங்கிச் சென்றான்; நாணிக்கோணி நெளிந்தவளை விழுங்கிவிடுவான்போலக் கூர்ந்து கவனித்தான். அவள் முகம், கண், தோள் முதலிய வற்றைப் புகழ்ந்தான். நாம் இவ்வளவு அழகாய் இருக்கிறோமா என்ற எண்ணத்தில் ஆழ்ந்திருந்தவளை அணைத்துக் கொண்டான். அவன் பிடியிலிருந்து விடுபட்டதும், அவள் ஓடோடிச் சென்று, தோழிக்கு நிகழ்ந்தவற்றைக் கூறினாள். நீங்களும் அதனைக் கேளுங்கள்.

மின்ஒளிர் அவிர்அறல் இடைபோழும் பெயலேபோல்
பொன்அகை தகைவகிர் வகைநெறி வயங்குஇட்டுப்
போழ்இடை இட்ட சமழ்நறும் பூங்கோதை,
இன்னகை, இலங்குஎயிற்றுத் தேமொழித் துவர்ச்செவ்வாய்
நல்நுதால்! நினக்குஒன்று கூறுவாம் கேள்இனி.

ஒளியைக் கக்கும் மின்னலின் விளங்குகின்ற கொடிகள் இடை இடையே பிளந்து செல்லும் கரிய மேகத்தைப் போல, பொன்னைக் கூறுபடுத்தி அழகாகச் செய்யப்பட்ட வகிரை, (ஐந்து பகுதிகளாகப்) பிரிக்கப்பட்ட வழிகளிலே விளங்கும்படிப் பொருத்தி, அதன் பிளவுகளின் இடையே சொருகப்பட்ட மணம் கமழும் மாலையையும், இனிய புன் சிரிப்புடைய முகத்தையும், வெண்மையாக விளங்குகின்ற

பல் வரிசைகளையும், தேன்போன்ற மொழிகளையும், இயற்கையாய்ச் சிவந்த வாயினையும், அழகிய நெற்றியையும் உடையவளே! உனக்கு ஒன்றைக் கூறுகிறேன்; விருப்பமுடன் கேள்.

அறல்-மின்னல்கொடி; போழ்-பிள; அசை-அறு, கூறுபடுத்து; வகிர்-ஆபரணத்தின் பெயர்; இருண்ட மேகத்தை இடையிடையே பிளந்து செல்லும் மின்னலைப் போல, இவள் கரிய கூந்தலை, வகிர் ஐந்து பகுதிகளாகப் பிளக்கின்றது. பெண்கள் கூந்தலை சுருள், குரல், அளகம், துஞ்சுகுழல், கொண்டை என ஐந்து வகைப் படுத்திக் கோலஞ் செய்துகொள்வது வழக்கம். தலைவி, தோழியை இவ்வாறு பாராட்டிப் பேசக் காரணம் என்ன?

நில்என நிறுத்தான்; நிறுத்தே வந்து,
நுதலும் முகனும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு, நினை இ,

நில் என்று (அதட்டி, போய்க்கொண்டிருந்த என்னை) நிறுத்தினன்; நிறுத்தியபின் (என் அருகே) வந்து, (என்னுடைய) நெற்றியையும், முகத்தையும், தோள்களையும், கண்களையும், சாயலையும், மொழிகளையும் கூர்ந்து கவனித்து, (சற்று) சிந்தித்து,

ஐதுஏய்ந் தன்று, பிறையும் அன்று;
மைதீர்ந் தன்று, மதியும் அன்று;
வேய்அமன் றன்று, மலையும் அன்று;
பூஅமன் றன்று, மலையும் அன்று;
மெல்ல இயலும், மயிலும் அன்று;
சொல்லத் தளரும், கிளியும் அன்று;

வியப்பைத் தோற்றுவிக்கும் முறையில் (நெற்றி வளைவாக) அமைந்து இருக்கின்றது; (ஆனால் வளர்தலும், சுருங்குதலும் உடைய) பிறை அன்று; கருமையை (முகம்) முற்றிலும் விலக்கியதன்று (கண் இருப்பதால்); சந்திரன் அன்று (அதன் கருமை மாசாகக் கருதப்

படுவதால்); பசிய மூங்கிலின் தன்மையைப் பொருந்தியிருக்கிறது (தோள்); (ஆனால் இவள் மூங்கில் பிறக்கும்) மலை அல்லள்; பூவின் தன்மையைப் பொருந்தியிருக்கின்றன (கண்); (ஆனால் பூக்கள் இருக்கும்) சுனை அல்லள்; மெல்ல நடக்கும் மயிலின் சாயலை உடையவளேனும், மயில் அல்லள்; மழலைச் சொற்களை இவளும் பழகினாலும் கிளி அல்லள்;

'மைதீர்ந்தன்று' என்ற இடத்தில் 'தீர்ந்தது அன்று' என்பது 'தீர்ந்தன்று' எனக்குறைந்து நின்றது; 'தீர்ந்தன்று' எனக்கொண்டு 'தீர்ந்தது' எனப்பொருள் விரிப்பின், கருமையை முற்றிலும் விலக்கியது என்றோ, கருமையால் முற்றிலும் இயைந்தது எனறோ கூறவேண்டி வரும்.

எனவாங்கு,

அனையன பலபா ராட்டிப் பையென
வலையர் போலச் சோர்பதன் ஒற்றிப்
புலையர் போலப் புன்கண் நோக்கித்
தொழலும் தொழுதான், தொடலும் தொட்டான்;

என்று அத்தகைய புகழுரைகளால் என்னைப் பாராட்டி, மெதுவாக, வேடர்களைப்போல என் மனம் தளர்ச்சியடையும் சமயத்தை அறிந்து, கொலைக்கு அஞ்சாதவர்களைப்போல் என் மனத்தில் தைக்கும்படிப் பார்த்து, தனக்கு அருள் செய்யுமாறு வேண்டிக்கொள்ளுதலையும் செய்தான், (என் முறுவல், நாணம் முதலியவை அவன் வேண்டுகோளை நான் ஏற்றுக்கொண்டதை அறிவிக்கவும, தைரியங்கொண்டு என்னை) அணைத்துக் கொள்ளுதலையும் செய்தான்;

வேடர் வெற்றிக்கு நிதானம், பரபரப்பின்மை, சமயமறிந்து நடத்தல் இவை இன்றியமையாதன; கொலைஞர் எவ்விலங்கைப் பார்த்தாலும், அதன் நிணத்தின் தன்மை, எடை, விலை முதலியவற்றைக் கருதுவார்களே ஒழிய, அதன் அழகைக் கவனிக்க மாட்டார்கள். அவ்வாறே தலைவனும், அவள் தளர்ந்த சமயம் பார்த்து அவள் மேனி அழகைப் பருகாமல், 'நெஞ்சத்தே தைக்கும் நெடுநோக்கு' நோக்கி, அவளைத் தன் வயப்படுத்தினான்.

காழ்வரை நில்லாக் கடுங்களிறு அன்னோன்
தொழூஉம்; தொடூஉம்; அவன் தன்மை
ஏழைத் தன்மையோ இல்லை தோழி!

அங்குசத்துக்குக் கட்டுப்படாமல் (மனம் போனபடி) நடக்கும் வேகமான செலவினையுடைய யானையைப்போன்ற அவன் தொழுவான்; அணைப்பான்; (தொழுத போதிலும்) இரந்து நிற்பவர் நிலையைப் போலில்லாமல் அவன் தன்மை பெருமிதம் உடையதாகவே இருந்தது, தோழி!

மதம் நிறைந்த யானையைப்போல, காமம் மிக்க தலைவனும் நெறி யொன்றும் இன்றி மனம் போனவாறு ஒழுகினான். 'நெறி ஏது காமியர்க்கே'-பாரதியார் குயில்.

மேலைச் செய்யுள் அலருக்கு அஞ்சிய தலைவி, நிகழ்ந்தவற்றைக் கூறி, தலைவனை வரைவு முயற்சி மேற்கொள்ளத் தூண்டுமாறு தோழியைக் கேட்டுக்கொண்டதைச் சித்திரித்தது. இதுவும் அம் முறையில் நிகழ்ந்தவற்றைத் தலைவி தோழிக்குக் கூறுவதைச் சித்திரிப்பதேனும், இதன் நோக்கம் வேறு. தலைவன் குறையை விரைந்து ஏற்றுக்கொள்ளுமாறு தோழியைக் கேட்டுக்கொள்வது இச்செய்யுளின் நோக்கம். தலைவி தோழியைப் பெரிதும் பாராட்டக் காரணம் இதுவே. இவ்வகையில் இது 'சுடர்த்தொடீஇ கேளாய்' என்ற கலியோடு தொடர்புடையதாய் அமைந்திருக்கின்றது

20. ஊர்க்கான் நிவந்த.

—— . o . ——

அவள் அழகை அவனால் நன்றாகக் கூற முடியவில்லை. அது அவனுடைய ஆற்றலின் எல்லையைக் கடந்ததாய் இருக்கிறது. இத்தகைய பேரெழிலுடையவள் தோற்றம், அவனுக்குத் திகைப்பையும், மயக்கத்தையும் தோற்றுவித்தது. இருப்பினும் மிக்க வல்லமையோடு அவளைப் பாராட்டிப் பேசுகிறான். அவன் மனோ விகாரங்களையும், அவை தோன்றத் தானே காரணம் என்பதையும் அவள்

அறிந்துகொள்ளவில்லை. இளம் பருவத்தாள் ஆகையால் தன்னைப் பாராட்டுபவனைப் 'பேதுற்றுள்' போலப் பார்க்கிறுள், 'சொல்எதிர் பெருஅன்' சொல்லி இன்புறல் என்ற கைக்கிளைத் துறையைச் சார்ந்தது இப்பாடல்.

ஊர்க்கான் நிவந்த போதும்பருள் நீர்க்கால்
கொழுநிழல் ஞாழல் முதிர்இணர் கொண்டு
கழும முடித்துக் கண்கூடு கூழை
சுவல்மிசைத் தாதொடு தாழ, அகன்மதி
தீங்கதிர் விட்டது போல முகன்அமர்ந்து
ஈங்கே வருவாள் இவள்யார் கொல்!

ஊரைச் சார்ந்த காட்டில், மிக உயர்ந்து வளர்ந்த (மரங்கள் நிறைந்த) பூஞ்சோலையில் (ஓடும்) வாய்க்காலின் கரைகளிலே வளர்ந்த, செறிந்த நிழலைத் தரும் ஞாழலின் முதிர்ந்த பூங்கொத்துகளைக் கொண்டு, (அவை, கருத்த தன் மயிரில் மயங்கித் தோன்றும்படி) கலக்க முடித்து, (இவ்வாறு முடித்ததால் பூவும் மயிரும்) சேர்ந்து இருக்கின்ற (-பூக்களும் மயிரோடு இயற்கையாய் வளர்ந்தவைபோலப் பொருந்தி இருக்கின்ற-) கூந்தல் தோளின் மீது மகரந்தத் தூள் (படியும்படித்) தாழ்ந்து (அசைய,) அகன்ற சந்திரன் தன் இனிய கிரணங்களைப் பரப்பி (அவை பட்ட இடங்களை ஒளிவிடச் செய்வது) போல தன் முகப்பொலிவால் (தானுள்ள சூழ்நிலையை இனிப்பித்து) இவ்விடத்தை நோக்கி வருபவளாகிய இவள் யாராய் இருக்கும்!

கழும-கலக்க; கண்கூடு கூழை-சேர்ந்திருக்கின்ற கூந்தல்; சுவல்-தோள்;

ஆங்கேஓர், வல்லவன் தைஇய பாவைகொல், நல்லார்
உறுப்புஎலாம் கொண்டுஇயற்றி யாள்கொல், வெறுப்பினால்
வேண்டுஉருவம் கொண்டதோர் கூற்றங்கொல், ஆண்டார்
கடிதுஇவளைக் காவார் விடுதல் கொடிஇயல்
பல்கலைச் சில்பூங் கலிங்கத்தள் ஈங்கிதோர்
நல்கூர்ந்தார் செல்வ மகள்.

கொல்லி மலையின் மீது ஒப்பற்ற தொழில் வல்லமை உடையவனால் செய்யப்பட்ட பாவையே தானோ? பெண்களுக்கு மிக்க அழகைத் தரும் அங்கங்களாலேயே படைக்கப் பட்டாள் ஒருத்தியோ? (தன் வரவை மக்கள்) வெறுப்பதனால் (அவர்கள் பெரிதும்) விரும்பும் வடிவத்தை மேற்கொண்டு, (தன் கடமையைத் தப்பாது செய்தலில்) ஒப்பற்ற எமனே தானோ? இவளைப் பாதுகாக்க வேண்டியவர் கொடுமையுடன் பாதுகாவாமல், (இச்சைப் படி) திரியவிட்டு விட்டமையால், கொடி போன்ற நடக்கத்தினைப் பொருந்தியவளாய், பல கோவைகளையுடைய மேகலையைப் பூண்டவளாய், சிலவாகிய பூத்தொழில் பொதிந்த ஆடையை அணிந்தவளாய் இங்கே வருபவள், (இவ்வூரில்) பிள்ளை இல்லாமையாகிய வறுமையை உடையவர்களின் செல்வமாகிய மகள் போலும்!

அசுரர்கள் மயங்கி விழும்படித் திருமகள் ஆடிய கூத்துக்குப் பாவைக் கூத்து என்று பெயர்; திருமகள் அன்று கொண்ட கோலத்தைக் குறிப்பிடும் படிமத்தைக் 'கொல்லிப் பாவை' என்றும், அந்த படிமம் இருந்த மலையைக் 'கொல்லி மலை' என்றும் வழங்குவது உண்டு. பருவப் பெண்களுக்கு உரிய காப்பு மிகுதியைக் கருதி, காவலில்லாது வேண்டியாங்குத் திரியும் இவளை 'நல்கூர்ந்தார் செல்வ மகள்' என உணர்ந்தான்.

இவளைச் சொல்ஆடிக் காண்பேன் தகைத்து!
'நல்லாய்! கேள்:

இவளை நிறுத்தி, இவளோடு பேசிப் பார்ப்பேன்; 'நல்லவளே!' இதனைக் கேள்:

இதுவரை தன்னை எதிர்ப்பட்டு வந்த பெண்ணின் அழகைக் கண்டு மயங்கிய தலைவன் மன நிலையையும், அவன் சிந்தித்தவற்றையும் விவரிக்கக் கேட்டோம்; இனி, அவன் அவளிடத்துக் கூறியவற்றைக் கேட்போம். செல்வமாக வளரும் பெண்ணாகையால் புகழுரைகளைக் கேட்டு மனம் மிளகும் என எண்ணிப் பேசத் தொடங்கினான்.

ஆய்தூவி அனம்என, அணிமயில்பெடைஎன
தூதுணம் புறவுஎனத் துதைந்தநின் எழில்நலம்
மாதர்கோள் மான்நோக்கின் மடநல்லாய்! நிற்கண்டார்ப்
பேதுறூஉம் என்பதை அறிதியோ, அறியாயோ?

நன்கு ஆராய்ந்து (சேர்க்கப்பட்டவை என்று சொல்லும்படி, ஒரு படித்தாய் மென்மையாய் இருக்கின்ற) மயிரினையுடைய அன்னம் போலவும், அழகிய மயில் பெண் தன்மையை (மேற்கொண்டது) போலவும், கல்லை உண்டு வாழும் தூதுணம் பறவையைப் போலவும், (என்று உன் நடையையும், சாயலையும், மடப்பத்தையும் கண்டார் வியக்கும்படி, உன்னிடத்தே (ஒருங்கே) சேர்ந்திருக்கும் உன் அழகு மிக்க தோற்றம், (பார்ப்பவர்) காதல் கொள்ளும் தன்மை சிறந்ததும் மானினுடையதைப் போன்றதுமான மருண்ட பார்வையையுடைய இளையவளே! உன்னைக் கண்டவரைப் பித்துறச்செய்யும் என்பதனை நீ அறிவாயோ மாட்டாயோ?

தூது—கல்; அதை உண்டு வாழ்வது 'தூதுணம் புறவு துதை — நெருங்கிய, மண்டிய; மடமை - இளமை;

நுணங்குஅமைத் திரள்என, நுண்இழை அணைஎன,
முழங்குநீர்ப் புணைஎன அமைந்தநின் தடமென்தோள்
வணங்குஇறை வால்எயிற்று அந்நல்லாய்! நிற்கண்டார்க்கு
அணங்குஆகும் என்பதை அறிதியோ, அறியாயோ?

எளிதில் வளையும் இளைய மூங்கிலின் திரட்சியை (உடையது) என்றும், (ஊற்றின்பம் பயப்பதால்) மெல்லிய மயிரினால் ஆகிய தலையணை என்றும், (காமக்கடலைக் கடக்க உதவுமாகையால்) ஒலிக்கின்ற கடல் நீரைக் கடக்க உதவும் தெப்பம் என்றும் (வியந்து பாராட்டும்படி) பொருந்திய உன் அகன்ற மெல்லிய தோள்கள், வளைந்த முன் கையினையும், வெண்மையான பற்களையும் உடைய அழகியவளே உன்னைக் கண்டவர்க்கு வருத்தம் விளைவிக்கும் என்பதனை நீ அறிவாயோ, மாட்டாயோ?

உருவம், பண்பு பயன் இம் மூன்றையும் பற்றி, தோளுக்கு முறையே மூங்கிலும், தலையணையும், தெப்பமும் உவமிக்கப்பட்டன. இழை தூவியைக் குறிக்கின்றது.

முதிர்கோங்கின் முகைஎன, முகஞ்செய்த குரும்பைஎன,
பெயல்துளி முகிழ்என, பெருத்தநின் இளமுலை
மயிர்வார்ந்த வரிமுன்கை மடநல்லாய்! நிற்கண்டார்
உயிர்வாங்கும் என்பதை அறிதியோ, அறியாயோ?

கோங்க மரத்தின் முற்றிய அரும்பு என்றும், (தன்னை மூடிக்கொண்டிருக்கும் பாளையினின்றும்) வெளிவந்த தேங்காய்க் குரும்பை என்றும், மழைத்துளியாலாகிய மொக்குள் என்றும் சொல்லும்படி அளவாகப் பெருத்திருக்கும் உன்னுடைய மெல்லிய முலைகள், மயிர் ஒழுங்கு உடையனவும், வளையலணிந்தவையுமான முன் கைகளையுடைய இளையோளே! உன்னைக் கண்டவர்களுடைய உயிரைக் கவரும் என்பதனை நீ அறிவாயோ, மாட்டாயோ?

கண்டாரைக் கவர்ந்து நிறுத்திய தோற்றத்தை முதல் தாழிசையிலும், ஆதரவுடன் அணைக்கும் தோள்களை அடுத்தும், போகத்தை மிகுக்கும் முலைகளைப் பின்னும் கூறியுள்ள முறை வைப்பு உணர்ந்து மகிழத்தக்கது.

எனவாங்கு,

பேதுற்றாய் போலப் பிறர்எவ்வம் நீஅறியாய்,
யாதொன்றும் வாய்வளாது இறந்தீவாய், கேள்.இனி:

என்று நான் உன்னைப் பாராட்டிப் பேசவும், (புதியோன் ஒருவன் தடுத்து நிறுத்திப் பேசுவதன் பொருளை உணராது) திகைப்புற்றவளைப் போன்ற (கோலத்தை மேற்கொண்டு, உன்னைக் கண்டதனால்) பிறர்படும் அவதியை அறியாதவளாய் நீ எதனையும் வாய்விட்டுக் கூறாமல் போகின்றாய், இனி நான் கூறப் போவதைக் கேள்.

'நீ கூறுவது எதுவும் எனக்கு விளங்கவில்லை' என்று தலைவி கூறி இருந்தாலும், தலைவன் கலக்கமின்றி இருந்திருப்பான். உண்மையில் தான் கூறியவற்றைத் தலைவி உணர்ந்துகொள்ள முடியாதவள்தானா, அல்லது, உணர்ந்தும் உணராதவளைப்போல் பாசாங்கு செய்கிறாளா என்ற கலக்கம் தலைவன் வருத்தத்தின் எல்லையைப் பெருக்குகின்றது.

நீயும் தவறுஇலை; நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறுஇலர்;
நிறைஅழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறைஅறைந்து அல்லது செல்லற்க என்னா
இறையே தவறுஉடை யான்.

நீயும் குற்றமற்றவள்; உன்னை (இச்சைப்படி) வீட்டின் வெளியே சென்று திரிந்துவர விட்டுவிட்ட உன் சுற்றத்தாரும் குற்றமுடையவர் அல்லர்; தன் இயல்பான தன்மையைக் கடந்து, கொல்லுந் தன்மையை மேற்கொண்ட யானையை நீராடச் செல்லவிடும்பொழுது (செய்வதைப் போல, உன் வருகையை அறிவிக்கும் எச்சரிக்கையாகப்) பறையறைந்து வந்தாலன்றி வெளியே செல்லக்கூடாது என்று ஆணையிடாத அரசனே தவறுடையவன்.

21. வேயெனத் திரண்டதோள்.

—.o:—

அவன் எதைப் பறிகொடுத்துவிட்டான்? ஒன்றிலும் விருப்பமில்லாதவன் போலக் காணப் படுகின்றானே! என்ன நிகழ்ந்தாலும் உற்சாகத்தையும், மன எழுச்சியையும் இழக்காமல், மகிழ்ச்சியோடு இருக்கவேண்டிய இளைஞன் வாடி வாட்டமுற்று வருந்துவது உலகத்தை பழிப்பதே யன்றோ? இவ்வாறு இடி விழுந்தவனைப் போல் அவன் இருக்கக் காரணம் என்ன? பாங்கனுக்கே அவன்

வருத்தத்துக்குக் காரணம் தெரியவில்லை என்றால், நமக்கு எப்படித் தெரியும்? தலைவன் தன் மன நிலையைப் பாங்கனுக்கு விவரிப்பதுபோல் அமைந்திருக்கிறது இப் பாடல்.

வேய்எனத் திரண்டதோள், வெறிகமழ் வணர்ஐம்பால்,
மாவென்ற மடநோக்கின், மயில்இயல், தளர்புஒல்கி
ஆய்சிலம்பு அரிஆர்ப்ப, அவிர்ஒளி இழைஇமைப்ப,
கொடிஎன மின்என அணங்குஎன யாதொன்றும்
தெரிகல்லா இடையின்கண் கண்கவர்பு ஒருங்குஓட—
வளமைசால் உயர்சிறப்பின் நுந்தைதன் வியல்நகர்
இளமையான் எறிபந்தோடு இகத்தந்தாய்! கேள்இனி:

மூங்கில் என்று சொல்லும்படித் திரண்டு இருக்கின்ற தோள்களையும், மணம் பரப்புகின்ற கடைகுழன்ற கூந்தலையும், மானையும் வெற்றிகொண்ட மடப்பம் பொருந்திய பார்வையையும், மயிலின் சாயலையும் (உடையவளே! நீ) தளர்ந்து ஒதுங்கி நடந்து வருவதால், உன் காலில் இருக்கும்) அழகிய சிலம்புகளில் உள்ள மணிகள் (அடி வைக்கும்தோறும்) ஆரவாரிக்கவும், உன் ஒளிமிக்க ஆபரணங்கள் (நீ ஒதுங்குந்தோறும்) விட்டுவிட்டு ஒளியைக் கக்கவும், (மென்மைத் தன்மையால்) கொடி என்றும் (நுடக்கத்தால்) மின்னல் என்றும், (எனக்கு வருத்தம் விளைவித்ததால்) அணங்கு என்றும் (என்றால் பாராட்டப் படுவதே யானாலும்) இவற்றுள் எது சிறந்த உவமை என்று தெரிந்துகொள்ள முடியாத (உன்) இடையினிடத்தே (அது இருக்கிறதா, இல்லையா என்று தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலினால் தூண்டப்பட்டவையாய் என்) கண்கள் இரண்டும் (அதனால்) கவரப்பட்டனவாய்ச் சேர்ந்து ஓடும்படி செல்வம் நிறைந்ததும், உயர்ந்த சிறப்பினை உடையதுமான உன் தந்தையின் அகன்ற மாளிகையினின்றும், இளமைப் பருவத்தின் தூண்டுதலால் எறிந்து விளையாடும் பந்தோடு (விளையாட்டில் விருப்பமுடையவளாய்) வெளிப்போந்தவளே! நான் கூறுவதனைக் கேள்;

இடையின் இருப்பை அறியவேண்டும் என்ற ஆவலினால் இருகண்களும் ஒன்றோடொன்று போட்டியிட்டுக்கொண்டு பார்க்கச் சென்றன என்பதை 'ஒருங்கோட' என்றதொடர் குறிப்பிடுகின்றது.

பூந்தண்தார்ப் புலர்சாந்தின் தென்னவன் உயர்கூடல்
தேம்பாய அவிழ்நீலத்து அலர்வென்ற அமர்உண்கண்
ஏந்துகோட்டு எழில்யானை ஒன்னாதார்க்கு அவன்வேலின்
சேந்துநீ இனையையால், ஒத்ததோ? சின்மொழி!

பூக்களால் தொடுக்கப்பட்ட குளிர்ந்த மாலையையும், பூசிப்புலர்ந்த சந்தனத்தையும் அணிந்த பாண்டியனுடைய பெருமை பெற்ற மதுரை நகரத்தில் தேன் வழிந்து ஓடும் படி விரிகின்ற குவளை மலர்களின் அலர்ந்த செவ்வியை வெற்றி கொண்டவையும், உன் முகத்துக்குப் பொருந்தியவையும் ஆகிய ஆளை விழுங்கும் கண்களையும், சிலவாகிய மொழிகளையும் உடையவளே! வளைந்து நிமிர்ந்த தந்தங்களைப் பெற்ற அழகிய யானைகளைக்கொண்ட படைபலம் பெற்ற பகைவர்க்கு (அவனுடைய—பாண்டியனுடைய) வேல் (செய்யும் கொடுமையைக் காட்டிலும்) நீ சிவந்து, என்னை வருத்தும் தோற்றத்தை மேற்கொள்ளுவது, உன் இயல்புக்குப் பொருந்தியதோ?

அவள் இளையள்; அவன் கூறுவனவற்றை உணரமுடியாதவளேனும், புதியோன் ஒருவன் தன்னை நோக்கிப் பேசுவதைக் காண கூசிச்சிவந்தாள். விளையாட்டு விருப்பத்தோடு வெளி வந்தவள், நகைமுகம் மாறிச் சிவந்ததைத் தலைவன், தன் குறையை ஏற்காத குறிப்பாகக்கொண்டு கலங்குகிறான். பாண்டியன் வேல், பகைவர் இரத்தம் தோய்ந்து சிவந்தது.

பொழிபெயல் வண்மையான் அசோகந்தண் காவினுள்
கழிகவின் இளமாவின் தளிர்அன்னாய்! அதன்தலைப்
பணைஅமை பாய்மான்தேர் அவன்செற்றார் நிறம்பாய்ந்த
கணையினும் நோய்செய்தல் கடப்பன்றோ? கனங்குழாய்!

(நன்மையைப்) பொழிகின்ற மழையைப்போல் கொடைச் சிறப்பு பெற்ற பாண்டியனது அசோக மரம் அடர்ந்த குளிர்ச்சி பொருந்திய சோலையுள், மிக்க அழகுடைய இளைய மாமரத்தின் தளிரைப்போன்றவளே; உன் அழகிய நிறத்தினால் என் கண்களை மயக்கி வருத்துவதோடு, பந்தியிலே வரிசையாக நிற்கும் பாய்ந்து செல்லும் குதிரைகளையும், தேர்களையும் பெற்ற அவனுடைய பகையரசர்களின் மருமத்தானத்தை ஊடுருவிச் சென்ற அவனுடைய அம்பு (செய்த கொடுமையைக் காட்டிலும், மிக்க வருத்தத்தை (எனக்குச்) செய்வது, பொன்னாலான காதணிகளைப் பூண்டவளே! கொடுமையேயன்றோ?

மாந்தளி மேனிநிறத்துக்கு உவமை பாண்டியன் அம்பு, பகைவரைப் பட்டவுடன் கொன்று விடுவதால், அவர்களைக் கண நேரம் துன்பப்பட வைக்கிறது. ஆனால் இவள் செய்யும் நோய், அவன் உயிரை வாங்காததோடு, உயிர்போகும் துன்பத்தை அவனை ஓயாது அனுபவிக்கச் செய்கிறது. பொன்னாலாகிய ஆபரணத்தை அணிந்தவளேனும், இரும்பாற் செய்த அம்பைப் பெற்றவனைக் காட்டிலும் அதிக துன்பத்தை விளைவிக்கிறாள்.

வகைஅமை தண்தாரான் கோடுஉயர் பொருப்பின்மேல்
தகைஇணர் இளவேங்கை மலர்அன்ன சுணங்கினாய்!
மதவலி மிகுகடாஅத்து அவன்யானை மருப்பினும்
கதவவால் தக்கதோ? காழ்கொண்ட இளமுலை;

பலவகைப்பட்ட குளிர்ச்சி பொருந்திய மாலைகளைப் பூண்ட பாண்டியனது சிகரங்கள் உயர்ந்த பொதிய மலையின் மேல் அழகுடைய கொத்துகளையுடைய இளைய வேங்கை மரத்தின் மலர்களைப்போன்ற நிறமுடைய சுணங்கு பரக்கப் பெற்றவளே! செருக்காலே வலிமிகப்பெற்ற மதத்தையுடைய அவனுடைய யானைகளின் கொம்புகளைக் காட்டிலும், உன்னுடைய முத்து வடங்களைப் பூண்ட இளைய முலைகள் கோபமிக்கவையாய் இருத்தல், நின் இயல்புக்குப் பொருந்துவதோ?

கதம்—சினம்; முலைகளின் திரட்சியையும், அழகையும் கண்டு இவன் மனம் வெதும்பியதை, அவைகளின்மேல் ஏற்றி, அவை யானையின் கொம்புகளிலும் கூறியவை எனக்கூறுகிறான்.

எனவாங்கு,

இனையன கூற, இறைஞ்சுபு நிலம்நோக்கி,
நினையுபு நெடிதுஒன்று நினைப்பாள்போல் மற்றுஆங்கே
துணைஅமை தோழியர்க்கு அமர்த்த கண்ணள்
மனையாங்குப் பெயர்ந்தாள்என் அறிவுஅகப் படுத்தே.

என்று இத்தன்மையான மொழிகளை நான் சொல்லவும், (அவள்) தலை கவிழ்ந்து நிலத்தை நோக்கி, எதனையோ ஒன்றை வெகுநேரம் சிந்தித்துப் பார்ப்பவளைப்போல் நினைத்து, அப்பொழுதே (அவள் என்ன முடிவிற்கு வந்தாள் என்பதை எனக்குக் கூற்றாலோ, குறிப்பாலோ உணர்த்தாமலேயே) தனக்குத் துணைவியராய் இருந்த தோழியர்களைத் (தேடி, அவர்களிடத்துப்) பொருந்திய கண்களை உடையவளாய், என் அறிவை அகப்படுத்திக் கொண்டு தன் வீட்டினுட் சென்றுவிட்டாள்.

சென்ற கலியல், தலைவன் தன்னைப் புகழக்கேட்ட தலைவி, பேதுற்றவள்போல் பார்த்துவிட்டுச் சென்றதை அத்தலைவன் நன்குணர்ந்துகொண்டான். இங்கு, தலைவன் தன்னைப் புகழக் கேட்டு, தலைகுனிந்து நிலத்தை நோக்கியபடி, எதனையோ சிந்திப்பவளைப்போல் இருந்துவிட்டு, பின்னர் எதனையும் கூறாமலும், உணர்த்தாமலும் சென்றுவிடவே தலைவன் மனக்கலக்கம் உற்றான். சிந்தித்தவள் தான் கூறியவற்றை உணர்ந்துகொண்டிருக்க வேண்டுமே, அவ்வாறு உணர்ந்துகொண்டவள், ஒன்றுங்கூறாமலும், குறிப்பியாமலும் சென்றுவிட்டாளே, இப்போக்கு அவள் தன்னை விரும்பாததை உணர்த்துவதாகுமே என்ற கவலையே தலைவனைத் துன்பக்கடலில் ஆழ்த்தியது.

22. வாருறு வணரைம்பால்.

—:o:—

'ஊர்க்கான் நிவந்த' என்ற பாடலைப்போல், இதுவும் 'சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புற்றது'

வார்உறு வணர்ஐம்பால், வணங்குஇறை, நெடுமென்தோள்,
பேர்எழில் மலர்உண்கண், பிணைஎழில் மான்நோக்கின்,
கார்எதிர் தளிர்மேனி, கவின்பெறு சுடர்நுதல்,
கூர்எயிற்று முகைவெண்பல், கொடிபுரையும் நுசுப்பினாய்!
நேர்சிலம்பு அரிஆர்ப்ப, நிறைதொடிக்கை வீசினை
ஆர்உயிர் வௌவிக்கொண்டு, அறிந்துஈயாது, இறப்பாய்!
[கேள்:

சீவி முடிக்கப்பெற்ற கடைகுழன்ற கூந்தலையும், வளைந்த முன்கையையும், நீண்ட மென்மையான தோள்களையும், ஒப்புசொல்ல முடியாத அழகுமிக்க மலர்களைப்போன்ற 'ஆளைவிழுங்கும்' கண்களையும், அழகிய பெண்மானினுடையதைப்போன்ற (மருண்ட) பார்வையையும், மழையைப்பெற்ற (மரங்களின் பசிய) தளிரை ஒத்த மேனியையும், அழகுபெற்று ஒளிவிடும் நெற்றியையும், கூர்மையானவையும் மலரின் மொட்டுகளைப் போன்றவையுமான வெண்மையான பற்களையும், கொடியை ஒத்த இடையையும் உடையவளே! உனக்குப் (பெரிதும்) பொருத்தமான காற் சிலம்புகளில் உள்ள பரல்கள் ஒலிக்கும்படி, நிறைந்த வளையல்களை அணிந்த கைகளை வீசியவளாய், என்னுடைய அருமையான உயிரை அகப் படுத்திக்கொண்டு, (இவ்வாறு, பிறன் உயிரை பறிகொண்டு விட்டோம் என) உணர்ந்து, (இதனை அவனுக்குத் திருப்பித் தருதலே தகுதியுடையது என்று கருதி) அருளாமல், (நின் இச்சைப்படி) நின் வழியே செல்பவளே! கேள்:

'எயிறு,' 'பல்' இரண்டும் ஒரே பொருளைக்குறிப்பன. இவை அடுக்கி வந்தமையால், 'கூர் எயிறு' என்பதனை விழுந்து புதிதாக முளைத்த பற்களெனவும், 'முகைவெண்பல்' என்பதனை இன்னும் விழாத பாற்பற்கள் எனவும் நச்சினார்க்கினியர் கொண்டார். இளம் பருவ மங்கையர்க்கே சிலம்பு அழகைத் தருவன வாகையால், 'நேர்சிலம்பு' எனப்பட்டன. எதிரே புதியோன் இருக்கவும், சிலம்புகள் ஒலிக்க, கை வீசி நடக்கிறாள் என்றது, ஆடவரைக் கண்டு நாணும் பருவத்தை அவள் இன்னும் அடையவில்லை என்பதை உணர்த்துகின்றது.

உளனாஎன் உயிரைஉண்டு, உயவுநோய் கைம்மிக
இளமையான் உணராதாய்! நின்தவறு இல்லானும்,
களைநரில் நோய்செய்யும் கவின்அறிந்து அணிந்துதம்
வளமையான் போத்தந்த நுமர்தவறு இல்என்பாய்;

நான் இருப்பவனாக இருந்தும், என் உயிரை வாங்கிக் கொண்டு வருத்தத்தை விளைவிக்கும் காமநோய் பொறுக்கும் எல்லையைக் கடக்கவும், அதனை உன் இளமை காரணமாய் உணராது இருக்கின்றவளே! இது (நீ இளம் பருவத்தள் ஆகையால்) உன்னுடைய தவறு அன்றேனும், போக்குவார் வேறு எவரும் இல்லாத காம நோயை விளைவிக்கும் உன் அழகின் மாட்சியை அறிந்தவராய் இருந்தும், (நின்னைப் பிறர்க்கு நோய் செய்யவொட்டாமல் வீட்டிலேயே இருக்கச் செய்யாமல்) தம் செல்வ மிகுதியை உலகினர்க்கு உணர்த்த (உன் அழகை நன்றாக எடுத்துக் காட்டும்படி) அணிகலன்களை உனக்குப் பூட்டி, உன்னை வெளியே செல்லவிட்ட உன் சுற்றத்தாரும் தவறுடையர் அல்லர் என்பாயோ!

தம் செல்வச் சிறப்பைப் பிறர்க்கு அறிவிக்கவே, தலைவியை வெளிச்செல்ல விட்டனரேனும், தம் செயல் தலைவியைக் கண்டவர்க்கு வருத்தம் விளைவிக்கும் என உணராதது அவர் குற்றமே என்பது தலைவன் வாதம்.

நடைமெலிந்து, அயர்வுறீஇ, நாளும்என் நலியும்நோய்
மடமையான் உணராதாய்! நின்தவறு இல்லானும்
இடைநில்லாது எய்க்கும்நின் உருவுஅறிந்து அணிந்துதம்
உடைமையான் போத்தந்த நுமர்தவறு இல்லென்பாய்;

என்னுடைய போக்குவரவுகளைக் கட்டுப்படுத்தி, எனக்கு (எதனையும் நன்கு செய்துமுடிக்க முடியாதபடி) தளர்ச்சியைத் தந்து, நாளுக்குநாள் என்னை அதிகமாகத் துன்புறுத்தும் இந்நோய் (நின்னால் விளைந்தது என்பதை) உன் இளமை காரணமாய் உணராதவளாய் இருக்கின்றவளே! இது உன்னுடைய தவறு அன்றேனும், (நின் உறுப்புக்களைச் சுமத்தலால் அப்பாரத்தைத்) தாளாது இளைக்கும் இடையினையுடைய உன் வடிவழகைத் தெரிந்திருந்தும், தமக்கு உள்ள செல்வ மிகுதியை வெளிப்படுத்த, உனக்கு அணிகலன்களைப் பூட்டி வெளியே போக விட்ட உன் சுற்றத்தாரும் தவறுடையர் அல்லர் என்பாயோ?

நடை — ஒழுக்கம்; மனிதன் 'தொழிற்படுதலை' உணர்த்துகின்றது. 'எழுதரு மின் இடையே எனையிடர் செய்தவையே' சிலப்பு.

அல்லல்கூர்ந்து அழிவுற அணங்காகி அடரும்நோய்
சொல்லினும் அறியாதாய்! நின்தவறு இல்லானும்
ஒல்லையே உயிர்வௌவும் உருவுஅறிந்து அணிந்துதம்
செல்வத்தான் போத்தந்த நுமர்தவறு இல்என்பாய்;

நான் படும் துன்பத்தை மிகுதிப் படுத்திப் பின் நான் அழிவெய்தும்படி வருத்தஞ் செய்யும் அளவிற்குப் பெருகி, இறுதியில் என்னைக் கொன்றுவிடும் இந்நோயின் தன்மையை எடுத்துக் கூறியும் அறிந்துகொள்ள முடியாமல் இருப்பவளே! இது உன்னுடைய தவறு அன்றேனும் கண்டவுடன் (அவர்) உயிரைக் கவர்ந்து கொள்ளும் உன் வடிவழகினை அறிந்துவைத்தும், தம் செல்வ மிகுதியை உணர்த்த உனக்கு அணிகளை அணிவித்து வெளியே போக விட்ட உன் சுற்றத்தாரும் தவறுடையர் அல்லர் என்பாயோ?

எனவாங்கு,

ஒறுப்பின்,யான் ஒறுப்பது நுமரையால் மற்றுஇந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயின், பொலங்குழாய்!
மறுத்து இவ்வூர் மன்றத்து மடல்ஏறி,
நிறுக்குவென் போல்வல்யான்; நீபடு பழியே.

நான் வெறுத்துக் கூறுவதுண்டாயின், நான் வெறுப்பது உன் சுற்றத்தாரையே யன்றி (உன்னையன்று; என்னைப் பற்றியிருக்கும் நீ தந்த) இந்நோய் பொறுத்துக்கொள்ளக் கூடிய அளவை உடையதன்றி, அதிகப்படுமானால், பொன்னால் செய்த அணிகளைப் பூண்டவளே! (அந்நோய் என் மீது ஏறட்டுக்கொண்ட உரிமையைப்) போக்கி, இவ்வூரின் நடுவேயுள்ள பொது இடத்தில் மடல் ஏறி அந்நோயின் ஆட்சியைத் தடை செய்வேன்போல் நடந்து கொள்வேன்; நான் (மடலேறியதலோ, இறப்பதாலோ) உண்டாகும் பழியை நீ எய்துவாய்.

23. தளைநெகிழ் பிணி நிவந்த.

—:o:—

சிலம்புகள் 'ஜல்ஜல்' என ஒலிக்க, பொம்மைகளையும், விளையாட்டுச் சாமான்களையும் எடுத்துக்கொண்டு ஒய்யாரமாக நடந்து வருகிறாள் அவள்-சிறு பெண்ணின் விளையாட்டே யானாலும், 'நலலன நம்மை வந்தடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு, பெண்கள் புரியும் நோன்புகளைத் தழுவிய விளையாட்டுகளிலேயே அவள் விருப்பஞ் செலுத்துகிறாள்; 'முதுக்குறைந்தவள்'போல் விளையாட்டின் மூலம் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் அச்சிறுமியைத் தன் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்துகிறான் தலைவன்.

தளைநெகிழ் பிணிநிவந்த பாசடைத் தாமரை
முளைநிமிர்ந் தவைபோலும் முத்துக்கோல் அவிர்தொடி
அடுக்கம்நாறு அலர்காந்தள் நுண்ஏர்தண் ஏர்உருவின்
துடுப்புஎனப் புரையும்நின் திரண்டநேர் அரிமுன்கைச்
சுடர்விரி வினைவாய்ந்த தூதையும் பாவையும்
விளையாட அரிப்பெய்த அழகமை புனைவினை
ஆய்சிலம்பு எழுந்தார்ப்ப அம்சில இயலும்நின்
பின்னுவிட்டு இருளிய ஐம்பால்கண்டு என்பால
என்னைவிட்டு இகத்தர இறந்தீவாய்! கேளினி.

கட்டு தளரப்பெற்ற அரும்புகளை நீர் மட்டத்துக்கு மேல் உயர்ந்து இருக்கும்படி (தூக்கிய) பசுமையான இலைகளை உடைய தாமரையின் முளைகள் (-காய்கள்-) வெளிப்பட்டு உயர்ந்திருக்கின்றவைகளைப் போன்ற முத்துக்களைப் பதித்துச் (செய்யப்பட்ட) ஒளிவிடும் வளைகளைப் (பூண்டனவும்) குன்றுகள் மணத்தை வீசும்படி அலர்கின்ற காந்தளின் கூர்மையான அழகையும், குளிர்ச்சியையும் பெற்ற மலர்களின் எழில் நிரம்பிய வடிவங்களை ஒத்தனவும், துடுப்பு என்று சொல்லும்படி நன்கு திரண்டு ஒன்றோடொன்று (உயர்வு தாழ்வு கற்பிக்கமுடியாதபடி) ஒத்திருக்கின்றனவும் ஆகிய உன் மென்மையான முன் கைகளாலே ஒளி விடுபவையும், தொழில் மாட்சியை உடையவைகளுமாகிய பானைகளையும் பாவைகளையும் (வைத்துக்கொண்டு) விளையாடுவதற்கு, மணிகள் உள்ளிடப்பெற்று, அழகு பொருந்தி, பூத்தொழில் நிறைந்தனவாகத் தெரிந்தெடுக்கப்பட்ட (உன் காலிற் புனைந்த) சிலம்புகள் மிகுதியும் ஒலிக்கும்படியும் அழகு வெளிப்படும்படியும் சில அடிகளிட்டு நடக்கின்ற உன்னுடைய, பின்னவிடப்பட்ட கருமையான கூந்தலைக் கண்டு, (எனக்கு உரிமையாய்) என்னிடத்தில் இருப்பனவாகிய மனமும் அறிவும் என்னைவிட்டு நீங்கி (நின்னைப் பின்பற்றி) வரும்படி (என் விருப்பத்துக்கு மாறாக என்னைக்) கடந்து செல்பவளே! இதனைக் கேள்:

பிணி – அரும்பு, பிணிப்பு அல்லது கட்டு உடையது ; 'பசுமை அடை', பாசடை ; ஏர் – அழகு ; காந்தள் மலர்கள் விரல்களுக்கும்

அடுப்பு முன்கைக்கும் உவமைகள் ; அதை — பானை ; பாவை — மரப்பொம்மை ;

மருளியான் மருள்உற 'இவன்உற்றது எவன்என்னும்
அருள்இலை இவட்கு'என அயலார்நின் பழிக்குங்கால்
வைஎயிற் றவர்நாப்பண் வகைஅணிப் பொலிந்துநீ
தையில்நீர் ஆடிய தவம்தலைப் படுவாயோ

(உன் அழகைக் கண்டு) நான் மயக்கம் அடையவும், (மயங்கிய) என் நிலையைக் கண்டு மயங்கி, இவன் இவ்வாறு மயக்கம் உறக்காரணம் என்ன என்று சற்று சிந்தித்துப் பார்க்கும் கருணைகூட இவளுக்கு இல்லாமல் இருந்து விட்டதே என்று கூறி அயலார் உன்னைத் தூற்றும்பொழுது கூர்மையான பற்களை உடைய பெண்கள் கூட்டத்தின் நடுவே சிறந்த அணிகலன்களால் விளங்குகின்ற நீ தை மாதத்தில் நீராடிய நோன்பின் பயனைப் பெறுவாயோ?

நல்ல கணவரைப் பெற கன்னிப் பெண்கள் தை மாதத்தில் நீராடுவது வழக்கம்; இதற்குத் தைந்நீராடல் என்று கூறுவர். தைந்நீராடுதலால் பெறும் பயனைத் தனக்கு அருளாததால் இழந்து விடுகிறாள் என்று தலைவன் கூறுகிறான்.

இருள்இழாய்! 'ஒளிவாட இவன்உண்நோய் யாதுஎன்னும்
அருள்இலை இவட்கு'என அயலார்நின் பழிக்குங்கால்,
பொய்தல மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ
எய்திய பலர்க்குஈத்த பயம்பயக் கிற்பதோ?

அசைகின்ற அணிகளைப் பூண்டவளே! இவன் மேனி கருகும்படி இவனை உண்ணும் நோய் எது என்று கேட்கும் அருள்கூட இவளுக்கு இல்லாமற் போய்விட்டதே என்று அயலார் உன்னைப் பழிக்கும்பொழுது, விளையாட்டு விருப்பத்தால் பொய்க்கோலம் பூண்டு, நீ பிறர் வீடுகளில் சென்று பாடிப்பெற்ற சோற்றை ஏழையர் பலருக்கும் அளித்ததால் உண்டாகும் பயன், உனக்கு நன்மையைக் கொடுக்குமோ?

பொய்தல மகள் — பிக்குணி வேடத்தைப் பொய்யாகப் பூண்டவள் தன்னைத் துன்பமடையச் செய்வதால், ஈகையால் பெறும்

பயனை அவள் அடையாமல் இருந்துவிடுவாள் என்பது தலைவன் குறிப்பு.

ஆய்தோடி ! ஐதுஉயிர்த்து 'இவன்உண்நோய் யாதுஎன்னும்
நோய்இலை இவட்கு'என அயலார்நின் பழிக்குங்கால்,
சிறுமுத்தனைப்பேணிச் சிறுசோறு மடுத்துநீ
நறுநுத லவரோடு நக்கதுநன்கு இயைவதோ ?

ஆராய்ந்த வளையல்களை அணிந்தவளே ! (பிறர் உன் பரிவைக்கண்டு) வியக்கும்படி பெருமூச்செறிந்து, 'இவனைத் தின்னும் நோய் எது என்று, (கேட்கும் அளவுக்குக்கூட) கவலை இல்லை இவளுக்கு' என அயலார் உன்னைப் பழிக்கும் பொழுது, சிறிய பொம்மைப் பிள்ளையை விரும்பி அதற்குச் சமைத்து இட்ட நீ, நல்ல நெற்றியை உடைய பெண்களோடு சிரித்து விளையாடியது பொருந்துவதோ ?

உயிரற்ற பிள்ளைக்குப் பரிவுகொண்டு சோறு சமைப்பவள் தன் துன்பத்தைக் கவனிக்காதிருப்பது தகுதியுடையதன்று எனத் தலைவன் வற்புறுத்துகிறான்.

எனவாங்கு,

அனையவை உளையவும் யான்நினக்கு உரைத்ததை
இனையநீ செய்தது உதவாயாயின், சேயிழாய் !
செய்ததன் பயம்பற்று விடாது ;
நயம்பற்று விடின்இல்லை நசைஇயோர் திறத்தே.

சிறந்த அணிகளைப் பூண்டவளே ! உன் மனம் வருந்தும்படி நான் (நீ செய்த) கொடுமைகளைச் சொல்லியது இவற்றால் ஏற்படும் துன்பத்தினின்றும் நான் விடுபடுவதற்கு நீ உதவி அளிக்காவிட்டால், நீ செய்தவைகளின் விளைவாகிய பயன் உன்னைப் பொருந்துதலைத் தவிராது, உன்னை விரும்பியவர்களிடத்து நீ அருள் கொள்ளாவிடின், (நீ செய்த நற்கருமங்களின் பயனும் உனக்கு) இல்லையாம் (என்று நீ உணரும்படிச் செய்யவே)

நயம் — அருள் ; அவளைத் தீங்கு சேராமல் காப்பாற்றுபவனைப் போலத் தன்னை ஏற்றுக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறான்.

24. சுணங்கணி வனமுலை.

—.o.—

அலருக்கு அஞ்சிக் களவொழுக்கத்தை மேற்கொள்ளத் தயங்கினாள் தலைவி. தலைவன் தன்மையை அவளுக்கு வற்புறுத்தி உரைத்து, தோழி அவளைக் களவுக்கு உடம்படச் செய்ததைச் சித்திரிக்கிறது இக்கவிதை.

சுணங்கணி வனமுலைச் சுடர்கோண்ட நறுநுதல்,
மணங்கமழ் நறுங்கோதை மாரிவீழ் இருங்கூந்தல்,
நுணங்குஎழில் ஒண்தித்தி நுழைநோசி மடமருங்குல்,
வணங்குஇறை வரிமுன்கை, வரிஆர்ந்த அல்குலாய்!

தேமலை அணிகலனாகக்கொண்டு அழகுமலிந்து விளங்கும் முலைகளையும், சந்திரனைத் தன்னிடத்தே பெற்றதைப்போன்ற (வடிவத்தால் ஒத்து, குளிர்ச்சியையும், ஒளியையும் பரப்பும்) மணம் நிறைந்த நெற்றியையும், வாசனையை எங்கும் வீசுகின்ற மணமுள்ள மலர்களாலாகிய மாலையும், (பலனைக் கருதாது பிறர்க்கு நன்மையைச் சொரியும்) மழையும் (தம் சிறப்பையும், எழிலையும் பெருக்கிக் கொள்ளுவதற்காக) விரும்பும் கருமையான கூந்தலையும் நுட்பமான அழகு மாண்பு (வெளிப்படும்படி) ஒளிவிடும் தித்தி பொருந்தியதும்,(காண்பவர்களின் பார்வை) நுழைந்து (கடந்து அப்பாற் செல்லும்படி) நுடங்கி, (அவர்களை இடை இருக்கிறதோ, இல்லையோ என ஐயுறச் செய்து) மயங்க வைப்பதுமாகிய இடையையும், நெகிழ்ச்சி மிக்க மணிக்கட்டுகளினிடத்தே அணிந்த வளையல்களையுடைய முன் கைகளையும், திதலை நிரம்பிய அடிவயிற்றினையும் உடையவளே!

வீழ் — விரும்பு; நொசிதல் — நுடங்குதல்; வணங்குதல் — வளைதல்; 'வரிமுன்கை' என்பதில் வரி—வளையல்; 'வரி அல்குல்' என்பதில் வரி — கோடு; 'சுணங்கு,' 'தித்தி,' 'திதலை' இவை மூன்றும் மகளிரின் எழிலை மாண்புறச் செய்வன சுணங்கை ஆகத்திலும் தித்தியை அடிவயிற்றிலும், திதலையை அல்குலிலும் பார்த்திருப்பதாகக் கூறுவது வழக்கு.

பலனை எதிர்பாராது கொடுத்தலாகிய சிறப்பைப் பெற்றவைகளேனும், மலையும், மழையும், முறையே இவள் கூந்தலைச் சேராமலும் அதன் கருமையைப் பெறுமலும் இருப்பின், தம் உயர்வை இழக்கின்றனவாம். தான் கூறுவனவற்றை அவள் விரும்பி ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று, தோழி தலைவியை இவ்வாறு புகழ்ந்து பேசுகிருள்.

கண்ஆர்ந்த நலத்தாரைக் கதும்எனக் கண்டவர்க்கு
உள்நின்ற நோய்மிக உயிர்எஞ்சு துயர்செய்தல்
பெண்அன்று புனைஇழாய்! எனக்கூறித் தொழூஉம்;

கண்ணுக்கு நிறைந்த அழகுடையவரை (எதிர்பாராது) திடீரெனக் கண்டவர்களுக்கு, அவர்கள் மனத்தினிடத்தே நிலைபெற்று இருப்பதான நோயைத் (தோற்றுவித்து) வளர்த்து, ('உயிர் நீங்கிவிடுவதும் நல்லதே' எனக்கூறி ஏங்கித் தவிக்கும் அவர்கள் அவர்கள் நிலைக்குச் சற்றும் இரங்காமல்) அவர்களுடைய உயிர் மட்டிலும் எஞ்சி நிற்கும் படியான துன்பத்தைத் (துய்க்கச்) செய்தல், நல்ல அணிகளை பூண்டவளே! பெண்தன்மைக்குப் பொருந்தாதது என்று கூறித் தொழுவான்;

புனை இழை-தொழில்மாட்சி சிறந்த அணிகலன்கள்; அணிகளுக்குச் சிறப்பைக் கொடுக்க, பாரம் உடையவையாய் இருந்தும் அவற்றைச் சுமந்து திரிபவள், அவளுக்குத் துன்பம் எதனையும் செய்யாத அவனுக்கு அருளாமல் இருப்பது அவள் இயல்புக்குப் பொருந்தாது என அவன் நிலையை அவன் விளக்கியதை போல் கூறிய சொற்கள், எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. ஆகவே, தோழி தான் அவனைப் பார்த்த நிலையை அடுத்து விவரிக்கிருள்.

(தொழூதே) கண்ணுநீர் ஆக நடுங்கினன்; இன்நகாய்!
என்செய்தான் கொல்லோ இஃதுஒத்தன்! தன்கண்
பொருகளிறு அன்ன தகைசாம்பி, உள்ளுள்
உருகுவான் போலும் உடைந்து;

தொழுதபடியே, கண்கள் நீராக உருக நடுங்கினான்; விரும்பத்தக்க அருள் நிரம்பியவளே! போர்த்தொழிலிலே மிக்குச் செல்கின்ற யானையைப் போன்ற வல்லமையையும், மன உறுதியையும் உடைய தன் தன்மை (எரிந்து) சாம்பல் ஆகி, மனதிற்குள்ளேயே (உறுதி) சிதைந்து வருந்துவான் போலும்! இவன் ஒருவன் (என் முன்னிலையில்) ஏன் இவ்வாறு நடுங்கினானோ?

கண்களிலிருந்து பெருகும் நீர் அளவுக்கு மிஞ்சி, கண்களை மறைத்துக் கொண்டிருந்ததால், கண்களே நீராகி விட்டனவோ என்று அஞ்சும்படி இருந்ததாம் அவன் தோற்றம். 'அவன் என் முன்னர் ஏன் நடுங்கினான?' என்ற கேள்வி, தலைவியை மறை புலப்படுத்தத் தூண்டும் வல்லமை வாய்ந்தது. தலைவியின் நெஞ்சிலே நிறைந்த அருள், அவள் முகப் பொலிவால் வெளிப் படுகிறது என்பதை 'இன்நகாய்' என்ற விளி உணர்த்துகிறது. இத்தகைய அருளுடையவள் அவன் குறையை ஏற்காமலிருப்பது, அழகன்று எனத் தோழி வற்புறுத்தினாள்.

தெருவின்கண், காரணம் இன்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரணவாசிப் பதம்பெயர்த்தல் ஏதில;
நீநின்மேல் கொள்வது எவன்?

தெருவில், காரணம் இல்லாமல் கலங்குபவர்களைக் கண்டு, நீ வாரணவாசியில் உள்ளவர்களைப் போல் (கலங்குபவர் வருத்தத்தை உன்னுடையதாக) ஏறிட்டுக் கொள்வது காரணமற்ற செயலேயாகும்; நீயே அதனை நின்மேலிட்டுக் கொள்வது எதற்காக?

பிறர் வருத்தம் கண்டு, அது தமக்குற்றதைப் போல் வருந்தும் உயர்ந்த பண்பாடு 'வாரணவாசிப் பதம்' எனப் பட்டது. தலைவன் படும் துயரின் எல்லையைத் தோழி மிகைப்படுத்துகிறாளோ என ஐயுற்ற தலைவி, அலரச்சம் காரணமாக, இன்னும் மறை புலப்படுத்த விரும்பாதவளாகவே காணப்படுகிறாள். தோழி கூறியவற்றின் உண்மையை ஆராய, அவள், நம்மால் நேராத துன்பத்தைக் களைய முற்படுவானேன் என வாதிக்கிறாள். இது தலைவி கூற்று.

தலைவன் கூறியவற்றைத் தான் கொண்டு கூறியபொழுது பேசாதிருந்த தலைவி, அவன் நிலையைத் தான் கண்டபடி

விவரித்ததும், பேசத்தொடங்கியது, தோழியின் வெற்றிக்கு முதற்படியாய் அமைந்தது. அவன் படுந்துன்பம் அவளால் நேர்ந்ததே என்பதை, அவன் கூறியபடியே தோழி தலைவிக்கு அறிவித்து, அதனைத் தெரிந்துகொண்ட பின்னரே, தான் அவனிடத்து பற்றும், இரக்கமும் கொண்டதாகக் கூற முற்படுகிறாள்.

அலர்முலை ஆய்இழை நல்லாய்! 'கதும்எனப்
பேர்அமர் உண்கண்நின் தோழி உறீஇய
ஆர்அஞர் எவ்வம் உயிர்வாங்கும்';
மற்றுஇந்நோய் தீரும் மருந்துஅருளாய் ஒண்தொடீ!

அடி பரந்த முலைகளையும், ஆராய்ந்த அணிகளையும் உடைய நற்குணம் நிரம்பியவளே! (அவளைக் கண்ட மாத்திரத்தில்) விரைவாக (நானே எவ்வாறு என்னுள் புகுந்துகொண்டது என்று தெரிந்துகொள்ளமுடியாதபடி) பெரியனவும், போர்த் தொழிலில் வல்லமை மிக உடையனவும் ஆகிய ஆளை விழுங்கும் கண்களை உடைய உன் தோழி (என்னிடத்தே) பொருத்திய நிறைந்த துன்பமாகிய நோய் என் உயிரைப் போக்கிவிடும். (என்று சொல்லுகிறான்.) ஒளி பொருந்திய வளையல்களை அணிந்தவளே! (அவனுக்கு நீ தந்த) இந்நோய் நீங்கும் மருந்தையும் கொடுத்தருள்;

தலைவனுக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பைத் தான் அறிந்துகொண்டிருந்ததைத் தோழி வெளிப்படையாகக் கூறுவது தலைவியின் நாணத்தை நீக்கவே. தலைவன் தோழிக்குக் கூறியவற்றை, அவள் அப்படியே தலைவிக்கு அறிவிக்கிறாள். இதன் இறுதி அடி தோழியின் வேண்டுகோள்.

'நின்முகம் காணும் மருந்தினேன்' என்னுமால்;
நின்முகம் தான்பெறின் அல்லது கோன்னே
மருந்து பிறிதுயாதும் இல்லேன்; திருந்துஇழாய்!
என்செய்வாம் கொல்இனி நாம்!

உன்னுடைய முகத்தைக் காண்பதாகிய மருந்தை (வேண்டி நின்றேன்) என்று அவன் சொல்லுகிறான்; உன்னுடைய காட்சியை இப்பொழுதே அவன் (நோயைத்

தீர்க்கும் மருந்தாகப்) பெறுதலை யன்றி, அதனைப் போக்கக் கூடிய வேறு மருந்து ஒன்றும் இல்லாதவளாய் இருக்கிறேன்; புதுக்கிய அணிகளைப் பூண்டவளே! இதற்கு நாம் என்ன செய்யலாம்?

நம்மால் துன்பத்துக்கு ஆளானவர் நோயைப் போக்குவது நம் கடமை எனத் தலைவி மறைமுகமாக ஒப்புகொண்டதை வற்புறுத்தி, தோழி தன் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முயல்கிறாள்.

பொன்செய்வாம்;
ஆறு விலங்கித் தெருவின்கண் நின்றுஒருவன்
கூறும்சொல் வாய்எனக் கொண்டுஅதன் பண்புஉணராம்
தேறல் எளிதுஎன்பாம் நாம்?

பொன்னை உண்டாக்குவோம்; ஒழுக்கத்தினின்றும் மாறுபட்டு (வழியில் குறுக்கிட்டு), நடுத்தெருவில் நின்ற வாறு ஒருவன் கூறும் சொற்களை உண்மை என ஏற்றுக் கொண்டு, அச்சொற்களின் உண்மைத்தன்மையை ஆராய்ந் தறிய முயலாமல் அவற்றிற்கொப்ப நடந்துகொள்ளத் துணிவது எளிது என்று நான் சொல்லுகிறேன்.

பொன்னை உண்டாக்குதல் எளிதான காரியமன்று. பசலை பொன்னிறம் உடையதாகையால், அவன் நம்மை நினைந்து வருந்துதலைப்போல, நாமும் அவனை நினைந்து வருந்திப் பசப்பூரப் பெறுவோம் என்று நகை தோன்றக் கூறினாள். தலைவனை வரைவு முயற்சியில் தூண்டாது, தன்னை களவொழுக்கத்தைக் கைக் கொள்ளத் தோழி தூண்டுவது தலைவிக்கு ஏற்கவில்லை

ஒருவன் சாமாறு எளிதுஎன்பாம் மற்று;

இல்லையேல், ஒருவன் இறந்துவிடுதல் எளிதான காரியம் என்கிறேன் நான்.

தலைவன் பேச்சைக் கேட்டு மயங்கிவிடவில்லை, அவன் நிலையை உணர்ந்தே, அலர் தோன்றுமே என்பதனையும் பொருட்படுத்தாது, உன்னைக் களவொழுக்கத்தைக் கைக்கொள்ள வற்புறுத்துகிறேன்

என்று தோழி கூறுகிறாள். தோழி இவ்வளவு கடுமையாக எச்சரித்த பின்னரே, தலைவி அவனைச் சென்று காண மனம் ஒப்பினாள். அவனிடத்தில் மிக்க அன்புடையவளேனும், அலரச்சம் அவளைக் கல்நெஞ்சுடையவளாக்கி விட்டிருந்தது.

சிறிதுஆங்கே, மாணாஊர் அம்பல் அலரின் அலர்கஎன,
நாணும் நிறையும் நயப்பில் பிறப்பிலி
பூண்ஆகம் நோக்கி, இமையான் நயந்து,நம்
கேண்மை விருப்புற் றவனை எதிர்நின்று
நாண்அடப் பெயர்த்த நயவரவு இன்றே!

அப்பொழுதே சிறிது நேரம், மாட்சிமைப்படாத இவ்வூரில் அம்பல் பெருகி அலர்ந்தாலும் அலராகட்டும் என்று (துணிந்து), நாணத்தையும், நிறையையும் (நாம் பெற்றிருப்பதைத தன் வேட்கை மிகுதி காரணமாய்) விரும்பாதவனும், குடிப்பிறப்புக்குரிய ஒழுக்கமற்றவனும், பூண்கள் அணிந்த (நின்) மார்பைப் பார்த்துக் கண்களை இமைக்காமல் நின்றவனும், அன்பு சிறந்து, நம்முடைய நெருங்கிய தொடர்பை (-களவில் அடிக்கடி சந்திப்பதை-) விரும்பியவனுமாகிய அவனை, நாண் மிக வருத்தவும், அவன் எதிர் நின்று (நீ அஞ்சாதே என்று உணர்த்திப்) போக்கிய நயப்பாடு வருதல் இல்லை.

தலைவன் இறந்துவிடும் நிலையில் இருக்கிறான் எனத்தோழி இருமுறை வற்புறுத்திய பின்னரே, தலைவி அலரச்சத்தைக் களைந்து, அவனைக்காண இசைந்தாள். தலைவி தலைவனைககாத்த விதத்தைத் தோழி வியந்ததை இச்சுரிதகம் உணர்த்துகின்றது. காட்சி ஆசையோடு வந்தவனே தலைவன் என வற்புறுத்தி வந்த தோழி, தன் வெற்றியை ஆதாரமாகக்கொண்டு, அவன் அடிக்கடி சந்திக்க விரும்புகிறான் என்பதையும் குறிப்பிட்டுவிட்டாள். இனிக் களவொழுக்கம் தடையின்றி நிகழுமாகையால், இப்பொழுது நிகழ்ந்ததைப்போன்ற 'நாணடப் பெயர்க்கும்' நயப்பாடு இனி நிகழ வாய்ப்பில்லை.

இச்கவிதை, 'கயமலர் உண்கண்ணாய்' என்ற கவிதையோடு பெரிதும் தொடர்புடையது. இவை இரண்டிலும், தோழியர் மறைவாக நிகழ்ந்தனவாகச் சில நிகழ்ச்சிகளைப் படைத்துக் கூறி,

தாம் விரும்பிய பயனைப் பெறுகின்றனர். அக்கவிதையில் 'மன்' என்ற அசைச்சொல் பயன்பட்டதைப்போல, இங்கு 'மற்று' என்ற அசைச்சொல் தோழி கற்பித்துக் கூறியவை, தன் முயற்சி வெற்றி பெற வற்புறுத்தியவை, முடிவு இம்மூன்று பகுதிகளையும் பிரித்துக் காட்டுகின்றது.

25. எல்லா இஃதொத்தன்.

——:o:——

தலைவன் வற்புறுத்தல் எல்லையைக் கடந்துவிட்டது. தோழி இன்னும் தலைவியின் மனநிலையை அறிந்துகொள்ளவில்லை. தலைவனைப் பொறுக்கச் சொல்லுவதும் கூடாததாகிவிட்டது. ஆகவே தலைவியின் விருப்பத்தை அறியவும், அவன் குறையைப் போக்கவும் தோழி அவளோடு சூழ்ந்து நடித்ததை இக்கவிதை சித்திரிக்கிறது.

எல்லா! இஃதொத்தன் என்பெறான்; கேட்டைக்காண்;
செல்வம் கடைகொளச் சாஅய்ச் சான்றவர்
அல்லல் களைதக்க கேளிர்உழைச் சென்று
சொல்லுதல் உற்றுஉரைக் கல்லா தவர்போலப்
பல்லூழ் பெயர்ந்து என்னை நோக்கும்;மற்று யான்நோக்கின்,
மெல்ல இறைஞ்சும் தலை;

ஏடி! இவன் ஒருவன் என்னிடமிருந்து ஒன்றைப் பெறாதவன்; இவன் படும் அவதியைப் பார்; பொருள் சுருங்கி முடிவை அடைந்துவிடவும், (தம் பழைய செல்வாக்கான நிலையினின்றும்) சாய்ந்த பெரியோர், (வறுமையால் மிக வருந்தி) தம் துன்பத்தைப் போக்க வல்ல (ஆற்றலும், விருப்பமும் உடைய) உறவினரிடத்தே சென்று, தம் குறையைச் சொல்லத் தொடங்கி, (ஆனால் வெட்கம் மீதூர) சொல்லமுடியாதவராய்ப் பேசாது நிற்பவரைப்போல, பல முறை (இவ்விடத்துக்கு) வந்து

என்னைப் பார்ப்பான்; (அவன் வந்த காரணத்தை அறியும் ஆவலுடையவளாய்) நான் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தால், (நாணத்தால்) மெதுவாகத் தலையைத் தாழ்த்திக் கொள்ளுகிருன்.

தோழி கூறி முடித்ததும், தலைவன் அங்கு வந்து, முதன் முதலாகத் தோழி எதிரில் சந்திப்பதால் நாணமடைந்த தலைவியின் நிலையை உணர்ந்து, தலைகுனிந்து நின்றதும் ஒன்ருய் நிகழ்ந்தன. வறுமை 'சொல்-சொல்' என உயர்த்தவும் நாணம் தாழ்த்தவும், ஒன்றற்கொன்று எதிரான இரு சக்திகளுக்கிடையே பட்ட தலையை 'மெல்ல இறைஞ்சும்' என்ற தொடர் உணர்த்து கின்றது.

எல்லா!நீ முன்னத்தான் ஒன்று குறித்தாய்போல் காட்டினை;
நின்னின் விடாஅ நிழல்போல் திரிதருவாய்;
என்நீ பெருதது? ஈதுஎன்;

ஏடா! நீ குறிப்பினுல் எதனையோ ஒன்றை நாடி வந்தவனைப்போல் காட்டிக்கொள்கிருய்; உன்னைவிட்டு நீங்காத உன்னுடைய நிழலைப்போல், என் பின்னுல் ஓயாது திரிகின்ருய்; நீ என்னிடத்திலிருந்து பெருதது எது? இது என்று குறிப்பிட்டுச் சொல்;

'உரைக்கல்லாதவர் போல நோக்கும்' என அவள் கூறிய வற்றை உறுதிப் படுத்துகிருன் தலைவன். தம் சூழ்ச்சியை மறைக்க இருவரும் ஏற்கெனவே ஒப்புக் கொண்டபடியே நடிக்கின்றனர். இது தோழி கூற்று.

சொல்லின், மருதுஈவாள் மன்னே இவள்;

நான் விரும்பியதைக் குறிப்பிட்டால் மறுக்காமல் கொடுப்பாளோ இவள்;

தலைவியைச் சுட்டி, ஆனுல் தோழியை நோக்கிக் கேட்கிருன் தலைவன். தான் நாணம் மிக்குடையவன் என்றும், கொடுக்க விருப்பமில்லாதவரைத் துன்புறுத்தும் குணம் இல்லாதவன்

என்றும் தன் நற்குணங்களை மறைமுகமாக வெளிப்படுத்திக் காட்டுகிறான். 'மன்னோ' என்ற அசை அவன் தயக்கத்தின் மிகுதியை உணர்த்துகின்றது.

செறாஅது, ஈதல் இரந்தார்க்குஒன்று ஆற்றாது வாழ்தலின்
சாதலும் கூடுமாம் மற்று;

சினவாமல், ஒன்றைக்கொடு என்று கேட்டவர்க்கு, அதனைக் கொடுத்து உதவாமல் வாழ்வதினும் சாதலையும் செய்யலாமாம்;

இது தலைவி கூற்று. தலைவியைப் பேச வைத்ததனோடு, இவ்வாறு ஓர் உறுதிமொழியை அவளிடமிருந்து பெற்றது அவர்கள் சூழ்ச்சியின் வெற்றிக்கு அறிகுறி. ஆகவே சூழ்ச்சியைச் செய்த தோழி, மிக்க மகிழ்ச்சியோடு, தலைவனைத் தான் விரும்பியதைக் கேட்கத் தூண்டுகிறாள்.

இவள்தந்தை காதலின் யார்க்கும் கொடுக்கும் விழுப்
யாதுநீ வேண்டி யது? [பொருள்;

இவளுடைய தகப்பன் மிக்க அன்புடன் தன்னை வந்து கேட்ட எவர்க்கும் உயர்ந்த பொருள்களை அளிப்பான்; நீ வேண்டியது எது?

தகப்பனைப் போலவே இவளுக்கும் கொடுக்கும் குணம் உண்டு என்று சொல்லுபவளைப் போல, 'இவள் தகப்பன் கொடுக்கும்; நீ வேண்டிய விழுப்பொருளை (தலைவியையே) கேள் எனத் தலைவனைத் தூண்டுகிறாள்.' இது தோழி கூற்று.

பேதாய்! பொருள்வேண்டும் புன்கண்மை ஈண்டில்லை;
மருளி மடநோக்கின் நின்தோழி என்னை [யாழ
அருள்ஈயல் வேண்டுவல் யான்;

பெண்ணே! பணத்தை யாசிக்கும் அற்பத்தனம் என்னிடம் இல்லை; மருளுதலால் மடப்பம் பொருந்திய (மானின்) நோக்கத்தை உடைய உன் தோழி என்னை அருள் செய்தலை விரும்புகிறேன் நான்.

தலைவியின் பார்வையைத் தலைவன் ஈண்டுப் புகழ்வது, அதனைக் கொண்டு அவள் அருட்குணம் நிரம்பியவள் என அறிந்துகொண்டதாக உணர்த்துவதற்கு. 'யாழ' என்பது அசை.

அன்னையோ! மண்டுஅமர் அட்ட களிறுஅன்னுன் தன்னை
பெண்டிர் அருளக் கிடந்தது எவன்கொலோ! [ஒரு

அத்தகையவனு நீ! (பகைவர் நாற்புறங்களிலும் வளைத்துக்கொண்டிருக்கின்ற) நெருங்கிய போரில் வெற்றி பெற்ற யானையைப்போல் வல்லமையும், பெருமிதமும் உடையவன், தன்னை ஒரு பெண் அருள் செய்து காக்க வேண்டி நிற்பது எக்காரணம் பற்றியோ!

தலைவன் கேட்கப்போவதை அறியாதவள்போல பேசத் தொடங்கினுளே ஒழிய, தோழியால் அவன் குறையை வற்புறுத்த முடியாமல் இருக்கமுடியவில்லை. சூழ்ச்சியை வெளிப்படுத்தாமல், இதனைச் செய்து முடிக்கும் தோழியின் திறன் வியக்கத்தக்கது.

ஒண்தொடீ! நாணிலன் மன்ற இவன்;

ஒளி பொருந்திய வளையலை அணிந்தவளே! நிச்சயமாக இவன் நாணமற்றவன்;

தன் வேண்டுகோளை வாய்ப்பறியாமல் கேட்டான் எனக் கூறுகிறுளே யொழிய, அதனை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லாத வளாகத் தலைவி காட்டிக் கொள்ளவில்லை.

ஆயின் ஏஎ,

பல்லார்நக்கு எள்ளப் படுமடன் மாஏறி
மல்லல்ஊர் ஆங்கண் படுமே, நறுநுதல்
நல்காள்கண் மாறிவிடின்;எனச் செல்வான்நாம்
எள்ளி நகினும் வரூஉம்; இடையிடைக்
கள்வர்போல் நோக்கினும் நோக்கும்; குறித்தது
கொள்ளாது போகாக் குணனுடையன்; எந்தைதன்
உள்ளம் குறைபடா வாறு;

'சே! நான் நாணமற்றவனையானால், பலரும் சிரித்து இகழும்படி மடன்மா ஊர்ந்து, வளப்பம் மிக்க இவ்வூரின் நடுவே இறந்துவிட நேரிடும். நல்ல நெற்றியையுடைய உன் தோழி எனக்கு அருளாமல் தன் ஒழுக்கத்தினின்றும் மாறி விடுவாளானால்' எனக்கூறிச் செல்பவன், நான் பல முறை சிரித்து இகழ்ந்ததனையும் பொருட்படுத்தாது (தன் குறையை வற்புறுத்த) வரும் வழக்கமுடையவன்; (என்னோடு பேசிக்கொண்டிருக்கையில்) இடையிடையே (நீ இருக்கும் இடத்தைக்) கள்வர்போலப் பார்த்தலையும் செய்வான்; தான் அடையக்கருதிய அதனை அடையாமற் போகாத பிடிவாத குணம் நிரம்பியவன்; எம் தந்தை மனம் வருந்தாதபடி (சூழ்ந்து ஏற்பது ஒன்றைச் செய்).

காம நோயால் பெரிதும் பீடிக்கப் பட்டவர், தம்மைத் தாம் காதலித்தவர் ஏற்றுக்கொள்ளாவிடின், பனைமடலால் செய்த குதிரையின்மேல் ஏறிக்கொண்டு ஊர் நடுவே தம்மை இழுத்துச் செல்லும்படி செய்வது 'மடலேறுதல்' எனக் கூறப்படுகிறது.

கள்வர் பிறர் பொருளிலேயே கண்ணாக இருப்பர்; ஆனல் அவர்கள் தம்மைப் பார்க்கும்பொழுது தாம் பொருள்களைப் பாராமலும், பார்ப்பினும் அவற்றைக் களவாடிக் கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தோடு பார்ப்பவரைப் போல் காட்டிக் கொள்ளாமலும் நடிப்பர். தோழி தன்னைக் கவனிக்காதபடி, அவன் தலைவி இருக்குமிடத்தைப் பார்த்தது 'கள்வர்போல் நோக்கினும் நோக்கும்' என்பதனால் பெறப்படுகிறது.

தோழியின் சூழ்ச்சித் திறன் 'அயாகோ' வின் திறனுக்கு எள்ளளவும் குறைந்ததன்று. அவன் தீமையைச் சூழ்ந்ததால், தான் சூழ்ந்தவற்றை வெளியிட மறுத்தான். இவள் நன்மையைச் சூழ்ந்த காரணத்தால் தலைவி கேட்காமல் இருக்கையில், இங்குத் தோழி தானாகத் தான் சூழ்ந்தவற்றை வெளிப்படுத்திவிட்டாள்.

தலைவனும் தோழியும் சூழ்ந்து நடித்த நாடகத்தைத் தலைவி முதன் முதலிலேயே தெரிந்து கொண்டுவிட்டாள். தன்னை ஏமாற்ற வந்தவர்களை ஏமாற்றமடையச் செய்வதே தகுதியுடையது என்றெண்ணி, தலைவனைப் பார்த்தறியாதவளைப் போலவே அவள் இறுதி வரை நடித்தது, அவளும் சூழ்ச்சித் திறன் மிக்குடையவள் என்பதை வெளிப் படுத்துகிறது.

26. ஏஎ இஃதொத்தன்.

——:o:——

பாம்பைப் போல் சீறி விழுந்தாள் அவள்; வலியப் பிடித்து இழுத்தால் ஒரு பெண் சும்மா இருப்பாளா? சீறி விழுந்தவள் சீற்றத்தைத் தணித்து, அவளைத் தன்னை விரும்பச் செய்துவிட்டான் தலைவன். தலைவன் வெற்றி பெறக் கையாண்ட முறைகளைச் சித்திரிக்கிறது இக்கவிதை.

ஏஎ இஃதொத்தன்! நாணிலன்; தன்னொடு
மேவேம்என் பாரையும் மேவினன் கைப்பற்றும்;

சே! இவனும் ஒரு மனிதன்! சிறிதும் நாணமில்லாதவன்; தன்னோடு பொருந்தமாட்டோம் என்று கூறுவாரையும், விரும்பிப் பிடித்து அணைத்துக் கொள்ளுகிறான்;

மேவினும் மேவாக் கடையும் அஃதுஎல்லாம்
நீஅறிதி; யான்அஃது அறிகல்லேன்; பூஅமன்ற
மெல்இணர் செல்லாக் கொடிஅன்னாய்! நின்னையான்
புல்இனிது ஆகலின் புல்லினேன்;

விரும்பினும், விரும்பாவிடினும், அச்செய்தியை நீயே அறிவாய்; நான் அவற்றை உணர்ந்தவன் அல்லேன்; பூக்கள் பொருந்திய மெல்லிய பூங்கொத்துக்கள் நீங்காத கொடியை ஒத்தவளே! உன்னை அணைத்துக் கொள்ளுதல் இன்பம் பயப்பதால், நின்னை நான் அணைத்துக்கொண்டேன்;

கொடி அவள் உருவத்துக்கும், பூங்கொத்து நீங்காத கொடியின் அழகு மாட்சி அவள் எழிலுக்கும் உவமைகள்.

எல்லா! தமக்குஇனிது என்று வலிதில் பிறர்க்குஇன்னா
செய்வது நன்றாமோ மற்று;

ஏடா தமக்கு இன்பந் தருகிறது என்ற காரணத்தால், வலிந்து பிறருக்குத் துன்பம் தருவது நேர்மையாகுமோ?

சுடர்த்தொடீ! போற்றாய்; களைநின் முதுக்குறைமை;
[போற்றிக்கேள்;
வேட்டார்க்கு இனிதாயின் அல்லது நீர்க்குஇனிதுஎன்று
உண்பவோ நீர்உண் பவர்;

ஒளிவிடும் வளையல்களை அணிந்தவளே! பாதுகாவாதே; நின் அறிவுடைமையைப் போக்கு; நான் கூறுவதை விரும்பிக் கேள்; (காவறட்சி காரணமாய்) நீரை விரும்பியவர் தமக்கு இன்பம் பயப்பது என்று இல்லாமல், நீருக்கு இன்பம் பயக்கும் என்று அதைக் குடிப்பரோ?

முதுக்குறைமை — அறிவுடைமை; இந்த வாதம் அவளுக்கு ஏற்கவில்லை. ஆகவே, அவளை அருள் புரிய வேண்டத் தலைப்பட்டான் தலைவன்.

செய்வது அறிகல்லேன்! யாதுசெய் வேன்கொலோ!
ஐவாய் அரவின் இடைப்பட்டு நைவாரா,
மைஇல் மதியின் விளங்கு முகத்தாரை
வௌவிக் கொளலும் அறன்எனக் கண்டன்று;

ஐயோ! என்ன செய்வேன்! ஐந்தலை நாகத்தின் பிடிக்குள்பட்டு வருந்துபவர் போல வருந்தி, செய்ய வேண்டுவது எது என்று தெரியாமல் தவிக்கிறேனே! மறுவற்ற சந்திரனைப் போல் விளங்கும் முகத்தையுடைய மங்கையரை வலிதிற் கொள்வதும் அறத்தின்பாற் பட்டதாக நூல்கள் கருதுகின்றன.

ஐம்பொறிகளாலும் இன்பம் தரத்தக்க பெண்ணால் வருந்துகிறானாகையால், தன் துன்பத்தை அவள் மேலேற்றி, அவளை ஐவாய் அரவு என்றான். , எட்டு வகையான மணங்களுள் இராக்கதமும் ஒன்றாகையால் இவ்வாறு கூறினான்.

அறனும் அதுகண்டற் றுயின், திறன்இன்றிக்
கூறும்சொல் கேளான் நலிதரும்; பண்டுநாம்
வேறுஅல்லம் என்பதுஒன்று உண்டால், இவனோடு
மாறுஉண்டோ நெஞ்சே! நமக்கு.

அற நூல்கள் அவ்வாறு கூறுவதனால்தான், இவனும் நாம் கூறுவனவற்றை ஏற்றுக் கொள்ளாமல், வகையறியாமல் நம்மை வருத்துகின்றான்; (இப்பொழுது அன்புடையவராய் இருப்பவர்) சென்ற பிறப்பில் தொடர்புடையவராய் இருப்பர் என்று கூறுவதுண்டாகையால், மனமே! இனி அவனோடு நமக்கு மாறுபாடு ஏதேனும் இருக்குமோ?

27. நோக்குங்கால் நோக்கித் தொழூஉம்.

—:o·—

தலைவியைக் குறைநயப்பித்துக் குறியிடத்தில் கொண்டு சேர்த்ததைச் சித்திரிக்கிறது இச்சிறு கவிதை.

நோக்குங்கால் நோக்கித் தொழூஉம்; பிறர்காண்பார்
தூக்கிலி; தூற்றும் பழிஎனக் கைசவித்துப்
போக்குங்கால், போக்கு நினைந்துஇருக்கும், மற்றுநாம்
காக்கும் இடமன்று இனி;

பார்க்குந்தோறும் (நம்மை) நோக்கித் தொழுகிறான்; (அவன் நம்மைத் தொழுவதைப்) பிறர் கண்டு விடுவரோ, (அதனால் தனக்கு இழிவு நேருமே) என்ற ஆராய்ச்சி சிறிதும் இல்லாதவன்; நம்மீது பிறர் பழி தூற்றுவாரே என அஞ்சி, அவனைக் கை அமர்த்திப் போகச்செய்தால் (அவனைப் போகச் சொல்வதால் நமக்கு அவனிடத்தில்

அன்பில்லை என்று கொண்டு) நம் ஒழுகலாற்றை நினைந்தபடி நின்று கொண்டிருப்பான்; அவன் பிடியினின்றும் நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளும் காலம் இனி இல்லை;

அவன் ஆற்றுமை எல்லையைக் கடந்து விட்டதாகையால் இனி நம்மை காத்துக் கொள்ளும் காலம் இல்லை என்றாள்; இது தோழி கூற்று.

எல்லா! எவன்செய்வாம்?

ஏடி! இதற்கு நாம் என்ன செய்யலாம்?

தான் ஒரு செய்தியைக் கூறி முடித்தவுடனேயே, மிக்க பரபரப்புடன் தலைவி இவ்வாறு கேட்டதைக் கொண்டு, அவள் களவொழுக்கத்தை மேற்கொள்ள விரும்புவதைத் தோழி உணர்ந்து கொண்டாள். இது தலைவி கூற்று.

பூக்குழாய்! செல்லல் அவன்உழைக் கூஉய்க் கூஉய்க் [கூஉய்
விரும்பியான் விட்டேனும் போல்வல்;என் தோள்மேல்
கரும்புஎழுது தொய்யிற்குச் செல்வல்; 'ஈங்கு ஆக
இருந்தாயோ' என்றுஆங்கு இற;
அவன்நின் திருந்துஅடி மேல்வீழ்ந்து இரக்கும்,நோய்
மருந்துநீ ஆகுத லான்; [தீர்க்கும்

சித்திர வேலைப்பாடமைந்த காதணிகளை உடையவளே! (நின்னைப் பெறுததால்) மிகுதியான வருத்தத்தையுடைய அவனிடம் கூவிக்கூவி உன்னை விருப்பத்துடன் அழைத்துக் கொண்டு விட்டவளைப் போலவே நான் நடிப்பேன்; என் தோள்களின் மீது கரும்பு எழுதுவதற்காகத் தொய்யிற் குழம்பைக் கொண்டு வர நான் செல்கிறேன்; 'இதுவே இடமாக இருந்துவிட்டாயோ? என்று கேட்டபடி (என்னைத் தேடி வருபவளைப் போலவே) நீ அவ்விடத்திற்கு போ! அவனுடைய நோயைப் போக்கும் மருந்தாகையால், அவன் உன்னுடைய திருந்திய அடிகளைப் பணிந்து உன்னை அருள் புரியுமாறு கேட்டுக் கொள்வான்.

இன்னும், கடம்பூண்டு ஒருகால்நீ வந்தை உடம்பட்டாள்
என்னுமை என்மெய் தோடு;

மேலும் ஒரு முறை (என் தோழி உன் நோயைப் போக்குவதைத் தன்) கடைமையாக மேற்கொண்டு, களவொழுக்கத்துக்கு உடம்பட்டாள் என்று சொல்லாமல் இருப்பதாக என்னைத் தொடு;

'வந்தை' பொருளில்லை, பேச்சு வழக்கு; உடன் பட்டதைத் தலைவி உடன் படாதவளைப் போல் உணர்த்தும் நகைத்திறம் வியக்கத்தக்கது. இது தலைவி கூற்று.

இஃதோ! அடங்கக் கேள்;
நின்னொடு சூழுங்கால் நீயும் நிலம்கிளையா
என்னொடு நிற்றல் எளிதன்றோ! மற்றுஅவன்
தன்னொடு நின்று விடு.

உனக்கு நன்மையை நாடியதற்கு என்னைச் சூள் செய்யச் சொல்வதோ வெகுமதி! நீ என்ன செய்ய வேண்டும் என்பதை முற்றிலும் கேள்; உன்னோடு நான் ஆராயுங் காலத்தில், நீ கால் விரலால் நிலத்தைக் கீண்டியபடி என் எதிரில் நிற்பது உனக்கு எளிதாய் இருக்கிறதல்லவா! அவன் முன் அவ்வாறே நின்றுவிடு.

இது 'எல்லா இஃதொத்தன்' என்ற கவிதையை ஒத்தது. இரண்டும் சூழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டவை; தோழியர் அடைந்த வெற்றியைச் சித்திரிக்கின்றன; இங்கு தோழியின் வார்த்தைகளை மனமுவந்து ஏற்றுக் கொள்கிறாள் தலைவி; ஆகவே இத்தோழியின் திறனை ஆசிரியர் அவள் தலைவிக்குத் தலைவன் எதிரில் குறியிடத்தில் நடந்துக் கொள்ளவேண்டிய விதத்தை விவரிப்பதன் வாயிலாய் வெளிப்படுத்தி இருக்கிறார்.

28. அணிமுக மதியேய்ப்ப.

—:o.—

தலைவியைத் தலைவன் வற்புறுத்திக் கூட்டத்துக்கு உடம்படவைத்ததைச் சித்திரிக்கிறது இக்கவிதை.

அணிமுகம் மதிஏய்ப்ப, அம்மதியை நனிஏய்க்கும்
மணிமுக மாமழைநின் பின்ஒப்பப் பின்னின்கண்
விரிநுண்ணூல் சுற்றிய ஈர்இதழ் அலரி
அரவுக்கண் அணிஉறழ் ஆரல்மீன் தகைஒப்ப,
அரும்படர் சண்டாரைச் செய்தாங்கு இயலும்
விரிந்துஒலி கூந்தலாய்! கண்டை; எமக்குப்
பெரும்போன் படுகுவை பண்டு;

உன் அழகிய முகம் சந்திரனை ஒத்திருக்கவும். அச் சந்திரனை (பயனைக் கருதாது பிறர்க்கு நன்மை செய்தலில்) மிகவும் ஒத்திருக்கும். நீலமணிகளைப்போன்ற நிறமுடையனவாய் விளங்கும் பெரிய மேகங்கள் (நிறத்தால்) உன் பின்னப்பட்ட கூந்தலை ஒத்திருக்கவும், (அக் கூந்தலினிடத்தே கிடந்து) மலரும் நுண்ணிய நூலால் சுற்றிக் கட்டப்பட்ட குளிர்ச்சி பொருந்திய இதழ்களை உடைய மலர்கள், (பின்னலை உருவத்தால் ஒத்த) கரும் பாம்பினிடத்தே இருந்து அதன் அழகோடு மாறுபட்டு, கார்த்திகை என்னும் விண்மீன்களை ஒளிவிடும் தன்மையில் ஒத்திருக்கவும், (பொறுத்தற்கு) அருமையான பெருந்துன்பத்தை (உன் அழகிய தோற்றத்தைக்) கண்டவரைத் துய்க்கும்படிச்செய்தவாறு செல்லும் பரந்து தழைத்த கூந்தலைப்பெற்றவளே! ஆராய்ந்து பார்; எனக்கு முந்நாட்களில் மிகுதியான பொன்னைக் கொடுக்கக் கடமைப்பட்டவள்;

முகத்திற்கும் சந்திரனுக்கும் பொதுப்பொருள் அழகு; மழைக்கும் சந்திரனுக்கும் பொதுப்பொருள் அவற்றின் தொழில்;

மழைக்கும் மின்னலுக்கும் பொதுப்பொருள் நிறம்; பின்னலுக்கும் பாம்புக்கும் பொதுப்பொருள் வடிவம்; மலர்களுக்கும் கார்த்திகை மீன்களுக்கும் பொதுப்பொருள் அவற்றின் ஒளி.

கண்டை 'சேரி மொழி'; காண் என்னும் பொருள் உடையது; தலைவன் அவளோடு கூடியிருந்த காலத்தில் அவள் அழகு சிறந்து விளங்கினள். அவன் பிரியவே, ஒளி மங்கிக் கிடக்கிறாள். அவளுடைய இந்நிலையைச் சுட்டி, அவள் முன்னர் பொன்னைப் போல் அழகுடையவளாய் விளங்கியது தன் அளியாலேயே என்றும், அதனை இழந்து விட்டிருப்பவள், தனக்கு அவ்வழகைத் திருப்பித் தரக் கடமைப்பட்டவளாய் இருக்கிறாள் என்றுங் கூறுகின்றான் தலைவன். இதனால் இப்பொழுது தன்னோடுசேர்ந்து, அவள் மீண்டும் இழந்த அழகைப் பெற்றுப் பொலிவுடையவளாய் விளங்கவேண்டும் என்று குறிப்பாய் அறிவிக்கிறான்.

ஏஎ! எல்லா! மொழிவது கண்டை இஃதொத்தன், தொய்யில்
எழுதி இறுத்த பெரும்பொன் படுகம்,
உழுவது உடையமோ யாம்?

சே! அட! இவன் பேசுவதைப் பார்; என் தோள்களின் மீது (இவன்) தொய்யில் எழுதியதால் எனக்குத் தந்த தோற்றப் பொலிவுக்குக் கடன் பட்டிருக்கிறோம்; கூடியதால் ஏற்பட்ட தோற்றப் பொலிவைக் கடன் பட்டிருக்கிறோமா நாம்!

'பெரும் பொன் படுகுவை' என்று தலைவன் கூறியதனை எதிர்க்கிறாள் தலைவி. தொய்யில் எழுதியதால் ஏற்பட்ட அழகின் அளவுக்குக் கடமைப்பட்டிருப்பதை ஒப்புகிறாள். அதற்காகப் 'பெரும் பொன் படுகம்' என்று அவன் எப்படிக்கூறலாம்?

உழுதாய்;

சுரும்புஇமிர் பூங்கோதை அந்நல்லாய்! யான்நின்
திருந்து இழை மேல்தோள் இழைத்த மற்றுஇஃதோ!
கரும்புஎல்லாம் நின்உழவு அன்றோ? ஒருங்கே
துகள் அறு. வாள்முகம் ஒப்பு மலர்ந்த
குவளையும் நின்உழவு அன்றோ? இகலி
முகைமாறு கொள்ளும் எயிற்றாய்! இவை அல்ல
என்உழுவாய் நீமற்று இனி?

நீ கூடினாய்; வண்டுகள் மொய்க்கும் மலர்மாலையை அணிந்த அழகியுவளே! நான் உன்னுடைய புதுக்கிய அணிகளை அணிந்த தோள்களின் மீது தொய்யில் எழுதிய இவ்வளவேதானோ நீ கடன் பட்டிருக்கிறாய்? (நான்) பல காலும் உன் ஆகத்தும், தோள்களிலும் பொறித்த கரும்பு எல்லாம் நீ என்னோடு கூடியதனால் எழுதப்பட்டவை யன்றோ? அதனோடு, மாசற்ற உன் ஒளிவிடும் முகத்தில் ஒன்றை ஒன்று ஒத்திருக்கும்படியாக மலர்ந்து விளங்கும் குவளையைப்போன்ற கண்களின் மலர்ச்சி நீ என்னைக் கூடியதனால் ஏற்பட்டதன்றோ? முல்லை அரும்புகளோடு மாறுபட்டு அவற்றைத் தோல்வியுறச்செய்யும் அழகிய பற்களை யுடையவளே! இத்தகைய பயன்களையே யன்றி, வேறு எப்பயன்களைக் கருதி நீ இனி என்னோடு கூடுவாய்,

கரும்பு வில், மீன் கொடி முதலியவற்றை மகளிர் தோள்களிலும், மார்பிலும் எழுதுவது அவர்கள் எழிலை எடுத்துக் காட்டுவதோடு, புணர்ச்சி இன்பத்தையும் பெருக்கும். முதலில் வந்த 'மற்று' பொருளுடையது; அது அங்கு அளவைக் குறிப்பிடப் பயன்படுகிறது.

எல்லா! நல்தோள் இழைத்த கரும்புக்கு நீகூறும்
முற்றெழில் நீல மலர்என உற்ற
இரும்புஈர் வடிஅன்ன உண்கட்கும் எல்லாம்
பெரும்போன் உண்டு என்பாய் இனி;

ஏடா! (என்னுடைய திரட்சியையுடைய) நல்ல தோள்களிலே எழுதிய கரும்புக்கு (நான் கடமைப்பட்டிருப்பதைப் போல) நீ (பாராட்டிக்) கூறும் முற்றிய அழகையுடைய நீலமலர் என்று சொல்லும்படி (இருந்த கண்கள், மலர் அலர்ந்தபின் செவ்வி குலைந்து ஒளிமங்கி வாடுதலைப்போல வாட்டம்) அடைந்ததும், இரும்பால் கீறிச்செய்யப்பட்ட வடுப்போல் விளங்குவதுமான (தன் எழிலை) உண்ட கண்களுக்கும், மற்றுமுள்ள உறுப்புகட்கும் நீ பெறவேண்டிய மிகுதியான. பொன் உண்டு' என்று இனிச்சொல்லுவாய் போலும்!

இரும்பு-கத்தி; 'கரும்புக்குக் கூறுவதை ஒப்புவேன்; ஆனால் கண்களுக்கும், மார்புக்கும் கூறுவதை ஒப்பமாட்டேன்' என்று கூறுகிறாள் தலைவி.

நல்லாய்! இகுளை!கேள்:
ஈங்கே தலைப்படுவன், 'உண்டான் தலைப்பெயின்
வேந்துகோண் டன்ன பல;'

நல்லவளே! இகுளையே! கேள்: (தன் பொருளைத் தின்றவனை எதிர்ப்பட்டால், வேந்தன் (அவனிடத்திருந்து) அபகரித்துக் கொண்டதைப்போன்ற (பலவகைப்பட்ட பலன்களையும்) இப்பொழுதே, இவ்விடத்திலேயே பெறுவேன்.

'உண்டான் தலைப்பெயின் வெந்து கொண்டன்ன பல' என்பது ஒரு பழமொழி; அரசன் பொருளை ஏப்பம்விட்டு அகப்படாமல் திரிந்தவன் எதிர்ப்பட்டால், அவன் பொருள் எல்லாவற்றையும் வேந்தன் அபகரித்து விடுதலைப்போல், அவள் கடமைப் படாத பொன்னையும் வலிதில் அப்பொழுது பெறக்கூடும் என அறிவிக்கிறான் தலைவன். அவள் மன நெகிழ்ச்சியை, அவள் முகக் குறிப்பால் உணர்ந்து, தன் வெற்றிச் செருக்கால் அவன் இவ்வாறு கூறுகிறான். 'இகுளை' என்பது மகளிரை விளிக்கும் சொல்.

ஆங்காக:

(இங்கு இப்பொழுது நீ பெறமுடியாது; என்னை மணந்துகொண்டு பின்னர் அத்தகைய பலன்களை) அப்பொழுது துய்க்கலாம்.

இது தலைவி கூற்று; 'உன் வாய் வீச்சால் நான் மயங்க மாட்டேன்' என்கிறாள் தலைவி.

அத்திறம் அல்லாக்கால், வேங்கைவீ
முற்றெழில் கோண்ட சுணங்கணி பூண்ஆகம்
பொய்த்துஒருகால் எம்மை முயங்கினை சென்றீமோ,
முத்துஏர் முறுவலாய்! நீபடும் பொன்எல்லாம்
உத்தி எறிந்து விடற்கு.

அவ்வாறு இப்பொழுது சிறந்த இன்பத்தை என்னை அடையவிட உனக்கு விருப்பம் இல்லையானால், முத்து வரிசையை ஒத்த முறுவல் பூப்பவளே! நீ எனக்குக் கடன் பட்ட பொன் அனைத்தையும் கழித்துத் தொலைத்து விடுவதற்காக, வேங்கை மலர்களின் நிரம்பிய எழிலைப் போல் நிறங்கொண்ட சுணங்கை அணிகலனாகப் பூண்ட உன் மார்பால் பொய்யாகவாவது ஒரு முறை அணைத்துவிட்டுச் சென்றுவிடுவாய்.

'பொய்த்தொருகால் முயங்கினை சென்றீமோ' என்பது, உண்மையான விருப்பம் இல்லாவிடினும் விளையாட்டாகவாவது அணைத்துக்கொள் என்று தலைவன் கேட்டுக்கொண்டதை உணர்த்துகிறது இவ்வாறு விளையாட்டாகச் செய்தபோதிலும், அவள் இழந்த அழகைப் பெறுவாள். ஆகையால், இது அவள் கடன்பட்ட பொன்னைத் திருப்பித்தரும் (எழில் உடையவளாகத் தலைவனுக்குக் காட்சி அளிக்கும்) நல்ல பயனை உடையது எனக்கூறி, அவளைத் தன் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளத் தூண்டுகிறான் தலைவன்.

நச்சினார்க்கினியர் உரை இக்கலியில் மலிந்திருக்கும் நகைச்சுவையை நன்கு விவரிப்பதால், அதனை இவ்விளக்கத்தில் குறிப்பிடவில்லை.

29. திருந்திழாய் கேளாய்.

—:o:—

தலைவன் தினந்தோறும் இரவில் வந்து தலைவியைச் சந்தித்து மகிழ்கிறான். அவன் விரைவில் மணந்துகொள்ள விருப்பம் உடையவனைப்போல் காட்டிக்கொள்ளவில்லை. இவ்வாறு வரையாமலும், வரைவு முயற்சி தொடங்காமலும் அவன் களவு நீட்டிப்பதைக் கண்டு தலைவி அஞ்சினாள். இதுவரை அலர் தோன்றவில்லை. இனியும் இவ்வாறே மறைபுலப்படாமல் அவனை இரவில் சந்தித்துக் கொண்டிருக்கமுடியும் என் எப்படி நம்பலாம். அவன் அணிமையில் மணந்துகொள்வான் எனத்தெரிந்தாலும்,

பொறுத்துக்கொள்ளத் தகுந்த காரணம் இருக்கும். அவன் வரைந்துகொள்ள விரும்புவதாகவே தோன்றவில்லையே! தலைவி கவலைகொள்ளத் தொடங்கினாள். அவனை வரைவு முயற்சி செய்யத்தூண்ட தோழி ஒரு சூழ்ச்சி செய்தாள். ஓர் இரவு வேண்டுமென்றே குறி தப்பிவிட்டு, அடுத்த நாள், அவன் குறி தப்பியதற்குக் காரணம் கேட்க வந்தபொழுது, அவன் வருகையைக் காணாதவளைப் போலவே, தோழி தலைவிக்குத்தான் குறி தப்ப நேர்ந்த கதையை விவரிக்கிறாள்.

திருந்துஇழாய்! கேளாய்;நம் ஊர்க்குஎல்லாம் சாலும்
பெருநகை அல்கல் நிகழ்ந்தது ஒருநிலையே;

புதுக்கிய அணிகலன்களைப் பூண்டவளே! கேள்; நம் ஊரில் உள்ளவர் அனைவருக்கும் மிக்க சிரிப்பை (விளைவிக்கப்) போதுமான ஒரு வாய்ப்பு நேற்றிரவு நிகழ்ந்தது.

மன்பதை எல்லாம் மடிந்த இருங்கங்குல்
அம்துகில் போர்வை அணிபெறத் தைஇ,நம்
இன்சாயல் மார்பன் குறிநின்றேன் யானாக,

உயிர்ப் பன்மைகள் அனைத்தும் (தூக்கத்தில் ஆழ்ந்து) மடிந்தவற்றைப்போல் இருந்த கரிய நள்ளிரவில், அழகிய துகிலால் ஆகிய போர்வையை நன்றாக உடுத்திக்கொண்டு, நம்முடைய இனிய சாயலைப்பெற்ற மார்பினையுடைய தலைவன் (தன் வருகையை அறிவிக்கச் செய்யும்) குறியைக் கேட்கும் ஆவலோடு நின்றவளாய் நான் இருக்கவும்,

'மின் சாயல்' எனக்கொண்டு மின்னலைப்போல் ஒளிவிடும் அழகிய மார்பையுடையவன் எனக் கூறுவதும் பொருந்தும். தைஇ-அணிந்து; முக்காடிட்டு மூடியிருக்கும்படி போர்த்துக்கொள்ளாமல், உடம்போடு ஒட்ட உடுத்திருந்தாள் என்பதை 'அணிபெறத்தைஇ' என்ற தொடர் குறிப்பிடுகிறது.

தீரத் தறைந்த தலையும்,தன் கம்பலும்,
காரக் குறைந்து, கறைப்பட்டு வந்து,நம்
சேரியின் போகா முடமுதிர் பார்ப்பானைத்
'தோழி!நீ போற்றுதி' என்றி;

மயிர் முழுவதும் வழுக்கை விழுந்து நீங்கியமையால் தட்டையான தலையையும், அதனை மறைக்கப் போர்த்த போர்வையையும் உடையவனாய், கருங்குட்டத்தால் (காலும் கையும்) குறைந்து, (தானம் வாங்குதல் போன்ற) துறையை மேற்கொண்டு வந்து, நம் சேரியை விட்டு நீங்காதிருக்கின்ற முடவனான வயது முதிர்ந்த பார்ப்பானைத் 'தோழி! நீ கவனித்துக்கொள்'. எனப் பலகாலும் எச்சரிக்கை செய்திருக்கிறாய்;

கார்-கருங்குட்டம்; 'காரக்கு' என்பதில் 'அக்கு' சாரியை சாரியையின் ஈறும், ஈற்றயலும் கெட்டு 'கார' என நின்று, 'குறைந்து' என்ற வருமொழியோடு புணர்ந்தது 'சேரியிற் போகா' என்பதனை, சேரியில் ஓயாது அங்குமிங்கும் அலைந்து திரிபவன் என உரைப்பதும் பொருந்தும்.

அவன் ஆங்கே

பாராக் குறழாப் பணியாப் 'பொழுதுஅன்றி,
யார்இவண் நின்றீர்;' எனக்கூறி, பையென
வைகாண் முதுபகட்டின் பக்கத்தின் போகாது,
'தையால்! தம்பலந் தின்றியோ?' என்று, தன்
பக்குஅழித்துக் 'கொண்டீ' எனத்தாலும்,

(நான் காதலன் குறியைக் கேட்க நின்ற) அவ்விடத்தே அவன் என்னைப் பார்த்து, (ஐயம் தோன்றினமையால், சற்று அருகே வந்து) குனிந்து பார்த்து, (பெண் என்று தெரிந்துகொண்டதும் மிக்க மரியாதையோடு) பணிந்து, (மகளிர் வெளிவாராத) 'காலம் அல்லாத காலத்தில் இங்கு நின்ற நீர் யார்?' என்று கேட்டு, வைக்கோல் போரைக் கண்ட கிழக் காளையைப்போல என் பக்கத்தை விட்டு நீங்க மனமில்லாமல் நின்றவனாய் மெதுவாகப் 'பெண்ணே! வெற்றிலை தின்கிறாயா? என்று கேட்டு, தன் வெற்றிலைப் பையை அவிழ்த்து, 'எடுத்துக்கொள்' என்று என்னிடம் அதனைத் தர நெருங்கவும்,

பையென—மெதுவாக; பக்கு—பை;

யாதுஒன்றும்
வாய்வாளேன் நிற்பக் கடிதுஅகன்று, கைமாறி,
'கைப்படுக்கப் பட்டாய்ச் சிறுமிநீ! மற்றுயான்
ஏனைப் பிசாசுஅருள்; என்னை நலிதரின்,
இவ்வூர் பலிநீ பெறுமல்கொள் வேன்'எனப்
பலவும் தாங்காது வாய்பாடி நிற்ப,

நான் எதுஒன்றையும் வாய்விட்டுக் கூறாமல் நிற்கவே, (அவன் பயந்து) திடுமென சற்று நகர்ந்து சென்று, தன் ஒழுக்கத்தை மாற்றி, 'சிறியவளே! நீ என்னால் நன்றாக அகப்படுத்திக் கொள்ளப்பட்டாய்; (ஆனால் நீ பெண் இல்லாத பிசாசாக இருப்பின்) நான் ஆண்பாற் பிசாசு; ஆகவே (என்னை வருத்தாது) அருள் செய்; (என் வேண்டுகோளை ஏற்காது—என்னைப் போகவிடாது—) என்னைத் துன்புறுத்தினால், இவ்வூரில் உனக்கு இடும் பலியை நீ பெறமுடியாமல் நான் அகப்படுத்திக்கொள்வேன்' என்று முரண்பட்ட பல சொற்களைத் (தன் மனக்குழப்பத்தை) தாங்கமாட்டாமல் வாய் குளறிக்கூறி நிற்கவும்,

முதுபார்ப்பான் அஞ்சினன் ஆதல் அறிந்து,யான்
எஞ்சாது ஒருகை மணல்கொண்டு மேல்தூவக்
கண்டே, கடிதுஅரற்றிப் பூசல்தொடங் கினன்ஆங்கே;

கிழப் பார்ப்பான் பயந்தவனாய் இருத்தலைத் தெரிந்து கொண்டு, நான் குறையாமல் ஒரு கை மணலை வாரிக் கொண்டு, அவன்மேல் தூவவும், அதனைக் கண்டு (மேலும் பயந்து) உரத்துக் கூவி அப்பொழுதே (ஊராரைத் தன் உதவிக்கழைக்கக் கத்திப்) பெருங்கலவரத்தை உண்டு பண்ணினான்.

ஒடுங்கா வயத்தின் கொடும்கேழ்க் கடும்கண்
இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுள்ஓர்
ஏதுஇல் குறுநரி பட்டற்றால்; காதலன்
காட்சி அழுங்க, நம்ஊர்க்கு எலாஅம்
ஆகுலம் ஆகி விளைந்ததை என்றும்தன்
வாழ்க்கை அதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
வீழ்க்கைப் பெருங்கரும் கூத்து.

ஒன்றற்கும் நடுங்காத வல்லமையையும், வளைந்த கோடுகளையும், கொடிய கண்களையும் உடைய பெரிய புலியை அகப்படுத்திக் கொள்ளுவதற்காகக் கட்டிய வலையுள் ஓர் ஒன்றுக்கும் உதவாத சிறு நரி விழுந்ததைப்போல, (நமக்கு) காதலனைப் பார்க்கும் மகிழ்ச்சி இல்லாமற் போகவும், நம் ஊரில் உள்ளவர் எல்லோருக்கும் (தூக்கம் கெட்டதால்) துன்பம் நேரவும், எக்காலத்தும் (தனித்து நிற்கும் பெண்களைக் கண்டால் அவர்கள் மேல் விழுதலைத்) தன் தொழிலாகக்கொண்ட கிழப் பார்ப்பான் விரும்பும் பெரிய தண்ணிய கூத்து நிகழ்ந்தது.

கருமை மேகத்திற்கு ஆகித் தன்மையை உணர்த்திற்று; தலைவனை நீக்கி நிறுத்த உதவியதால் இக்கூத்து தலைவிக்குத் தண்ணியதாயிற்று; 'வீழ்க்கை' வாழ்க்கையைப்போல் விரும்பப் படுவதை உணர்த்திற்று'

குறிஞ்சிக்கலி.

நச்சினார்க்கினியருரை.

செய்யுள் க.

இது "நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ் செய்வினை மறைப்பினுஞ் செலவினும் பயில்வினும்—புணர்ச்சி யெதிர்ப்பா டுள்ளுறுத்துவரூஉ—முணர்ச்சி யேழினு முணர்ந்த பின்றை"த் தன்னை அவள் மறையாமை காரணமாக "மெய்யினும் பொய்யினும் வழி நிலை பிழையாது பல்வேறு கவர்பொரு ணாட்டத்தாற்" றலைமகட்குத் தோழி கூறியது.

(இதன் பொருள்) கயத்திடத்து நீல மலர் போலும் மையுண் கண்ணினையுடையாய்! யான் கூறுகின்றதனை நின் மனத்தான் ஆராய்ந்து பாராய்! தனக்கு ஒப்பில்லாதான் வலியையுடைய யானை முதலிய வற்றின் அடியைத் தேடுவான் போலே கட்டுதன் மாட்சிமைப்பட்ட கண்ணியை யுடையனாய், வில்லை யுடையனாய் வரும்; அங்ஙனம் வந்து என்னைப் பார்த்துத்தான் உற்ற நோயை மிகவுங் குறிப்பாலே யான் உணரக் காட்டுவதன்றிக் கூற்றாற் கூறானாய்ப் பல நாளும் மீண்டும் போம்; அது கண்டு அவனையன்றி அவனிடத்து மிகவும் உறவில்லாத யானும் அவன் என் செய்கின்றா னென்னும் நினைவு மிக்குத் துயில் பெறேனாய் வருத்தத்திலே விழுந்து அழுந்துவேன்; அவ்விடத்து அவனாயிற் றன் குறையை நம்மெதிர் நின்று கூறுதலைச் செலுத்தான்; நமக்காயின் நின் வருத்தத்திற்கு யாமும் வருந்தினே மென்றுகூறுதல் பெண்டன்மை யன்று; இங்ஙனம் நின்ற இதனைச் சிறிது நெஞ்சால் ஆராயானாய் இறந்துபடுதலு முண்டாமென்று கருதி, இடையிலே ஒரு நாளிலே என் தோள்கள் மெலிந்து யான் உற்ற வருத்தத்தாலே துணியாத தொன்றைத் துணிதலைச் செய்து ஒரு நாணமில்லாமையைச் செய்தேன்; அஃதியாதெனின், நறிய நுதலினையுடையாய்! தினைப்புனங்களில் இனமாகிய கிளியை விழாமல் ஓட்டி யாம்பாது காக்கும் புனத்துக்கு அயலிலிட்ட ஊசலை ஏறி ஆடாநிற்க, ஒரு நாள் வந்தவனை "ஐயனே! சிறிது பொழுது என்னை ஊசலாட்டு வாயாக" வெனச்சொல்ல, அவனும் அதற்குடம்பட்டுத் "தையால்!

நீ கூறியது நன்'' றென்று ஊசலாட்டா நிற்க, அவன் மார்பின் கண்ணே கை நெகிழ்ந்து வீழ்ந்தேனாக அவன் கருதும்படி பொய்யுண்டாக வீழ்ந்தேன்; அதனை அவன் உண்மையாகக் கருதி, அப்பொழுதே விரைய என்னை யெடுத்து அணைத்துக்கொண்டான்; அவ்விடத்தே என் மெய் வருத்தத்தை யான் அறிந்து மயக்கம் நீங்கி எழுந்திருப்பேனாயிற், பின்னைப் பிறர் அறிவரென்று கருதி விரைய, 'ஒண் குழாய்! நீ போ' வென்று கூறிவிடுங் குணத்தாலே நம் மேலே ஒரு கண்ணோட்டமுடையனாயிருந்தான்; அதனாலே அவன் மேலே மெய்ம் மறந்தேன் போலே கிடந்தேன்; இது காண்;

'மே' லென்றது அவன் மார்பிலென்னும் பொருட்டு. 'தானுற்ற நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்' என்றது தலைவன் இளிவந்தொழுகுதல் காரணத்தான் யானுந் துயருழப்பே னென்றலிற் பிறர் கட்டோன்றிய இளிவரல். அப்பொருளாக அவலச்சுவை பிறந்தது. 'முன்னத்திற் காட்டுதலல்லது' என்றது நிறையுடைமை யென்னும் ஒப்புமை. 'பெண்ணன் றுரைத்த னமக்காயின்' என்பதும் அது.

இஃது 'இயல்' என்றதனாற் பன்னீரடியினிகந்துந் 'தையா னன்'றெனத் தளை விரவியும் வந்த கலி வெண்பா.

இதுவும் வேறு பொருள் நுதலு மென்றலின், வேறு மொரு பொருள் நுதலுமாறு கூறுதும்: 'அறக்கழிவுடையன பொருட் பயம் படவரின்—வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப' என்னும் பொருளியற் சூத்திரத்தால் அறக்கழி வுடையனவாக அவன் மார்பில் வீழ்ந்து 'மெய்யறியாதேன்போற் கிடந்தே' னெனக் கூறினாள். இது பொருட் பயன் தந்தவாறென்னை யெனின், தலைவன் குறையுற்று நின்றமையை முன்னர் மெய்யாக வழி நிலை பிழையாமற் கூறிப், பின்னர்ப் படைத்து மொழிந்து பொய்யே கூறுகின்றாள், வழிநிலை பிழைப்பக் கூறினாள். அது பொருட் பயன் தருதற் கென்க. அஃதென்னை? தலைவன் குறை புலப்படுத்தாது வருந்துகின்ற காலத்து அதனைத் தனக்குப் புலப்படுவித்துக் கொண்டே அவனை ஆற்றுவித்தற் பொருட்டு அறக்கழிவுடையன கூறித், தானுந் தலைவனும் இவ்வாறே செறிந்தமை உணர்த்தலின், மறை புலப்படுத்துங் கருத்தினளாந் தலைவி யென்னும் பொருட் பயன் தந்தே நின்றதாயிற்று. இதனான் இதுவும் 'வழக்கென வழங் கலும் பழித்தன்று' என ஆசிரியரும் அமைத்தார். இங்ஙனம் பொருட்பயன் தருதல் 'நெருந லெல்லை யேனற் றோன்றித்— திருமணி யொளிர், வரும் என்னும் அகப்பாட்டிற் 'சிறுபுறங் கவையின னாக....கை பிணிவிடா' என்ற பொருளானும் உணர்க.

இதனாற் றலைவிக்கு நாணம் பிறந்தது.

செய்யுள் உ.

இஃது இரவுக்குறி வந்து நீங்குந் தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி தலைவியது நிலைமை கூறி அவனை வரைவு கடாவ, அவன் வரைய வருகின்றமை தோழி தலைவிக்கு வரைவு மலிந்து கூறியது.

இமையவில்.................நாடகேள் :—

(இ—ள்) இமயமலை யிடத்துப் பிறந்த மூங்கிலாகிய வில்லை வளைத்த கங்கையான் ஈரத்தையுடைத்தாகிய சடையினையுடைய இறைவன், இறைவியோடே பொருந்தி, உயர்ந்த கயிலை மலையிலே இருந்தானாக, அரக்கர்க் கரசனாகிய பத்துத் தலையையுடைய இராவணன் வரை யெடுத்தற்குக் கையைக் கீழே செருகித், தொடி பொலிவு பெற்ற அத்தடக் கையினாலே அம்மலையை எடுத்த லாற்றாது வருந்துகின்றவனைப் போல, மிகுதியையுடைய புலியினது வடிவையொப்பப் பூத்த வேங்கை மரத்தைப் புலி யெனக் கருவுதல் கொண்டு, அதன் அடியிலே குத்திய மதத்தை யுடைய யானை, நீண்ட பெரிய முழைஞ்சிடமெல்லாம் ஒலிக்கும்படி கூப்பிட்டுத் தன கொம்பை வாங்கமாட்டாதே வருந்தும் நாடனே! யான் கூறுகின்றதனைக் கேள்;

கொடியதாகிய புலியின் உருவையொப்ப வேங்கை பூத்த தென்றதனைக் களவின்கட் பெறுகின்ற இன்பத்தை நீக்குதலிற் கொடியது போற்றோன்றிக் கற்பின் கண் இல்லறப் பயனோடு கூடிப் பேரின்பத்தைத் தருகின்ற வரைவு கடாய கூற்றாகவும், வேங்கையைப் பகையாகக் கருதி அதனோடே பொருத யானையை அக் கூற்றைத் தான் நுகர்கின்ற இன்பத்திற்கு மாறாகக் கருதி அக் கூற்றுடனே மாறுபட்டு வருகின்ற தலைவனாகவும், விடரகஞ் சிலம்பக் கூவுதலை அத் தலைவன் அவ் வொழுக்கத்திற்கு இடையீடு பட்டு வருந்திக் கூறுகின்ற கூற்றாகவும், கோடு புய்க்கல்லாது உழத்தலை அக் கூற்றைப் பகையென்று கொண்ட மனத்தை அவன் கூற்றை நன்றென்று கருதி நீக்க மாட்டாது வருந்து தலாகவும் உள்ளுறை யுவமங் கொள்க. உழப்பவன் போல வென்ற வினையுவமம் பின் வருகின்ற வேங்கையைக் குத்திய யானைக் கோடு புய்க் கல்லாதுழக்குமென்ற உள்ளுறை யுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து அதுவும் உள்ளுறை யுவமம் போலத் திணையுணர்த்தலைத் தள்ளாது நின்றது. இது வினையுவமப் போலி. இஃது "உள்ளுறை யுவம மேனை யுவம மெனத்தள்ளா தாகுந் திணையுணர் வகையே" என்னும் அகத்

திணையியற் சூத்திரத்தினும், "உடனுறை யுவமஞ் சுட்டு நகை சிறப்பெனக் "கெடலரு மரபினுள்ளுறை யைந்தே" என்னும் பொருளியற் சூத்திரத்தினும் யாங் கூறிய உரையான் உணர்ந்து கொள்க. மேலும், இத்தொகையுள், ஏனையுவமமும், வருதும், ஏனையுவமமும் உள்ளுறை யுவமத்திற்குச் சிறப்பு கொடுத்துத் திணையுணர்த்தலைத் தள்ளாது நிற்கும் பாட்டுக் கட்கெல்லாம் இச் சூத்திரங்களே விதியாகக் கொள்க. "நன்றே" என்னுங் குறுந் தொகையும் அது.

இது தரவு.

ஆரிடை................லுரைத்தைகாண் :—

(இ-ள்) நீரற்ற நிலத்திற் பயிர் போல நின் அளிபெருமற் பொலி வழிந்தவள், நீ வருதற்கரிய இடமென்று கருதாயாய் ஆண்டுள்ள பாம்பை அஞ்சாயாய் வர, விடியற்காலத்தே மழையைப் பெற்ற நிலத்திற் பயிர்போல அழகுபெறும்; இனி, அங்ஙனம் பெற்ற அழகு இவளை விட்டு நீங்காமல் நிலை பெற்று நிற்கும்படி காப்பதொரு கூறுபாடு உண்டாகில் அதனை எங்களுக்குக் கூறிக் காண்;

'வந்தக்ககால்', காலீற்று வினையெச்சம்; உரைத்துக்காணென் பது 'உரைத்தைக்கா' ணென வினைத்திரி சொல்லாயிற்று.

இருளிடை...................லுரைத்தைக்காண்:—

(இ-ள்) கைப்பொருள் இல்லாதான் இளமைபோல நின் அளி பெருமற் பொலி வழிந்தவள், நீ இருளிடத்தில் இராவென்று கருதாயாய் ஆண்டுவரும் ஏதத்திற்கு அஞ்சாயாய் வர, விடியற் காலத்தே அருளுதலை வல்லவனுக்கு உண்டாய ஆக்கம்போல அழகு பெறும்; அங்ஙனம் பெற்ற அழகு பிறரான் வந்த அழகென்று புறஞ் சொல்லுதலைப் போக்குவதொரு பொருளுண்டாகில் அதனை எங்களுக்குக் கூறிக்காண் ;

மறந்திருந்தா..................லுரைத்தைக்காண் :—

(இ-ள்) தரும நெறியைப் பொருந்தாமல் வறிதே மூப்பினை எய்தியவன் மறுமைச் செல்வத்திற் பொலிவிழந்தாற்போல நின் அளிபெருமற் பொலி வழிந்தவள் கொலைத் தொழிலிற் குறை வின்றித் திருந்திய கானவரென்று கருதாயாய் அம்மலைச் சாரலி லுண்டாகிய வழிக்கண் வந்த இடத்து அவ்வரவினாற் பெற்ற முயக்கின்பத்தாலே, விடியற்காலங் கூறுபாடுடையவனுடைய செல்வப் பொலிவுபோல அழகுபெறும்;அங்ஙனம் பெற்ற அழகால்

அயலவர் கூறத்தக்க புறங் கூற்றுரையை மாற்றத்தக்கதொரு பொருளுண்டாகில் அதனை எங்களுக்குக் கூறிக் காண்:

'பொரு' ளென்றது ஆகு பெயர்

இவை மூன்றும் தாழிசை.

எனவாங்கு :—

(இ-ள்) என்று; 'ஆங்கு' அசை

இது தனிச் சொல்.

நின்னுறு.....................கோளற்கே :—

(இ—ள்) நின்னுடைய மிகுதலையுடைய வருத்தத்தையான் கூறக் கேட்டு நல்ல மலைநாடன், தோழி! வேங்கை அலர்கின்ற காலத்தைப் பார்த்துப் பெருத்த இறையினையுடைய பணைத்தோளை வரைந்து கோடற்கு வரும்.

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

இஃது 'ஐயிரு தலையி னரக்கர் கோமா'னென ஆசிரியத் தளையும் வந்து பதின்றேழுத்தான் வந்த அடிபெற்ற ஒன்பதடித் தரவும் நான் கடித் தாழிசையுந் தனிச் சொல்லும் இயலென்ற இலேசால் தரவின் உள்ளுறைப் பொருளையுங் கொண்டு நின்ற நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

செய்யுள் ரு.

இது "முன்னிலை யறனெனப் படுதலென் றிருவகைப்— புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்" என்னும் விதிபற்றித் தமர் வரைவு மறுத்துழித் தோழி தாயர்க்கு அறத்தொடு நிற்ப, அவள் நற்றாய்க்கு அறத்தொடு நிற்ப, அவள் தன்னையர் முதலியோர்க்கு அறத்தொடு நிற்ப, அவரும் ஒருவாற்றான் உடன்பட்டமை தோழி தலைவிக்குக் கூறித் தானும் அவளும் வரைவு கடிதின் முடிதற் பொருட்டு வரையுறை தெய்வத்திற்குக் குரவையாட அவன் வரைய வருகின்றமை தோழி தலைவிக்கு உரைத்தது.

காமர்.................பெருமையளே :—

(இ—ள்) எம்மோடே கூடி விருப்பத்தையுடைய கடிய நீரையாடுகின்றவள் கால் தளர்ந்து அஞ்சித் தாமரை போலுங்

கண்ணைப் புதைத்து அந்நீரோடே போகையினாலே தனக்குச் சென்ற அருளினாலே நீண்ட சுரபுன்னைப் பூவாற் கட்டின நறிய குளிர்ந்த மாலை அசையும்படி அந்நீரிலே குதித்துப் பூணினையுடைய இவள் மார்பைத் தன் மார்போடே உறும்படி அணைத்துக் கொண்டு கரையிலே போதவிட்டவனுடைய அகன்ற மார்பை இவளுடைய எழுகின்ற முலைகள் கூடினவென்று பிறர் கூறுகின்ற கூற்றாலே என்னுடைய தோழி நமக்கு அரிய மழையைப் பெய்விக்க நாம் விரும்பில் அதனை நமக்குத் தரவல்ல கற்பின் பெருமைய ளாயினாள் ;

அவனுந்தான்..................மகன் :—

(இ—ள்) இவளேயன்றி அவன்றானுந் தினைப் புனத்தி லிட்ட பரணிடத்து எரிந்த அகிலின் புகையாலுண்ணப்பட்டு ஒளி மழுங்கித் திரியும் மதியம் வானிடத்தே சென்று அம்மலைத் தலையிலே தங்கிற்றாயின், அதனை அந்த மலையில் வைத்த தேனினது இறாலென்று கருதி, அதனை அழித்தற்குக் கண்ணேணி முதலியன சமைத்திருக்குங் காடு அகன்ற நாட்டையுடையவன் மகன் ;

மிக்க ஒளியினையுடைய மதி, புகையால் மாசுண்ட தன்மை பற்றித் தங் கையகப்படுத்திப் பயன் கொள்ளக் கருதும் நாட னெனப் புகழ் மிக்க தலைவனும் புனலிடைத் தழுவிப் போதந்த தனாற் சிறிது புகழ் குறைந்தமை பற்றி யாமும் அவன் வரைந்து கொள்ளக் கருதுகின்றேமென உள்ளுறை யுவமங் கொள்க.

இதனாற் றலைவன் தங் குலத்தினும் உயர்ந்தானென்பது தோன்றக் கூறினாள். இது பிறப் பொப்புமை கூறிற்று.

சிறுகுடி.......................லான் :—

(இ—ள்) சிறுகுடியிலுள்ளீர்! சிறுகுடியிலுள்ளீர்! இம் மலையில் வாழ்வார் இங்ஙனம் உதவியார்க்குக் கொடுக்க நினையாது கொடாது மலர்க்குக் கொடுக்க நினைந்து அறமல்லாதனவற்றை விரும்பி ஒழுகு கையினாலே இனி இவ்விடத்து வள்ளியுங் கிழங்கு கீழ்விழா; மலைமிசையில் தேனுந்தொடா; கொல்லையில் தினைகளுங் கதிர் பறிந்து ஈனவாம்;

காந்தள்.......................................கோல் :—

(இ—ள்) காந்தட்பூ மண நாறும், பார்த்தவர்கள் கண்ணைத் தன்னிடத்தே வாங்கிக்கொள்ளும் கரிய மலையிடத்து வளர்ந்த மூங்கில் போலும் மெல்லிய தோளையுடைய குறவருடைய மடப்

பத்தையுடைய மகளிர் தாந்தத்தங் கணவரைத் தப்பாராய் அவரே தெய்வமென்று வணங்கி எழுந்திருத்தலாலே அவர் தம் ஐயன்மார் தாமுந்தாங் தொடுத்த அம்புகள் இலக்குத் தப்பாராயினர்;

என்றது, விளைவின்றேல் வேட்டையாடியும் உணவுண்டாக்குது மென்று கருதில் அதுவுந் தப்புமென்றாளென்றவாறு.

எனவாங்கு :

(இ—ள்) என்று; 'ஆங்கு'; அசை.

அறத்தொடு....................யாய் :—

(இ—ள்.) தமர் வரைவு மறுத்துழி அறத்தொடு நின்ற என் கூற்றைத் தாய் நெஞ்சாறக் கண்டு நற்றாய்க்குத்தான் அறத்தொடு நிற்குங் கூற்றிலே படக்கூற அது கேட்டு அவளும் என் றமையன் மார்க்கு வெகுட்சி பிறவாமற் செலுத்திக் கூறினாள்;

அவருந்....................தலை :—

(இ—ள்) அது கேட்டு அவரும் ஒரு முகூர்த்த மெல்லாம் நெஞ் சுழன்று கண்சிவந்து தெரிந்த அம்புகளையும் பார்த்து வில்லையும் பார்த்து எழுந்து அலமந்து இருவரிடத்துங் குற்றமில்லையா யிருந்த தென்று சினம் ஆறித் தலை சாய்ந்திருந்தார் ;

இஃது அறத்தொடு நிலை வாய்த்தவாறு கூறியது.

தெரியிழாய்........................காண் :—

(இ—ள்) தெரிந்த இழையினையுடையாய்! நீயும் நின் கணவனுங் கூடும்படியாக இவ்வரையுறை தெய்வம் மனமகிழும் படியாம் மகிழ்ந்து குரவையைக் கைகோத்தாடுதற்கு அக்குரவைக் கூத்திற்கொண்டு நிலைச்செய்யுளை நீ பாடிக் காண்;

யாமென்னும் படர்க்கையுளப்பாடு ஆயத்தை உளப்படுத் திற்று.

இது 'நாமக் காலத் துண்டெனத் தோழி-யேமுறு கடவுளேத்' தியது. ஒருவர் கொண்டு கூறுதலிற் கொண்டு நிலையாயிற்று.

நல்லாய்................னர் கொல் :—

(இ—ள்) அது கேட்ட தலைவி, நல்லாய்! நம்மை வரைந்து கொள்ளும் நல்ல நாள் நம்மிடத்தே வருமளவில் நஞ்சுற்றத்தா தம்மலையிடத்து நாணைத் தாங்குவார் தாம் என்ன நல்வினையைச் செய்தார்கொ லென்றாள்;

சுற்றத்தாரிடை வரைதலாற் பிறந்த நாண் தாங்கலரி தென்றாள்.

புனவேங்கைத்.................மன்றே :—

(இ—ள்) புனத்தினின்ற வேங்கைப் பூவிற் பொன் போன்ற தாது உதிரும் பாறையையுடைய முற்றத்தே வெளியிலே உண்டாங் கூட்டமும் ஒப்பில் நடக்குமல்லவோ? அந்நனவிற் புணர்ச்சி நடந்ததாக அப்பொழுதே கனவிடத்தே உண்டாய்ப் போதுங் கூட்டத்தைப் போக்கி விடுவே மல்லவோ?

நனவினும் புணர்ச்சி, கனவினும் புணர்ச்சியென ஆமென்பன வற்றைக் கூட்டுக. 'நடக்கலு' மென்றது உம்மீற்று வினையெச்சம், விரைவு தோன்ற நின்றது.

'வரைவு தலைவரினும், என்பதனாற் றலைவி தன்வயினுரிமையும் அவன் வயிற் பரத்தைமையுந் தோன்றக் கூறினாள்.

விண்டோய்கன்..................மற்கோலோ :—

(இ—ள்) அது கேட்ட தோழி விசும்பைத் தீண்டுகின்ற மலை நாடனும் நீயும் அக்கலியாணத்தே பண்டு கண்டறியாதீர் போல நடந்தீருடைய பழைய உறவை யான் கண்டறியாதேன்போல மிகவும் மறைப் பேனோ? என்றாள்;

ஓகாரங்கள் ஐயம்.

மைதவழ்..................கண்களோ :—

(இ—ள்) மேகந் தவழும் மலையையுடையவனுடைய மணக் கோலங்காணமற் கையாலே புதைத்தலைப் பெறுகின்ற கண்களுங் கண்களென்று கூறப்படுமோ?

என்னைமன்..................யான் :—

(இ—ள்) அது கேட்ட தலைவி யான் நின் கண்ணாலே மிகவுங் காண்பே னென்றாள்.

நெய்த................................மன :—

(இ—ள்) அது கேட்ட தோழி நெய்தலிதழ்போலும் மையுண் கண்ணாகிய நின்கண் மிக என் கண்ணுவதாக வென்றாள் ;

இதுவுந் "தாயத்தினடையா" என்னுஞ் சூத்திரத்தடக்கினும்.

எனவாங்கு :—

(இ—ள்) என்று நாஞ் சொன்ன அக்காலத்தே;

நெறியறி.................ளினியே :—

(இ—ள்) நூனெறியாலே அறிந்த இருவருங் கூடுதற் கேதுவாகிய முகூர்த்தம் வேறுபட்டுத் தப்புதலை ஒரு காலத்தும் அறியாத சுணியை முன்னிட்டு, அழகு மிகுகின்ற தொகுத்துக் கூறுதலையும் வகுத்துக் கூறுதலையும் அறியுஞ் சான்றவர் தனக்குச் சுற்றமாக, மூங்கிலையொக்கும் நம்முடைய மெத்தென்ற தோளிற் பசலையும் ஊரிற் கூறும் அம்பலும் பொய்யாகிய கனவிற் கூட்டமு மெல்லாஞ் சேர நீங்கும்படி நீளிதாய் உயர்ந்த மலையினை யுடையவனும் வந்தான்; நின்னுடைய பூவினது அழகையுடைய கண்ணும் பொலிவதாக என்றாள்;

'கானகநாடன் மகன்' 'எனவாங்கறத்..............யாய்' எனத் தோழி கூறிய விருபாற் குடிப் பொருளைச் செவிலி கூறி அறத்தொடு நின்றாளெனத் தோழி கொண்டெடுத்துமொழிந்தவாறு காண்க.

இதனாற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

தெய்வமஞ்ச லென்பது களவிற்கும் உரித்தாகலிற் றங்குல தெய்வமாகிய வரையுறை தெய்வத்திற்குக் குரவையாடுதல் தலைவிக்கும் உரித்தாகலிற் கொண்டு நிலை பாடினாள். இஃது அறத்தொடுநிலை எழுவகையினுள் ஏத்தலும் எளித்தலும் வந்தது.

இது தரவின் பின் 'அவனுந்தான் ஏனலிதணத்து' என்பது முதலிய கொச்சகங்கள் வெண்பாவாய்ப், 'புனவேங்கை' முதலியன துள்ளலோசை விராய்த் தளை வகை ஒன்றிக் கொச்சகமாய், ஒழிந்த பாவும் மயங்கிச் சுரிதகம் முடுகி வருதலிற் கலிவெண்பா வுறுப்பின் வேறுபட்ட கொச்சகம். "ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினு—மூவகை யடியு முன்னுதலிலவே" என்பதனுள் "முன்னுதலில" என்றதனால் நாற்சீரும் ஐஞ்சீரும் அறுசீருமாகிய மூன்றடியானும் வரும் முடுகியலோடு விராய்த் தொடர்ந்து ஒன்றாய்க் கலிக் குறுப்பாய் வரும் ஆசிரியமும் வெண்பாவும் உளவென்று கொள்க; என்றலின் 'நெறியறி .... முந்துறீஇ' என அறுசீரடி முடுகியலுந் 'தகைமிகு .... ரின்மாக' என ஐஞ்சீரடி முடுகியலும் விராய் ஆசிரியச் சுரிதகம் வந்தது. "முச்சீர் முரற்கையு ணிறையவு நிற்கும்" என்பதனான் 'நின் கண்ணாற் காண்பென்மன் யான்" என முச் சீரடியும் வந்தது.

செய்யுள் ௫.

இது தோழியுந் தலைமகளுந் தலைமகனது மலையை வாழ்த்தில் பாடுகின்ற வள்ளைப்பாட்டில், தோழி இயற்பட மொழியத் தலைமகள் இயற்பழித்தமை தலைமகன் சிறப்புறமாகக் கேட்டு வரைய வருகின்றமை, தோழி தலைமகட்கு உரைத்தது.

அகவினம் .... நாம் :—

(இ—ள்) தோழி! நங்கருத்திற்கு வேண்டியவாறெல்லாம் அழைத்தேமாய்ப் பாடக்கடவேமெனத் தோழி கூற, அது கேட்ட தலைவி அழகு கொண்ட தினைப்புனத்தில் முகத்திற்குப் பொருந்தின கண்ணிணையும் மகிழ்ச்சியைத் தரும் மொழியினையுமுடைய நல்ல மகளிர், நாணி இறைஞ்சும் நிலைபோல முற்றித் தாழ்ந்த கதிரை யுருவி அருப்பு வளர்ந்த சந்தன மரத்தாற் செய்த உரலிலே பெய்து, முத்து நிறைந்த யானைக்கொம்பால் வகுத்த நிறைந்த உலக்கையை என்னிடத்தும் நின்னிடத்தும் உயர்த்திக் குறு நின்று மருந்தில்லாத நோயைச் செய்தவனுடைய பயன் றருகின்ற மலையை வாழ்த்தி நாம் நங்கருத்திற்கு வேண்டியவாறெல்லாம் அழைத்துப் பாடக்கடவேமென்று உடம்பட்டாள்;

அகவுதல் அகவல்போல நின்றது. தோழி கூற்றினைத் தலைவி விசேடித்துக் கூறினாள்; இரட்டிப்பன்று.

மணம் நாறுகின்ற சந்தனத்தாற் செய்த உரலென்றதனாற் பயன் வரைந்து கோடற் பொருட்டுத் தலைவி இயற் பழித்ததாகவும், புலானாற்றத்தையும் முத்தையுமுடைய மருப்பாற் செய்த உலக்கை யென்றதனாற் பயன் வரைந்து கோடற் பயனின்றிப் புகழ்ச்சி மாத்திரையே யாகத் தோழி இயற்பட மொழிந்ததாகவும், இறைச்சியிடத்தே பொருள் பிறந்தவாறு காண்க. இஃது "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே-திறத்தின் மருங்கிற் றெரியு மோர்க்கே" என்னும் பொருளியற் சூத்திரத்தானுணர்க. புலால் நாறும் மருப்பென்றதனால் வரைந்து கோடல் பயவாமையின் இறைச்சியாயிற்று. நோய் செய்தான் மலையாயிருக்கவுந் தினை விளைத்துப் பயன் தருகின்ற அதிசயத்தை ஏத்தி யெனவே தலைவி இயற்பழித்தாளாயிற்று.

ஆய்நுதல் .... பாடித்தை :—

(இ—ள்) அழகிய நுதலினையும், அழகு பெறுத்துகின்ற குழலினையும், அழகிய மூங்கில் போலும் பெருமையினையுடைய மெல்லிய தோளினையுமுடைய பூமணம் நாறும் கதுப்பினையுடை

யாய்! மூங்கில் ஒலிக்கின்ற முழைஞ்சையுடைய மலையை முன்பு போலன்றி நீ இயற்பட ஒன்றுபாடு, பின்னர் யானும் இயற்பட ஒன்று பாடுவேனெனத் தோழி கூறினாள்;

'பாடித்தை': முன்னிலை வினைத்திரி சொல். 'எத்துகு': தனித்தன்மை முற்று.

தலைவி இயற்படப் பாடாமையின் மேற்றோழி பாடுகின்றாள்.

கோடிச்சியர்.................மலை :—

(இ—ள்) தன்னைச் சேர்ந்தாருடைய வருத்தத்தைப் போக்குவானுடைய மலை, கையிரண்டையுங் குவித்துக் கொடிச்சியர் தங்குறை தீர முருகன் உறையும் மலையைத் தொழுகின்ற கைகள் போல, உயர்ந்த நறவினையுடைய கொத்துக்கள் அசையுங் காந்தளிடத்து வைத்த தேன் ஒழுகும்படியாக, அக்காந்தள் அசையா நிற்கும்;

மலை காந்தள் அசையுமென இடத்து நிகழ் பொருளின் றொழில் இடத்திற்கு ஏறி நின்றது.

இதனாற் றெய்வத்தைத் தொழும் கருத்தில்லாத காந்தளுந் தெய்வத்தைத் தொழுவது போல நில்லா நின்றது; நீயும் வரைந்து கோடற்குக் குல தெய்வமாகிய முருகனைத் தொழுவாயாக வென இயற்பட மொழிந்தாள். காந்தளிற் றேன் பயன்படாமற் சொரிகின்றாற் போல, நீயுந் தெய்வத்தைத் தொழாவிடின், நின் நலனும் பயன்படாமற் கழியுமென இஃது உள்ளுறை யுவமமாயிற்று.

கல்லாக்.............மலை :—

(இ—ள்) தான் கூடின மகளிருடைய இயற்கை நலங்கெடின் அவரினும் வருத்த முறுகின்றவனது மலை, கடுவன் களவொழுக்கம் ஒழிந்து வரைந்து கொள்ளும் நிலைமையைக் கற்றுத் திரட்சி மிக்க சுற்றத்திடத்தே சென்று மகட் பேசுவார்போல மெல்லிய விரலையுடைய மந்தியை எனக்குத் தர வேண்டுமென்று தன் குறையைச் சொல்லும் தன்மையினை யுடைத்து;

நந்தெய்வ வழிபாட்டாற் களவொழுக்கம் ஒழிந்து நம்மை வரைந்து கொள்ளத் துணிந்து நஞ்சுற்றத்தாரிடத்தே சென்று தன் குறைகூறுவனென்று உள்ளுறையுவமங் கொள்க.

புரிவிரி.................பாடுவாம் :—

(இ—ள்) முறுக்கு விரிந்த கொம்பு மறைந்த நெருங்கின பூத்தாழ்ந்த சினையிற்றதைந்த, தளிரை யொத்த அழகையுடைய மேனி அழகு கெடும்படி நமக்கு நோயைச் செய்தவனுடைய

ஏறுதற்கரிய உச்சி மலைகளையுடைய பக்க மலைகள் நாம் இனிப் பாடுங்கால் இயற்பட மொழிதலை அழித்து இயற்பழித்தலாகிய ஒன்றைப் பாடுவேம் ;

பூத்தாழ்ந்த தளிரெனவே சுணங்கும் மாமை நிறமுங் கூறிற்றும்.

விண்டோய்....................மலை :—

(இ—ள்) பெண்டிருடைய நலத்தை நுகர்ந்து, தண்ணிய மலைச்சாரலிடத்துத் தாதை உண்ணும் வண்டு அப்பூவைத் துறக்குமாறு போல, அவரைத் துறக்கின்றவன் மலையாயிருந்தே யும், விண்ணைத் தீண்டும் மலையிடத்தே தெய்வ மகளிர் பந்தடித்த இளைப்புப் போகத் தண்ணிய தாழ்ந்த அருவியிலே ஆடுவர் ;

இது தகாத தொன்றெனத் தலைவி இயற் பழித்தாள்.

ஒடுங்கா......................மலை :—

(இ—ள்) தன்னைச் சேர்ந்தாரிடத்து நின்றும் நீங்கே மென்றிருப்பானுடைய மலை, மடிந்திராத அழகையுடைய யானை தான் விரும்பின பிடிக்கு உண்டான முற்பட்ட சூலான் உண்டான வயா நோய்க்கு மனம் பொருந்தி இனிய கண்ணிடத்தே தோன்றின நெடிய கிளைகளையுடைய கருப்பங்கோலை முறியா நிற்கும்;

இது தோழி இயற்பட மொழிந்தது. நம்மை முயன்று வரைந்துகொண்டு நம் வயாவிற்குத் தன் மனம் பொருந்தி நாம் விரும்புவன வற்றைத் தந்து மனக்குறை தீர்ப்பானென உள்ளுறை யுவமங்கொள்க.

எனநாம்................வோனே :—

(இ—ள்) என்று நாந் தன்னுடைய மலையைப் பாட, மலை கிழவோன் விருப்பம் வந்து கேட்டு மெய் நிறை உவகையனாய் அருளிக் கனவிற் புணர்ச்சியாதலின் முயங்கியமையாத மெல்லிய முலையினையுடைய ஆகம் அழகு பெறும்படி நீ தலைமையை யுடையையாக வேண்டி வரைவொடு புகுந்தான்;

நமக்குப் பேரின்பத்தைத் தருகின்ற இக்களவொழுக்கம் இவட்குத் துன்பத்தைச் செய்தலின் இங்ஙனம் இயற்பழித்தா ளென உட்கொண்டு வரைவொடு புகுந்தானாதலிற் றலைவி இயற் பழித்தலே வரைவிற்குக் காரணமாயிற்று.

'உயர் மொழிக் குரிய வுறழுங்கிளவி, யையக் கிளவி யாடூஉவிற் குரித்தே' என்பதனாற் றோழி உறழ்ந்து கூறினாள்.

இதனாற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

இது தாவுங் கொச்சகங்களுங் கொச்சக வெண்பாக்களுந் தனிச் சொல்லுஞ் சுரிதகமும் பெற்றுவந்த கொச்சகக் கலி.

செய்யுள் ரு.

இஃது இருவரும் இவ்வகையாற் பாடிய வள்ளைப் பாட்டுத் தலைவன் சிறைப்புறமாகக் கேட்டு, வரைவு வேண்டிவிடத் தந்தையும் வரைவுடம் பட்டமை தோழி தலைவிக்கு உரைத்தது.

பாடுகம்..................பாடுற்று :—

(இ — ள்) தோழி! வாழ்வாயாக! நாம் பாடுவேமாக வா; எங்ஙனம் பாடுவே மென்னில், வாழ்வாயாக தோழி! இருவரும் அசைகின்ற மூங்கிலினது நெல்லைப் பாறையாகிய உரலிலே பெய்து, வலியினையுடைய யானைக் கொம்பு உலக்கையாகக் குற்று, நல்ல சேம்பினது இலை சுளகாகப் புடைத்துப் பாடுவேமாக;

'வா' வென முன் கூறியதனைப் பின்னர் விசேடித்துக் கூறினாள். இதில், 'நற்றோழி'யென நின்ற சொல்லை 'மலைகெழு வெற்பனைப் பாடுகம் வா' வென மேல் வருகின்ற உறுப்போடுங் கூட்டுக.

செய்தெனெச்சங்கள் எதிர்காலத்துப் பிறந்த செயவெனெச்சங்களாம்.

உயர்ந்த மூங்கிலின் நெல்லுத்தானே உதிர்ந்ததனை எடுத்துக் கொண்டு உரலிற் பெய் தென்றதனால் உயர்ந்த தலைவனைத் தெய்வந்தானே கொண்டு வருதலின் அவனை நம் வயத்தனாக்கினே மென்றும், வள்ளைப் பாட்டிற்கு ஏதுவாகிய கோடு உலக்கையாக என்றதனாற் கோடு நெல்லைப் பயன்படுத்தினாற்போல நம் வரைவு கடாவலால் இத்தலைவனை இல்லறப் பயனை எய்துவிக்கின்றே மென்றுஞ், சேம்பிலை புடைத்தற் றொழிலை முற்ற முடித்து அரிசியை ஆக்காத தன்மைபோல இக்களவொழுக்கத்தால் அவன் வரைந்து கோடலை முற்ற முடியாதிருக்கின்றே மென்றும் இறைச்சி பொருட் புறத்தாய் நின்றவாறு காண்க.

இடியுமிழ்..................டுற்று :—

(இ—ள்) நற்றோழீ! இடிபடுதலுற்று நெருப்பை யுமிழ்ந்து ஒலிக்கும் எங்குங் கலந்த பெயலாலே இருண்ட நடுநாளிலே ஒழுங்குவிட்டு மின்னுண்டாக்கின ஒளியிலே பிடியுடனே வந்து

புன்செய்யிலே மேயும் யானைகளினுடைய அடிகள் நடக்கின்ற நடையின் ஓசையைக் கேட்ட கானவன் உயர்ந்த மலையில் ஆசினிப் பலாவின்மேல் இட்ட பரணிலே ஏறிக்கடிய விசையினையுடைய கவணையிற் கல்லை எறிகையினாலே அக்கல்லு முறிந்த வரையிடத்து நின்ற வேங்கையினது ஒள்ளிய பூக்களைச் சிதறி, ஆசினிப் பலாவினது மெதமெதன்ற பழம் நெகிழ்ந்தவற்றை உதிர்த்து, தேனினம் வைத்த இறாலைத் துளையுண்டாம்படி உருவி, நறிய வடுவையுடைய மாவினது பசிய கொத்துக்களை உழக்கிக், குலையுடைத்தாகிய வாழையினுடைய கொழுவிய மடலைக் கிழித்துப் பலாவினது பழத்துக்குள்ளே தங்குஞ் சிறிய மலைகள் பொருந்தின பெரிய மலையினை யுடையவனைப் பாடுவேமாக வா;

'பலவின் பழத்துட்....தோழி' என்றது உறு பெயர் கேட்டலென்னும் மெய்ப்பாடு முன்பு பிறந்தது.

இயக்கங் கேட்ட கானவன் கல் கைவிடுதலைத், தலைவன் பின் வழி காட்டவந்து தலைவியோடு புணர்ந்த நிலைமை அலர் கூறக் கேட்ட செவிலி தன் மனையிடத்தே வெளியாக இருந்து கடுஞ் சொற் சொல்லி இற் செறித்தலாகவும், அக்கல்லு வேங்கையினது செவ்விய பூவைச் சிதறின தன்மை, தலைவன் இன்பம் நுகர்கின்ற மனவெழுச்சியைக் கெடுத்ததாகவும், ஆசினிப் பழத்தைப் பயன் படாமல் உதிர்த்த தன்மை, அவன் நுகர்கின்ற இன்பத்தைக் கெடுத்ததாகவும் அஃது இறாலிற்றேனைப் பயன் படாமை உகுத்த தன்மை, தலைவி நலந் தலைவற்குப் பயன் படாமற் கெட்டதாகவும், அது மாவின் குலையைச் சிதறுவித்த தன்மை, ஆய வெள்ளந் தலைவியோடு கூடி விளையாடாமல் நீங்கினதாகவும், அது வாழை மடலைக் கிழித்த தன்மை. தோழியை வருத்தினதாகவும், அது பலவின் பழத்துட்டங்கின தன்மை, அக்கடுஞ்சொற் றலைவி நெஞ்சத்தே தங்கினதாகவும் உள்ளுறை யுவமங் கொள்க.

இலங்கு.................மலை :—

(இ—ள்) நற்றோழி! நீ வாழ்வாயாக; தோழீ! தான் சூளுற்ற சூளுறவினைப் பாதுகாவாதொழிப் பொய்த்தவனுடைய மலையாயிருந்தும் வீழ்தலுற்று விளங்கும் அருவியை யுடைத்து, மழை பெய்தலால் விளங்கும் அருவியை யுடைத்து ;

இஃது என்ன வியப்போ வெனப் பொருட் புறத்தே இறைச்சி தோன்றிற்று.

இஃது "இறைச்சிதானே பொருட் புறத் ததுவே" என்பதனாற் கொள்க. இருகால் 'அருவித்' தென்றது அருவிப் பன்மை நோக்கி.

இது மெய்யைப் பொய்யாகக் கோடலிற் பொய்யாக் கோட லென்னும் மெய்ப்பாடு. அவைதாம் மழை பெய்து வந்த அருவி யென்று அதனைப் பின்னர் விசேடித்தாள். அது கேட்ட தோழி,

பொய்த்தற்......................யற்று :—

(இ—ள்) தன் சூளுறவினைப் பொய்யாக்குதற்கு உரியனோ? பொய்யாக்குதற்கு உரியனோ? நீ அஞ்சுதலைப் பரிகரியென்று தான் சொல்லப்பட்ட மகளிரைப் பாதுகாவாது விடுதற்கு உரியனோ? மலையகன்ற கன்னாட்டை யுடையவன் கூறிய மெய்யிலே பொய் தோன்றுமாயின், திங்களிடத்தே தீத் தோன்றின தன்மைத்து, அங்ஙனங் கூறாதே கொள்;

தோற்றுதற்கு இருகாற் கூறிப் பின் விசேடித்துக் கூறினாள்.

இளமழை.................குன்று :—

(இ—ள்) என் முன் கையில் வளை கழலும்படியாக என்னிடத்து வாராதவன் மலையாயிருந்தும் இளமழை உலவா நிற்கும்; இளமழை உலவா நிற்கும்; அதுதான் ஒரு காலத்து உலாவுதலின்றி நாடோறும் உலவாநிற்கும்;

கருத்தங்கி வந்து சூன் முதிர்தற்கு மலையில் பெய்கின்ற மழை யென்பது தோன்ற 'இளமழை' யென்றாள்.

இஃதென்ன வியப்போவெனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று. இது தலைவி கூறியது. மேல் தோழி கூறுகின்றாள்;

வாரா.................தற்று :—

(இ—ள்) நின்னிடத்து வாராதே ஆற்றியிருப்பானோ? வாராதே ஆற்றியிருப்பானோ? இருக்கு மதுவுமன்றி அம்மலை நாடனுடைய அருளிடத்தே இத்தன்மையவாகிய கொடியவை தோன்றுமாயின் நிழலையுடைய குளத்துள் நீரினின்ற குவளை வெந்த தன்மைத்து; நீ அங்ஙனங் கூறாதே கொள்;

'நீருட் குவளை வெந்தற்' றென்றது மருட்கையுவமம். நிழற் கயத்துள் வேவன இன்மையின் அற்புதமாயிற்று. இஃது உலக நடையிறந்த தோர் உவமை கூறி அதனோடு தலைவன் ஈரத்தினை ஒப்பித் தலிற் பெருமை பற்றி வந்தது. இனி அது கேட்ட தலைவி கூறுகின்றாள்.

மணிபோலத்......................மலை :—

(இ—ள்) என் மேனியைச் சேராதே துறந்தவனுடைய மலையாயிருந்தும் நீல மணி போலத் தோன்றும்; நீல மணி போலத் தோன்றும்; கழுவாத நீல மணி போலத் தோன்றும்;

இஃதென்ன வியப்போவெனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று. கொண்ட வெப்பத்தான் உலராது மழை பெய்து நிறம் பெறுதலின் மணி போலத் தோன்றுமென்றாள்;

துறக்குவ.................யற்று :—

(இ—ள்) நம்மைக் கை விடுவான் அல்லன்; கை விடுவான் அல்லன்; ஒன்றோடொன்று தொடர்ந்த சிறு மலைகளையுடைய வெற்பையுடையான் கை விடுவான் அல்லன்; அவனோடு கொண்ட உறவின் கண்ணே இத்தன்மையவாகிய கொடியவை தோன்றுமாயின் ஆகாயத்திற் றிரியும் ஞாயிற்றுள்ளே இருள் தோன்றிய தன்மைத்து; நீ அங்ஙனங் கூறாதே கொள்ளெனத் தோழி கூறினாள்;

இது மருட்கையுவமம்.

எனவாங்கு :—

அசை.

நன்ற.................வோற்கே :—

(இ—ள்) தோழி! நம் வள்ளைப் பாட்டிடத்தே நாம் பொருந்திப் பாட நம்மென்றோட்கு உரிமையை யுடையவனும் மறைந்து நின்று கேட்டு அருள் பண்ணி வரைவு வேண்டி வந்தனன்; உன்னுடைய தந்தை மணத்தையுடைய வேங்கைக் கீழே இருந்து அம்மலை கிழவோனுக்கு மணஞ் செய்தலை விரும்பிக் கூறினான்; ஆதலால் நமக்கு நன்மை யுண்டாகா நின்றது; இனி நீ வருந்தாதே கொள்;

இதனாற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது. இதன் இடைப்பாட்டுக்கள் "வரைதல் வேண்டித் தோழி செப்பிய புரைதீர் கிளவி புல்லிய வெதிரும்" என்பதனான் இயற்பழிக்க இயற்பட மொழிந்தனள்.

இது தரவும் ஐஞ்சீரடி வந்த கொச்சகமுங் கொச்சக வெண்பாக்களுந் தனிச் சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வந்த கலி வெண்பாவின் வேறுபட்ட கொச்சகக் கலி.

செய்யுள் கூ.

இது முன்பு பெற்றவழி மலிந்ததனைப் பின்பு பிரிந்த வழிக் கலங்கிக் கூறியது. என்னை? தலைவன் அருமை செய்தயர்த்தவழித் தோழி தலைவியை ஆற்றுவித்தற் பொருட்டுத் தலைவனை இயற்பழிப்பத் தலைவி இயற்பட மொழிந்ததனைச் சிறைப்புறமாகக் கேட்டுத் தலைவன் முன்னொருகால் வந்து சிறுபுறஞ் சாரத்தான் ஆற்றினமை குறித்துப் பின்னொருகால் அவ்வாறு பாட அவன் சிறுபுறஞ் சாராமையிற் கலங்கி நெஞ்சொடு கூறியதாகலின்.

மறங்கோ....................வா :—

(இ—ள்) மறத்தைத் தன்னிடத்தே கொண்ட பெரியதாகிய புலியினது பழைய மாறுபாட்டைக் கெடுத்த, முறம்போலுஞ் செவியையுடைய யானை, தனக்கு முன் நின்ற குளகைத் தின்று ஒலிக்கின்ற வெள்ளிய அருவி நீரைப் பருகி, அஃது ஒலுறுத் துதலாற்றுயில் கொள்ளும் பெருக்கின்ற கரிய சோலையினையுடைய நல்ல மலைநாட்டையுடையவன் நாம் வருந்த நம்மை மறந்தான், இனி அவன் மறப்பானாக; இகுளையே! ஆராய்ந்து பார்க்கின், நாம் நமக்கு அவன் சிறந்த படியை மீளவும் அறிந்தோம்; இனிக் கொன்ற யானையின் கொம்பாலே மூங்கில் நெல்லைக் குறுதற்கு நாம் அவன் செய்த கொடுமையின் கூற்றை வள்ளைப் பாட்டாகப் பாடுவேமாக வாவெனத் தோழி இயற்பழிக்க, அதுகேட்ட தலைவி தான் இயற்பட மொழிவாளாகக் கருதி, ஏடி! நீ கூறியவாறன்றி அவன் திறத்தை நாம் வள்ளைப் பாட்டாகப் பாடுவேமாக வாவென்றாள்;

'மறக்க'; வியங்கோள். 'மறந்தான் மறக்க' வென்றது அருமை செய்தயர்த்தலை. 'இகுளை,' 'ஆயின்' என்பனவற்றை முன்னே மாறிக் கூட்டுக. 'எல்லா' வென்பதனைப் பின்னே கூட்டுக.

'முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொனிலைக் குரி மரபினிரு வீற்று முரித்தே' என்பதனான். 'எல்லா' வென்றாள். 'குறுவாம்'; வினையெச்சமுற்று.

'நாட'னென்றதனால் நாமும் அயலார் கூறும்பழைய அலரைக் கெடுத்துத் தன் மனத்து உளவாகிய நுகரும் பொருள்களை நுகர்ந்து தானுஞ் சுற்றமும் புகழ்ந்து கூறத் தன் இல்லின்கண் நாம் இருக்கும் நிலைமையை நிகழ்த்தாது நாம் வருந்த நம்மை மறந்தானென்று உள்ளுறை யுவமங் கொள்க. 'கிழவோட் குவம மீரிடத்துரித்தே' என்னும் உவமவியற் சூத்திரத்துச் சிறுபான்மை. குறிஞ்சி முதலியவற்றிற்கும் உவமப் போலி கொள்க

என்றலிற் குறிஞ்சியில் உவமப் போலி கொண்டார். 'தோழியுஞ் செவிலியும் பொருந்து வழி நோக்கிக்—கூறுதற்குரியர் கொள் வழியான' என்பதனாற் றோழி உவமப் போலி கூறினாள். இது பயவுவமப்போலி. இந்நிலத்து முன் உள்ளுறை கூறியவற்றிற்கும் பின்னர் உள்ளுறை கூறுகின்றவற்றிற்கும் இதுவே விதியாகக் கொள்க.

காணிய..................மலை :—

(இ—ள்) வாழ்வாயாக தோழி! நம்மை அருளாத கொடுமைக்கு நாணுதிருக்கின்றவனுடைய நாட்டின் மலையாயிருந்தும் பக்க மலையிலே தாழ்ந்து ஒளியையுடைய நிறத்தைக் கொண்ட அருவியை யுடைத்தாயிரா நின்றது; இதற்குக் காரணத்தை நம் மன்றான் ஆராய்தற்கு வா! வெனத் தோழி இயற்பழித்தாள்;

ஆற்வுற்றர்..................தவன் :—

(இ—ள்) ஒரு கூற்றிற் சாயாத நடுநிற்குந் துலாக்கோல்போல ஓர்தலுற்று அறத்தையே விரும்பின நெஞ்சத்தை அழியும்படி விடுவனோ? விடான்காண்! எனத்தலைவி இயற்பட மொழிந்தாள்.

தண்ணறுங்......................மலை :—

(இ—ள்) நம்மை அருளி இல்லறப் பயனை ஆளாமற் பயனின் மையை ஆளுகின்றவன் நாட்டு மலையாயிருந்துந் தண்ணிய நறிய கோங்கு பூத்த பக்கமலையெல்லாம் பொன்னாற் செய்த பல ஆரம் அணிந்த யானைகள் போலச் சிறந்து தோன்றும்; இதற்குக் காரண மென்? எனத் தோழி இயற்பழித்தாள்;

'அருளா' வென்பது செய்யா வென்னு மெச்சம்.

கூருநோய் ....யவன் :—

(இ—ள்) தன் கொடையை விரும்பி வந்தோர்குத் தேரைக் கொடுக்கும் வளவிய கையை யுடையவன் நம் மாட்டுத் தன் மலையின் நீரினும் மென்மையை யுடையவனாதலால் வரையாமல் நமக்கு மிகுகின்ற நோய் நம்மைப் பொருந்த விடுவனோ? விடான்; வரைவ னெனத் தலைவி இயற்பட மொழிந்தாள்;

வரைமிசை..................குன்று :—

(இ—ள்) பூண் நெகிழ்ந்து விழும்படி நம்மை வருத்த முறுத்தி னோன் குன்றாயிருந்தும், பக்க மலைகளின் மேலே வைத்த தேனை இடத்தேயுடைய இருல் மழையிலே நுழைகின்ற மதியைப் போலத் தோன்றா நிற்கும்; இதற்குக் காரணம் என்? எனத் தோழி இயற் பழித்தாள்;

இதுதேன் பயன்படுதல் கூறினாள். இதன் கட்டோழி இயற் பழித்தன எல்லாம் பொருட்புறத் திறைச்சி தோன்றியவாறு காண்க.

எஞ்சா....................டவன் :—

(இ—ள்) இங்ஙனந் தோழி இயற்பழித்ததற்குப் பொருளாய், ஏடி! ஒழியாமல் அவன் கொடுமையைக் கூறுதே கொள், என் நெஞ்சைத் தன் அன்பாற் பிணித்தல் கொண்டவன் பிறர் அஞ்சுங் கொடுந்தொழிற்கு அஞ்சாத அறன் இல்லாதவன் அல்லனெனத் தலைவி இயற்பட மொழிந்தாள்;

என்றியாம்................பசப்பு :—

(இ—ள்) என்று தன் நெஞ்சுடனே முன் மொழிந்து பின்பு யாங்கள் பாட மறைந்து நின்று கேட்டனனாய், மென்மையால் இனிய மார்பினை யுடையான் தாழ்ந்த கரிய கூந்தலையுடைய என் றோழியை எனக்கு அவள் வரவு கூறாமற் கையைக் கவித்து, என் சிறிய புறத்தைச் சேர என்னுடைய ஆராய்ந்த இழையினையுடைய மேனியிற் பசப்பு ஞாயிற்று முன்னர் நின்ற இருள்போலக் கெட்ட தென்று யாம் அவ்வாறு பாடவும், அவன் சிறுபுறஞ் சாராமையின் நம் மேனியிற் பசப்பு மாயாமல் நின்றதெனப் பிரிந்த வழிக் கலங்கினாள்.

இது 'சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொளியற்கை— புல்லிய கிளவி யெச்சமாகும்' என்பதனாற் கூற்றெச்சம்.

இதனால் உயிர்ப்பென்னும் மெய்ப்பாடு தலைவிக்குத் தோற்றிற்று.

இஃது ஐஞ்சீரடியுஞ் சொற்சீரடியும் வந்த தரவு வந்து ஏனைய வெண்பாவாய் வந்த கலிவெண்பா.

செய்யுள் எ.

இது வரைவு நீட ஆற்றாளாயின விடத்துத் தோழி தானுந் தலைவியும் வள்ளைப் பாடலுள் முருகனைப் பாடுவார்போல இருவர்க்கும் ஏற்பத் தலைவனைப் பாடத் தலைவி ஆற்றினமை தோழி தன்னுள்ளே கூறுவாளாய்த் தலைவன் சிறைப் புறமாகக் கூறியது.

வேங்கை....................நாம் :—

(இ—ள்) தையலாய்! நாம் இருவேமும் ஐவனமாகிய வெண்ணெல்லைப் பாறையாகிய உரலிலே சொரிந்து, புலியைக் கொன்ற மதத்தான் மயங்கின புகரையுடைய யானையினது

தலையேந்தின கொம்பாலும் இனமான வண்டுகள் ஒலித்துத் தாதை ஊதுஞ் சந்தன மரத்தினாலும் பண்ணின உலக்கைகளாலே குற்று, முருகனைப் புகழ்வேம் போலே அழகு பெற்ற மேகம் உண்டாகின்ற தலைமையினையுடைய பயனையுடைய பயனையுடைத்தாகிய மலை நாட்டை யுடையானைப் பாடுவேம்;

பாடுவாமென்னும் பொருளே பயப்பச் செய்தலின் இறைச்சியிற் பிறந்த பொருள் காண்க. இஃது 'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே, திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே' என்பதனாற் கொள்க. இஃது இரண்டு உலக்கையாலும் பயன் கொண்டாற்போல அவன் பெயர் பாடுதலாற் பயன் கொள்ளாமையின் உள்ளுறைவுவம மன்மை உணர்க.

தங்கயவர்..................குன்று :—

(இ—ள்) பகையென்று கூறிற் கூற்றுவன் எதிர்வரினுங் கெடானாய்த் தன்னை உறவு கொண்டார்க்குத் தோற்றலை நாணாதவனுடைய மலை, தும்பி அழகினையுடைய மகளிர் கையிலிட்ட தாட் கூட்டாகிய நீலக்கடைச் செறிபோலக் காந்தளினது முகையின் மேலே அஃது அலருங்காலம் பார்த்திருக்கும்;

என்பதனால், நஞ்சுற்றத்தார் மனநெகிழ்ந்து வரைவிற்கு உடம்படுங்காலம் பார்த்திருக்கின்றானென்றுளாக உள்ளுறையுவமங் கொள்க. இது பயவுவமப் போலி; போலவென்னும் வினையுவமம் இதற்குச் சிறப்புக்கொடுத்து நின்றது தொலையாமையுந் தோற்றலை நாணாமையும் முருகனுக்கு உளவாகல் புராணங்களான் உணர்க.

வெருள்புட ....பாடித்தை :—

(இ—ள்) தெரிந்த இழையினையுடையாய்! அகற்சியையுடைய பாறையிலிருந்த கருங்குரங்கைச் சேர வெருண்டு பார்த்து இருள் செறிந்த பக்கமலையிலே ஏறி இறங்கி ஆடும் வருடைமானின் குழவிகளையுடையனவாகிய வளப்பத்தையுடைய மலை நாடனை விளக்க நீ ஒன்று பாடுவா யென்றாள்;

'பாடித்தை'; முன்னிலைவினைத் திரிசொல். வருடைமான் குழவி தன் இளமையான் வெருளத்தகாத யூகத்தை வெருண்டாற் போல, நீயும் நஞ்சுற்றத்தார் வரைவிற்கு உடம்படாரோ வெனக் கருதிச் சுற்றத்தாரை வெருளா நின்றாய்; அது தகாதெனக் கூறினாளென உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப் போலி. 'தவலருஞ் சிறப்பினத்தன்மை நாடின்—வினையினும் பயத்தினு

முறுப்பினு முருவினும்—பிறப்பினும் வருஉந் திறத்த வென்ப' என்னும் உவமவியற் சூத்திரத்தில் 'திறத்த' வென்றதனாற் றலைவன் நாட்டிலுள்ளன கூறித் தலைவிக் கேற்ற உவமை தோன்றச் செய்தலுங் கொள்க.

நுண்பொறி..................குன்று :—

(இ-ள்) செல்வ முதலியவற்றோடு மாறுகொண்டு அவற்றைப் பொருதிருப்ப ரென்று பலருங் கூறினும் பிறர் குற்றத்தைக் கூறுதலை அறியாதவன் குன்று நுண்ணிய பொறியையுடைய மானினுடைய செவியைப் போல மூங்கின் முளையினது கண்ணைப் பொதிந்த பாளை கழன்று விழும் பண்பினையுடைத்தெனத் தலைவி கூறினாள்;

இதனால் அவன் வரையாமையின் நம் மேனியிற் றோன்றிய வருத்தமும் நீங்கி நம் மேனியும் இனிப்பொலிவு பெறுமெனக் கூறினாளாக உள்ளுறை யுவமங் கொள்க. இஃது உருவுவமப் போலி, குற்றங் கூறுதல் தேற்றாதா னெனவே நாஞ் செய்த தீங்குகளையுங் காணானென்றாள். முருகனுந் திருமேனி கொண்டு திரிதலின் அவற்குங் குற்றங் கூறாமை ஏற்றினாள். மேல் தோழி கூறுகின்றாள்.

புணர்நிலை..................பாடித்தை :—

(இ—ள்) பிடியோடு கூடிய நிலைமையிலுடைய, வளமென்னும் புதலினது தழையை மனம் பொருந்தித் தின்ற, இணைந்த கொம்புகள் அழகு கொண்ட வரை நடந்ததனை யொக்குஞ் செலவினால் விளங்கு கின்ற அழகினை யுடைத்தாகிய யானைகளையுடைய பயனையுடைய மலைநாடனை மணம் நாறும் மயிரினையுடையாய்! முன் இயற்பட மொழிந்ததனை மறுத்து இனி இயப்பழித்து ஒன்று பாடுவாயாக.

நிலைமையையுடைய யானை, தின்ற யானை, அழகினையுடைத் தாகிய யானை என்க.

'மருப்பெழில் கொண்டவரை'; இல்பொருளுவமை.

இதனால் விலங்குகளுந் தமக்கு வேண்டுவனவற்றை நுகர்ந்து வருத்தமின்றி ஒழுகினாற்போல, நாமும் நமக்கு வேண்டுவன வற்றை நுகர்ந்து இல்லறத்தையும் நிகழ்த்தி வருத்தமின்றி ஒழுகு மாறு வரைந்து கொள்வனென்றாளாக உள்ளுறை யுவமங் கொள்க. இது பயவுவமப் போலி 'மறுத்தொன்று பாடித்தை' என்றதன் பயன் இவள் களவொழுக்கங் கருதாமல் வரைந்து கோடலே கருதினா ளெனத் தலைவன் உட்கொண்டு கடிதின் வரைதலாம். அது கேட்ட தலைவி கூறுகின்றாள்;

கடுங்க....................மலை :—

(இ—ள்) மிடியாலே பொருளின்மையைச் சொன்னார்க்ன் அப்பொருளை அவர்கட்கு நிறைத்தலாற்றாத பொழுது தகு மெய்யைத் துறக்குமவன் மலை தறுகண்மையையுடைய புலியின் அடியைப் போல வாழையினது விளைந்த காய் குலைகடோறுந் தூங்கும் ;

புலியடி போல வாழைக்குலை தூங்குமென்றதனன், நம்மை வரையாமையிற் கொடியன் போறற்றோன்றினன், அவன் இனி வரைந்து கொண்டு நமக்கு இனியனுவனென உள்ளுறையுவமங் கொள்க. இது வினையுவமப் போலி.

இனி, முருகற்கு ஏற்றுங்காற் பிறவித் தடுமாற்றத்தான் வீடு பெறுதலின்மையை உரைத்தாற்கு அவ்வீடு பெறுந்தன் மையைத் தான் நிறைவித்தலை அவர்கள் கொள்ளமாட்டாத காலத்துத் தன் திருமேனியைக் கைவிட்டு அவர்கள் மனத்தே தங்குகின்றவனெனக் கூறுக. "ஒரு நீயாகத் தோன்ற விழுமிய பெறலரும் பரிசினல்கும்" என்றார் முருகாற்றுப் படையில் "தன்னை யுன்னி யென்னை யாக்கிய போழ்தே யான வனையினேன்" என்பதனானும் உணர்க.

எனவாங்கு.

(இ—ள்) என்று ; 'ஆங்கு' அசை,

கூடி..............போன்றே :—

(இ—ள்) யானுந் தலைவியுங் கூடித் தலைவன் திறத்தையும் முருகன் திறத்தையும் பாடினேமாக, என்னுடைய தோழிக்கு அசைகின்ற மூங்கிலையுடைத்தாகிய வெற்பையுடையவன் அளித்த பொழுது போன்று முன் அளியாமையான் மெலிந்த மெல்லிய தோள்களுஞ் சிறந்தன.

எனத் தன்னுள்ளே கூறுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகக் கூறினள், அவன் கடிதாக வரைதற்கு.

இதனாற் றலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது.

இப்பாட்டு முழுதும் முருகற்குப் பயன் படாது தலைவற்குப் பயன்பட்டு நின்றவாறு உணர்க.

இது கொச்சகங்களும் விரவி வந்தமையிற் கலி வெண்பாவின் வேறுபட்டு வந்த கொச்சகம்.

செய்யுள் அ.

இது வரையாது வந்து ஒழுகுந் தலைவனைத் தோழி, தலைவியது கற்பு மிகுதியும் இவ்வொழுக்கம் அலராகின்றமையும் அவளது ஆற்றாமையுங் கூறி வரைவு கடாயது.

கதிர் விரி.................விறல் வெற்ப :—

(இ—ள்) எதிரே எதிரே ஓங்கிய பெருமையையுடைய சாரலில் இள ஞாயிற்றினுடைய விரிகின்ற செறிந்த கிரணங் களினுடைய அழகைத் தன்னிடத்தே கொண்ட மாணிக்கப் பாறையிலே நிற்சப்பட்டு முழங்குகின்ற ஓசையை யுடையவாய் இரண்டு மலையினின்றும் வீழ்கின்ற அருவி தனது அழகிய கொம்புகளின் மேலே வீழ்தலாலே முதிர்ந்த கொத்துக்கள் அலர்தல் கொண்ட முழவு போலுந் தாளினையுடைய நெருப்புப் போலும் வேங்கை புகரினையுடைய மத்தகத்தினையும் அழகினை யுமுடைய யானைகள் பூவோடு கூடிய நீரை மேலே சொறியா நிற்க எக்காலமும் முறுக்கு நெகிழ்ந்த தாமரை மலரினது அழகை யுடைய அல்லியிலே வீறு பெற்றுத் திருமகள் விரும்பி யிருந்தா லொத்த தேசுனும் வெற்றியினையுடைய வெற்பனே!

சுடரின் கவினைக் கொண்ட அடுக்கமெனவே மாணிக்கப் பாறை யென்னும் பொருள் தந்தது. எதிர் எதிர் ஓங்கிய வரைகளைத் தலைவன் சுற்றத்தாருந் தலைவி சுற்றத்தாருமாகவும், அவற்றிடை யடுக்கத்தைத் தலைவன் மனையாகவும், இரண்டருவியும் வீழ்கின்றதனை இருவகைச் சுற்றத்தாருஞ் செய்கின்ற சிறப்புக் களாகவும், இணர் ஊழ் கொண்டதனைப் புதல்வர்ப் பயத்தலாகவும், வேங்கையைத் தலைவியாகவும் உள்ளுறையுவமங் கொள்க. இது பயவுவமப் போலி. இதனாற் கூறியது நின் காட்டில் உறைகின்ற வேங்கை சிறப் பெய்தினாற் போலத் தலைவியும் நின் இல்லின் கண் வந்து சிறப் பெய்துமாறு கடிதின் வரைந்து கொள்க வென்ற தாயிற்று. 'வரிநுதலெழின்' 'திரு நயந் திருந்த' வென்ற ஏனையுவமம் முற்கூறிய உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப் பொருட்குச் சிறப்புக் கொடுத்தாலும் உள்ளுறையுவமம் போலத் திணையுணர்த்தலைத் தள்ளாது நின்றது. இதற்கு விதி முற்கூறினோம்.

தன்னெவ்வங்.................னணி :—

(இ—ள்) என்னுடைய தோழி தன்னுடைய வருத்தமுறா நிற்கவும் நீ செய்த அருளில்லாமையை என்னையும் உட்பட

மறைத்தாள்; அவள் இங்ஙனம் மறைத்தது அவ் வருளின்மையைக் கேட்டு யான் நின்னைப் பிறர் முன்னே பழி கூறுதலைத் தான் நாணிக்காண்;

யான் பழி கூறுவேனென்று தான் நாணியெனத் தலைவி குறியாத தொன்றைக் கூறினமையின் இது குறியா கூறலாம்.

உம்மை, சிறப்பு.

கூருநோய்..................ணி :—

(இ—ள்) என்னுடைய தோழி மிகுகின்ற காமநோய் சிறவா நிற்கவும் நீ செய்த அருளில்லாமையைச் சேரியிலுள்ளாரும் அறியாதபடி மறைத்தாள்; அவள் இங்ஙனம் மறைத்தது அவ் வருளின்மையைக் கேட்டு மப்பொழுதே நீ நிலை பேறுடையை யல்லை யென்று யான் பிறர்க்குக் கூறுதலைத் தான் நாணிக்காண்;

உம்மை, சிறப்பு. 'ஓரும்'; அசை.

நோயட..................ணி :—

(இ—ள்) என்னுடைய தோழி காமநோய் வருத்துகையினாலே வருந்தியும் நீ செய்த அருளில்லாமையை ஆயத்தையும் மறைத்தாள்; அவள் இங்ஙனம் மறைத்தது அவ்விருளின்மையைக் கேட்டு மாயத்தை வல்ல நினது பண்பில்லாமையைப் பிறர் கூறுதலைத் தான் நாணிக்காண்;

ஆயத்திற்கும் வருத்தம் புலப்படாமை மறைத்தாளென்ற உம்மை சிறப்பும்மை.

எனவாங்கு :—

அசை.

இனையன்..............விரைந்தே :—

(இ—ள்) நினது தீமையான் உண்டாகிய அருந்துயரத்தை அத்தன்மைத்தாகிய அரிய நற்குணத்தினானே நீ பின்னர்க் காத்தாற்போல இத்தன்மையனவாகிய தீமைகளைப், பிறரறியாதபடி நினைத்தானாய்க் காத்தவளுடைய ஆரஞரைத் தீர்க்கும் மருந்தாகிப் பெருமா! நாம் விரைந்து செல்வேம்;

'தீமையாயின, விட்டுப்பிரிவும் அருமை செய் தயர்த்தனுமாம்'.

இதனாற் றலைவற்கு விரைவு பிறந்தது.

இஃது ஏழடித்தரவும் மூன்றடித் தாழிசையுந் தனிச் சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக் கலிப்பா.

செய்யுள் ௬௦.

இது வரை விடையாற்றாத தலைவிக்குத் தோழி தான் தலைவனை நெருங்கி வரைவு கடாவ அதுகேட்ட தலைவன் வரைவு முயற்சியான் வருதல் இடையிட்டதூஉந் தமர் வரைவெதிர்ந்ததூஉங் கூறி அவளை ஆற்றுவித்தது.

விடியல்வேங்...................விறல் வேற்ப :—

(இ—ள்) விடியற் காலத்து விரும்பிய ஞாயிற்றைக் கெடுக்கும் மூங்கில் நெருங்கின அகன்ற மாணிக்கப் பாறையிடத்து, மணத்தை யுடைய சுனையிடத்தே அழகு பெற்று வளர்ந்த காந்தளினது அழகிய குலையினைப பெறுதற்கரிய மணி விளங்குகின்ற பொறியினை யுடைய பாம்பு நீரை உண்டலாகக் கருதிப் பெரிய மலைகளைக் கீழ்மே லாக்குமாறுபோல இருக்கின்ற காற்றினை யுடைத்தாகிய செறிந்த மழையில் உருமேறு இடித்தலால் எழுந்த உயர்ந்த ஓசை யாகிய ஓசை பரந்து நறிய பூக்களையுடைய சாரலிலே ஒலிக்கை யினாலே விரையச் சிறுகுடியினுள்ளார் உறக்கமுணரும் மிக உயர்ந்த வெற்றியினையுடைய வெற்பனே!

மாணிக்கப் பாறை தலைவி உறைகின்ற மனையாகவுஞ், சுனை யிடத்துக் காந்தள் சுற்றத்தார் பேண அழகு பெற்ற தலைவியாகவும் மணத்தைத் தரும் அக்காந்தள் பாம்பு போற் றோன்றியதுமேல் இல்லறத்தைத் தருகின்ற களவொழுக்கம் பிறர்க்குத் தீங்குபோற் றோன்றியதாகவும், உருமேறு இடித்தலால் எழுந்த ஓசை குரவர் சாரலெல்லாஞ் சிலம்பியது அங்ஙனந் தீதாகக் கருதின அயலார் கூற்றைக் கேட்ட தாய் கழறிய கூற்றுப் பரந்ததாகவுஞ், சிறுகுடி துயிலெழுந்தது காவன் மிகுதியாற் றலைவியுந் தானுங் களவு இடையீடு பட்டு வருந்தித் துயிலின்றி யிருந்த தன்மையாகவும் உள்ளுறை யுவமங் கொள்க. இது வினையுவமப் போலி.

கால்போர...................சிதைந்ததை :—

(இ—ள்) முயங்குதலமையாத கூட்டம் பெருமையால் வருந்தின என் தோழியுடைய பல இதழையுடைய மலர் போலும் உண் கண்கள் பசக்கும்படி நீ கெடுத்தது, காற்றடிக்கவுந் தன் பெருமையால் அசையாவாய் நின்று ஒலிக்கின்ற ஓசையினையுடைய அருவிகளையுடைய நினது பெருமையையுடைய வரையில் நீர் நிறைந்த சுனையின் மலரை யெரிக்குமென்னும் பொருமையோ? அது வன்றேல் அருளின்மையன்றோ?

புகர் முகக்..................சிதைத்ததை :—

(இ—ள்) உயிர்போம் பருவமென்று கூறும்படியாகக் கலங்குதற்கு ஏதுவாகிய காமநோயை கடக்கும்படியாக என் தோழியினுடைய பெருத்தனவாகிய திரண்ட தோள்களை அழகு வாடும்படி நீ கெடுத்தது, புகரை யுடைத்தாகிய முகத்தையுடைய களிற்றோடே புலி பொருது தொலைத்துத் திரியும் நின்னுடைய அகன்ற மலையில் அடுக்கத்தனவாகிய மூங்கிலை யொக்கு மென்னும் பொருமையோ? அது வன்றேல் அருளின்மையன்றோ?

கூடநுற..................சிதைத்ததை :—

(இ—ள்) நடு யாமத்துந் துயில் கொள்ளுத லில்லாய் மனந் தடுமாறும் என் தோழியுடைய விருப்பம் மருவிய நல்ல எழுச்சி அழகு வாடும்படியாக நீ கெடுத்தது, ஞாயிற்றைத் தீண்டும்படியாக மிக நீண்ட சுரும்புகள் ஒலிக்கின்ற முழைஞ்சுகளையுடைய மலையினது பக்கமலை யிடத்தனவாகிய எரிபோலும் வேங்கையினது பூங்கொத்தை யொக்குமென்னும் பொருமையோ? அதுவன்றேல் அருளின்மையன்றோ?

'காமரு'—விகாரம்; மருவும் : ஈற்றுமிசை உகாம் மெய்யொடுங் கெட்டு மகரஞ் சந்தியாற் கெட்டது.

எனவாங்கு.

(இ—ள்). என்று; 'ஆங்கு'—அசை.

தன்றீமை..................நாளே :—

(இ—ள்) தன் பொல்லாங்குகள் பலவற்றையுஞ் சொல்லி யான் கழறுகையினாலே அவர் என் கூற்றினை இஃதுண்மையென்று தெளிந்து கள வொழுக்கத்திலே தான் நம்மோடு மருவுதலுறுகையினாலே கூடின உறவு பின்னர் வரைவு முயற்சியான் அருகுகையினாலே, பிறையொத்த நுதலினையுடையாய்! இக் கள வொழுக்கத்தில் வேட்கை நீங்கி நாம் அவரைப் பேணி அவரிடத்தே தங்குதலை அவர் விரும்பின நாளிலே நஞ்சுற்றதாரும் அவர்க்கே கொடுப்பதாக அறுதியிட்டுவிட்டார்; இதுகாண் நமக்குண்டாகிய நன்மை.

'தன்', 'தான்', 'அவர்' என்பன ஒருமைப் பன்மை மயக்கம், உறைதல் 'உறை' யென விகாரமாயிற்று.

இதனாற் றலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

இஃது ஏழடித் தரவும் நான்கடித் தாழிசையுந் தனிச் சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்றுவந்த ஒத்தாழிசைக் கலி.

செய்யுள் ௰.

இஃது அல்ல குறிப்பட்டுத் தலைவன் மீள அதனை என் பிழையாகக் கருதுவெனெனக் கவன்று ஆற்றாளாகித் 'தன் குறி தள்ளிய தெருளாக் காலை — வந்தனன் பெயர்ந்த வறுங்களை நோக்கித் தன பிழைப்பாகத் தழீஇத்தேறிய' தலைவியது நிலைமை தோழி தலைவற்குக் கூறி, இவ்விடையீடு நின் தோழியினுயிற்றெனா எனது பிழைப்பாக்கி அவளை ஆற்றுவிப்பாய், நீ உறைதருதலே உரையாம் அவட்கென அவளது ஆற்றாமை கூறி வரைவு கடாவியது.

வீயகம்..................நன்றுட :—

(இ—ள்) தான் நுகர்கின்ற பூத் தன்னையின்றித் தனித்து உறைப்பத் தான் விரும்பிய பூவின் மேலே போன பெருமையினையும் அழகினையு முடைத்தாகிய சிறகினையம் நீல மணி போலும் நிறத்தினையுமுடைய தும்பி, வாயிடத்தே பெருகி வீழ்கின்ற மதத்தையும் வெள்ளிய மருப்பினையுமுடைய யானைத் தலைவனோடே அழகினை யுடைத்தாகிய வரியினையுடைய புலி வந்து போர் செய்த காலத்தே வேங்கையினது அழகையுடைய பூங் கொம்பென்று கருதி விறலையுடைய புலியைச் சூழ்ந்தும் வேங்கைச் சினையென்று பொலிவு பெற்ற புள்ளிகளையுடைய யானையினது புகரினையுடைய முகத்தை அணுகியும், வலி மிகுகின்ற கோபத்தாலே வாட்போரைச் செய்யத் தொடங்கின மன்னரை நட்பாக்கும் உபாயத்தை ஆராய்ந்து நட்பாக்குஞ் சந்து செய்வாரைப் போலப் பல்காலுந் திரியும், பள்ளத்தே குதிக்கின்ற அருவிகளையுடைய திரண்ட மலைகளை யுடைய நன்னுடனே!

மறித்தரும், பயமிழி என்றும் பாடம்,

தும்பி வினைவர் போல முற்றியுங் குறுகியும் மறிதருமென்க. பூப் புலம்ப வேட்டம் போகிய தும்பி தலைவி தனித்திருக்க முன் வரைந்து கொண்ட மனைவியிடத்தே வேட்கை சென்றுபோன தலைவனாகவும், அத்தும்பி வருத்தத்தை நிகழ்த்துவன வாய்த் தம்மிற் பகைத்த புலியையும் யானையையுந் தனக்குத் தேனைத் தரும் வேங்கைப் பூவாகக் கருதிச் சுழல்கின்ற தன்மை நம்மேல் அன்பின்றி இருக்கவுந் தனக்கு இன்பமுளதாகக் கருதிப் பகற் குறியும் இரவிற் குறியும் பெறுதற்கு மறுகுகின்ற தன்மையாகவும் உள்ளுறையுவமங் கொள்க. இது வினையுவமப் போலி.

"பின் முறையாக்கிய" என்ற சூத்திரத்துத் "தொன் முறை மனைவி" என்றதனால் தொன்முறை மனைவி யுண்மையும் உணர்க.

'நயனுடை நட்பாக்கும் வினைவர் போல்' என்ற ஏனையுவமம் உள்ளுறை யுவமத்தைத் தருகின்ற கருப் பொருட்குச் சிறப்புக் கொடுத்துத் தானும் உள்ளுறை யுவமம் போற் றிணையுணர்த்தலைத் தள்ளாது நின்றது.

ஏறிரங்.................யானுக :—

(இ—ள்) யான் தன்னைக் கூடுதற்கணுளதாகிய வேட்கை யினாலே யான் பகற்குறியைத் தள்ளின நிலைமையை என் பிழைப்பாக மனத்தான் நோக்கி இரவிற்குறி யேற்றுக் கோடற்கு யான் கொத்தினையுடைய நொச்சிப் பூ விழுகின்ற ஓசையை அவன் குறியோ வென்று கருதுஞ் செவியோடே வருத்தத்தை யுடையேனுகா நிற்கத் தான் உருமேறு இடிக்கின்ற இருளையுடைய நடுவாகிய இராப் பொழுதினது செவ்வியைப் பெறுனுய்ப் பகற் குறியையும் யான் மாறினேனென்று கூறி இனி மனத்தே கொள்ளா நிற்கும்;

மனத்தின் வினையைச் செவிமேல் ஏற்றினர், அது கருவியாக உணர்தல் நோக்கி.

அருஞ்செல.....................யானுக :—

(இ—ள்) யான் நிற்கின்ற நிலைமை உயர்தற்குக் காரணமான கடவுளுக்கு வரைவு முடிந்தாற் செய்யுங் கடன்களை மேற்கொண்டு தான் குறி பெறுமையிற் றன்மாட்டு நிகழும் வருத்தம் பல வற்றையுஞ் சூழும் மனத்தோடே வருத்தத்தை யுடையேனுகா நிற்கத் தான அரிய செலவினையுடைய வழியிடத்தே நம்மை அருள் செய்து வந்து நம்முடைய அளியைப் பெறுனுய்ப் பகற் குறியும் பெறுமல் வருந்தினனென இனிப் பல வார்த்தையுங் கூறு நிற்கும்;

நிலையுயர்தல்: வரைந்து கொண்டா லுயர்தல்.

கனை பெய..........................யானுக :—

(இ—ள்) மழை தன்னைப் புரக்க நச்சுதன் மேலுள்ள வேட்கை யினாலே வானத்தைப் பாடும் வானம்பாடி போல இருவகைக் குறி யிலுந்தான் அளிக்கின்ற அளியைய நச்சுதலாலே தன்மேல் நிறை வுற்ற அன்பினை யுடையேனுகா நிற்கத்தான் நெருங்கின மழையை

யுடைத்தாகிய பாதி நாளிலே யான் இடமாறப் பகற் குறியையும் பெறுனுய்ப் பூணப்பட்ட இழையினையுடையாய்! என்னிடத் துண்டாகிய பழியை எனக்குச் சொல்லா நிற்கும்.

தான் யான் ஆக அருளாக்கு மென்பன எதிர்காலத்து நிகழ் கின்ற நிகழ்வு. 'என்ப' வென மூன்று தாழிசையிலும் வந்தன இசை நிறையாய் நின்றன.

ஏனவாங்கு :—

(இ—ள்) என்றிவள் கூறும்படியாக;

கலந்த நோய்....................நோயே : —

(இ—ள்) இவளைக் கலந்த நோய் இவள் ஒழுக்கத்தை மிகுக் கையினாலே அது கண்டு கண் துயிலாத என்னிடத்தே வெறுத்தாயு மாய், விளங்குகின்ற தாழ்ந்த அருவியாலே அழகு கொண்ட நின் மலையின் பக்கமலை கூறுவனவே கூறுமாறு போல நீ கூறுவன வற்றையே கூறும் இலங்குகின்ற அழகினையுடைய எல் வளையை யுடைய இவளுடைய நோயை இவள் ஆற்றும்படியாக ஒரு பொய்ம் மொழி கூறியாயினும் வெல்வாய் நீ உரைத்ததே இவட்கு உரை யாம்.

'எல்': ஒளி.

அல்ல குறிப்பட்டு மீண்டதனை என் பிழைப்பாகக் கருதும் அவனெனக் கவன்று ஆற்றாளா மென்றதனுன் "தன் குறி தள்ளிய........தழீ இத்தேறலும்" என்னுஞ் சூத்திரத்திற்குப் பகற்குறி யென்றே பொருளாதலானும் இவ்வாறே பொருள் கூற வேண்டு மென்றுணர்க.

தாழிசைகளிற் றோழி சொல்லெடுப்புதற்குத் தலைவி சிறு பான்மை கூறுதலைப் 'புலத்தலு மூடலுசாவிய விடத்துஞ்—சொலத் தகு கிளவி தோழிக்குரிய' என்பதனுற் கொண்டவா றுணர்க.

இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒன்பதடித் தரவும் நான்கடித் தாழிசையுந் தனிச் சொல்லும் ஐயடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

செய்யுள் கக.

இது தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி அவன் தன்மையும் அவன் தனக்குக் கூறுவனவும் அக்கூற்றுத் தன்ஞற் பொறுக்க

வொண்ணாதவாறும் அவன் கருத்தும் தலைவிக்கு கூறி அவன் குறை நயப்பத் தன்னுள்ளே சொல்லியது.

ஒன்றிரப்பான்..............மன்மானும் :—

(இ—ள்) விளங்குகின்ற இழையினையுடையாய்! என்னிடத்து ஒரு காரியத்தை இரந்து நிற்பான் போலே தன்னைப் பிறரால் இகழப்பட்டு எளியராந் தன்மை தோன்றவுஞ் சில மொழி கூறும். அங்ஙனங்குறையிரந்து நிற்பினும் உலகத்தை யெல்லாம் பாது காப்பான் போலே இருப்பதொரு வலியுமுடையான், மெய்ப்பொருள் கூறும் நூல்களைக் கூற வல்லவர்களை வழிபட்டு நின்று அப்பொருளை அறிந்தான் போலே நன் மக்களைக் கண்டாற் றோன்றும் மன அடக்க முடையவன், வறியோர் வறுமையைக் கொடையினாலே போக்கவல்லான போலே இருப்பதொரு வலியுமுடையன், அத் தன்மையை யுடையரான் ஒரு தலைவன் தனக்குரிய ஆளுந் தகைமையைக் கைவிட்டு என்னை நோக்கிக் கூறும் பல காரியங்களும் மாட்சிமைப் படுஞ் சொல்லைக் கேட்பாயாக;

'மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு, நினையுங் காலைப் புலவியு ளுரிய' என்பதனுள், 'நினையுங் காலை' என்றதனாற் றோழி யுயர்வுங் கிழவோன் பணிவுங் கொள்க வென்றலாற் றோழி இங்ஙனங் கூறினள். 'உயர்மொழிக் கிளவி யுரியவா லவட்கே' என்பதனால் 'உலகம் புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்' என்றாள்.

உம்மைகளெல்லாம் ஐயவும்மை.

'சொல்லு' மென்றது பிறன்கட் டோன்றிய வருத்தம் பற்றி இளிவரல் பிறந்தது, அவன் இவ்வாறு ஒழுகல் நமக்கு இளிவர வெனக் குறிப்பாற் கூறிக குறை நயப்பித்தலான்.

நின்னின்றி..................நறுநுதால் :—

(இ—ள்) நறிய நுதலினை யுடையாய்! அவன் நின்னையன்றி யான் உயிர் வாழலே னென்று கூறா நிற்குமாயின், இங்ஙனம் இறந்து படுந் தன்மைமை யுடையவன் கூற்றை நம்புதலைச் செய்தல் இவ்விடத்து யாவர்க்கும் அரிதாயிருக்குமாயின், இந் நிலைமைக் கண் என்னைச் சேர்ந்த வருத்தங்கள் பிறர்க்கும் உளவோ? இல்லையன்றே!

அறியாய் நீ..................வலைப்பட்டார் :—

(இ—ள்) அவன் யான் வருந்துவல் நீ அதனை அறியாயோ வென்று கூறி நிற்குமாயின், தமக்கு உயிர் போலச் சிறந்த தோழியரோடு உசாவித் துணியாமற் றமியராயிருந்தே துணிதல் மகளிர்க்கும்

அரிதாயிருக்குமாயின், இந்நிலைமைக் கண் அவன் வலையிலே அகப்பட்டார் சிலர் எம்மைப்போல அளிக்கத் தக்காராயிருப்பாரோ? அளியாதிருப்பரன்றே!

வாழலேன்.................சூழ்குவம்.—

(இ—ள்) அவன் நீ அருளாதொழியின் யான் உயிர் வாழேனென்னுமாயிற், குடிப் பிறந்தார் பேதையரா யிருப்பரென்று நன்மக்கள் அவரைச் சிறப்பித்துச் சொல்லுஞ் சொல் நீ முதுக்குறைமை பூண்டிருத்தலின் நினக்குப் பழியாயிருக்குமாயின், இந்நிலைமைக்குச் செய்ய லாவதொரு காரியத்தை ஆராயுங்கால் நினைப்பதொரு காரியத்தை அறியேனாய் வருந்தா நின்றேன்; இந்நிலைமை ஆராய்ந்து பார்க்குங்கால் நறிய நுதலினையுடையாய்! நம்முள்ளே ஆராய்ந்து பார்ப்போம்;

அவனை..................நெஞ்சே:—

(இ-ள்) நம்மை நாண் வருத்துகையினாலே அவனைப் போக்குதல் நமக்கும் அவன் இறந்து படுகின்ற நிலைமைகட் பொருந்தாது, அவன் இறந்து படுகின்றவனைப் பேணினாரென்று நன் மக்கள் புகழ்ந்து கூறப்படுதல் நின் கருத்தாற் பெண்மையுமன்று யிராநின்றது; இங்ஙனமாகவும், அவன் நின்னை முயங்குமளவைத் தன் நெஞ்சிலே கைக் கொண்டு விட்டான்; அதற்கு நீ மேவுகின்றிலை, இதற்கு யான் இனிக் கூறுவ தொன்றின்றெனத் தலைவிக்குக் கூறிப் பின்னைத் தோழி தன் நெஞ்சோடு முன்னிலைப் புற மொழியாகக் கூறுவாளாய்க், குறியிடத்தே வாவென்று கூறுவாள் போலே அவனுக்கு ஒரு பொய்க் குறியைக் காட்டி அவன் மேவின வழியிலே நெஞ்சே மேவுவாயாக என்றாள்;

இதனாற் றலைவிக்குச் சூழ்ச்சி பிறந்தது.

இஃது 'ஒன்' றெனச் சொற் சீரும் 'அவனை' எனத் தனிச் சொல்லும் பெற்றுத் தாழிசையுள் ஏனை மூன்றடியாக ஒன்று நான்கடியாய் வந்தமையிற் கொச்சகக் கலியாயிற்று.

செய்யுள் கஉ.

இது வரையாது வந்து ஒழுகுந் தலைவற்குத் தோழி தலைவியாற் றாமையும் இவ்வொழுக்கம் புறத்தார் அறியப் படுகின்றமையுங் கூறி வரைவு கடாயது.

ஆமிழ்...........நன்னாட :—

(இ-ள்) எட்டுத் திசையுங் காத்தற் றொழிலை மேற் கோடற்குப் பொருந்தினவாய்ப், பகைத்தவை எதிர் நில்லாத மிக்க வலியினையும் விளக்கத்தைத் தருகின்ற கமழ்கின்ற மதத்தான் நனைந்த கவுளினையும் நீர் வீழ்கின்ற அழகினையுடைய மலையிடத்துத் தேனினம் மொய்க்கின்ற பூக்களையுடைய வேங்கை யினது அழகு போல வண்டுகள் ஊதுகின்ற புகரினையுடைத்தாகிய பக்கமலையிடத்தனவும், பெருமையையுடைய விசும்பிலே வளர்ந்த மிகுதியை யுடைத்தாகிய மரங்களையுடைய ஆற்றிடைக் குறையிடத் தனவுமாகிய, பெரிய யானைத் திரள்களோடே வீங்கின கழுத்தினையும் மிக்க வலியினையுமுடைய பெரிய புலி மாறுபட்டாலே போர் செய்தலுற்ற மலையினையுடைய நல்ல நாடனே!

'திசை காவல் கொளற் கொத்த' என்றதனால் உலகைத் தாங்குதற்கு உரியனென்றும், 'வலி முன்பின்' என்றதனான் மிக்க வலியினையுடைய னென்றும், 'நனைவுகள்' என்றதனாற் செல்வச் செருக்குடைய னென்றும், 'வண்டூது புகர் முகம்' என்றதனாற் பலர்க்கும் பயன்படுகின்றா னென்றும இருவகைச் சுற்றத்திற்கும் ஏற்றுக. இருவகைச் சுற்றமாவன, தலைவியுடைய தந்தை சுற்றமுந் தாய் சுற்றமுமாம். இருவகையவாகிய களிற்றோடே 'புலிமயக்குற்ற' என்றதனான் இருவகைச் சுற்றத்தாருடனே ஊரிலுள்ளார் தலைவியை அலர் கூறிப் பகைக்கின்றாரென உள்ளுறையுவமங் கொள்க. இது வினையுவமப் போலி.

வீழ்பெயல்...............யுதுபவால் :—

(இ—ள்) தாழிட்டு அடைத்தாற்போலுங் கடிய காவலையுடைய தாய் முன்னே நின்னுடைய மலைச்சாரலிலே முறைமையையுற்ற கோடல் உகுமாறு போலே ஒளியினையுடைய வளைகள் உகுவனவாய் இரா நின்றன; இங்ஙன மாதற்கு, இடைவிடாது வீழ்கின்ற மழையையுடைய இராக் காலத்து நின்னுடைய குறியால் அழைக் கின்ற அழைப்பினை செவி கருவியாக ஓர்த்ததனாலுண்டான மன வொடுக்கத்தாலே உயிர் வாழ்கின்ற நாண் மிக்கவளுடைய வருந்து கின்ற தோளிடத்து அவை நினக்குச் செய்த தப்பு உண்டோ? இல்லையே;

'உகுப': அகரவீற்றுப் பலவ்றி சொல், படுத்தலோசையாற் பெயராய் நின்றது.

இனையிருள்....................கலுழ்பவால்:—

(இ-ள்) இவ்வாறே ஒரு களவொழுக்க முடையளென்று உயர்த்துக் கூப்பிடுகின்ற அயலார் முன்னே நின்னுடைய சுனையிடத்துச் செறிந்த மழையை யேற்ற நீலம்போலே கண்கள் நீர் சொரிவனவா யிரா நின்றன; இங்ஙனமாதற்கு, இதுயாம் வருந்துதற்கு ஏதுவாகிய இருளென்றேங்கி நின் வருகற்றொழிலை நச்சி நினைத்தலா லுண்டான வருத்தத்திலே வருந்துகின்றவளுடைய துயிலில்லாத கண்ணிடத்து இவை நினக்குச் செய்த பழிகளுண்டோ; இல்லையே;

பனிநீரும்....................துரைப்பதால் :—

(இ-ள்) நுரைகளுடைய இனிய சின்னீர் வந்து ஆரவாரிக்கும் இளவேனிற் காலத்தே நின்னுடைய சோலையில் ஒளி கெட்ட தளிரை யொத்த நிறக்கேடு வந்து பலர்க்குங் கூறுவதாயிரா நின்றது இங்ஙன மாதற்குப் பல நாளும் நினைவு வருத்துகையினாலே பசலையாலே நுகரப்பட்டவளுடைய பொன்னையுரைத்த தொரு மணியுண்டாயின் அதனையொத்த பசலை பரந்த மாமை நிறத்தின்கண் அது செய்த பழிகளுண்டோ? இல்லையே;

எனவாங்கு :—

அசை.

பின்னீதல்....................பெரிதே :—

(இ-ள்) அங்ஙனமான இடத்து அவள் பூப்போலும் கண் பாடின்மையை நீவிப் படுதற்கும் யான் அஞ்சுவேன்; அதற்குக் காரணமென்னெனில், அத்துயிலிடை நினைத்து வருந்தத்தக்கனவாற் பின்னர்த் தாங்கிய அரிய வருத்தத்தால் உற்ற கேட்டைத் தூக்கிப் பார்க்கில் அஃது எல்லை யறிய வொண்ணாத மலையினும் பெரிதாயிரா நின்றது; இனி இவ்வருத்தம் உறாதபடி நீ வரையாமற் பிரியப்பட்டாளோடு கொண்ட உறவு பின்னுதலை நீ கொடுத்தல் வேண்டும்;

பின்னுதல் 'பின்' னென நின்றது. "பின்னீ தொடர்" நிலை என்றார் பிறரும். துயில் கொள்ளாமையைத் துடைத்து என்க.

இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இது தரவுந் தாழிசையுந் தனிச் சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

செய்யுள் கரு.

இது நீ இவ்வாறு வருகின்ற வரவு எமக்குத் துன்பத்திற்குக் காரணமாகா நின்றதெனக் கூறி இரவு வருவானைத் தோழி பகல் வருக வென்றது;

கோடுவரி..................நன்னாட :—

(இ-ள்) வளர்ந்த வரியினையுடைய புலி வந்து போர் செய்கையினாலே அதனை வென்ற வருத்தத்தோடே நெடிய மலையிடத்தே துயில் கொள்ளும் யானை மெய்யான காலத்தே தானை பொருது வென்றது மனத்திடத்தே கிடைக்கையாலே அதனைப் பொய்யான காலத்தே கண்டு கடுக வெருவி எழுந்திருந்து புதிதாக மலர்ந்து நின்ற வேங்கை மரத்தைப் புலியென்றுணர்ந்து அம்மரத்தினுடைய அழகிய நலத்தைக் கெடுத்துத் தன் வலியினாற் பேணாத சினம் மாறி அவ்வேங்கையைக் காணுங் காலத்து அதனைப் பார்த்தலைச் செய்யாமல் நாணிக் கவிழ்ந்துபோன நன்றாகிய மலை நாடனே!

புலியினை வென்று துயிலும் யானை அயலார் கூறிய அலரைச் சுற்றத்தார்க்குப் பொய்யெனத் தேற்றி மனைக்கண் துயில்கின்ற தலைவியாகவும், கனவிற் கண்டு வெருவின தன்மை அத்தலைவி நனவில் தான் அங்ஙனஞ் செய்ததெல்லாந் தன் மனத்தாகவின் அச்செயலைக் கனவினுங் கண்டு அவள் வெருவின தன்மையாகவும், வேங்கையை நலங்கெடுத்தமை தோழி அவனது களவொழுக்கத்திற்கு உடம்பட்டுக் கொடுமை செய்து ஒழுகுகின்றாளென்று தலைவி தோழியை வருத்தியதாகவும், அது சினந்தணிந்த தன்மை தோழி கருத்தறியாமல் அவளைக் . கொடுமை கூறினேமென்று தலைவி உட்கொண்ட தன்மையாகவும், அஃது அதனை நோக்காது இறைஞ்சகின்ற தன்மை யாமும் அவள் வருந்த இங்ஙனங் கூறினேமென்று எதிர்முகமாக மகிழ்ந்து நோக்காது தலைவி நாணி இறைஞ்சுயிருக்கின்ற தன்மையாகவும் உள்ளுறை யுவமங் கொள்க. இது வினை யுவமப் போலி.

போதெழின்..................வருவதை :—

(இ-ள்) அலரும் பருவத்ததாய் அழகினையுடைத்தாகிய மலர் போலும் மையுண்கண்ணினையுடைய இவளிடத்து நீ இன்றியமையாத காதலை யுடையையென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது இஃதொழிய வழியை ஆராய்ந்து பார்க்குங்கண் மின்னுக இடியென்று கருதாயாய் மழை யென்று கருதாயாய் இப்பெற்றித்தானதோர் அரிய வழியிலே இவ்விடத்தே நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது;

இன்புறு.............வருவதை :—

(இ-ள்) இவள் இன்புறும்படி அளித்தாயாகையினாலே இவளிடத்து நீ இன்றியமையாத அன்பினையுடையை யென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது; அஃதொழிய மணம் நாறுகின்ற மார்பினை யுடையாய் மஞ்சு பரக்கின்ற பக்கமலையை ஊடறுத்துச் சூரர மகளிரையுடைய அரிய வழியிலே இவ்விடத்தேற நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது;

இருளுற................வருவதை :—

(இ—ள்) இருளோடே மாறுபடுகின்ற கரிய கூந்தலையுடைய இவளிடத்து நீ இன்றியமையாத அருளினையுடையை யென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது; அஃதொழிய விளங்குகின்ற வேலை வலக்கையிலே எடுத்து யான் ஒருவனென்று கருதாதே யானை உலாவுகின்ற அரிய வழியிலே இவ்விடத்தேற நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது;

ஒருவனென்றது இவ்வுலகத்துக்குத் தலைவனென்றது.

அதனால்:—

அசை.

இரவின்.....................றேளே :—

(இ—ள்) அவ்வின்னாமையால் எமக்குத் துன்பம் வருதலின், ஐய, இனி இராக்காலத்து வாராதே கொள்: இவளுடைய பெருமையை யுடைய மெல்லிய தோள்களை விரவிய பூக்கள் அகன்ற பாறையிலே கோலஞ் செய்யும் மலைச்சாரலிடத்தே பகற்காலத்தும் பெறுவை.

இதனாற் றலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது.

இது தரவிற் குறைந்த சுரிதகம் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

செய்யுள் கஅ.

இது "புணர்ந்த பின் அவன் வயின் வணங்கற் கண்" தோழி கூறியது. அது தோழியிற் கூட்டம் நிகழ்ந்த பின் முற்காலத்துப் பணிந்து பின்னின் றோனைத் தோழி தானே பணிந் தொழுகுவதாம்.

வாங்குகோ................வெற்ப :—

(இ—ள்) தானே வளைகின்றமூங்கிலின் கோலை நெல்லுடனே வளைத்துத் தின்கின்ற முழந்தாளையுடைய கரிய பிடி அம்மலைக்கட்

செறிந்த இலையினுடைய வாழை செறிந்த இடத்தே புகுந்து, ஆங்கண் வருடை மானினது மடப்பத்தையுடைய மறி பார்ந்து திரிகின்ற இடத்தே, ஞாயிறு தோன்றுகின்ற விடியற்காலத்தே, துயில் கொள்ளும் இருள் செறியுஞ் சோலையினையும் விளங்குகின்ற நீரினையுமுடைய வெற்பனே!

மூங்கில் மிசைந்த பிடி தம்மிடத்துத் தாழ்ந்த அரிய தலைவனை அன்புடனே பெற்று நுகர்ந்த தலைவியாகவும், பின்னர் அது வாழைச் செறிவிலே புகுந்து அப் பழத்தை நுகர்ந்த தன்மை அவன் வரைந்து கொண்டுழி அவன் மனைக் கண் நலிவற அவனை நுகர்ந்ததாகவும், புலி முதலியனவின்றி மறி ஊறிடத்துத் துயிலுதல் அலர் கூறுவாரின்றி அவன் சுற்றத்திடை இல்லறம் நிகழ்த்தித் தங்குந் தன்மையாகவும், உள்ளுறையுவமங் கொள்க.

இது வினையுவமப் போலி.

அரவின் .... மகள் :—

(இ—ள்) பாம்பின் பொறி போலும் பொறிகளும் பகைவரை வருத்துதலுங் கூடின வலியினையுடைய வில்லின் மேலே வைத்த கையினையுடையையாய் நின்று நிரைத்த வளையணிந்த முன் கையையுடைய என் தோழியைக் காமக் குறிப்பு அவட்கு நிகழும் படி நோக்கிப், படிகின்ற கிளிகள் பரக்கும் பசிய கதிரையுடைய புனத்திற் கிளியைக் கடிதலை ஒரு படிப்பட மறப்பித்து, நின் வயத்தாளாக்கியே விட்டாயாயின், இனி நீ இடையிடாது நினைத் தலைப் பாதுகாத்தலை இவள் விரும்பும்; இவள் பல குலைகளை யுடைய பலாவினது பிசினை யுடைத்தாகிய இடத்தையுடைய இனிய பழம் வீழ்ந்து கிடந்த பறையிடத்தே எடுத்துக் கொண்டு உண்ணும் ஊனினையும் பெருஞ் சோற்றுத் திரளையுமுடைய சிறிய குடியிலிருக்கும் பிள்ளையான் மிடிப் பட்டாருடைய செல்வத்தை யுடைய மகள்; ஆதலான் நின்னைப் பிரிந்து வருந்துதலாற்றாள்:

'இவ'ளென்றது, படர்க்கையை முன்னிலையாகக் கூறியது. "ஊன் சோற் றமலை பாண்கடும் பருத்தும்" என்றார் பிறரும்.

நீயே................. கவினே :—

(இ—ள்) நீ காற்றினுங் காட்டிற் போதற் றொழிலிலே மிக்குச் செல்லுந் தேரையுங் களிற்றையும் நின் பால் வந்த புலவர்க்குக் கொடுத்தவாற் கையொழிந்திருத்தலிலையாய் மழை யினும் அருள் சிறந்தாய்; ஆகையினாலே யானுஞ் சுரபுன்னை வளர்ந்த மலைச் சாரலிற் றிரியும் வருடையாகிய நல்ல மானின் மறியை வளர்ப்பாரைப் போலே முன்னர் நீங்காமற் பாராட்டி

அவளிடத்து நின்றும் பிரிவையாயின் மேகலை யணிந்த அல்குலை யுடைய என் தோழியது கவினும் நீங்கும்; அகற்காதக் கடிதாகிய மாவைப் பின்னுங் கடிதாகச் செலுத்துந் தாற்றுக் கோல் போலே சிறிதுங் கொடுமையை யுடையை யல்லையாந் தன்மை அறிந் திருந்தும் அவளை நின்னிடத்தே சேர்த்துவேன்;

இதனாற் றலைவிக்குப் புணர்ச்சி யுவகை பிறந்தது.

இது தரவும் வெண்பாட் டொன்றும் அதன் பின்னர் ஐஞ்சீர் அடுக்கிய குறு வெண் பாட்டொன்றுந் தனிச் சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற கலி வெண்பாட்டு.

செய்யுள் ௧௫.

இது 'புகா அக் காலைப்கெதிர்ப் பட்டுழிப், பகாஅ விருந்தின் பகுதிக் கண்' தலைவி தோழிக்குக் கூறியது.

சுடர்த்தொடீ..................மகன் :—

(இ-ள்) ஒளி பொருந்தின வளையினையுடையாய்! ஈதொன்றைக் கேளாய்! தெருவிடத்து நாம் உண்டிகளை ஆடும் மணலாற் செய்த சிற்றிலைக் காலால் அழித்துக் கூந்தலிலே அடைவித்த கோதையை அறுத்து வரியினையுடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடி நாம் நோவத்தக்க தொழில்களைச் செய்யுஞ் சிறியனாகிய காவலில்லாதவன், முன்னொரு நாளிலே, அன்னையும் யானுஞ் சேர இருந்த அளவிலே, 'இல்லில் உறைகின்றவர்களே! உண்ணப்படுந் தண்ணீரை வேட்டே'னெனச் சொல்லி வந்தவனுக்கு, அன்னை, 'விளங்குகின்ற பூணினையுடையாய்! உண்ணு நீரைத் தகட்டுப் பொன்னாற செய்த கரகத்தாலே வார்த்துப் உண்ணப் பண்ணுவித்து வா' வென்று சொன்னாள், என்று சொல்லுகையினாலே யானுஞ் சிறுபட்டியாயிருக்கின்ற தன்னை அறியாதே சென்றேன்: சென்ற பின்னை அவன் என்னுடைய வளையணிந்த முன் கையைப் பிடித்து என்னை நலிகையினாலே அலமந்து, 'தாயே! இவனொருவன் செய்ததோர் செயலைப் பாராய்' என்றேனாக, அத் தாயும் கூப்பிட்டு ஓடிவருதலைச் செய்ய, அதனை மறைத்து அங்ஙனஞ் செய்ததனை யான் 'உண்ணு நீர் விக்கி வருந்தினான் காண்' என்று ஓர் பொய்யைக் கூறினேனாக, அத்தாயுந் தன்னை முதுகைப் பலகால் அழித்தழித்துத் தடவப், பின்னை என்னைத் தன் கடைக்கண்ணாலே கொல்வான் போலே பார்த்துத் தன் மகிழ்ச்சியைத் தருங் கூட்டத்தை அக்கள்வனாகிய மகன் செய்தான்! இது காண் நிகழ்ந்தது.

இதனைக் கேட்டுழித் தலைவி இருவகைக் குறியும் பிழைத்தலிற் 'காணா வகையிற் பொழுது நனி யிகப்பினுந் தானகம் புகா அன் பெயர்தலின்மையிற், காட்சி யாசையிற் களம்புக்குக் கலங்கிக்' கையற்றாற் போலத் தலைவனும் இருவகைக் குறியும் பிழைத்தலிற் றலைவியைக் காணாளுய்க் காட்சியாசையிற் கலங்கி வேட்கையின் மயங்கின னாதலின். நம் மனைக் கண்ணே உண்டிக் காலத்தைக் கருதி வந்து தன் ஆற்றாமை மிகுதியான் இவளை மூன்கை பற்றி நலித்தான்; இவளும் அதனை மறைத்துவிட்டாள்; இனி இவட்கும் அவனைக் கூடுதல் கருத்தாயிருந்தது; இனி, அவனைக் கூடுவளெனத் தோழி கருதுவளாதலின் வேறு மொரு பொருள் நுதலி வந்த தாயிற்று.

'நோதக்க செய்யுஞ் சிறு பட்டி' யென்றதனான் ஒரு நிலை மாயிற்று. 'கடைக்கணாற் கொல்வான் னோக்கி' யென்றதன்கட் கண்ணிற்குத் றொலைத் தொழில் கூறிற்று. அது வினையுவமத்தின் வகை.

இதனாற் றோழிக்கு நினைத்தல் பிறந்தது.

"ஒரு பொரு ணுதலிய வெள்ளடி யியலால்" என்பதனுள் "இய"வென்றதனாற் பன்னீரடியின் இகந்து ஒரு பொரு ணுதலி வருங் கலி வெண் பாட்டும் உளவென்று கோடலின், இது பன்னீ ரடியின் இகந்து ஒரு பொரு ணுதலி வந்த கலிவெண் பாட்டு.

செய்யுள் சகூ.

இது இரவுக்குறி வந்த தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி இரவுக் குறியது ஏதமும், ஏதத்தால் வருந்துன்பமுந் தன் உள்ளத்து விழைவுங் கூறி வரைவு கடாயது.

முறஞ்செவி......................நாடகேள் :—

(இ—ள) முறம் போலுஞ் செவியாகிய மறைப்பிடமாக வந்து பாய்ந்து மாறுபாடு செய்த புலியைக் கோபித்து, மறத்தைத் தம்மிடத்தே கொண்ட நூற்றுவர்க்குத் தலைவனாகிய துரியோதனனைக் குறங்கில் உயிரைப் போக்குகின்ற பீமசேனனைப் போலே, தன்னுடைய நீண்ட கோட்டினுடைய கூரிய முனையாலே குத்திப் புலியினது மருமத்தைத் திறந்து மாறுபாடு தீர்ந்த அடியினையுடைய யானை, மல்லரை மறத்தைக் கெடுத்த திருமால் போலே, கல்லுயர்ந்த அகற்சியையுடைய சாரலிற் றன் சுற்றத்திற்கு நடுவே கூடித் திரியும் நாடனே! "யான் கூறுகின்றதனைக் கேட் பாயாக!

"முறஞ் செவி......சொற்" றென்பது உறுப் பறை பற்றிய வெகுளி. 'மால்போ' லென்பது பெருமிதம் பற்றிய உவமம். செவி மறைப்பப் பாய்ந்த புலியைச் செற்ற தன்மை தமது களவொழுக்கமிடமாக அலர் கூறிய அயலாரைக் கோபித்ததாகவும், அதனைக் குத்தி மாறுபாடு தீர்ந்த யானை தலைவன் வரைந்து கொண்டால் அயலாரைத் தாம் வென்ற தன்மையாகவும், யானை கிளை நாப்பட் கலந்தியலுதல் இனித் தலைவன் சுற்றத்தாரிடைப் பொருந்தியிருந்து இல்லறம் நிகழ்த்துந் தன்மையாகவும் உள்ளுறை யுவமங் கொள்க. இது வினையுவமப் போலி.

'குறங்கறுத் திடுவான் போல்' 'மால்போ' லென்பன ஏனையுவமம். அவையும் உள்ளுறை யுவமத்திற்குச் சிறப்புக் கொடுத்து உள்ளுறையுவமம் போலத் திணையுணர்த்தலைத் தள்ளாவாய் நின்றன.

தாமரைக்...................யோரே :-

(இ-ள்) தாமரைப் பூவாற் செய்த கண்ணியை யுடையையாய்த் தண்ணிய நறிய சந்தனத்தை யுடையையாய், ஒத்த இதழாற் கட்டின கோதையை யுடையாள் செய்த குறியிடத்தே நீ வருவையாயின் மணம் நாறுகின்ற நாற்றத்தை யுடையவாய மலைக்கண்ணே நின்று பலியைக் கொளளும் அணங்குகளிலே ஓர் அணங்கென்று கருதிச் சிறு குடியிலுள்ளோர் அஞ்சுவர்;

தாமரைப்பூக் குறிஞ்சிக்கண் வந்தது.

ஊர்ந்த...................வலரே :—

(இ—ள்) பகற் காலத்துத் தீர்த்தமாடுகின்ற நின் ஒழுக்கத்திற் கேற்ற ஈரத்தினுற் றண்ணிதாகிய ஆடையை யுடையையாய், இராக்காலத்துப் புணர்ச்சிக்கு உரியனவற்றை அணிகின்ற இயல்பினை யுடையையாய், நீ வரைந்து கோடலைக் குலைந்து ஆயத்தார் விரும்புகின்ற மயிரினையுடையாள் செய்த குறியிலே வருவையாயின், நீ கோடு முதலியவற்றைக் குறித்துச் செய்யுங் குறிகளாலே, ஒளி விளங்குகின்ற குறைக் கொள்ளியையுடையராய்க் கல்லெறியுங் கவணையுடையராய் வில்லினையுடையராய்க் களிறு வந்ததென்று கருதித் தினைப் புனத்தைக் காக்கின்றவர்கள் ஆரவாரிப்பார்கள்;

மாலை முதலியன பாரத்தாற் குலைந்து வீழ்கின்ற கதுப்புமாம்

ஆர..................ழூரே :—

(இ-ள்) ஆரம் அணிந்த மார்பினையுடையையாய்த், தலைமையை யுடையாய், அருளுடையையாய், மெல்லிதாயகன்ற அல்குலை யுடையாள் செய்த குறியிலே நீ வருவையாயின், நின்னைக் கண்டு விலங்கு முதலியன வெருவி ஓடுகின்ற ஓசையாலே, மிளகு வளர்ந்த மலையிலே உலாவுதலை அமையாத புலி யென்று இந்தச் செருக்குப் பொருந்தின ஊர் ஓராநிற்கும்;

என்வாங்கு.

அசை.

விலங்கோரார்..................யானே :—

(இ—ள்) யாவரும் அறிவைப் புகழப்படும் ஒப்பில்லாதவனே! அங்ஙனம் அவர் வேறாக ஓராராய், மெய்யாக ஓர்ப்பாராயின இக்கள வொழுக்கம் அறிந்தாரென்று இவள் உயிர் கொண்டிராள்; இவளை யொழிந்து யான் உயிர் வாழேன்; ஆகையினாலே நீ நின் காரியத்தினை பலர்க்குக் கூறி அவர் உடன்பட்ட பின்பு பூக்கள் அலர்கின்ற விடியற் காலத்திலே வரைந்து கொள்ளுதலை விரும்பாநின்றேன்; அதற்குக் காரணம் என்னெனில், அப்பொழுது நீ புதியாய் போல வரும் நின் வரவையும், இவள் கலியாணத்திற்றோன்றிய நாணால் ஒடுங்கியிருக்கும் ஒடுக்கத்தையும் யான் காண்பேனாதலாலென்றாள்

ஏகாரம் பிரி நிலை.

இவர்கள் முன்னர்க் களவொழுக்கம் ஒழுகியவாறும், அக் காலத்து அவன் புதியனாக நடித்தவாறும், இவள் ஒடுங்கியிருந்த வாறும் பிறர் அறியாராதலின், இத் தாழிசைகள் "பொழுது மாறுங் காப்புமென்றிவற்றின்" என்னும் பொருளியற் சூத்திரத் திற் கூறிய காப்பின் வழுவுணர்த்தியன.

இதனாற் றலைவர்க்குச் சூழ்ச்சி பிறந்தது.

'ஏவன் மரபி னேனோரும்' என்னுஞ் சூத்திரத்தில் நால் வருணத்தாருங் களவொழுக்கத்திற்கு உரியரென்றலின் அந்தணன் களவொழுக்கங் கூறினார்.

இது தரவுந் தாழிசைக்குஞ் சிறிது பொருந்திய இடை நிலைப் பாட்டுந் தனிச் சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக் கலி.

செய்யுள் கள்.

இஃது ஒரு வழித் தணந்து வந்த தலைவற்குத் தோழி தலைவி யாற்றாமையும் ஆற்றுவித்த வருமையுஞ் சொல்லி வரைவு கடாயது.

வறனுற....................விறல்வெற்ப :—

(இ—ள்) வற்கட முறுதலை அறியாத சுரபுன்னை நெருங்கின நறிய பக்கமலையினையும் விறலினையுமுடைய மலையிடத்து அகற்சியையுடைய பாறையிடத்தே உறையுந் தான் விரும்பின பிடி தன்னிடத்தே யாகையினாலே தனக்கு மாறாகிய யானையைத் தன் நெஞ்சிடத்துக்கொண்ட வலியினாலே அதன் புகரையுடைய நுதலைப் புண்ணாக்கின மறமிகுகின்ற வேழங்குத்தி வாங்கின கொம்பு போல உயர்ந்த முகையினையுடைய நறிய காந்தள் நாடோறும் புதுமையை யுண்டாக்கப் பள்ளங்களெல்லாம் நீர் நிறைந்து அழகு பெறும்படி அருவிகள் ஆரவாரித்துக் குதித்தற்குக் காரணமான பயனைத்தரும் மழையையிடத்தே கொண்ட பெருமை யமைந்த வெற்றியை யுடைய வெற்பனே!

நறிய காந்தள், குத்தி வாங்கின கொடிய கொம்புபோல, நாடோறும் அரும்புகின்ற என்றதற்கு, நற்குணமுடைய நீ வரையாதிருத்தலிற் கொடியையாய்த் தோன்றா நின்றா யென்றும்; அயல் நந்தி அணிபெறும்படி அருவியார்த்து இழிதற்குக் காரணமான மழைதழீஇய வெற்பென்றதற்கு அயலாரிடத்தே நிலை பெறும்படி அலராகா நின்றது நீ இங்ஙனம் வந்து செய்கின்ற தலையளி யென்றும் உள்ளுறை யுவமங் கொள்க. இது பய வுவமப் போலி.

'கோடுபோல' வென்ற ஏனையுவமம் உள்ளுறை யுவமத்திற்குச் சிறப்புக் கொடுத்து உள்ளுறை யுவமம்போலத் திணையுணர்த்தலைத் தள்ளாதாகி நின்றது.

மறையினின்.......................கலுழாக்கால் .—

(இ-ள்) அயலிலுள்ளார் அலர் தூற்றுகையினாலே கண்கள் ஆய்ந்ததம் நலத்தை இழந்தன, அவ்வளவிலே நில்லாதே பின்னர்க் கண்கள் கயல் காலுகின்ற நீர்போல நீர் விழாத காலத்துக் களவிடத்துக்கூடி அக்களவொழுக்கத்தை நிகழ்கின்ற காலத்தே மருவுதலறும்படி நீ அருமை செய் தயர்த்த பின்னர் இறையிற் கிடக்கின்ற வளைகள் நெகிழ்ந்து கழலா நிற்க அவ் வருத்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கவும் பொருந்தும்; அதனாற் பெற்றதென்? அக்கண்கள் அதற்கு இசைகின்றன வில்லையே;

'மன்'; ஒழியிசை.

இனியசெய்.......................பிழவாக்கால் :—

(இ—ள்) ஊரிலுள்ளார் அலர் தூற்றுகையினாலே நறிய நுதல் ஒளி கெட்டுப் பீர்க்கம் பூவினது அழகைத் தான் கொண்டு பிறை

யினது அழகை இழவாத காலத்து இயற்கைப் புணர்ச்சியிடத்துத் தெளிவகப் படுத்து இட்டுப் பிரிதலையுஞ் செய்து பின்னர் இன்னு தாம்படி நீ அருமை செய் தயர்த்த பின்னர் இவள் வருத்தந் தெய்வத்தால் வந்ததோர் நடுக்கமென்று தெய்வத்திற்குப் பாவுக் கடன் பூணுமையும் பொருந்தும்; அதனுற் பெற்றதென்? அந் நறுநுதல் அதற்கு இயைகின்ற தில்லையே;

அமர்ந் தென்பதும் பாடம்.

அஞ்சலேன் .... மாறீறக்கால் :—

(இ—ள்) பகலிடத்தே அழகு கெடும்படி எம்மை நலிதலைத் தந்த நடுங்குதற்குக் காரணமான வருத்தம் கங்குலிற் கனவின் கண்ணும் வந்து வருத்த முறுத்தி இவளாற்ருத காலத்து இயற்கைப் புணர்ச்சிக்கண் தெளிவகப் படுத்தி இட்டுப் பிரிதலைச் செய்து பின்னர் நீ அருளாதே அருமை செய் தயர்த்த பின்னர் இவள் நெஞ்சழிவதற்குக் காரணமான வருத்தம் இறந்து பாடெய்துவியா நிற்கவும் உயிரைப் போகாமல் நிறுத்தவும் பொருந்தும்; அதனுற் பெற்றதென்? அக் கனவின் ஆற்றல் அதற்கு இயைகின்றதில்லையே;

எனவாங்கு :—

(இ—ள்) என்று யான் கூறும்படியாக.

'**ஆங்கு**': அசை.

விளியாநோ .... கவினே :—

(இ—ள்) கெடாத நோயாலே வருந்தி அமையாத என் தோழி மலையிடத்து முளிதலுறும்படி வருந்திய முளைத்தல் மிக்க சிறிய தினை மழையைப் பெற அழகு பெற்றாற் போல இவள் ஆய் நுதற் கவின் நின் அளியைப் பெற அழகு பெறும்.

இட்டுப் பிரி **விரங்கலையும்** அருமைசெய் தயர்த்தலையும் பின்பு நூல் செய்தோர் ஒருவழித் தணத்தலென்று பெயர் கூறிய வாறு காண்க.

இதனுற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இது தரவுந் தாழிசையுந் தனிச் சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற த்தொழிசைக் கலி.

செய்யுள் கஅ.

இது கைப்பட்டுக் கலங்கிய வருத்தத்தைக் களைந்தேனென உரையெனத் தோழிக்கு உரைத்தற்கண் தலைவி கூறியது. அது நொது மலர் வரைவிற்கு மணமுரசு இயம்பிய வழி ஆண்டானும் பிறவாண்டானுந் தோழிக்கு இன்னவாறு கூட்டம் நிகழ்ந்த தெனக்கூறி, அதனை நமர் அறியக்கூறல் வேண்டுமென்றுந் தலைவற்கு நம் வருத்தம் அறியக் கூறல் வேண்டுமென்றுந் தலைவி கூறுதற்கண் நிகழ்வது.

கோடியவுங்....................புரைமே :—

(இ—ள்) கொடியிலுள்ளனவுங் கோட்டி லுள்ளனவுமாகிய பூவாக நீரின்றுயிருக்க நிறம் பெறும்படி பொடியினையுடைய நெருப்பாற் பண்ணப்பட்ட பொற்பூவாற் செய்த கோதையினையுந் தொடி செறிந்த கட்டு வடங்கள் அமைந்த அழகினையுடைய முன் கையினையும், அணைபோலும் மெல்லிய தோளையுமுடையாய்! நின் அடியிலே யான் உறைதற்கு நீ அருளாதிருத்தல் நினக்குப் பொருந்தின தொன்றோ வென்று கூறிப் பொன்னாற் செய்த மகர வாயாகச் சமைந்த தலைக்கோலம் விழுங்கிக் கிடந்த நரந்தம்பூ நாறுங்கரிய கூந்தலின் முடியை ஒழியாமல் மிகப் பிடித்து அதிலே நன்மை பெறும்படி கட்டின பற்றமைந்த ஒரு மாலையை விரலாலே முறையாகச் சுற்றி அதனை மோந்து பார்த்தலையுஞ் செய்தான்; அதுவேயன்றி நறவம்பூ அலர்ந்தாற்போன்ற என்னுடைய மெல்லிய விரலையுடைய கையைத் தாங்கிக் கொண்டு அருளையுடைய தன் சிவந்த கண் மறையும்படி வைத்துக்கொல்லன் உலை மூக்கு வெவ்விதாய் உயிர்க்குமாறு போல உயிர்த்தலையுஞ் செய்தான்; அதுவேயன்றித் தொய்யில் எழுதின இளைய முலையை இனியவாகத் தடவி அத்தொய்யிலைக் கொண்டு வந்த தடக்கையினாலே, தான் விரும்பின பிடியை அருள் செய்யும் மயக்கத்தை யுடைய யானை போல, மெய்ம் முழுதினையுந் தடவுதலையுஞ் செய்தான்; அச் செயலாலே யான் கைப்பட்டுக் கலங்கிய வருத்தத்தைத் தோழி! போக்கினேன்; இனித் தோழி! நீயும் யான் விரும்பிய விருப்பத்தின் மணம் புரிந்து நின் மகள் நங்குடிக்கு வடுவாகாமற் கற்புக் கடம் பூண்டாளென்று நம்முடைய மனைக்கண் நிகழ்கின்ற அரிய மணம் அவனை விட்டு நீங்காமல் யாய்க்கு அறத்தொடு நிலை வகையாற் கூறின் அது நமக்கு நல்ல தொன்றென்று கருதி நின்னோடு உசாவுவேன்; நீ இங்ஙனம் கூறின் நிலை நில்லாத உலகத்திலே நிலை நிற்பதோர் புகழ் நமக்குப் பொருந்தும்;

இது தலைவி கைப்பட்டுக் கலங்கிப் புணர்ச்சி நிகழ்ந்தமை தோழிக்குக் கூறினாள், அவள் அறத்தொடு நிற்றல் கருதி.

இஃது "உண்மை செப்ப"வென்னும் அறத்தொடு நிலையாம் இதனாற் றலைவிக்குக் கைம்மிகல் பிறந்தது.

சுரிதகத்து இருகால் 'தோழி'யென்றல் நாணுத் தளையாக மறைகரந்தவாறு காத்த தோழிக்கு முகமனாக.

விரல், ஆகுபெயர். பரூஉக்குருகு: பறவாக்குருகு; வெளிப்படை; விகாரம். புரைம் ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங் கெட்டது.

இஃது 'அதனை'யெனத் தனிச்சொற் பெற்றும் அடக்கியலின்றிச் சுரிதகத்தோடு அடி நிமிர்ந் தோடிய பாநிலை வகைக் கொச்சகக் கலிப்பா.

செய்யுள் ௫௯.

இது "பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி, யொருமைக் கேண்மையி னுறுகுறை தெளிந்தோ, ளருமை சான்ற நாலிரண்டு வகையிற் பெருமை சான்ற வியல்பின் கண்" தலைவி கூறியது. என்றது; ஒருமைக் கேண்மையின் உறுகுறை - தான் அவளென்னும் வேற்றுமையில்லாத நட்பினாலே தோழி தனக்கு வந்து கூறிய் குறையை; பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கித் தெளிந்தோள் - முன்னர் தெய்வப் புணர்ச்சி நிகழ்ந்தமை நோக்கி அது காரணத் தான் முடிப்பதாகத் தெளிந்த தலைவி; அருமை சான்ற நாலிரண்டு வகையில் - தான் முன் அருமையமைந்து நின்ற நிலையாற் றலைவன் கண் நிகழ்த்திய மெய்தொட்டுப் பயிறன் முதலிய எட்டினாலே; பெருமை சான்ற இயல்பின் கண்ணும் - தனக்கு உளதாம் பெருமை கூறுதற்கு அமைந்த தோர் இயல்பின் கண்ணும்: எ—று." இதனாற் போந்த பொருள் தலைவன் இத்துணை இளிவந்தன செய்யவும் யான் நாணும் மடனும் நீங்கிற்றிலே னென்று தன் பெருமை தோழிக்குக் கூறுதலாயிற்று.

மின்னொளிர்...................கேளினி :—

(இ - ள்) ஒளிர்கின்ற மின்னினது விளங்குகின்ற அறுதிகள் இடையே பிளந்தோடும் மேகங்கள் போலே பொன்னைக் கூறுபடுத்தின அழகினையுடைய வகிர்களை ஐந்து பகுதியையுடைய செறித்த மயிரிடத்தே விளங்கவிட்டுப் பின்னால் தாழ்ந்த வகிர்ந்த வற்றையும் இடையிலேயிட்டு முடித்த மிகவும் நாறுகின்ற பூ மாலையினையும் இனிய நகையினையும் இலங்குகின்ற எயிற்றினையும்

இனிய மொழியினையும் 'இயல்பான சிவப்பாற் சிவந்த வாயினையு முடைய நன்றாகிய நுதலினையுடையாய்! நினக்கு ஒரு வார்த்தை கூறுவேம்; அதனை இப்பொழுது கேள்!

'இட்டு' என்னுஞ் செய்தெனெச்சம் 'இட்ட' வென்னும் பெயரெச்சத்தோடு முடிந்து, அது 'நன்னுத' லென்னும் பெயரோடு முடிந்தது. 'கூறுவா'மென்றது உயர்த்துக் கூறல்; உளப்பாடன்று, 'வயங்க' விகாரம்.

நில்லென................தோழி :—

(இ - ள்) "நீ போகாதே நில்" லென்று என்னை நிறுத்தினான்; நிறுத்தி அணுக வந்து நுதலையும் முகத்தையுந் தோளையுங் கண்ணையுஞ் சாயலையுஞ் சொல்லையும் நோக்கா நின்று உவமையைக் கூற நினைந்து, "நுதல் வியப்பை யுடைத்தாய்த் தேய்ந்தது, ஆயுனும் பிறையுமன்று; முகம் மறுவற்றது, ஆயினும் மதியுமன்று; தோள் வேயின் றன்மை நெருங்கிற்று, அது பிறக்கும் இடமன்று; கண் பூவின் றன்மை நெருங்கிற்று, அது பிறக்கும் இடமன்று; சாயலிருந்தபடி மெத்தென நடக்கும், மயிலுமன்று சொல்லுச் சொல்லத் தளரும், ஆயினுங் கிளியுமன்று" என்று அவ்விடத்து அத்தன்மையனவாகிய உறுப்புகள் பலவற்றையும் பொய் பாராட்டி வலையர் அம் மாக்களின் சோர்வைப் பார்க்குமாறு போல என் னெஞ்சழிந்த செவ்வியைப் பார்த்துப், புலையர் நோக்குமாறு போல வருத்தமுண்டாக நோக்கித் தொழுதலைச் செய்தான்; தீண்டுதலையுஞ் செய்தான்; மதத்தான் அறிவிழந்து பரிக்கோலெல்லையில் நில்லாத கடிய களிற்றை யொப்பான் பலகாலுந் தொழுவதுஞ் செய்யும்; தீண்டுவதுஞ் செய்யும்; ஆதலால் தோழி! அவன் குணத்தில் அறியாமையாகிய குணமோ இல்லை;

இவன் இங்ஙனமாகவும், யான் நாணும் மடனும் நீங்காமை நின்றே னெனத் தலைவி தன் பெருமை சான்ற இயல்பு கூறினாள்.

இதனுட் 'பாராட்டி'யெனப் பொய் பாராட்டலுஞ், 'சோர்பதனொற்றி'யென நெஞ்சு நெகிழ்ந்த செவ்வி கூறினமையிற் கூடுதலுறுதலும், 'புலையர்போல......நோக்கி'யென நீடு நினைந்திரங்கலுந், 'தொழலுந் தொழுதா'னென இடம் பெற்றுத் தழாலுந் 'தொடலுந் தொட்டா'னென மெய்தொட்டுப் பயிறலுங், களிறு போல அறிவினெல்லையினில்லாதவ னெனத் தீராத் தோற்றமும் ஒருவாற்றாற் கூறியவாறு காண்க.

இதனாற் றோழிக்கு நினைத்தல் பிறந்தது.

'உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை' என்னுஞ் சூத்திரத்து 'உள்ளுங்காலை' யென்றதனாற், 'பிறையுமன்று,' 'மதியுமன்று,' 'மயிலுமன்று,' 'கிளியுமன்' றென்பன மறுத்தனவென்று கொண்ட வுவமம். 'முதலுஞ் சினையுமென்றாயிரு பொருட்கு, நுதலிய மரபி னுரியவை யுரிய' என்னுஞ் சூத்திரத்தில், நுதலிய மரபி னென்றதனான் 'மலையுமன்று,' 'சுனையுமன்'றென்பன மலையோடுஞ் சுனையோடும் உவமை கருதாது மலையுள்ளேயெழும் இடத்தையுஞ் சுனையுட் பூவெழும் இடத்தையும் நோக்கி வேயையும் பூவையும் மறுத்து நிற்றலின், தோளையுங் கண்ணையும் உணர்த்தி நின்ற வென்று கொண்ட உவமம்.

இது தனிச் சொல்லும் ஆசிரியச் சுரிதகமும் பெற்றுப் 'பாநிலை வகையே' என்பதனால் அகப்பொருளின்கண் வந்த தரவிணைக் கொச்சகம்.

செய்யுள் உ௰.

இது 'காமஞ் சாலா இளமை யோள்வயி, னேமஞ் சாலா இடும்பை யெய்தி, நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தாற், றன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச் சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல், புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே' என்பதனாற் றருக்கிச் சொல்லி சொல்லெதிர் பெறான் இன்புற்றது.

ஊர்க்கா..................மகள் :—

(இ-ள்) ஊரிடத்தே வளர்ந்த இள மரக்காவினுள் நீர் ஓடுகின்ற காவிடத்தே நின்ற கொழுவிய நிழலையுடைய ஞாழலினது முதிர்ந்த தொத்துக்களைப் பறித்துக்கொண்டு பூவும் மயிருந் தம்முள் மயங்கும்படி முடித்து, வாரி முடிக்கும்படி தலை கூடின மயிர் தோட்கட்டிலே தாதோடே சிறிது குலைந்து வீழ, நிறைந்த மதி இனிய கதிர்களை விட்டாற்போல முகம் ஒளி பொருந்தி, யான் நிற்கின்ற இவ்விடத்தே வருவாளாகிய இவள் யார்தான்? கொல்லி மலையிலே வல்லவனாலே பண்ணப்பட்ட ஒப்பில்லாத பாவையோ? அன்றி அயனாலே நல்ல மகளிருடைய உறுப்புக்க ளெல்லாவற்றையும் ஒருங்கு கொண்டு ஒரு வடிவாகப் பண்ணப் பட்டா ளொருத்தியோ? அன்றி ஆடவர் மேலுள்ள வெறுப்பாலே தன்னைக் கூற்றமென்று அறியாதபடி மறைத்துப் பெண் வடிவு கொண்டு வந்ததோர் கூற்றமோ? இந்நிலையை ஓர்ந்து பாராய்! கொடிபோன்ற நுடக்கத்தினையும் எண் கோவையாகிய மேகலை யையுஞ் சில பூத்தொழிலையுடைய கலிங்கத்தையுமுடைய ளாயிருந்தாளாதலால் இவ்வூரிடத்துப் பிள்ளையால் மிடிப்பட்ட

ருடைய செல்வத்தையுடைய மகள் காண்! இவளைக் காத்துப் போந்தவர்கள் இப்பொழுது காவாராய்ப் புறப்பட விடுதல் கொடிது;

இவளைச்.................நல்லாய் கேள் :—

(இ-ள்) இனி இவளை 'நல்லாய்! யான் கூறுகின்றதனைக் கேள்!' என்று போகாமற் றடுத்து வார்த்தை சொல்லிப் பார்ப்பேன்;

இஃது ஐயுற்றுத் துணிந்து நெஞ்சொடு கூறியது. மேகலையானுங் கலிங்கத்தானும் ஐயம் நீங்கி மகளென்று துணிந்தான், மனைக்கிழத்தியாக யான் கோடல் வேண்டுமெனக் கருதி 'மருந்து பிறிதில்லாப் பெருந்துயர்' எய்தினு னாதலின் இங்ஙனம் ஐயம் நிகழ்ந்தது. இவ்வகை உவமைகள் 'வேறுபட வந்த உவமத் தோற்றங், கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்' என்பதனாற் கொண்டோம். 'அவ்வமாக்களும் விலங்கு மன்றிப் பிறவவண் வரினுந்... ...திறைமையனப் படுமே' என்பதனான் ஞாழல் முடித்தாளென நெய்தற் றலைவி போலவும், 'ஊர்க்காணி வந்த பொதும்ப' ரென்றதனான் மருதத்துக் கண்டான் போலவுங் கூறிக் குறிஞ்சிப் பொருளாகிய புணர்தனிமித்தம் பொருளாக முடித்தான். இவ்வாறு மயங்கினுங் குறிஞ்சித் திணைப்பாற்பட்ட திணையுறுப்பான் வந்த தென்க,

ஆய்தூவி.................வறியாயோ :—

(இ-ள்) காண்டார் காதல் கோடற்குக் காரணமாகிய மான் போலும் நோக்கத்தினையு மடப்பத்தினையுமுடைய நல்லாளே! சூட்டு மயிரினையுடைய அன்னமென்ன, அழகினையுடைத்தாகிய பெடையினையுடைய மயிலென்ன, கல்லையுண்கின்ற அழகிய புறவென்ன, நடையுஞ் சாயலும் மடப்பமுமாகிய நலம் நெருங்கின நின்னுடைய இவ்வெழில் நின்னைக் கண்டவர்களை மயக்கமுறுத்து மென்னும் நிலைமையை நீ தான் அறியாயோ? அறியாயோ?

இது நிலம் வரையாது வந்த கைக்கிளை. மயிலும் பிறவுஞ் சினையொடு சினையுவமம்,

நுணங்கமை.................வறியாயோ :—

(இ-ள்) வளைந்த முன் கையினையும் வெள்ளிய எயிற்றினையுமுடைய அழகிய நல்லாளே! நிறத்தாலுந் திரட்சியாலும் புகரினது நுண்மையையுடைய மூங்கிலென்ன, மென்மையால் நுண்ணிய துகிலினையுடைய அணையென்ன, காமக் கடலை நீந்துதற்குத் தெப்பமாதலான் முழுங்கும் நீரைக் கடக்கும் வேழங் கோலாற் செய்த

தெப்பமென்ன, பொருந்தின நின்னுடைய பெருமையையுடைய மெல்லிய தோள்கள் நின்னைக் கண்டவர்களுக்கு வருத்தமா மென்னும் நிலைமையை நீதான் அறிவையோ? அறியாயோ?

முதிர்கோங்கின்.....................வுணராயோ :—

(இ - ள்) மயிர் நேரிதாலா வரிகளையுடைய முன் கையினையும் மடப்பத்தினையுமுடைய நல்லாளே! முற்றின கோங்க மரத்தினது இளைய முகையென்ன, அடிவரைந்து கட்புலனான குரும்பை யென்ன, பெய்தற் றொழிலையுடைய மேகத்தின் றுளியா லுண்டான மொக்கு ளென்ன, பெருத்த நின்னுடைய இளைய முலைகள் நின்னைக் கண்டவர்களுடைய உயிரை வாங்கிக் கொள்ளு மென்னும் நிலைமையை நீதான் அறிவையோ? அறியாயோ?

எனவாங்கு :—

(இ - ள்) என்று யான் கூறுநிற்க;

ஆங்கு : அசை.

பேதுற்றாய்................யான் :—

(இ - ள்) நீ மயக்க முற்றாய் போலே பிறருடைய வருத்தத்தை நீ அறியாயாய்க் கேட்டார்க்கு யாதொன்றுஞ் சொல்லாயாய் கழிந்து போகின்றவளே! இப்பொழுது யான் கூறுகின்றதனைக் கேள்! நீயுங் குற்றமுடையை யல்லை; நின்னை இற்புறத்தே புறப்பட விட்ட நும்முடைய சுற்றத்தாரும் குற்றமுடையரல்லர்; குற்றமுடையான் யாவனென்னில், நிறையழிந்த கொல்கின்ற யானையை நீர்க்கு விட்டாற் பறைசாற்றிச் செல்லுமாறு போலப் பறைசாற்றிச் செல்வதல்லது பறை சாற்றாமற் செல்லாதொழிக வென்று சொல்லாத இறைவனே யென்க.

இதனாற் றலைவற்கு அசைவென்னும் அழுகை பிறந்தது.

இது புணர்தனிமித்த மாதலிற் குறிஞ்சியுட் கோத்தார். இதுதான் உயிர்கொடுத்தானாகத் தனது நன்மை கூறி அவள் தீங்குங் கூறினான்.

இது முன் ஒரு நெடுவெண்பாட்டும் ஓர் அம்போதரங்கமுந் தனிச் சொல்லுந் தாழிசையும் பின்னும் ஒரு தனிச் சொல்லும் வெள்ளைச் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக் கலிப்பா.

செய்யுள் உக.

இதுவும் அது.

வேயெனத்..................கேளினி :—

(இ-ள்) மூங்கி லென்னும்படி திரண்ட தோளினையும் மணம் நாறுகின்ற கடை குழன்ற ஐம்பாலினையும், மானோக்கினை வென்ற மடப்பத்தையுடைய நோக்கினையும், மயில் போன்ற சாயலினையு முடையையாய், அழகிய சிலம்பு உள்ளிடு மணி ஆரவாரிப்ப விளங்குகின்ற ஒளியினையுடைய கலங்கள் விளங்க, நடக்கத்தாற் கொடியென்ன விளக்கத்தான் மின்னென்னக் கட்புலனாகாமையின் வருத்தமென்ன யாதொன்றுந் தெரியாத இடையிடத்தே கண்கள் விரும்பிச் சேர ஓட, நின்னுடைய இளமைப் பருவத்தாலே செல்வம் அமைந்த உயர்ந்த தலைமையினை யுடைய நன்மையுடைய பழமை யுடைத்தாகிய அகற்சியையுடைய மனையினின்றும் அடிக்கின்ற பந்தோடே தளர்ந்து ஒதுங்கிப் புறப்படுதலைச் செய்தவளே! இப்பொழுது யான் கூறுகின்றதனைக் கேள்!

பூந்தண்டார்ப்..................சின்மொழி :—

(இ-ள்) சிலவான மொழியினையுடையாய்! பூவினையுடைய குளிர்ந்த மாலையினையும் சந்தனத்தினையுமுடைய பாண்டியனது உயர்ந்த மதுரையிடத்துத் தேன் பரக்கும்படி அவிழ்ந்த நீலத்தினது அலரை வென்ற போரையுடைய கண்கள் தலையெடுத்தின கோட்டையும் அழகினையுமுடைய யானையினையுடைய பகைவர்க்கு அப் பாண்டியன் வேல் மனம் வருத்துமாறு போலச் சிவந்து வருத்தஞ் செய்து நீ இத்தன்மையையாயிரா நின்றாய், இதுநின் இளமைக்குத் தக்கதோ?

கண் சேந்தினமையை யென்றது சினைவினை முதலொடு முடிந்தது.

பொழிபெயல்..................கனங்குழாய் :—

(இ-ள்) பொன்னாற் செய்த குழையினையுடையாய்! பொழிகின்ற பெயல் போலுங் கொடையினையுடைய பாண்டினது அசோக மரத்தினையுடைய குளிர்ந்த பொழிலிடத்து நின்ற மிக்க அழகினை யுடைய இளைய மாவினது தளிரை யொத்த நிறத்தினையுடையை யாய் அங்ஙனம் வருத்துதற்கு மேலே பந்தியிலே நிற்றலமைந்த பாய்ந்து செல்லுங் குதிரை பூண்ட தேரையுடைய பாண்டியனாற்

செறப்பட்டவர்கள் மருமத்தே தைத்த அம்பினுங் காட்டில் நோவைச் செய்தல் உலகிற் கொடுமைகளின் மிக்க கொடுமை யன்றோ ?

வகையமை....................இளமுலை :—

(இ-ள்) வகுப்பமைந்த குளிர்ந்த தாரினையுடைய பாண்டியனது சிகரங்க ளுயர்ந்த பொதியின் மலையிடத்து அழகினையுடைய கொத்துக்களையுடைய இளைய வேங்கைப் பூவை யொத்த சுணங்கினை யுடையாய்! முத்து வடத்தைத் தன்னிடத்தே கொண்ட நின்னுடைய இளைய முலைகள் இப்பருவத்திலும் அப்பாண்டி யனுடைய மிகுதியையுடைய வலியினையும் மிகுகின்ற கடாத்தினையு முடைய யானையினுடைய கொம்புகளிலுங் கோபத்தினையுடையவா யிரா நிற்கின்றன; இக்கொடுமை இப்பருவத்திற்குத் தக்கதோ ?

என்வாங்கு :—

(இ-ள்) என்று.

'ஆங்கு'; அசை.

இனையன................பருத்தே :—

(இ-ள்) இத்தன்மையனவற்றை யான் நெடிதொன்று நினையா நின்று கூற, அதற்கு ஒன்று கூறாதே கவிழ்ந்து நிலத்தைப் பார்த்துப் பின்னை அவ்விடத்தே தோழியரை நினைப்பாள் போலே துணையாய் அமைந்த தோழியர்க்குப் பொருந்தின கண்ணை யுடையளாய் என் அறிவைத் தன்னிடத்தே அகப்படுத்திக்கொண்டு தன் மனையிடத்தே மீண்டு போனாள்.

இஃது 'ஏமஞ்சாலா இடும்பை யெய்தி'க் கூறினது.

நெடிதொன்று நினையா நின்றென்றது தான் சிறிது நாட் சென்றால் வரைந்து கோடலை நினையாநின்றென்றதாகக் கொள்க. 'நினைப்பாள்போ' லென்றதனால் அவன் கூற்றினையும் இதுவு மொன்றெனச் சிறிது கொண்டமையுந் தோன்றிற்று.

இதனாற் றலைவற்கு அசை வென்னும் உவகை பிறந்தது.

இஃது ஏழடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக் கலிப்பா.

செய்யுள் ௨௨.

இதுவும் அது.

வாருறு......................திறப்பாய் கேள் :—

(இ—ள்) கோதுதலுற்ற கடை குழன்ற ஐம்பாலினையும், வளைந்த இறையினையுடைய நெடிய மெல்லிய தோளினையும், பெரிய அழகினையுடைய மலர் போலுங் கண்ணினையும், மான் பிணையினது அழகினையுடைய வெருவின நோக்குப் போலும் நோக்கினையும், மழையைப் பெற்ற தளிர் போலும் நிறத்தினையும், அழகு பெறுகின்ற பிறை போன்ற நுதலினையும், விழுந்தெழுந்த கூரிய எயிற்றினையும், விழுந்தெழாத முகை போலும் வெள்ளிய பல்லினையுமுடைய கொடியையொக்கும் இடையினையுடையாய்! காலுக்குப் பொருந்தின சிலம்பின் உள்ளிடு மணி ஆரவாரிப்ப நிரைத்த தொடியையுடைய கையை வீசினையாய்ப் பெறுதற்கரிய என் உயிரைக் கொண்டு இளமையாற் கைக்கொண்டதனை அறியாதே போகின்றவளே! யான் கூறுகின்றதனைக் கேள்!

உளனாவேன்....................நில்லேன்பாய் :—

(இ—ள்) வருத்தத்தினையுடைய காம நோய் கைம்மிகும் படியாக யான் சிறிது உயிருடனே இருக்கும்படி என் உயிரை வாங்கிக் கொண்டு நின் இளமைப் பருவத்தாலே அறியாமற் போகின்றவளே! நின்னிடத்துத் தப்பில்லையாயினும் நின்னை யொழியப் போக்குவார் பிறர் இல்லாத நோயைச் செய்யும் அழகை யறிந்து வைத்தும் அதன் மேலே ஒப்பித்துத் தஞ் செல்வச் செருக்காலே புறப்படவிட்ட நும்முடைய சுற்றத்தாரைத் தவறுடையார் அல்லரென்று கூறலாமாகிற் கூறு! அஃது அரிது;

நடைமெலிந்....................நில்லேன்பாய் :—

(இ—ள்) அறிவு நிறைவு ஓர்ப்புக் கடைப்பிடி என்னும் ஒழுக்கந் தேய்ந்து மறத்தலை எனக்கு உறுத்தி நாடோறும் என்னை நலிதற்குக் காரணமான நீ செய்த நோயை நினது மடப்பத்தாலே அறியாமற் போகின்றவளே! நின்னிடத்துத் தப் பில்லை யாயினும் நிற்கமாட்டாதே இளைக்கும் இடையையுடைய நின் வடிவை அறிந்து வைத்தும் அதன் மேலே ஒப்பித்துத் தஞ் செல்வச் செருக்காலே புறப்படவிட்ட நும்முடைய சுற்றத்தாரைத் தவறுடையார் அல்லரென்று கூறலாமாகிற் கூறு! அஃது அரிது;

அல்லல்கூர்ந்.................நில்லேன்பாய் :—

(இ—ள்) நெஞ்சழிந்து வருத்த மிக்குக் கெடும்படி வருத்தமாகி மேன்மேலும் அடர்ந்து வருகின்ற காம நோயைக் குறிப்பான் அறிதலன்றிச் சொல்லிக் காட்டினும் அறியாதவளே! நின்னிடத்துத் தப்பில்லேயாயினும் ஒழுக உயிரை வாங்காது விரைய உயிரை வாங்கும் நின் வடிவை அறிந்து வைத்தும் அதற்கு மேலே ஒப்பித்து வைத்துத் தஞ் செல்வச் செருக்காலே புறப்பட விட்ட நும்முடைய சுற்றத்தாரைத் தவறுடையர் அல்லரென்று கூறலாமாகிற் கூறு அஃது அரிது;

ஆயினும், 'ஆனு' மெனக் குறைந்து நின்றது. அழி புக வென்றும் பாடம்.

எனவாங்கு :—

அசை.

ஒறுப்பின்யா.................பழியே :—

(இ-ள்) யான் ஒறுத்துக் கூறில் ஒறுப்பது புமத்துப் போத விட்ட நும்முடைய சுற்றத்தாரை; நின்னையன்று; பின்னை இக் காம நோய் பொறுக்கலாம் அளவை யுடைத்தன்றி மிகுமாயிற் பொன்னாற் செய்த குழையினை யுடையாய்! யான் இங்ஙனம் வருந்துகின்ற நிலைமையைப் போக்கி இவ்வூரின் மன்றத்தின் கண்ணே மடலேயேறி நீ எய்துவதொரு பழியை யான் உனக்கு நிறுத்துவேன் போலே உரா நின்றேன்; நீ அதனை அறி!

இது "சொல்லெதிர் பெறாஅன் சொல்லி" யின்புற்றது.

அவளுந் தமருந் தீங்கு செய்தாராக அவளோடு தீங்கைப் புணர்த்தும், தான் ஏதஞ் செய்யாது உயிர் கொடுத்தானாகத் தன்னொடு நன்மையைப் புணர்த்துங் கூறியவாறு காண்க.

அவன் இங்ஙனம் மிகுதி கூறுவான் மடலேறுவேன் போல்வலென ஐயுற்றுக் கூறினான்.

இதனாற் றலைவற்கு அசைவென்னும் உவகை பிறந்தது.

இஃது ஆறடித்தரவும் நான்கடித் தாழிசையும் பொருள்பெறாத தனிச் செல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

செய்யுள் உங.

இஃது இரந்து குறையுற்றுப் பின்னின்ற தலைவன் ஆற்றானாய்த் தலைவியை நோக்கி இங்ஙனம் வருத்துவையாயின் நீ செய் தவம் இன்றா மெனக் கூறியது.

தளைநெகிழ்.....................கேளினி :—

(இ—ள்) முறுக்கு அவிழ்ந்ததும், அரும்புகள் நீருக்குமேலே ஓங்கின பசிய இலையினையுடையதுமான தாமரையினது வலையம் வளர்ந்தவை யிற்றையொக்கும் முத்தை அழுத்திச் செய்த திரட்சியையுடைய விளங்குகின்ற தொடியினையுடைய, அடுக்கமெல்லாம் நாறுகின்ற கூரிய அழகினையுடைத்தாகிய அலர்களையுடைய காந்தளினது குளிர்ந்த எழுச்சியையுடைத்தாகிய வடிவினையுடைய துடுப்பென்று கூறும்படியாக ஒக்குந் திரண்ட தம்மில் இணையொத்த மெல்லிய முன் கையினுலே இங்குலிகம் எழுதின ஒளி விரிந்த தொழில்களையுடையவாகிய வாய்களையுடைய மரத்தாற் செய்த சிறு பானையாலும் பாவையாலும் விளையாடுதற்கு, உள்ளிடு மணியிட்ட அழகமைந்த புனைந்த தொழில்களையுடைய அழகிய சிலம்புகள் மிக ஆரவாரிப்ப அழகினையுடைய சில அடியிடா நடக்கும் நின்னுடைய இளமை நீங்குதலாற் பின்னுதல் விட்டு இருண்ட ஐம்பாலைக் கண்டு என்னிடத்துண்டாகிய அறிவு முதலியன என்னை விட்டுப் போம்படியாகப் போகின்றவளே! யான் கூறுகின்ற தனை இப்பொழுது கேள்;

தளை நெகிழ்தாமரை, பிணி நிவந்த பாசடைத் தாமரை, என்க.

மருளியான்.....................படுவாயோ :—

(இ—ள்) யான் மயக்க முறுகையினுலே அதுகண்டு தானும் மருண்டு இவனுற்ற நோய் யாதுதானென்று கேட்கும் அருள் இவட்கு இல்லையென்று யான் கூற, அது கேட்டு அயலார் நின்னைப் பழிக்கு மளவிற் கூரிய எயிற்றினையுடைய இளைய மகளிர்க்கு நடுவே வகுப்புடைய கோலத்தாலே பொலிவு பெற்று நீ தைத் திங்களில் நீராடிய நோன்பின் பயனைப் பெறுவையோ? பெறாய்காண்!

உருளிழாய்....... ....கிற்பதோ :—

(இ—ள்) தலையிற் கிடந்து அசையுந் தலைப்பாளையையுடையவளே! ஒளி கெடும்படி இவன் மனத்தில் உண்டாகிய நோய் யாதென்று 'கேட்கும் அருள் இவட்கு இல்லையென்று யான் கூற அது கேட்டு அயலார் நின்னைப் பழிக்கும் அளவில் நோன்பாகிய விளையாட்டினையுடைய மகளாந் தன்மையை யுடையையாய்ப் பிறர் மனையின் கண்ணே ஐயமேற்றுப் பாடி நீ ஆண்டுப் பெற்றவையிற்றைப் பிறர்க்குக் கொடுத்ததனுலுள்ள பயன் நினக்குப் பயன் தருவதொன்றோ? தாராது காண்!

'பொய்தல' அகரஞ் செய்யுள் விகாரம்.

ஆய்தொடி..................கிளையவதோ :—

(இ-ள்) ஆராய்ந்திட்ட தொடியினையுடையாய்! நீதான் ஐதாக உயிர்த்து இவள் மனத்திலுண்டாகிய நோய் யாதென்று கேட்கும் நோய் இவட்கு இல்லையென்று யான் கூற அது கேட்டு அயலார் நின்னைப் பழிக்கு மளவிற் சிறிய குழமணைக் கோடற்குச் சிறு சோற்றைச் சமைத்து ஆயத்திற்கு இட்டு நீ நறிய நுதலையுடைய மகளிரோடே மகிழ்ந்த நோன்பின் பயன் நினக்கு வந்து பொருந்துமோ? பொருந்தாதுகாண்!

எனவாங்கு :—

(இ-ள்) என்று.

'ஆங்கு'; அசை.

அனையவை..................திறந்தே :—

(இ-ள்) நீ நெஞ்சுளையவும் யான் நினக்குக் கூறியது, சேயிழாய்! நின்னை நச்சினோர் திறத்தே வருந்தும்படி நீ செய்த கொடுமைக்கு நீ ஓர் உதவி செய்யாயாயின் நீ செய்த அத்தீங்கினாலுள்ள பயன் நின்னைப் பற்றுதல் விடாது, அதுவேயுமன்றி நீ அருளைப் பற்று விடுவையாயின் நினக்கு அனையவை பயன் தருதலில்லை.

நச்சினோரெனத் தன்னைப் பிறர்போற் கூறினான். நயம்: அருள். 'அனையவை' யென்றது; தைந்நீராடன் முதலியவற்றை.

இதனாற் றலைவற்கு இழிவு பிறந்தது; தலைவிக்குச் சூழ்ச்சி பிறந்தது.

இஃது ஒன்பதடித் தரவும் நான்கடித் தாழிசையும் தனிச் சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

செய்யுள் உ௪.

இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளோடு உறழ்ந்து அவனது குறை நயப்பக் கூறியது.

சுணங்கணி..................வல்துலாய் .—

(இ-ள்) சுணங்கு அணிந்த அழகிய முலையினையும், பிறையின்றன்மையைக் கொண்ட நறிய நுதலினையும், நறிய மாலையினையுடைய மண்ம் நாறுகின்ற மழை விரும்புங் கரிய கூந்தலினையுங், கூர்மையையுடைய அழகினையும், நோக்கினோர் கண் சென்று நுழைந்து பார்க்கும் நுண்மையாலே அவர்க்கு அறியாமையைக்

கொடுக்கும் மருங்குலையும், வணங்குகின்ற இறையினையுடைய வளையணிந்த முன் கையினையுமுடைய ஒள்ளிய தித்தியாகிய வரி நிறைந்த வல்குலையுடையவளே;

கண்ணார்ந்த..................முடைந்து :—

(இ-ள்) இனிய நகையினை யுடையாய்! நின்னை நோக்கித் தொழூஉம்; தொழுதபின், புனையிழாய்! என்னை நோக்கி, உலகத்திற் கண்ணுக்கு நிறைந்த நலத்தினையுடைய மகளிரைக் கண்டவர்களுக்கு உண்ணின்ற காம நோய் மிகும்படி கடுக உயர்போந் துயரைச் செய்தல் அவர்க்குப் பெண்டன்மை யன்றெனக் கூறிக் கண்ணும் உருக நின்று நடுங்கினான்; நடுங்கி இவனொருத்தன் தன்னிடத்துப் பொருகின்ற களிற்றை யொத்த தன்மை கெட்டு மன முடைந்து உள்ளே யுள்ளே உருகுவான் போலே இராநின்றான்; ஈண்டு வந்து என்ன காரியஞ் செய்தான் கொலென்றாள்;

ஒருத்த னென்பது இடைக் குறைந்து நின்றது.

தேருவின் கண்.....................தேவன் :—

(இ-ள்) அது கேட்ட தலைவி நீ நம்மாற் றமக்கு நிகழ்ந்ததோர் காரணமின்றியிலே தெருவின்கட் கலங்குவார் சிலரைக் கண்டு நினக்கு ஏதிலவா யிருப்பனவற்றை நீ நின்மேல் ஏறட்டுக் கொள்கின்ற தன்மை வாரணவாசியிலுள்ளார் பெறும் அருளுடைமையாகிய பதத்தை நீ நின்னிடத்தே ஏறட்டுக் கோடல்காண்; இது நமக்கு என்னாய் விளையும்?

பிறர் வருத்தந் தம் வருத்தமாகக் கொண்டு ஒழுகுவதனை வாரணவாசியென்னும் ஊரிலுள்ளார் பதமென்றாள்.

இது "கூறிய வாயில் கொள்ளாக் காலை"த் தலைவி கூறியது.

அலர்முலை..................நாம் :—

(இ-ள்) அது கேட்ட தோழி அடி பரந்த முலையினையும் ஆராய்ந்த பூணினையுமுடைய நல்லாய்! பெரிய அமர்த்த உண்கண்ணினையுடைய நின் தோழி உறுத்தின பொறுத்தற்கரிய மனக் கவற்சியைச் செய்யும் வருத்தங் கதுமென உயிரை வாங்கும்; அஃது உயிரை வாங்காதபடி ஒண்டொடீ! பின்னை இந்நோய் தீர்தற்குக் காரணமான மருந்தை அருளாய்; அம் மருந்துதான் மிகவும் அரிதன்று; நின் முகங் காண்டல் காரணமாக அதன் காரியமாகப் பிறந்த அருளை மருந்தாதற் றன்மையாக உடையே

னென்று கூறா நின்றான்; ஆதலால் அவன்றான் நின் முகத்தை இக் காலத்தே பெறின் அது மருந்தாவதல்லது வேறு சிறிதும் மருந் தில்லையா யிருக்குமாயின், திருந்திழாய்! இனி நாம் என் செய்யக் கடவே மென்றாள்;

'நின் முகங் காணு மருந்தினே' னென்றது தலைவியைக் கருதி. 'மற்று' வினை மாறறு, 'சொன்' காலமுணர்த்திற்று. கொல்; ஐயம்.

பொன் செய்வாம் :—

(இ-ள்) அதுகேட்ட தலைவி, 'பொன் செய்வாம்' என நகைக் குறிப்புக் கூறினாள்.

அஃது 'இசைதிரிந்திசைப்பினும்' என்னும் பொருளியற் சூத்திரத்துக் கூறினும்.

ஆறு..................நாம் :—

(இ—ள்) அவள் நகைக் குறிப்புக் கூறிப் பின்னரும் உலக வொழுக்கத்தைத் தப்பி ஒருவன் தெருவின் கண்ணே நின்று கூறுங் கூற்றை உண்மையென்று கொண்டு அதன் உண்மையை உணராமாய் நாம் அதனைத் தெளிதல் எளிதென்று சொல்லக் கடவே மென்றாள்;

'நாம்' என்றது உயர்த்துக்கூறியது; உளப்பாடுமாம்.

ஒருவன்...............மாற்று :—

(இ—ள்) அது கேட்ட தோழி பின்னை நின் கருத்து இது வாயின் ஒருவன் சாந்தன்மை எளிதென்று கூறக்கடவே மென்றாள்

'என்பாம்': உளப்பாடு.

சிறீதாங்கே..................வின்றே :—

(இ—ள்) அது கேட்ட தலைவி மாட்சிமைப்படாத இவ்வூரில் அம்பல் இனி அலரினாலே அலர்வதாக வென்று கருதி நாணையும் நிறையையும் விரும்புதலில்லாத, குடிப்பிறப்பிற்கு உரிய ஒழுக்க நெஞ்சு இல்லாதவனுக்கு அவன் இறந்துபடுமென்று கூறுகின்ற அத்தன்மையே மிக இன்று காணென்றாள். அது கேட்ட தோழி, நின் பூணாகத்திற் புணர்ச்சியை மனத்தாற் கருதி இரவுந் துயில் கொள்ளானாய் நங்கேண்மையை நயந்து நம்மை விருப்புற்றவனை நாண் அடுகையினாலே எதிர் நின்று மீட்ட நயப்பாடு வருதலின்று; அதற்குத் தக்கது அறிவா யென்றாள்.

'சினனே பேதமை நிம்பிரி நல்குர, வனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே' என்பதனான், 'நாணு நிறையுநயப்பில் பிறப்பிலி' எனச் சினம் பற்றி வரினும் அஃது அவன் காதலைச் சிறப்பித்து வருதலின் அமைந்தது. 'பிறப்பிலி' பெயர் மாத்திரையாய் இல்லாத வென்னும் பெயரெச்ச மறைக்கு முடிவாய் நின்றது. பிறப்பிலிக்கு ஆங்கே சிறிதென மாறிப் பொருளுரைக்க.

'ஆங்கே' யென்ற ஏகாரந் தேற்றம்.

"உயர் மொழிக் குரிய வுறழுங் கிழவி" என்றதனாற் றலைவி உறழ்ந்து கூறினாள்.

இதனாற் றலைவிக்கு விருப்பமுற்று நினைத்தல் பிறந்தது.

இது தரவுந் தனிவிரவி ஐஞ்சீரடியும் வந்த நெடுவெண் பாட்டும் இடையே முச்சீரடி வந்த கொச்சகமும் வெண்பாவும் தனிச் சொல்லுங் குறுவெண்பாட்டும் ஓரடியா னொன்றும் ஐஞ்சீரடி வந்த போக்கி லக்கணமில்லா நிலை மண்டில வாசிரியச் சுரிதகமும் பெற்று வந்த உறழ்கலி. "மண்டிலங் குட்ட மென்றிவை யிரண்டுஞ் செந்தூக் கியல வென்மனார் புலவர்" என்பதனான் மண்டிலங் கொள்க.

செய்யுள் உரு.

இது தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி அவனோடு உறழ்ந்து சொல்லி அவனது நீக்கத்துக் கண் அவன் குறை மறுமைக்கு ஏற்பன சொல்லித் தலைமகளைக் குறை நயப்பித்தது.

எல்லா.................தலை :—

(இ-ள்) ஏடீ! இவனொருத்தன் என் குறை பெறுதவன்? இவன் கேட்டைப் பாராய்; அறிவுடையோர் தம்முடைய செல்வம் முடிவை அடைகையினாலே மிடித்துத் தம்முடைய வருத்தத்தைக் களைதல் தக்க உறவானவரிடத்தே சென்று தங்குறையை அவர்க்கு வாய்விட்டுச் சொல்லத் தொடங்கிப் பின்னை அதனை முடியச் சொல்லமாட்டா திருப்பாரைப் போலத் தான் கூறக் கருதியதனைக் கைவிட்டு என்னைப் பலமுறையாகப் பார்க்கும்; பின்னை யான் தன்னைப் பார்க்கின் தான் மெத்தெனத் தலையிறைஞ்சி நிற்கும்;

இது தலைவன் தம்மிடத்து வருகின்றமை கண்டு தலைவிக்குக் கூறிப், பின்னர் இவனெதிர் சென்று அவனை நோக்கிக் கூறுகின்றாள்.

எல்லா நீ......................திறேன் :—

(இ-ள்) எடா! நீ குறிப்பாலே எம்மோடு ஓர் நட்புச் செய்யக் குறித்தாய் போல எமக்கு அறிவித்தாயாய், நின்னை விட்டு நீங்காத நிழற்போல என்னை விட்டு நீங்காமற் றிருதரு கின்றவனே! நீ பெறாத குறை யாது? அதனை இதுவென்று கூறு;

இது குறையுற உணர்தல்.

செல்லின்......................விவள் :—

(இ-ள்) யான் என் குறையைச் சொல்லின் இவள் மிகவும் மறுதிருப்பாளோ?

இது தலைவன் தன் னெஞ்சோ டுசாவினது. "ஐயக் கிளவி யாடூஉவிற் குரித்தே" என்பதனான் ஐயக் கிளவி தலைவற் குரித்தாய் வந்தது.

"மறுதீவாள்" வினைத்திரி சொல்; ஓகாரம், வினா

சேற அது...... ....மற்று :—

(இ-ள்) அங்ஙனம் உசாவித் தம்பால் இரந்தவர்களுக்கு யாதானுமொன்றை முகமாறாது ஈதலை நடத்தாது உயிர் வாழலிற் பின்னைச் சாதலுங் கூடு மென்றான்.

இவள் தந்தை......................ய்து :—

(இ-ள்) அது கேட்ட தோழி இவள் தந்தை இரப்பார் மேலுள்ள காதலினால் இரவலர் யார்க்குஞ் சீரிய பொருள்கள் கொடுக்கும்; நீ வேண்டிய பொருள் யாதுதா னென்றாள்;

இஃது "உயர் மொழிக் குரிய வுறழுங் கிளவி, யையக் கிளவி யாடூஉவிற் குரித்தே" என்பதனாற் றோழி உறழ்ந்து கூறினாள்.

பேதாய்......................யான் :—

(இ-ள்) அது கேட்ட தலைவன், கூற்றின் குறிப்பறியாதவளே! என்னிடத்துப் பொருளை இரக்கும் மிடியில்லை. மருண்டு மடப் பத்தையுடைத்தாகிய நோக்கினையுடைய நின் தலைவி என்னை அருளுதலை யான் இரப்பே னென்றான்;

அன்னையோ :—

(இ-ள்) அத்தன்மையையோ?

இஃது அது கேட்ட தோழி இவனிடத்துக் களவொழுக்கம் அறியாள் போன்று கூறியது.

மண்டம.................தேவன் கோலோ :

(இ—ள்) மிக்குச் செல்கின்ற போரிலே பகைவரைக்கொன்ற களிறுபோல்வான் றன்னை ஒரு மகளாயிருக்கின்றவள் அருளும் படியாகக் கிடந்த குறை எத்தன்மையதோதான்?

இது தோழி தலைவன் நீங்கிய பின்னர்த் தலைவியோடுசாவியது

ஒண்டொடீ..................வாறு :—

(இ—ள்) ஒண்டொடீ! இவன் எந்தைதன் உள்ளங் குறைபடாதபடி வேண்டுவன கொடுத்துத் தான் குறித்த தொன்று கைப் பற்றும் போகாக் குணத்தையுடையன்; அதனால் நீ அருளினுந் தாழ்வில்லை; அவன்றான் குறையுற்று நிற்கின்ற காலத்து யான் தன்னை இகழ்ந்து சிரித்தாலும் பலகாலும் வரும்; அக்குறை யுறவுக்கு நடுவே நடுவே கள்வர் தாங் குறித்த பொருளை நோக்காது நோக்குமாறு போல நின்னை மன நோக்காது நோக்கும்; இதனான் இவனுயின் அறுதியாக ஏஎ! நாணமிலன்; நாணமின்மையால் இவன் போகின்ற போக்குப் பலருஞ் சிரித்து இகழப்படு மடன்மா யான் ஏறும்படி நறிய நுதலினையுடையாள் அருளாளாய் அருளை மாறியேவிடின் அவளோடு என்னிடை நிகழ்ந்தது. ஊரிடத்தே அலராமேயெனக் கருதிச் செல்வான் போலே யிருந்தது;

இஃது உசாவியபின், தோழி அவனை நோக்கி, மேல் இதற்குத் தக்கது நீ அறிந்து செய் யெனக் குறை நயப்பித்தது.

'எள்ளி நகினும் வரு' மென்றது தன் கண் நிகழ்ந்த எள்ளல் பொருளாக நகை பிறந்தது. 'ஏறி'; ஏற. 'எந்தை' என்றது தலைவி தந்தையை, நோக்கினு' மென்றது நோக்கு அல் நோக்கம். 'ஏஎ': இகழ்ச்சிக் குறிப்பு. 'முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச் சொனிலைக்குரி மரபினிரு வீற்று முரித்தே' என்பதனான் 'எல்லா விஃதொத்தன்' 'எல்லா' வென இருபாற்குமாய் நின்றது.

இதனாற் றலைவிக்கு நினைத்தல் பிறந்தது.

இது கைகோள் இரண்டினுங், கூறத் தகாதனவாகப் 'பொருள் யாது நீ வேண்டிய' தென்றும், 'அருளியல் வேண்டுவல்யா' னென்றும் கூறலிற் 'காமஞ்சான்ற விளமையோ' ளாக நிகழ்ந்த கைக்கிளையாம்.

இது தளை விரவின நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய குறு வெண்பாட்டு மூன்றுங் கொச்சகமும் ஓரடியா னொன்றுந் தனிச் சொல்லும் வெள்ளைச் சுரிதகமும் பெற்ற கொச்சகக்கலி.

செய்யுள் உ௯.

இஃது ஏறிய "மடற்றிறம்" என்னுஞ் சூத்திரத்து "மிக்க காமத்து மிட" லென்றதனாற் றலைவனுந் தலைவியும் உறழ்ந்து கூறித் தலைவி கூடக் கருதிய பெருந்திணை.

ஏள.................மற்று :—

(இ-ள்) இவனொருத்தன் தன்னோடு புணர்ச்சிக் குறிப் பின்றி நிற்பாரையுந் தான் புணர்ச்சிக் குறிப்புடையனாய்க் கையாலே வலிதிற் பிடித்துக் கொள்ளும்; ஆதலால் ஏள நாணிலனாயிருந்தா னெனத் தலைவி கூறினாள்; அது கேட்ட தலைவன் அப்புணர்ச்சிக் குறிப்பினது பகுதியாகிய மெய்ப் பாடெல்லாம் நின்னிடத்துப் பொருந்துதலைச் செய்யினும் பொருந்தாத இடத்திலுமுள்ள நன்று தீது நீ அறியக் கடவை; யான் புணர்ச்சிக் குறிப்பை அறிதலைச் செய்யேன்; பூ நெருங்கின மெல்லிய கொத்து நீங்காத கொடியை யொப்பாய்! நின் மேனி புல்லுதற்கு இனிதாயிருக் கையினாலே நின்னை யான் புல்லினே னென்றான்; அது கேட்ட தலைவி ஏடா! தமக்கு இனிதாயிருக்கு மென்று கருதிப் பிறர்க்கு இன்னாதனவற்றை வலிதிற் செய்வது இன்பத்தைத் தருமோ வென்றாள்;

'ஏள': இகழ்ச்சிக் குறிப்பு.

இது "வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தல், மரீஇய மருங்கி னுரித்தென மொழிப" என்பதனான் அடியோன் தலைவனாய வழித் தலைவி வேட்கை மறுத்து உரைத்தது.

சுடர்த்தொடீ.................கண்டன்று :—

(இ-ள்) அது கேட்ட தலைவன் சுடர்த்தொடீ! நின் முதுமைக் கண் உறைகின்ற நிலைமை ஈண்டுப் போற்றாது கைவிடு யான் கூறுகின்றதனைப் பேணிக் கேள்! நீர் உண்பார் சிலர் தண்ணீரை விரும்பினார்க்கு அஃது இனிதாயின் உண்ணுமதல்லது அந்நீர்க்கு இனிதாயிருக்குமென்று கருதி உண்பரோ? உண்ணா ராமெனன்றான்; என்று பின்னும் ஐந்து வாயினையுடைய யாம்பினது பார்வையிலே அகப்பட்டு வருத்தம் வந்து மேற் செய்யுங் காரியம் அறிகல்லேன்; இனி யாது செய்வேன்

கொல்லென நெஞ்சொடு கிளந்து, மறுவில்லாத மதிபோல விளங்கும் முகத்தினையுடைய மகளிரை வலிதிற் புணர்தலும் ஒரு மணமென நூல் கண்டதெனத் துணிந்து கூறினான்;

'ஐவாயர' வென்றது தலைவியை.

அறனு....................நமக்கு :—

(இ-ள்) அது கேட்ட தலைவி நூல் உயர்ந்த மணத்தைக் கூறப்பட்டு உலக ஒழுக்கமும் அத் தன்மைத்தா யிருக்குமாயின், அவனும் யான் மறுத்துக் கூறுஞ் சொல்லைக் கொள்ளாது திறனின்றி நலியுமாயின் அவையேயன்றி அவன் மனத்து முற்பிறப்பில் யானும் அவளும் வேறல்ல மென்ப தொன்று அவனிடத் துண்டாயிருக்குமாயின், நெஞ்சே அவனோடு நமக்கு இனி மாறுபாடுண்டோ வெனப் புணர்ச்சிக்கு உடம்பட்டுக் கூறினாள்.

'அறனு மதுகண்டற்' றென்பது ஆங்கு நெஞ்சழிதல் தான் மறுத்துரைப்பவுந் தன் மேல் அவன் விருப்பஞ் செய்தமை கண்டு 'பண்டு நாம் வேறல்ல மென்பதொன்று' அவனிடத்துண்டா வென்றாள். இது தீரா மாதலான் அடியோர் தலைவராக வந்த பெருந்திணை.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சி யுவகை பிறந்தது.

இது தளை விரவின நெடு வெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டுங் கொச்சகமும் வெள்ளைச் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக் கலி.

செய்யுள் உஎ.

இது தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி அவனிலைமை தலைமகட்குக் கூறி அவளுரைத்த மாற்றத்தால் அவள் குறிப்பறிந்து இவ்வகையான தலைவற்குக் கூறென அவளுடன் நகையாடிக் கூட்ட முண்மை தான் அறிந்தமை தோற்றுவித்தது.

நோக்குங்கா....................வேவன் செய்வாம் :—

(இ—ள்) தான் தொழுகின்ற தன்மையைப் பிறர் காண்பாராக மனத்தாற் றூக்குதல் இல்லாதவன் நாம் பார்க்குங்கால் நம்மை நோக்கித் தொழா நிற்கும்; இங்ஙனந் தொழுது நமக்குப் பழியைத் தூற்றுமென்று கருதித் தொழுதலை விலக்கிப் போகவிடுங்காலத்து அப்போக்குத் தனக்குச் செய்யும் வருத்தத்தை நினைத்துப் போகா

திருக்கும்; ஆதலால் இனி நாம் அவனை நம்பால் வாரர்மற் காக்குங் காலமன்று. பின்னை ஏடீ! இங்ஙனங் காத்தற்கு அரிதான நிலைமை கண்டு மேல் என்செய்யக்கடவேங் கூறாய்!

அது கேட்ட தலைவி அதற்கு மறுமொழி கொடாது உடம்பட்டமை குறிப்பான் உணர்ந்தமையிற். பின்னுந் தோழி கூறுகின்றாள்.

பூக்குழாய்................லான் :—

(இ-ள்) பூங்குழையினையுடையாய்! வருத்தத்தையுடைய அவனிடத்து நீ கூடுங் கூட்டத்தை யான் விரும்பி நின்னைப் பல காலும் அழைத்தழைத்துக் கொண்டுபோய் விட்டேன். போலேயுமிருப்பேன; அவற்கு அது தோன்றாதபடி யான் அவனிடத்தே நீ என் தோண்மேற் கரும்பர்க எழுதுங் குழம்பிற்கென்று செல்வன்; நீ ஆண்டு வந்து இவ்விடமே நினக்கு இருப்பிடமாகக் கருதி இருந்தாயோ வென்று என்னைத் தேடி வந்தாயாகக்கூறி அவ்விடத்தினின்று குறியிடமே போ! அப்பொழுது அவன் நோய் தீர்க்கும் மருந்து நீ யாகையினாலே நின்னுடைய நன்றாகிய அடிமேலே வீழ்ந்து நின்னை இரந்துகொள்ளும்;

இன்னும்..................தோடு :—

(இ-ள்) அது கேட்ட தலைவி, நீ வாராய்! இன்னமும் ஒருகால் அவனிடத்தே சென்று உன் குறை முடித்தலைத் தனக்குக் கடனாக அவள் ஏறட்டுக் கொண்டு கூட்டத்திற்கு உடம்பட்டாளென்று அவற்குக் கூறாமைக்கு என் மெய்யைத் தொட்டுச் சூளுறுவாயாக வென்றாள்;

வாவென்றது 'வந்தை'யெனத் திரிந்தது.

இஃதோ..................விடு :—

(இ-ள்) அது கேட்ட தோழி யான் கூறிய குற்றம் இதுவோ? இனி இது செய்யும்படியைச் சுருங்கக் கேள்! நின்னொடு யான் இதனை ஆராயுங் காலத்து நீயும் நாணத்தால் நிலத்தைக் கீறி என்னுடனே வேறுபட்டு நின்ற நிலை செய்தற்கு எளிதன்றோ? இந்நிலையைப் பின்னை அவன் தன்னுடனே நின்று பார்த்து நின்னாற் செய்த லரிதன்றோ? என்றாள்.

'இஃதோ'வென்றாள் 'உடம்பட்டாளென்னுமை என் மெய் தொடு' என்றதனை, ஓகாரம் இது குற்றமன்றென மறைபுணர்த்திற்று.

இதனாற் றலைவிக்குப் புணர்ச்சி புவகை தோன்றிற்று.

இஃது 'எல்லா வெவன் செய்வா' மெனவும், 'இஃதோ வடங்கக்கே' ளெனவும் வழியசை புணர்த்த சொற்சீரடிகள் வந்து ஐஞ்சீரடுக்கிய வெண்பாக்களும் வந்த வெண்கலிப் பாட்டு.

செய்யுள் உஅ.

இஃது அருமை செய்து அயர்த்த தலைவன் வந்துழித் தலைவி எள்ளின இடத்துத் தலைவன் அவளோடு உறழ்ந்து கூறி நகையாடிக் கூட்டத்திற்கு உடம்படுவித்தது. இதற்கு விதி 'உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி' என்பதனுட் டலைவன் உயர்மொழிக்குத் தலைவி உறழ்ந்து கூறுமென்றும்.

அணிமுக ... .பண்டு :—

(இ—ள்) நினது அழகினையுடைய முகம் மதியை யொப்ப, மணிகள் விளங்கும் நின் பின்னின் மயிர் அம்முகத்துக் கொப்பாகிய மதியை மிகவும் பொருந்துங் கருமையையுடைய மழையை யொப்ப, அப்பின்னின் மயிர்க்கண்ணே கிடந்து அலர்ந்த நுண்ணிய நூலாற் கட்டின தேனுல் ஈரமான இதழையுடைய பூக்கள் பின்னுக்கொப் பாகிய கரும் பாம்பிடத்தே கிடந்து அதன் கரிய நிறத்தோடே மாறுகின்ற கார்த்திகை யென்னும் மீனினது அழகை யொப்ப, மனத்தான் ஒப்புக் கண்டவர்களை அவ்விடத்தே அரிய வருத்தத்தை செய்து போகின்ற பரந்து தழைத்த கூந்தலையுடையாய்! நீ என்னை எள்ளும் நிலைமையைக் கைவிட்டு யான் கூறுகின்றதனை மனத்தான் ஆராய்ந்து பார்! நீ பண்டு எம்பொருட்டுப் பெரிய பொன்னுண்டாவை;

இது முன் நீ இடைவிடாமற் கூடிய கூட்டத்தால், தோற்றப் பொலிவு எய்தினை யெனக்கூறி, ஈண்டு நிகழ்ந்த அருமை செய் தயர்த்ததனாற் பிறந்த வருத்தத்தை நீக்கிற்றும். அஃது எமக்கு நீ பெரிய பொன் கடவை யென்பதோர் நகைப் பொருளுந் தோன்ற நின்றது.

'அலரி' பூவென்னு மாத்திரையாய் நின்றது. 'ஒப்ப' வென்னுஞ் செயவெனெச்ச உவமவுருபுகள் 'கண்டா'ரென்னுந் தொழிற் பெயரிற் றொழிலொடு முடிந்தன.

ஏவ எல்லா..................யாம் :—

(இ—ள்) இவனொருத்தன் தன்னுற்றோற்றப் பொலிவு எய்தினேமெனக் கூறுகின்ற கூற்றைப் பாராயென நெஞ்சொடு கூறி, நீ என் தோண்மேற் றுஞ்சி லெழுதிக் கனவுபோல

ஒரோருகாற் றங்கின நிலையா னுண்டான தோற்றப் பொலிவு உண்டாவேம்; அதுவன்றி எம்முலையால் நின் மார்பிடத்து இடைவிடாது உழுத நல்வினையை உடையேமோ? அஃதின்றே;

'எள்': இகழ்ச்சிக் குறிப்பு,

இது, தொய்யி லெழுதி முடித்ததனால் உண்டான பொன் கடவேம், அதுவன்றி நின்கீழ் உழுத நிலைமையை யுடையேமோ வென ஒரு நகைக் குறிப்புத் தோன்ற நின்றது.

உழுதாய்..................றினி :—

(இ-ள்) சுரும்புகள் ஒலிக்கின்ற பூவாற் செய்த கோதையினை யுடைய அழகினையுடைய நல்லாய்! நீ உழுதாய்; பின்னை இக் களவொழுக்கத்திலும் இந்தத் திருந்தின இழையையுடைய மென்றோளிலே யான் எழுதின கரும்பின் தோற்றப் பொலி வெல்லாம் நின் முலைகள் இடைவிடாமற் புணர்ந்ததனாலுண்டான பயனல்லவோ? அதனோடே கூடப் பழுதறுகின்ற ஒளியினையுடைய முகமானது குவளையோடு இகலிப் புணர்ச்சி தோறும் பொலிவு பெறும்படி பூத்த கண்களின் தோற்றப் பொலிவு நீ இடைவிடாமற் புணர்ந்ததனாலுள்ள பயனல்லவோ? இத்தோற்றப் பொலிவு களன்றி வேறே தோற்றப் பொலிவுண்டாக நீ புணர்வா யென்றான்;

என்றதனால், நின் கருத்து இடைவிடாது முயங்குதலே யாயின் இனி நீ இடைவிடாமல் முயங்கினைகா ணென்றான். அதன் பயன் இனி வரைவே னென்றதாம். இது நீ என்கீழ் உழுதாயென நகைக் குறிப்புத் தோன்ற நின்றது. 'மற்று' வினை மாற்று. 'குவளை' யென்றது கண்ணை.

இதனால் அருமை செய் தயர்த்தது மில்லை யென்றான். இதனால் நீ கரும்புங் குவளையுமன்றி வேறு என்னுழுவாயென ஒரு நகைக் குறிப்புத் தோன்றிற்று.

எல்லா..................யினி :—

(இ-ள்) அதுகேட்ட தலைவி ஏடா! என் அவயவங்களிற் றோற்றப் பொலிவு உண்டாகக் கூறாமல் என் தோள்களில் நீ எழுதப்பட்ட கரும்பிற்குத் தோற்றப் பொலிவுண்டென்று நீ கூறு; அதற்கு இயைந்தேன்: இனி அலர்ந்த செவ்வி குலைந்து முற்றின அழகையுடைய நீல மலரென்று பிறர் கூறும் படியாக வருத்தமுற்ற இரும்பு ஈர்வடியன்ன உண்கட்கும் மற்று முள்ள எல்லா உறுப்புகட்கும் பெரிய பசப்புண்டென்று சொல்லுவாயாக!

இதனால் அவன் அருமை செய்தயர்த்திலே னென்றதற்கு அக்காலமெல்லாம் யான் வருத்தமுற்றே னென்றாளாயிற்று. கரும்பு அவயவமின்றி எழுதப் பட்டதாகலிற் றோற்றப் பொலிவு உண்டென்றாள். கூட்டத்தாற் பொலிவு பெறாது இளமைப் பருவத்தும் இரும்பு ஈர்ந்த வடுவகிரை யொத்திருத்த லுளதாகலின் 'இரும்பீர் வடியன்ன வுண்கட்கு' மென்றாள். இது கண் ணென்னும் பெயர் மாத்திரையாய் நின்றது. இதனால் அவன் அருமை செய் தயர்த்திலேனென்று நன்றாகக் கூறிய பொன் னிறத்தைப் பசப்பாக்கி அக்கால மெல்லாந்தான் வருந்தும்படி தந் நலத்தை அவன் கொண்டமை கூறினாளாயிற்று.

நல்லாய்......................பல :—

(இ—ள்) அது கேட்ட தலைவன், நல்லாய்! இகுளையே! யான் கூறுகின்றதனைக் கேள்! அரசனைச் சேர்ந்து அவன் செல் வத்தை நுகர்த்தா னொருவன் அவன் வயத்தனாய் நின்று காரியத் தாற் றலைமைப்பாடு எய்துவனாயின், அவ்வேந்தன் அவனாலுள்ள பயனைக் கொண்டாற் போன்ற பல பயனையும் யான் இவ்விடத்தே எய்துவே னென்றான்.

என்றது கூட்டத்தாற் செயற்கை நலம் பெற்ற நின்னை வரைந்து கொண்டு நின்னாற் பெறும் பயனெல்லாங் கொள்வே னென்றதாம். இனி அரசனுடைய பொருளை நுகர்ந்தவன் எதிர்ப்படில் அவ்வரசன் அவனிடத்து வருத்தமுறுத்திக் கொண்டாற் போன்ற பல பயன்களையும் யானும் இங்கே கொள்வே னென ஒரு நகைக் குறிப்புத் தோன்றி நின்றது.

ஆங்காக :—

(இ—ள்) அது கேட்ட தலைவி நீ அருமை செய் தயர்த்த தனைப் பொய்யாக்கி அன்பின்றி நின்ற தன்மை நீங்கி எம்மிடத்து அன்புடையையான காலத்து நீ கூறியவாறே ஆவதாக வென உடம்பட்டுக் கூறினாள்;

அத்திற......................விடற்கு :—

(இ—ள்) அது கேட்ட தலைவன் நீ இங்ஙனம் வெறுத்துக் கூறிய கூறுபாடு நீங்கிய காலத்து, முத்தை யொக்கும் முறுவலை யுடையாய்! நீ முன்பு உற்ற பசப் பெல்லாம் இனி ஒரு காலமும் உறாதபடி கழித்து விடுதற்கு வேங்கைப் பூவினது முற்றின அழ கைக் கொண்ட சுணங்கணிந்த பூணினையுடைய ஆகத்தாலே பொய்த்தாகிலும் ஒருகால் முயங்கினையாய்ச் செல்வா யென்றான்.

'பொன்னெல்லா முத்தியெறிந்துவிட' வென்றதனால் வரைவேனென்றான். இதனால் நீ கடவ பொன்னெல்லாம் பெற்றேனென்று கழித்து விடுவேனென ஒரு நகைக் குறிப்புத் தோன்றி நின்றது.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சி யுவகை தோன்றிற்று.

இது தரவும் ஐஞ்சீரடுக்கித் தளை விரவின குறிவெண்பாட்டும் தனிச் சொல்லும் நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய நெடுவெண் பாட்டும் வழியசை புணர்த்த சொற் சீரடியுங் குறுவெண்பாட்டும் வெள்ளைச் சுரிதகமும் பெற்று வந்த கலிவெண்பாட்டு. இதனுள் நிரையீற் றியற் சீர்ப் பின்னர் நிரை முதல் வெண் சீரும் நேர் முதல் வெண் சீரும் வருதலின் 'அணிமுக மதியேய்ப்ப வம்மதியை நனி யேய்க்கு மென்பது கட்டளையென்றாயிற்று. "நிரை முதல் வெண் சீர் வந்து நிரை தட்பினும், வரை நிலை யின்றே யவ்வடிக் கென்ப" என்றதனால் உணர்க.

செய்யுள் உகூ.

இஃது இரவுக்குறி அலராமென்றஞ்சித் தலைவனை நீக்கி நிறுத்தக் கருதிய தோழி 'அல்லகுறிப்படுதலு மவள்வயினுரித்தே, யவன் குறி மயங்கிய வமைவொடு வரினே' என்னுஞ் சூத்திரத்தான் அல்ல குறிப்படுதல் தனக்கும் உரித்தாகலின் அவன் செய்த குறி யறிதற்குப் புறத்துச்சென்ற வழி, ஆண்டுப் பிறந்ததோர் செய்தி யாக ஒரு பொய்யை நாடக வழக்கும் உலகியல் வழக்குமாகப் புனைந்துரை வகையாற் படைத்துக்கொண்டு; பிற்றை ஞான்று தலைவன் சிறைப்புறமாகத் தலைவிக்குக் கூறியது. இதனை 'இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி, நிரம்ப நீக்கி நிறுத்தலன்றியும், வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும், நல்வகையுடைய நலத்திற் கூறியும், பல்வகையானும் படைக்கவும் பெறுமே' எனப் பொருளியற் சூத்திரத்துப் பொய்தலைப் பெய்தலும், நல்வகை யுடைய நலத்திற் கூறியும், பல் வகையானும் படைக்கவும் பெறு மென வழுவமைத்தவற்றாற் கொள்க.

திருந்திழாய் ……………கூத்து :—

(இ-ள்) திருந்தின இழையினையுடையாய்! தன்னுடைய மயிர் நீங்குதலாற் றட்டையான தலையினையும் படாத்தினையு முடையனாய்க் கருங்குட்டத்தாலே காலுங் கையுங் குறைந்து கடமைத் துறைப்பட்டு வந்து நந்தெருவினின்றும் போகாமல் ஒளித்துத்திரியும் முடமாகிய முதிர்ந்த பார்ப்பானைத் தோழி நீ பேணுவாயாக வென்று பலகாலுங் கூறுவை; அதனைப் பேணாதே

உயிர்ப்பன்மைகளெல்லாஞ் சோர்தியில் கொண்ட கங்குலிலே அழகிய துகிலாற் போர்த்த போர்வையை வாங்கி அழகுபெற உடுத்து நம்முடைய மென்மையினிய மார்பையுடையவன் செய்யுங் குறியை உற்று நின்றேனாக, அப்பார்ப்பானாலே இராக் காலத்தே பெரிய நகை நிகழ்ந்தது; அந்நகை ஊர்க்கெல்லாங் கொண்டாடு தற்கு அமைந்திருக்கும்: அது நிகழ்ந்தபடியைக் கேளாய்! அவன் அவ்விடத்தே குனிந்து பார்த்து 'மகளிர் நிற்குங் காலம் அன்றாக இவ்விடத்து நின்ற நீர் யா'ரென்று முற்படக்கூறி, 'சிறியவளே! நீ என்னாலே அகப்படுத்திக்கொள்ளப்பட்டா' யென்று கூறிப் பையெனப் பணிந்து, வைக்கோலைக் கண்ட முதிய எருதுபோலே, என் பக்கத்தினின்றும் போகாதே நின்று, 'தையால்! தம்பலந் தின்பா' யென்று தன் பாக்கிடும் பையை குலைத்து, 'நீ எடுத்துக் கொள்' என்று தந்த அளவிலே யான் அங்கு ஒரு வார்த்தையும் வாய் திறந்து சொல்லேனாய் நிற்கையினாலே, தான் அஞ்சி முன்பு கொண்டு நின்ற ஒழுக்கத்தைக் கைவிட்டுக் கடிதாக நீங்கிப்பின்னை, 'யான் பெண்பாற் பசாசாகிய நின்னை யொழிந்த ஆண்பாற் பசாசு; எனக்கு அருள்! அங்ஙனம் அருளாதும் என்னை வருத்துதலைச் செய்வையாயின், இவ்வூரில் நீ பெறும் பலியை நீ பெறாமல் யான் எடுத்துக்கொள்வே' னென்று பல வார்த்தைகளையும் பேணாமல் வாயாற் சொல்லி நிற்க, முதிய பார்ப்பான் என்னைப் பெண் பசா சென்று கருதி அஞ்சினனாதலை யான் அறிந்து ஒரு கையாலே மணலை அள்ளிக்கொண்டு ஒழியாது அவன் மேலே தூவக்கண்டு, அவ்விடத்தே நின்று கடிதாகக் கதறி ஊர்க்கெல்லாங் கேட்பக் கூப்பிடத் தொடங்கினான். எந்நாளுந் தன் தொழில் அவ்வாறு தனி நிற்கும் மகளிரைக் கண்டால் தன் காம வேட்கையாலே மேல் விழுதலாகக்கொண்ட முதிய பார்ப்பானுடைய விரும்புதலையுடைய பெரிய தண்ணிய நாடகம் நங் காதலர் நம்மைக் குறியிடத்து வந்து காணுங் காட்சி கெடும்படியாக நமக்கு வருத்தமாய் விளைந்தது; இது விளைந்தபடி, ஒன்றற்குங் கெடாத வலியினையும் வளைந்த வரியினையுந் தறுகண்மையினையுமுடைய புலியாலுள்ள பயனைக் கொள்ளுதற்கு நிறுத்தின வலையிலே அதன் தொழிற்கு வேறாகியதோர் குறு நரி அகப்பட்ட தன்மைத்தாயிற்று; ஆதலால் இனி இரவிற் குறி நிகழ்ச்சியின்று போலுமென்றாள்.

'வீழ்க்கை' வாழ்க்கைபோல் நின்றது. 'காரக்குறைந்து'; அக்குச்சாரியை. குறழாப் பாரா வென்க.

'வைகாண் முதுபக' டெனவே காம இன்பம் நுகர்த லாற்றாமை காட்டி நின்றது. 'ஏனைப்பிசா' செனவே அவள் பெண் பாற் பசாசுந்தான் ஆண்பாற் பசாசு மென்பது உணர்த்திற்று.

'அருள்' எனப்பிரிக்க, ஆங்கே கடிதாற்றி நம் மூர்க்கெலாம் பூசல் தொடங்கினனென மாறுக. 'தம்பலம்'; தாம்பூலமெனும் வடமொழித்திரிபு. 'தின்றியோ'; ஓகாரம் அசை.

இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒரு பொருணுதலாது அடியிகந்து தளை விரவி வந்த கலிவெண் பாட்டு.

நச்சினார்க்கினியருரை முற்றும்.